சர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

நம்மாழ்வார்துணை.

அழகியமணவாளதாசரென்கிற

திவ்வியகவி.

பிள்ளைப்பெருமாளையங்காரவர்க

ளருளிச்செய்த

திருவேங்கடமாலை

இதற்கு

ஸ்ரீஹரிபராங்குசவிலாச திவ்விய சபையாரவர்கள்

அனுமதியின்படிக்காரியஸ்தராகிய

கோ - அரங்கசாமிபிள்ளை

யவர்கள்

நூதனமாகவுரையியற்றித்தருகவெனக்

கேட்டுக்கொண்டமையால்

சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவராகிய

புதுவை-நயநப்பமுதலியாரவர்கள்-குமாரரும்

சென்னபுரி

இந்துவித்தியாதானச்சங்கத்துத்தலைவருமாகிய

இராஜகோபாலமுதலியாரவர்களா

லியற்றப்பட்டு.

புரசபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்கள குமாரர்

இராகவப்பிள்ளை அவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

ஸ்ரீ

ராமஜெயம்.

அஷ்டாவதானி

பெருங்கருணை

மூத்தழகையங்காரவர்களாற்செய்த

உரைப்பாயிரம்.

மலையினின்றிழிந்தொரீஇ வல்குநீர்ப்பொன்னி
அலைதரக்குளிர்ந்த வந்தரீபத்துப்
புறங்களிற்சிறந்த புண்ணியாளஞ்சேர்
அரங்கமாநகரெனு மரண்மிகுகோயிலுள்
ஆயிரம்பணப்பை யனந்தப்பேழையிற்
பாயொளிபரப்பு பச்சைமாமணிற்
றிருத்தகவிளக்குஞ் சிந்தாமணியை
அருத்தமுங்கிளையுமற் றனைத்துமாக்கொளீஇ
அப்பெரும்பொருட்கே யணிகலனுமென
ஒப்பருஞ்சொல்லணி யுயர்பொருளணியொடு
கலம்பகமுதலிய கவிதரமாலை
நலம்பெறவியற்றிய நாவினன்மிக்கோன்
எழுதாமறைகளு மிசைத்தமிழ்மறைகளும்
பழுதாகாதுதன் பாலால்விளக்கினோன்
மாதவன்பத்தியோர் வடிவுகொண்டதென
ஓதுதற்குரிய வுத்தமகாத்திரன்
மன்னுசீரழகிய மணவாளதாசர்
என்னும்விப்பிரவா னியற்றியதான
வேங்கடமாலையாம் வெள்ளைநூற்றினுக்கும்
ஈங்குநல்லுரையொன் றெளிதரவிரித்தனன்
நிதிநிறைபுதுவைப் பதியினின்வாழும்
நதிகுலத்தரசெனும் நயநப்பவள்ளல்
செய்தவப்பயனே சேயெனவுதித்தாங்
கெய்தியபெரும்புக ழியற்றமிழ்நாவலன்
தராதலமெச்சுந் தகைசால்
இராஜகோபால னெனும்பெயரினனே.

பாயிரம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

அழகியமணவாளதாசர்

என்கிற திவ்யகவி

பிள்ளைப்பெருமாளையங்கார்

சரித்திரம்.

கருவிலே திருவுடையராய்த் தேறுநான்மறை வேதியர் குலதில கரா யவதரித்துப் பிள்ளைப்பெருமாளென்னுந் திருநாமங்கொண்டு வேதவேதாந்தங்களில் நிபுணரானதன்றிப் பகவத்ஸ்வரூப ரூபகுண விபூதிகளி லாழ்வாரக ளருளிச்செயல்களும் நாதயாமுந யதிவராதிகளாகிற ஆசாரியர்களருளினரஹஸ்யார்த்தங்களும வல்லராய்ப்போருகிறஇவர், "வாழ்விப்பா னெண்ணமோ வல்வினையி னெண்ணமென்னை, யாழ்விப்பா னெண்ணமோ வஃதறியேன்—தாழ்விலாப், பாடலழகார் புதுவைப் பட்டபிரான் கொண்டாடுங், கூடலழகாநின் குறிப்பு,, என்று அத்தியவசித்துத் திருமலைநாயகர் மதுரையி லரசாட்சிசெய்கிற காலத்தில் அவரது ராஜாங்க சேவைகளில் ஒரு ராயசமென்னும் உத்தியோகம பெற்றுத் தமக்குசிதமான வருணாசிரம தருமங்களில் வழுவாது காலக்ஷேபராய்க் "குழலிசையளிமேவு கூரம்வந்தருள் குருபரனிருபா போதமைநத,, திடச்சித்தராசையாலே "வானிட்டகீர்த்தி வளர்கூரத்தாழ்வான் மகிழவந்த, தேனிட்டதார்நம்பெருமாள்குமாரர் சிவனையயன், முனிட்டசாபந் துடைத்தாளரங்கா சங்காழிபுயம, நானிட்டனென்றருள் பட்டர்பொற்றாட்கதி நந்தமக்கே, பெறுபபேறென் றாசாரியருசி கனக்கவுடையராய் வருகிறநாளில் ஒருநாள் ராஜசபையி லுத்தியோக நடத்துகிறவர்கள் நடுவே தாமுங்கூடவிருந்து காரியஞ்செய்து வருகிறபோது, தமது உத்தரீயத்தை இரண்டு கையிலுங்கொண்டு கிருஷ்ண கிருஷ்ணவென்று தேய்த்தனர்.

அதுகண்ட சிலர் 'ஐயங்காரே நீர் நிரந்தரம் பகவத்குணானுபவ சீலரோசரி, ஆனாலும உமது உத்தரீயத்தை இங்ஙனேன் செய்தீரென்று வினவ, அதற்கு நேர்விடை ஆம் அருகுபந்தத்தின் சுவாலை தாவியெறிந்த திருத்திரை அவிந்து நம்பெருமாளும் திருத்தேரிலெழுந்தருளுகிறாரென்றார். அங்ஙன் கேட்டவர்கள், திருவரங்கம் பெரிய கோயில் திருவீதியில் நமபெருமாள் திருத்தேர் உற்சவங்கண்டருளுகிறதுமக்கெங்ஙனே தெரியலாயிற்றென்று நகைத்து, ஏதோ உமக்கிங்ஙனே ஒரு பிரமமுண்டாயிருக்கிறதானல் ராஜசேவைக்கு முழுதும் விரோதமாகாதே என்றும் ஐயங்கார்விஷயத்தில் இரக்கமுள்ளவாகளாயொழிய இங்கே திருத்தேரிலே திருத்திரையிலே பந்தத்தின் சுவாலை தாவி எரியச்செய்தே தேரின்மேலே பெருமாளைச்சேவித்துநின்ற ஐயங்கார்கண்டு திரையைப்பற்றி உதறிக்கீழேதேய்த்து அவித்தருளின

தாக அர்ச்சகர்முதலான முதலிகள் தெரிந்து உடனே தோஷபரிகார
ஞ்செய்து திருத்தேர் நடத்தியருளினார்கள்.

பின்பு நாயகர் ஞானபக்தியுள்ளவராகையாலே அவருக்கு இங்கு
த்தைவிசேஷம் தலத்தாராலே தெரிந்து ஆனந்தபரவசராய் ஐயங்கா
ரைநோக்கி திருத்தேருச்சவத்துக் கெங்ஙனே போயினீரென்ன, அத
ற்கு ஐயங்கார் எனக்கு மானஸாநுபவமேயல்லது கோவிலுக்குப்போ
னதில்லையென்ன, நாயகர் அதிக்ஷேபித்து நீர் உற்சவத்தினன்று அங்கி
ருந்ததாகச்சொல்வது பொய்யோவென்ன, அப்போது இவர் உத்தரீய
த்தைக் கிருஷ்ண கிருஷ்ணவென்று தேய்த்ததுகண்டசிலர், இங்ஙனே
யென்றுண்மைகூற, நன்று நன்றென அதிசயித்து அன்றிரவு நித்திரை
ப்போதில, தாம நம்பெருமாள் சந்நிதிக்குப்போனதாகவும் தென்திரு
க்காவேரியில் ஐயங்கார் தோதவத்தில் தாமரையோராய்நிற்கக்கண்டு
அவருடனே சந்நிதிக்குப்போய் பெரிய பெருமாளைச் சேவித்து மீளும
போது ஐயங்காரைக்காணமல் மயங்கிக் கண்விழித்து வெடிந்த பின்பு
ஐயங்காரை வரவழைத்து, நீரோமஹாநுபாவராயிருக்கிறீர இனி என்
சேவைக்குத்தக்கரல்லீர் உமக்கென்னவேண்டுமென்ன, பெரிய கோயி
லில் தளிகைப்பிரசாதமும் அங்குத்தை வாசமும் வேண்டு மென்ன,
அன்றுதொடங்கிச் சலவைக்கல மண்டபப்பிரகாரத்தில வடமேற்கு
மூலையில் ஒரு அறையும் தளிகைப்பிரசாதமும் கிடைக்கும்படிசெய்து
ஐயங்காரை அனுப்பிவிட, ஐயங்காரும் அங்ஙனே யெழுந்தருளியிரு
ந்து பெரிய கோயிலுக்குக் கலம்பகம்-அந்தாதி-மாலை-ஊசல், அழகா
திருமலைக்கு-அந்தாதி, திருவேங்கடத்துக்கு-மாலை-அந்தாதி, 'நூற்றெ
ட்டுத்திருப்பதிக்கும் ஓரந்தாதிமுதலியபிரபந்தங்களருளிச்செய்து "பா
சமாமடியார்பா,, லென்கிறபடியே அநவரதாநுபவராய் வருகிறவர் ஒரு
நாள், தமது திருவடிகளில் சம்பந்தரானவர்களுக்கு நமக்கு அந்திமத
சை பசுமாட்டினலே முடிவாம் என்று தெரியச்சொல்லி, அப்படியே
சக்கிரவர்த்தி திருமகள் சேவையாய், ஸ்ரீவைகுண்டநாதர் சந்நிதியில்
சேவித்துக்கிடக்கச்செய்தே, ஒரு நொண்டிப்பசு வந்து தவறி அவர்
மேல்விழ, அது விழுந்ததனலாகிய துன்பத்துடனே "துளவ துளவவெ
னச்சொலலுஞ்சொற்போச்சே, அளவினெடு மூச்சுமாச்சே—மூள
ரிக், கரங்கால் குளிர்நததே கண்ணும் பஞ்சாச்சே, இரங்கா யரங்கா
வினி,, என்று திருநாட்டுக்கெழுந்தருளினரென்பது பிரசித்தம். இன்னு
மிவரது வைபவங்களெல்லாந தெரிநதோராலே கேட்டுணர்க.

இது - திரிசிரபுரம்

வித்வான் - கோவிந்தபிள்ளையவர்களால்

எழுதப்பட்டது.

[illegible]



ஸ்ரீ

ராமஜெயம்.

நம்மாழ்வார் துணை.

திருவேங்கடமாலை

மூலமும் உரையும்.

——()——

நான்முகம்-வெண்பா.

தெய்வவணக்கம்.

திண்பார் புகழுந் திருவேங்கடமாலை
வெண்பாவா னூறும் விளம்புதற்குக்—கண்பாராய்
நாராயணாவடியே னாடுந்தமிழ்வேத
பாராயணா சடகோபா.

இதன்பதப்பொருள்.

நாராயணா-ஸ்ரீமந்நாராயணா, அடியேன்-தாசனாகியநான், நாடும்-தியானம்பண்ணுகின்ற, தமிழ்வேதம்-தமிழ்வேதமாகிய பிரபந்தங்களாலே, பாராயணா-பாராயணம்பண்ணப்பட்டவனே, சடகோபா-சடகோபனென்னுந் திருநாமத்தையுடையவனே, திண்-பலம்பொருந்திய, பார்-பூமியிலுள்ளவர்கள், புகழும்-புகழாநின்ற, திருவேங்கடம்-திருவேங்கடத்திற்கு, மாலை-மாலையாக, வெண்பாவால்-வெண்பாவினால், நூறும்-நூறுகவிதையும், விளம்புதற்கு-சொல்லுதற்கு, கண்பாராய்-கிருபைசெய்வாயாக வென்றவாறு. (க)

மூலமேயென்றகரி முன்வந்திடர் தொலைத்து
நீலமேகம்போல நின்றானைப்—பாலாய
வேலைநடுவிற் றுயிலும் வித்தகனை வேங்கடத்து
மாலையன்றிப் பாடாதென் வாய்.

இதன்பதப்பொருள்.

மூலமே-ஆதிமூலமே, என்ற-என்றுமுறையிட்ட, கரிமுன்-யானைமுன், வந்து-தோன்றி, இடர்-அதனதுதுன்பத்தை, தொலைத்து-நீக்கி, நீலம்-நீலநிறமான, மேகம்போல-மேகத்தைப்போல, நின்றானை-நின்ற சுவாமியை, பாலாய-பாலாகிய, வேலை-கடலின், நடுவில்-மத்தியில், துயிலும், திருக்கண்வளரும், வித்தகனை-சருவக்கியனை, என்வாய்-என்வாயானது, வேங்கடத்துமாலை-திருவேங்கடத்தினின்ற திருக்கோலமா யெழுந்தருளியிருக்கின்ற திருமாலை, அன்றி-அல்லாமல், பாடாது-வேறொரு வஸ்த்தியதேவனைப் பாடாது—எ-று. (உ)

அவையடக்கம்.

ஆழ்வார்கள்செந்தமிழை யாதரித்தவேங்கடமென்
றாழ்வானபுன்சொல்லுந் தாங்குமா—லேழ்பாரும்
வெல்லுங்கதிர்மணியும் வெம்பரலுஞ்செஞ்சாந்தும்
புல்லும்பொறுத்தமையே போல.

இதன்பதப்பொருள்.

ஏழ்பாரும்-ஏழுலகமும், வெல்லும்-விலைமதிக்கும், கதிர்-பிரகாசிக்கா நின்ற, மணியும்-நவரத்தினங்களையும், வெம்பரலும்-வெவ்வியபருக்கைக்கல்லையும், செஞ்சாந்தும்-செவ்வியசந்தனமரங்களையும், புல்லும்-புற்களையும், பொறுத்தமையேபோல் -பொறுக்குந்தன்மையேபோல, ஆழ்வார்கள்-ஆழ்வார்களியற்றிய,செந்தமிழை-செவ்வியதமிழை, ஆதரித்த-அங்கீகரித்த, வேங்கடம்-திருவேங்கடமானது, என்-என்னுடைய, தாழ்வான-இழிவான, புன்-புல்லிய, சொல்லும்-சொற்களையும், தாங்கும்-அங்கீகரிக்கும்—என்றவாறு. ஆல்-அசைநிலை. (௩)

நான்முகமுற்றிற்று.

நூல்.

பொன்னுமணியும் பொலிந்தோங்கிப்பார்மகட்கு
மின்னுமணிமுடியாம் வேங்கடமே—மன்னும்
பரமபதநாட்டினன் பையரவின்சூட்டிற்
சிரமபதநாட்டினன் சேர்வு.

இதன்பதப்பொருள்.

பொன்னும்-செம்பொன்னும், மணியும்-நவமணியும், பொலிந்து-விளங்கி, ஓங்கி-உயர்ந்து, பார்மகட்கு-பூமிப்பிராட்டியாருக்கு, மின்னும்-பிரகாசிக்காநின்ற, மணிமுடியாம்-இரத்தினகிரீடம்போலாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, மன்னும்-நித்தியமான, பரமபதநாட்டினன்-பரமபதமென்னுந் திருநாட்டையுடையவன், பை-படத்தையுடைய, அரவின்-காளிங்கனென்னும் பாம்பின், சூட்டில்-முடியில், சிரபதம்-மேலானதிருவடியை, நாட்டினன்-நிறுத்தி நடனஞ்செய்த பெருமான், சேர்வு-சேருமிடம்—எ-று. சேர்வு வேங்கடமெனமுடிக்க இம்முடிபு இனிவரும்பாட்டிற்கெல்லா மொக்கும். (௧)

சோதிமதிவந்துதவழ் சோலைமலையோடிரண்டாய்
மேதினியாள்கொங்கைநிகர் வேங்கடமே—போதி
லிருப்பாற்கடலா ளிபமூர்ந்தார்க்கெட்டாத்
திருப்பாற்கடலான் சிலம்பு.

இதன்பதப்பொருள்.

சோதி - பிரகாசம்பொருந்திய, மதி - சந்திரன், வந்து - தோன்றி, தவழ் - ஊராநின்ற, சோலைமலையோடு-சோலைமலையுடனே, இ

ண்டாய்-இரண்டாகி, மேதினியாள்-பூமிதேவியினுடைய, கொங்கை-கொங்கைகள்-தனங்கள்போலும், வேங்கடமே - திருவேங்கடமலையே, போதில்-தாமரைப்பூவில, இருப்பாற்கு-இருப்பவனாகியபிரமதேவற்கும், அடல்-பலம்பொருந்திய, ஆன்-இடபவாகனத்தையும், இபம்-வெள்ளையானையையும், ஊர்ந்தார்க்கு-ஊர்ந்தவர்களாகிய சிவனுக்குந் தேவேந்திரனுக்கும், எட்டா-எட்டாத, திருப்பாற்கடலான்-திருப்பாற்கடலையுடையவனது, சிலம்பு-மலை—எ-று. (உ)

மாலைக்கோ,லித்திரியும், வையகத்தோர்,தம்பிறவி
வேலைக்கோர்,வங்கமாம்,வேங்கடமே—சோலைத்
தருமா,தரைநட்டான், றண்முல்லையாயர்
தருமா,தரைநட்டான், சார்பு.

இதன் பதப்பொருள்.

மாலை-மயக்கத்தை, கோலி-பற்றி, திரியும்-சஞ்சரிக்கும், வையகத்தோர்-பூமியிலுள்ளோர், தம்-தமது, பிறவி-பிறப்பாகிய, வேலைக்கு-சமுத்திரத்துக்கு, ஓர்வங்கமாம் - ஓர்மரக்கலம்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, சோலைத்தரு - சோலையாகிய கற்பகத்தருவை, மா-பெரிய, தரை-பூமியினிடத்தில, நட்டான்-நிறுத்தினவன், தண்-குளிர்ந்த, முல்லையாயர்-முல்லைநிலத்திடையர், தரும்-பெற்ற, மாதரை-பெண்களை, நட்டான்-சினேகித்தவன், சார்பு-சாருமிடம்—எ-று. (ஙு)

நாலுதிசைமுகமு,நண்ணுதலா,லொண்கமல
மேலுறலால்வேதாவாம், வேங்கமே—சாலுறையு
மண்மயக்கந்தேற்றுவித்தான், மாற்றுதல்போ,லாரியனு
லுண்மயக்கந்தேற்றுவித்தா, னூர.

இதன் பதப்பொருள்.

நாலுதிசைமுகமும்-நாலுதிக்கிலுள்ளாரும், நண்ணுதலால் - வந்து சேவித்தலாலும், ஒண்-அழகிய, கமலமேலுறலால்-நிரைமேலே கொள்ளுதலாலும், வேதாவாம-பிரம்மாவைப்போன்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, சாலுறையும்-சாலின்கணுறையும், மண்மயக்கம்-மண்ணொடுகலந்தநீரை, தேற்றுவித்தால்-தேற்றாங்கொட்டையால், மாற்றுதலபோல்-நீக்குதல்போல், ஆரியனுல் - ஆசாரியனால், உள் - மனதின், மயக்கம்-கலக்கத்தை, தேற்றுவித்தான்-தேறப்பண்ணினவனது, ஊர்-ஊர்—எ-று. நாலுதிசைமுகமும் - நான்குதிக்குமுகமாக, நண்ணுதலால்-பொருந்தலாலும், ஒண்கமலமேலுறலால் - அழகிய தாமரைப்பூவின்மே லிருத்தலானிம் வேதாவென[illegible]மொழிச்சிலேடைவகையாயிற்று—எ-று. (ச)

பாணிபிறைகொன்றை,பணிசூடிமானேந்தி
வேணியரனைப்பொருவும்,வேங்கடமே—யாணிநிறப்
பீதாம்பரனூர், பிரமர்வா,ழண்டங்கண்
[illegible]

இதன்பதப்பொருள்.

பாணி-கங்கையும், பிறை-மூன்றாம்பிறையும், கொன்றை - கொன்றையும், பணி-பாம்பையும், சூடி-தரித்து, மான்-மானையும், ஏந்தி-தாங்கி, வேணி-சடையையுடைய, அரனை-சிவனை, பொருவும்-ஒப்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஆணிநிறம்-ஆணிநிறமான, பீதாம்பரனார்-பொன்னாடையையுடையவர், பிரமர்-பிரமதேவர், வாழ்-வாழ்கின்ற, அண்டங்கள்-அண்டங்களுக்கு, மீதாம்-மேலாகிய, பரனார்-பரதத்துவமானவர், விருப்பு-விரும்புமிடம்—எ-று. அரனெனச் செம்மொழிச் சிலேடைவகையாயிற்று. (௫)

மாலாய்ச்சசிதழுவி வச்சிரமேந்திப்புகர்மா
மேலாய்ப்புரந்தரனும் வேங்கடமே—நாலாய்க்
கிளர்வாருமந்தரத்தான் கேட்டமரர் வேட்டுத்
தளர்வாருமந்தரத்தான் சார்பு.

இதன்பதப்பொருள்.

மாலாய்-மேகங்கள்பொருந்தி, சசி-சந்திரனை, தழுவி-கூடி, வச்சிரம்-வச்சிரக்கல்லும், ஏந்தி-தாங்கி, புகர்-பொன்னிறத்தையுடைய, மா-யானையை, மேலாய்-மேற்கொண்டு, புரந்தரனும்-தேவேந்திரனையொப்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நாலாய் - நான்கென்னுந்தொகையாய், கிளர்-உயர்ந்த, வாரு-புயமாய், மந்தரத்தான்-மந்தரமலையையுடையவன், அமரர்-தேவர்கள், கேட்டு-கேள்விப்பட்டு, வேட்டு-விரும்பி, தளர்வாரும்-கிட்டாமற்றளர்ச்சியடைவதற்கேதுவான, அந்தரத்தான்-பரமகாயத்தை யுடையவன், சார்பு-சாருமிடம்—எ-று. மாலாய்-ஆசையாய், சசி-இந்திராணியை, தழுவி-மேவி, வச்சிரமேந்தி-வச்சிராயுதத்தைத்தரித்து, புகர்-புள்ளிகளையுடைய, மா - ஐராவதமென்னும் வெள்ளையானையை, மேலாய்-மேற்கொள்ளும்புரந்தரனெனச் செம்மொழிச் சிலேடை வகையாயிற்று. (௬)

வள்ளிபுணர்ந்தாறுமுக மன்னிமயின்மேற்கொளலால்
வெள்ளிலைவேல் வேள்போலும் வேங்கடமே—யுள்ளினைத்
தங்கமலப்பார்வையான் றன்னடியார்மேல்வைக்குஞ்
செங்கமலப்பார்வையான் சேர்வு.

இதன்பதப்பொருள்.

வள்ளி-வள்ளிக்கொடிகள், புணர்ந்து-பொருந்தி, ஆறுமுகமும்-ஆற்றினிடம், மன்னி-தன்னிடத்துநிலைபெற்று, மயில்-மயிலை, மேற்கொளலால்-மேற்கொண்டிருத்தலால், வெள்-வெளுப்பாகிய, இலை-அச்சவடிவான, வேல்-வேலாயுதத்தையுடைய, வேள்போலும் - சுப்பிரமணியனைப்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, உள்ளினை - தன்னைநினைத்தவனை, தங்க-இருக்க, மலம்-அழுக்கையுடைய, பார்-பூமியின்கண், வையான்-இருத்தாதவன், தன்-தனது, அடியார்மேல்-தாசர்களினிடத்து, வைக்கும்-அன்புவைக்கின்ற, செங்கமலப் பார்வையா

ன்-செந்தாமரைப்பூப்போலுந் திருக்கண்களையுடையவன், சேர்வு-சேருமிடம்—எ-று. வள்ளி-வள்ளியாகியபெண்ணை, புணர்ந்து-கூடி, ஆறுமுகம்-ஆறுதொகையான முகத்தோடே, மன்னி - பொருந்தி, மயின்மேற்கொளலால் - மயிலின்மேலிருத்தலால், வேள்போலுவெனப் பிரிமொழிச்சிலேடைவகையாயிற்று. (எ)

புள்ளரவநீரரவம்போர்மாவரவமறு
வெள்ளரவவெற்பாகும்வேங்கடமே—யொள்ளரியாய்
மாகனகம்பத்தினார், வாய்கண்கையுந்திபதங்
கோகனகம்பத்தினார், குன்று.

இதன்பதப்பொருள்.

புள்-பறவைகளின், அரவம்-ஒலியும், நீர்-ஆற்றினீரினது, அரவம்-சத்தமும். போர்-யுத்தஞ்செய்யாநின்ற, மா-யானைகளினது, அரவம்-ஓசையும், அறு-நீங்காத, வெள்-வெள்ளிய, அரவவெற்பாகும்-சேடவெற்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒள்-அழகிய, அரியாய்-சிங்கமாய், மா-பெரிய, கனம்-பெருத்த, கம்பத்தினார்-ஸ்தம்பத்தினுள்ளேநின்றுந்தோன்றினவர், வாய்-வாயொன்றும,கண-கண்களிரண்டும, கை-கரங்களுன்கும், உந்தி-கொப்பூழொன்றும, பதம் - பாதமிரண்டுமாகிய, கோகனகம்-தாமரைப்பூ, பத்தினார் - பத்துமுண்டானவருடைய, குன்று-மலை—எ-று. (அ)

துய்யசெம்பொற்கோயிற்சுடரெறிப்பக்கண்முகிழ்த்து
வெய்யவன்றேர்மாவிடறும்வேங்கடமே—யையிருநா
றுனமுகப்பாம்பணையா ரானிரப்பின்னூதிவரும [illegible]
கானமுகப்பாம்பணையார், காப்பு,

இதன்பதப்பொருள்.

துய்ய-பரிசுத்தமான, செம்பொன் - செவ்வியபொன்னினாற்செய்த, கோயில்-திருக்கோயிலினுடைய, சுடர் - காந்தி, எறிப்ப - பிரகாசிக்க, கண்-கண்கள், முகிழ்ந்து-மூடி, வெய்யவன-சூரியனுடைய, தேர-தேரிற்கட்டும், மா-குதிரைகள், இடறும் - காலிடறப்பட்ட, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஐயிருநூறுன-ஆயிரமான, முகம் - முகத்தையுடைய, பாம்பு-பாமபாகிய ஆதிசேடனை, அணையார - மெத்தையாகவுடையார், ஆனிரப்பின்-பசுக்கூட்டத்தின்பின்னே, ஊதிவரும் - ஊதிக்கொண்டுவரும், கானம்-இராகத்தை, உகபபாம்-விருப்பமாகவுடைய, பணையார்-பிள்ளாங்குழலையுடையவா, காப்பு-கரக்குமிடம்—எ-று. ()

மாண்டுபிறக்குந்துயர்போய்வைகுந்தம்புக்கவரு
மீண்டுதொழக்காதலிக்கும்வேங்கடமே—பாணடுமக
னேறிரதப்பாகனாேத்துமடியார்காவி
லூறிரதப்பாகனூர்.

இதன்பதப்பொருள்.

மாண்டு-இறந்து, பிறக்கும்-துயர், துன்பம்-போய்நீங்கி, வைகுந்தம-பரமபதத்தில்,புக்கவரும்-புகுந்தவரும், மீண்டு-திரும்பிவந்து,தொழ-வணங்க, காதலிக்கும்-ஆசைப்படும், வேங்கடமே-திருவேங்கடமலையே,

பாண்டுமகன்-அருச்சுனன், ஏறு-ஏறுகின்ற, இரதப்பாகனுர்-இரதத்திற்குச்சாரதியானவர், ஏத்தும்-துதிசெய்யும், அடியார்-தாசர்களினது, நாவில-நாவினிடத்தில், ஊறு-ஊறுகின்ற, இரதம் சுவையான-பாகனுரசருக்கரைப்பாகுபோன்றவருடைய, ஊர்-ஊர்—எ-று. (௰)

கோலியொருநான்கு குலமறையுநாற்றிசையும்
வேலியெனநின்றேத்தும்,வேங்கடமே—வாலிதனை
நண்பாவையாதரித்தான்,ஞானமுதலாழ்வார்கள்
வெண்பாவையாதரித்தான், வெற்பு.

இதன்பதப்பொருள்.

கோலி-கட்டான, ஒருநான்குகுலமறையும்-சிரேட்டமாகிய நான்குகூட்டமானவேதமும், நாற்றிசையும் - நாலுதிக்கிலுள்ளாரும, வேலியென-வேலிபோல, நின்றேத்தும்-நின்றுதோத்திரமபண்ணும், வேங்கடமே-திருவேங்கடமலையே, வாலிதனை-வாலியை, நண்பா - நட்பாக, வையாது வைக்காதுஅறிந்தான்-சங்கரித்தவன், ஞானமுதலாழ்வார்கள்-அறிவையுடையமுதலாழ்வார்கண்மூன்றுபேருஞ்சொன்ன, வெண்பா-வெண்பாவை, ஆதரித்தான்-அங்கீகரித்தவனுடைய, வெற்பு-மலை—எ-று. (௰௧)

தெள்ளியவோர்வீடருளுஞ்,சீர்கேட்டுப்பொன்மலையும
வெள்ளிமலையும்பணியும,வேங்கடமே—புள்ளின்
கொடிவாகனத்தான், குளிர்ந்திருண்ட,காரின்
வடிவாகனத்தான், வரை.

இதன்பதப்பொருள்.

தெள்ளியது-ஆராயப்பட்ட, ஓர்-ஒப்பில்லாத, வீடருளும்-மோட்சத்தைக்கொடுக்கும், சீர-கீர்த்தியை, கேட்டு-கேள்விப்பட்டு, பொன்மலையும-மகமேருவும், வெள்ளிமலையும்-கயிலங்கிரியும், பணியும் - வணங்கும், வேங்கடமே-திருவேஙகடமலையே, புள்ளின்-பறவையாகிய, கொடி-கொடியையும், வாகனத்தான்-வாகனத்தையுமுடையவன், குளிர்ந்து-குளிர்ச்சிபொருந்திய, இருண்ட-கறுத்தகாரின்மேகம்போல,வடிவு-நிறத்தையும், ஆகன்-திருமேனியையுமுடையவன், நத்தான்-சங்கையுடையவனது, வரை-மலை—எ-று. பறவையாவது-கருடன், சங்கமாவது-பாஞ்சசந்நியம். (௰௨)

எப்பூதலமுமிறைஞ்சித்திசைநோக்கி
மெய்ப்பூசனைபுரியும்,வேங்கடமே—கொப்பூ
ழில்குமுண்டகந்தரத்தா,னின்றளிக்குமீரே
ழுலகுமுண்டகந்தரத்தானூர்.

இதன்பதப்பொருள்.

எப்பூதலமும்-எந்நிலத்துள்ளாரும், திசைநோக்கி-திக்குநோக்கி, இறைஞ்சி-வணங்கி, மெய்-உண்மையாக, பூசனைபுரியும்-பூசிக்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, கொப்பூழ் - உந்தியினிடத்தில், இல்கும்-பிரகாசிக்கானின்ற. முண்டகம்-தாமரைப்ப. நா-[illegible]

தான்பெற்று, அளிக்கும்-காக்கப்பட்ட, ஈரேழுலகும் - பதினாலுலோகத்தையும், உண்ட - புசித்த, கந்தரத்தான் - மிடற்றையுடையவனது, ஊர்-ஊர்—எ-று. (௰௩)

நோவினையுநோயினையு நோய்செய்வினையினையும
வீவினையுந்தீர்த்தருளும்,வேங்கடமே—மூவினைசெய்
மூவடிவாய்ப்பச்சென்றான், முன்னாளகலிகைக்குச்
சேவடிவாய்ப்பச்சென்றான், சேர்வு.

இதன்பதப்பொருள்.

நோவினையும்-பிறவிநோவாகியவருத்தத்தையும், நோயினையும்-வியாதியையும், நோய்செய்வினையும் - வியாதிக்கேதுவாகிய பூர்வகர்மத்தையும், வீவினையும்-மரணத்தையும்-தீர்த்தருளும்-நீக்கிக்கிருபைசெய்யும், வேங்கடமே-திருவேங்கடமலையே, மூவினைசெய் - மூன்றுதொழிலையுஞ்செய்யும், மூவடிவாய்-மூன்றுசொரூபமாய், பச்சென்றான் - பச்சென்றநிறத்தையுமுடையவன், முன்னாள் - முற்காலத்தில், அகலிகைக்கு - கௌதமருடைய தேவியான அகலிகையென்னும் பெண்ணுக்கு, சேவடி-சிவந்ததிருவடி,வாய்ப்ப-கிடைக்க,சென்றான்-சென்றவன, சேர்வு-சேருமிடம்—எ-று. (௰௪)

பித்துமலடூமைமுட மபேய்குருடுகூன்செவிடு
மெய்த்துயர்நோய்தீர்த்தருளும,வேங்கடமே—பத்தருக்கு
வந்ததுக்கங்காப்பான், மலருந்தியினுலகு
தந்ததுக்கங்காப்பான், தலம்.

இதன்பதப்பொருள்.

பித்து-பயித்தியமும், மலடு-பிள்ளைப்பேறின்மையும, ஊமை-வாய்பேசாமையும், முடம்-நடவாமையும், பேய்-பிசாசும், குருடு-கண்தெரியாமையும, கூன்-உடல்வளைவும், செவிடு-காதுகேளாமையும், மெய்த்துயர்நோய்-உடம்புத்துக்கவியாதியுமாகிய இவைகளையெல்லாம், தீர்த்தருளும்-நீக்கிக்கிருபைசெய்யும், வேங்கடமே-திருவேங்கடமலையே, பத்தருக்கு-தாசருக்கு, வந்ததுக்கம்-வந்ததுன்பத்தை, காப்பான்-நீக்குவான், மலர்-தாமரைப்பூவையுடைய, உந்தியின்-கொப்பூழிலே, உலகம்-உலகத்தை, தந்து-பெற்று, அதுக்கு-அதற்கு, அங்காப்பான்-வாய்திறப்பவனுடைய, தலம்-இடம்—எ-று. (௰௫)

வாடப்பசித்த,வரிப்புலிவாலாட்டி
மேடத்தைப்பார்த்துறுக்கும,வேங்கடமே—கூடத்து
கம்பவளமாவென்றான,காசினிக்கும்வெண்ணெய்க்குஞ்
செம்பவளமாவென்றான், சேர்வு.

இதன்பதப்பொருள்.

வாட-சரீரம்வாட, பசித்த-பசித்த, வரி-வரிகளையுடைய, உழுவையானது, வாலாட்டி-வாலையாட்டி,மேடத்தை-மேடவிராசியை, பார்த்து-நோக்கி,உறுக்கும்-கோபிக்கும்,வேங்கடமே-திருவேங்கடமலையே கூடத்து-கூடத்தின,கம்பத்து-ஸ்தம்பத்திற்கட்டும்,வளம்-வளமபொருந்திய, மா-யானையை, வென்றான்-வென்றவன், காசினிக்கும் - பூமிக்கு

ம், வெண்ணெய்க்கும்-அளைக்கும் செம்பவளம்போலுந்திருவாயை, ஆ வென்ருன்-ஆவென்றுதிறந்தவன், சேர்வு-சேருமிடம்—எ-று. வாடிப் பசித்தவென்பதூஉம் பார்த்திருக்குமென்பதூஉம்பாடம் யானையாவது குவலையாபீடம். (௰௬)

தாவிவரும்வானரங்கடண்குவட்டிற்கற்கடக
மேவிவரக்கண்டோடும்வேங்கடமே—காவிரிசூழ்
பொற்றிருவரங்கத்தான்போதன்சிவனென்னு
மற்றிருவரங்கத்தான்வாழ்வு.

இதன்பதப்பொருள்.

தாவி-தாவிக்கொண்டு, வரும்-வருகின்ற, வானரங்கள்-குரங்குகள், தண்-குளிர்ச்சிபொருந்திய, குவட்டில்-சிகரத்தில், கற்கடகம்-கற்கட கவிராசி, மேவிவர-பொருந்திவர, கண்டு-பார்த்து, ஓடும்-பயந்தோடும், வேங்கடமே-திருவேங்கடமலையே-காவிரிசூழ்,காவிரியாறுசூழ்ந்தபொ ற்றிருவரங்கத்தான்பொன்மயமானதிருவரங்கமென்னுந் திருப்பதியையு டையவன்போதன்-பிரமனும், சிவன்-ஈசனும், என்னும்-என்றுசொல லும், இருவர்-இருவரையும்-அங்கத்தான், சரீரத்திலுடையவன்-வாழ் வு, வாழுமிடம்—எ-று. மற்று-அசைநிலை. (௰௭)

ஒண்சிந்துரத்தைவெறுத் தூடும்பிடிவேழம்
விண்சிங்கங்கண்டணைக்கும் வேங்கடமே—யெண்சிந்தைக்
கோராவிருந்தா னொருநாள்விதுரனுக்கு
வாராவிருந்தான் வரை.

இதன்பதப்பொருள்.

ஒண்-அழகிய, சிந்துரத்தை-யானையை, வெறுத்து-கோபித்து, ஊடு ம்பிணங்காநின்ற-பிடிவேழம், பெண்யானையானது - விண், ஆகாயத்தி லிராநின்ற-சிங்கம், சிங்கவிராசியை-கண்டு, பார்த்து-அணைக்கும், சே ருமபடியான-வேங்கடமே, திருவேங்கடமலையே-எண்எண்ணப்பட்ட, சிந்தைக்கு-மனதுக்கு, ஓராவிருந்தான்-எட்டாமலிருந்தவன்,ஒருநாள்- ஒருதினம், விதுரனுக்கு-விதுரனென்பவனுக்கு, வாராவிருந்தான்-வரு தற்கரிய விருந்தானவனுடையவரைமலை—எ-று. (௰௮)

மாதுமடக்கன்னிகழை வந்தனுக்கம்பத்தின்
மீதுநடிப்பாளொக்கும் வேங்கடமே—யூதுகுழற்
பாலன்பாலாக்குவித்தான் பஞ்சவர்க்காநூற்றுவரைக்
காலன்பாலாக்குவித்தான் காப்பு.

இதன்பதப்பொருள்.

மாது-பெண்ணாகிய, மடம்-மடமைத்தன்மைபொருந்திய, கன்னி-க ன்னி, கன்னிராசியானது-கழை, மூங்கிலில்-வந்தனுக, வந்துபொருந் தகம்பத்தின்மீது-ஸ்தம்பத்தினமேல்,நடிப்பாளொக்கும்-நடிக்கின்றஆரி யப்பெண்ணையொக்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஊது-ஊ தாநின்ற, குழற்பால்-வேய்ங்குழலினிடத்தில், அன்பால்-அன்பினுல், ஆ-பசுக்களைக்,குவித்தான்-கூட்டினவன், பஞ்சவர்க்காக-பாண்டவரு க்காக, நூற்றுவரை-துரியோதனுதிகளை, காலன்பால்-இயமனிடத்தி, ஆக்குவித்தான்-போகப்பண்ணினவன், காப்பு-காக்குமிடம்—எ-று. ()

ர

மன்னுகுடிக்குறவர் வானூர்துலாத்திடையே
மின்னுமணிநிறுக்கும் வேங்கடமே—யென்னு
ளரவிந்தப்போதகத்தா னன்பாலழைத்த
கரவிந்தப்போதகத்தான் காப்பு.

இதன்பதப்பொருள்.

மன்னு-நிலையான, குடி-குடிகளையுடைய, குறவர்-குறவர்கள்,வான்-ஆகாயத்திலே.ஊர்-தவழ்கின்ற,துலாத்திடையே-துலாராசியினிடத்து மின்னும்-பிரகாசிக்காநின்ற, மணி-இரத்தினங்களை, நிற்கும்-நிறுக்கும்படியான, வேங்கடமே-திருவேங்கடமலையே, என்-தாசனாகியவென்னுடைய, உள்-இருதயமாகிய, அரவிந்தப்போது-தாமரைப்பூவை, அகத்தான்-வீடாகவுடையவன், அன்பால்-அன்பினாலே, அழைத்த-ஆதிமூலமேயென்றுமுறையிட்ட, கரம்-கையையுடைய, விந்தம்-விந்தபர்வதத்தையொத்த, போதகத்தான்-யானையை யுடையவன், காப்பு-காக்குமிடம்—எ-று. (௨௰)

கொல்லைக்குறவர் குளிர்மதிமானைக்ககன
வில்லைக்குனித்தெய்யும் வேங்கடமே—கல்லை
யரிவைவடிவாக்கினா னன்னமாய்வேத
விரிவைவடிவாக்கினான் வெற்பு.

இதன்பதப்பொருள்.

கொல்லை-தினைக்கொல்லையுடைய, குறவர்-குறவர்கள், குளிர்-குளிர்ந்த, மதி-சந்திரனிடத்துள்ள, மானை - களங்கமாகியமானை, ககனவில்லை-இந்திரதனுவை, குனித்து - வளைத்து, எய்யும் - அம்பெய்யப்படும், வேங்கடமே-திருவேங்கடமலையே, கல்லை-கல்லுருவத்தை, அரிவைவடிவாக்கினான்-பெண்ணுருவமாக்கினவன், அன்னமாய் - அம்ஸவடிவாய், வேதம்-வேதத்தின், விரிவை-வித்தாரத்தை, வடி-தெளியப்பண்ணின, வாக்கினான்-திருவாக்கையுடையவன், வெற்பு - மலை—எ-று. கல்லானவள்-அகலிகை, அன்னமாவது - பிரமனுக்கு, வேதோபதேசம்பண்ணினகதை. (௨௧)

தேனேறித்தேன்வைக்குந் திண்கழைமேல்விண்மகர
மீனேறிவேள்கொடியாம் வேங்கடமே—வானேறித்
தீமுகனாகத்திருப்பார் சேவடிக்காளானவர்க்
காமுகனாகத்திருப்பார் காப்பு.

இதன்பதப்பொருள்.

தேன்வண்டுகள், ஏறி-ஏறுதலைச்செய்து, தேன்வைக்கும்-தேன்கூடுவைக்கும், திண்-வலிய, கழைமேல்-மூங்கிலின்மேல், விண்-ஆகாயத்திலிருக்கிற, மகரமீனேறி-மகரராசியானதேறி, வேள்-மன்மதனுடைய, கொடியாம்-கொடியையொப்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, வான்-பரமாகாயமாகிய பரமபதத்தில், ஏறி - ஆரோகணித்து, தீ-விஷச்சுவாலாக்கினியையுடைய, முகன்-முகமுள்ள, நாகத்து-பாம்பின்மீது, இருப்பார்-இருப்பவர், சேவடிக்கு-திருவடிக்கு, ஆளானவ

னை-அடிமையானவென்னை, காமுகனுக-காமத்தைவிரும்பினவனுக, திருப்பார்-மாற்ருதவர், காப்பு-காக்குமிடம்—எ-று. நாகமாவது-இருவனந்தாழ்வான், முகம்-முகமெனப்பொலியாயிற்று. (௨௨)

ஒண்கொம்பிற்றேனிரு லூர்பிறைக்கோட்டாலுடைந்து
விண்கும்பவாய்நிறைக்கும் வேங்கடமே—வண்கும்பக்
கம்பத்தானைக்கடுத்தார் காரரக்கர்போர்மாளக்
கப்பத்தானைக்கடுத்தார் காப்பு.

இதன்பதப்பொருள்.

ஒண் - அழகிய, கொம்பில்-கொம்பினிடத்திருக்கின்ற, தேனிருல்-தேன்கூடு, ஊர்-தவழ்கின்ற, பிறைக்கோட்டால்-பிறையாகியகொம்பினுலே, உடைந்து-உடைபட்டு, விண்-ஆகாயத்திலிராகின்ற, கும்பம்-கும்பவிராசியினுடைய, வாய்நிறைக்கும்-வாய்மட்டுந் தேனைநிறைக்கும், வேங்கடமே-திருவேங்கடமலேயே, வண்கும்பம்-வளப்பம்பொருந்தியமத்தகத்தையுடைய, கம்பத்து - தூணிற்கட்டுதற்குரிய, ஆனைக்கு-யானைக்கு, அடுத்தார்-சமீபித்தவர், கார்-கரிநிறத்தைப்பொருந்திய, அரக்கர்-இராக்கதர்கள், போர்-யுத்தத்தில், மாள-மடிதற்கு, கம்-சிரசு, பத்தானை-பத்தென்னுந்தொகையுடையவனை இராவணனை, கடுத்தார்-கோபித்தவர், காப்பு-காக்குமிடம்—எ-று. யானையாவது - கசேந்திராழ்வான். (௨௩)

கூனிளவெண்குருகு கோனேரியில் விசும்பூர்
மீனநிழலைக்கொத்தும் வேங்கடமே—கானகத்துப்
பொன்னுருழையெய்தார் பூங்கழலேதஞ்சமென
வுன்னுருழையெய்தா ரூர்.

இதன்பதப்பொருள்.

கூன்-வளைந்தகழுத்தையும், இளம்-இளமையும், வெண்-வெண்ணிறத்தையுமுடைய, குருகு-கொக்குப்பட்சியானது, கோனேரியில்-கோனேரிதீர்த்தத்திலே, விசும்பு-ஆகாயத்தில்,ஊர்-சஞ்சரிக்கின்ற,மீனம்-மீனவிராசியினது, நிழலை-சாயலை, கொத்தும்-கொத்தாநின்ற,வேங்கடமே-திருவேங்கடமலேயே, கானகத்து-காட்டினிடத்தி-பொன்-பொன்னிறத்தை, ஆர்-பொருந்திய, உழை-மானை, எய்தார்-எய்தவர்,பூங்கழலே-தாமரையாகிய திருவடிகளே, தஞ்சமென-பற்றுக்கோடென, உன்னுருழை-நினையாதவரிடத்திலே, எய்தார்-செல்லாதவருடைய,ஊர் ஊர்—எ-று. பொன்மானனவன் மாரீசன். (௨௪)

மண்மூலந்தாவென்று மந்திகடுவற்குறைப்ப
விண்மூலங்கேட்டஞ்சும் வேங்கடமே—யொண்மூல
வேதத்திருக்குழையார் வெய்யோனிரண்டனைய
சீதத்திருக்குழையார் சேர்வு.

இதன்பதப்பொருள்.

மண-மண்ணிலிருக்கிற, மூலம்-கிழங்காகியமூலத்தை, தாவென்று-கொடுவென்று, மந்தி-பெண்குரங்கு, கடுவற்கு - ஆண்குரங்குக்கு, உ

றைப்ப-சொல்ல, விண்-ஆகாயத்திலிருக்கின்ற, மூலம்-மூலநட்சத்திரம், கேட்டு-கேட்டு, அஞ்சும்-பயப்படும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒண்-அழகிய, மூலம்-காரணமான, வேதத்து-வேதங்களில், இருக்குழையார்-இருக்கும்வேதத்தினிடத்தையுடையவர், வெய்யோனிரண்டனைய-இரண்டுசூரியனுக்குச்சமானமான, சீதம் - குளிர்ந்த, திருக்குழையார் - சிறப்புப்பொருந்திய குண்டலங்களையுடையவர், சேர்வு-சேர்வுமிடம்—எ-று. வன்மூலமென்பதூஉம்-எங்குமென்பதூஉம்பாடம், கிழங்குதாவென்பதற்கு மூலந்தாவென்பதனை லதைக்கேட்டுமூலநட்சத்திரமான பெண்தன்னை ஆண்குரங்குபிடித்துப் பெண்குரங்குகையிலே கொடுக்கப்போகிறதென்று பயப்படும் திருவேங்கடமலையென்பது குறிப்பு. (௨௫)

நாலவிட்டப்பொன்னூச னன்னுதலாருந்துதோறு
மேலவிட்டந்தொட்டிழியும் வேங்கடமே—யாலமிட்ட
பொற்புக்களங்கறுத்தார் போர்சரியவாணன்றோள்
வெற்புக்களங்கறுத்தார் வீடு.

இதன்பதப்பொருள்.

நாலவிட்ட-தூங்கவிட்ட, பொன்-பொன்னாற்செய்த, ஊசல்-ஊஞ்சலை, நன்னுதலார்-நல்லநுதலினையுடையபெண்கள், உந்துதோறும்-தள்ளுந்தோறும், மேல்-ஆகாயத்திலிருக்கின்ற, அவிட்டம் - அவிட்டநாளாகியபெண்ணை, தொட்டு-தீண்டி, இழியும்-இறங்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஆலமிட்ட-விடத்தைவைத்த, பொற்பு-பொலிவையுடைய, களம்-மிடறு, கறுத்தார் - கறுத்தவரானசிவன், போர்-போரிலே, சரிய-பின்னிட, வாணன் - வாணசூரனையுடைய, தோள்-தோள்களாகிய,வெற்புக்கள்-மலைகளை, அங்கு- அவ்விடத்து, அறுத்தார்-அறுத்தவருடைய, வீடு-கிரகம்—எ-று. அவ்விடமாவது-யுத்தகளம். ()

பானிறங்கொடெங்கினிளம் பாளைவிரியச்சுனையின்
மீனினங்கொக்கென்றொளிக்கும் வேங்கடமே—வானிமிர்ந்த
வெள்ளத்துக்கப்பாலான் மெய்ப்பரமயோகியர்க
ளுள்ளத்துக்கப்பாலானூர்.

இதன்பதப்பொருள்.

பால்நிறம்-வெண்மைநிறத்தை, கொள்-கொண்ட, தெங்கின்-தென்னமரத்தினது, இளம்பாளை-சிறுபாளை, விரிய-முகிழ்விரிய, சுனையின்-சுனையிலிருக்கிற, மீனினம்-மீன்கூட்டங்கள், கொக்கென்று-கொக்கென்றுகருதி, ஒளிக்கும்-பயந்துமறையும், வேங்கடமே - திருவேங்கடமலையே, வான்-ஆகாயபரியந்தம், நிமிர்ந்த-எழுந்த, வெள்ளத்து-வெள்ளத்திலே, கப்பு-கிளைகளையுடைய, ஆலான்-ஆலிலைமேற்பள்ளிகொண்டவன், மெய்-உண்மையான, பரமயோகியர்கள்-மோட்சத்தைவிரும்பும்யோகியர்களுடைய, உள்ளத்துக்கு-இருதயத்துக்கு, அப்பாலான்-எட்டாதவனுடைய, ஊர்-ஊர்—எ-று. உள்ளத்துக்கப்பாலானென்பது-அகங்காரங்கடந்தசித்தத்திலே நிற்கப்பட்டவனென்றறிக. (௨௭)

கொம்பணியுந் தேமாங் குயில்கருடன் போற்கூவ
வெம்பணிகள் புற்றடையும் வேங்கடமே — வம்பணியும்
விண்ணினைந்துகாப்பார் மிசைவைத்தார் பத்தரைத்தம்
முண்ணினைந்துகாப்பா ருவப்பு

இதன்பதப்பொருள்.

கொம்பு-கொம்பிலே, அணியும்-அழகுபெற்ற, தேம்-இனிமைபொருந்திய, மாங்குயில்-மாமரத்திலிருக்கின்றகுயிலானது, கருடனைப்போல்-கருடப்பக்ஷியைப்போல், கூவ-சப்திக்க, வெம்பணிகள்-வெய்யபாம்புகள், புற்று-புற்றுகளை, அடையும்-நுழையும், வேங்கடமே - திருவேங்கடமலையே, வம்பு-மணத்தினாலே, அணியும்-அழகுபெற்ற, விண்ணின்-தேவலோகத்திலுள்ள, ஐந்துகா - ஐந்துவகையான தருக்களை, பார்மிசை-பூமியினிடத்து, வைத்தார்-வைத்தவர், பத்தரை-அடியார்களை, தம-தம்முடைய, உள்-திருவுளத்தில், நினைந்து-கருதி, காப்பார்-காக்கப்பட்டவர், உவப்பு-விரும்புமிடம்—எ-று. குயில் கருடன்போல் கூவுமெனம்பாடங் கூறுவாருமுளர் ஒருபறவைபோலக் கூப்பிடுமென்பது நியாயமாகாது கருடனைப்போலக்கூவுதல் பலபடச்சொல்லிவித்தாற் கிளி-குயில் பூவை பயிற்றின வாசகஞ்சொல்லுமென்பது நியாயம் கருடன்போலக்கூப்பிடுதலும் பயிற்றுவித்த லாகாதோவெனின் பயிற்றுவிக்கிறவனுக்கு வாராதபாஷைக்குரல் குயிலுக்கெங்கேபயிற்றுவிப்பானென மறுக்க, ஐந்துகாத்தருவாவன அரிச்சந்தனம்-தேவதாரம்-மந்தாரம்-பாரிசாதம்-கற்பகம்-இவற்றுளொன்றாகிய பாரிசாதவிருட்சத்தைச் சத்தியபாமைக்காகக் கொண்டுவந்து பூமியினிடத்து வைத்தவர். (உஅ)

தெங்கிளநீர் வீழச் சிதறுமணியைக்கரிகள்
வெங்கனலென் றஞ்சிப்போம் வேங்கடமே — பைங்கழையின்
மாண்டாரைப் பண்டழைத்தார் மாமறையோன்பாற் றோன்றி
மாண்டாரைப் பண்டழைத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

தெங்கு-தென்னமரத்தின், இளநீர்-இளநீர்கள், வீழ-விழ, சிதறும்-சிதறுகின்ற, மணியை-மணிகளை, கரிகள்-யானைகள், வெங்கனலென்று-வெவ்விய அக்கினியென்று, அஞ்சிப்போம்-பயந்தோடும், வேங்கடமே-திருவேங்கடமலையே, பைங்கழையின் - பசியமூங்கிலின், மாண்-அழகையுடைய, தாரை-குழலினிடத்தில், பண்-ஏழிசை, தழைத்தார்-தழைக்கவூதினவர், மாமறையோன்பால்-பெருமைபொருந்தியபிராமணனிடத்தில், தோற்றி-பிறந்து, மாண்டாரை - இறந்தவரை, பண்டு - பழமையிலே, அழைத்தார்-அழைத்தவர், வாழ்வு - வாழுமிடம்—எ-று. மறையோனுவான் சாந்திபனாகிய உபாத்தியாயர் இவருடைய பிள்ளைகளாயிறந்தவரைக் குருதக்ஷிணையாக இயமலோகத்திலேபோய்மீட்டுக்கொண்டுவந்த கதை பாகவதம் ஏழிசையாவன தாரம்-துத்தம்-கைக்கிளை-விளரி-இளி-குரல்-உழை-யென்பனவாம (உக)

அங்கயலினமேக மதிரப்பெருமாரதள்
வெங்கயமென்றங்காக்கும் வேங்கடமே—பங்கயனோ
டமபுவனங்கடந்தா ரமபுயத்துமங்கையொடு
வெமபுவனங்கடந்தார வெற்பு.

இதன்பதப்பொருள்.

அங்கு-அவ்விடத்து, அயலின-பக்கத்தின, மேகம்-மேகங்கள். அதிர-ஆரவாரிக்க, பெருமாரதள்-பெரியமலைப்பாம்பு, வெங்கயமென்று-வெவ்வியயானையென்று நினைத்து, அங்காக்கும்-வாய்திறக்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, பங்கயனோடு-பிரமதேவனோடுகூட, அம்-அழகிய, புவனங்கள்-உலகங்களை, கடந்தார்-கடந்தவர், அம்புயத்து-தாமரையினிடத்திலிராநின்ற, மங்கையொடு-பெண்ணாகிய ஸ்ரீதேவியாருடனே, வெமபு-சூடுகின்ற வனம-சா[illegible] கடந்தார்-க[illegible]ருளைய, வெற்பு-மலை—எ-று. அவ்விடமாவது மலையாயுமிட[illegible] ()

திங்களிறுமாந்துவெந்தியமார்கவளமென்று
வெங்களிறுகைநீட்டும் வேங்கடமே—போரகம்
வார்த்தவ[illegible] செய்சபிழை
பார்த்தவலமபுரியார்பற்று.

இதன்பதப்பொருள்

திங்கள்-சந்திரன். இறுமாந்து-இறுமாப்படைந்து. [illegible] வதனை, இம-[illegible] பொருந்திய, பா[illegible] தமென்று. வெங்களிறு-வெவ்விய யானை. கை-கையை, நீட்டும்-நீட்டப்படும், வேங்கடமே-திருவேங்கடமலையே, போர்-மிகுந்த, [illegible]-போரிலே, ஆர்த்த-பூரித்த. வலம்புரியார்-வலம்புரிச்சங்கை [illegible] டையவர், [illegible]-அடி[illegible]வர். செய்-இயற்றிய, பிழை-குற்றத்தை, பார்த்து-கண்டு, அவலம்புரியார்-அவர்கள் குத்துணை செய்யாதவர், பற்று-பற்றுமிடம்—எ-று. அதனையெனவும் அவரைமகி னவும் அவர்ப்பிழைபொறுக்குமென்று, கண்டும் எளிமையாமையை விக்கப்பட்டது. (௱௪)

அமபுலியினவாழ்மா னதிருங்குரற்பகுவாய்
வெம்புலியைக்கண்டேங்கும் வேங்கடமே—நம்புமெனை
வீங்கூத்தைக்கண்டிருப்பார் விண்ணோர்நரர்பிறந்து
சாங்கூத்தைக் கண்டிருப்பார்சார்பு

இதன்பதப்பொருள்.

அம்புலியின்-சந்திரனிடத்திலே, வாழ்மான்-வாழ்கின்றமான். அதிரும்-ஆரவாரிக்கும், குரல-குரலையும், பகுவாய்-பிளந்தவாயையுமுடைய, வெம்புலியை-வெவ்வியபுலியை, கண்டு-பார்த்து, ஏங்கும்-பயப்படும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நம்புமெனை-நம்புகின்றவென்னை, வீங்கு-மிகுந்த, ஊத்தைக்கண்-அழுக்கான சரீரத்தினிடத்திலே, இருப்பார்-இருப்பவர்களாகிய, விண்ணோர்-தேவர்களும், நரர்-மனிதர்களும், பிறந்து-உற்பவித்து-சாங்கூத்தை-இறக்கப்பட்ட கூத்தை, கண்டு-பார்த்துக்கொண்டு, இருப்பார்-இருக்கப்பட்டவர், சார்பு-சாருமிடம்—எ-று (௱௫)

கண்ணால்வெடித்தகழைமுத்தங்கார்துளைத்து
விண்ணாலியோடுதிரும்வேங்கடமே—யெண்ணார்
கலங்கவருமஞ்சனையார் கான்முளையையூர்ந்தார்,
சலங்கவரு மஞ்சனையார்சார்பு. ௫௩

இதன்பதப்பொருள்.

கண்ணால்-கணுவினாலே, வெடித்த-வெடிக்கப்பட்ட, கழைமுத்தம்-மூங்கிலின்முத்துகள், கார்-மேகத்தை, துளைத்து-துளைசெய்து, விண்-ஆகாயத்து, ஆலியோடு-ஆலங்கட்டியுடனே, உதிரும்-சிதறும், வேங்கடமே-திருவேங்கடமலையே, எண்ணார்-சத்துருக்கள், கலங்க-பயப்பட, வரும், வருகின்ற-அஞ்சனையார், அஞ்சனாதேவியாருடைய - கான்முளைய, பிள்ளையாகிய-அனுமானை, ஊர்ந்தார்-ஊரப்பட்டவர், சலம்-தண்ணீரை, கவரும்-பருகும், மஞ்சு-மேகத்துக்கு, அனையார்-ஒப்பானவர், சார்பு-சாருமிடம்—எ-று. (௫௩)

செல்லுக்குமேற்செல்லுந் திண்ணியவேய்வாசவனார்
வில்லுக்குவாளியாம் வேங்கடமே—யெல்லுக்கு
ளந்தகாரம்படைத்தா ராரழல்வாயம்பினால்
வெந்தகாரம்படைத்தார்வெற்பு.

இதன்பதப்பொருள்.

செல்லுக்கு-மேகத்துக்கு, மேற்செல்லும்-மேலாகவளரும், திண்ணிய-பலமுள்ள, வேய்-மூங்கிலானது, வாசவனார்-தேவேந்திரனுடைய, வில்லுக்கு-தனுவுக்கு, வாளியாம்-அம்புபோலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, எல்லுக்குள்-பகற்காலத்துக்குள்ளே, அந்தகாரம்-இருட்டை, படைத்தார்-உண்டாக்கினவர், ஆர்-ஆரிய, அழல் - அக்கினி, வாய்-வாய்ந்த, அம்பினால்-அஸ்திரத்தினாலே, வெந்த-சுடப்பட்ட, கார்-கறுத்த, அம்பு-கடலை, அடைத்தார்-அடைத்தவருடைய, வெற்பு-மலை—எ-று. பகலிருட்டையுண்டாக்கினது சயந்திரனைக்கொல்லுவதற்காகவென்றறிக. (௫௪)

பொன்கமழுங்கற்பகத்தின் பூங்காவணத்துக்கு
மென்கமுகங்காலாகும் வேங்கடமே—நன்கமரு
மூரத்திகிரியா ரூதுந்திகிரியார்
வீரத்திகிரியார்வெற்பு.

இதன்பதப்பொருள்.

பொன்-அழகுபெற்று, கமழும்-பரிமளிக்காநின்ற, கற்பகத்தின்-கற்பகத்தருக்களினாலே, பூங்காவணத்துக்கு - பொலிவுபெற்ற பந்தர்க்கு, மென்கமுகம்-மெல்லியகமுகம்மரமானது, காலாகும் - கால்போலதாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நன்கமரும் - நன்றாகவிருக்கும், ஊரத்திகிரியார்-அத்திகிரியென்னுந் திருப்பதியுடையவர், ஊதும்-ஊதுகின்ற, திகிரியார்-வேய்ங்குழலையுடையவர், வீரம்-வீரம்பொருந்திய, திகிரியார்-சக்கரத்தையுடையவர், வெற்பு-மலை—எ-று. (௫௫)

தண்ணிலைக்கண்மூழ்கிற்றலைதொடுத்ததேனிறால்
விண்ணிலைக்கண்ணாடியாம்வேங்கடமே—[illegible]

சோதிவணங்கரியார் தூயசனகாதியரு
மோதிவணங்கரியா ரூர்.

இதன்பதப்பொருள்.

தண்-குளிர்ந்த, நிலை-நிலையையுடைய, கண்-கணுக்கள்பொருந்திய, மூங்கிற்றலை-மூங்கிலினுச்சியிலே, தொடுத்த - அடுக்கின, தேனிறால்-தேன்கூடானது, விண்-தேவருக்கு, நிலைக்கண்ணாடியாம் - நிலைக்கண்ணாடிபோலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, உள்-இருதயத்தில், நிலைக்கும்-நிலைபெற்றிருக்கும், சோதி-பிரகாசம்பொருந்திய, வணம்-நிறம், கரியார்-கருமையானவர், தூய-பரிசுத்தமான, சனகாதியரும்-சனகர்முதலானவரும், ஓதி-வாழ்த்தி, வணங்க-தொழுதற்கு, அரியார்-எளிதாகாதவருடைய, ஊர்-ஊர்—எ-று. சனகாதியர் மூன் என்பநா உம்பாடம் விண்ணினுள்ளாரை விண்ணென்றதாகுமெயர். (௯௯)

தண்கமுகின்பாளை தடங்கதிரின்செல்வனுக்கு
வெண்கவரிபோலசையும் வேங்கடமே—யொண்கடல்சூழ்
வண்டுவரைநாட்டினன் மத்தாகவாரிதியுட்
பண்டுவரைநாட்டினன் பற்று.

இதன்பதப்பொருள்.

தண்-குளிர்ந்த, கமுகின் - கமுகம்பாளையானது, தடம் - பெருமை பொருந்திய, கதிரின்-கிரணங்களையுடைய, செல்வனுக்கு-சூரியனுக்கு, வெண்கவரிபோல்-வெண்சாமரைபோல், அசையும் - அசையப்பட்ட, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒண்-ஒள்ளிய, கடல்சூழ்-கடல்சூழ்ந்த, வண்-வளப்பம்பொருந்திய, துவரைநாட்டினன் - துவாரகையென்னுந் திருப்பதியையுடையவன், வாரிதியுள்-கடலிலே, மத்தாக-மத்தாக, பண்டு - முற்காலத்திலே, வரை-மலையை, நாட்டினன்-நிறுத்தினவன், பற்று-பற்றுமிடம்—எ-று. பலையாவது மந்தரகிரி. (௯எ)

அங்கதிருங்கான்யாற் றடர்திவலையானைந்து
வெங்கதிருந்தண்கதிராம் வேங்கடமே—செங்கதிர்வேற்
சேந்தனத்தமைந்தான் திருத்தாதைவிற்கிளையாள்
பூந்தனத்தமைந்தான் பொருப்பு.

இதன்பதப்பொருள்.

அங்கு-அவ்விடத்து, அதிரும்-ஆரவாரிக்கும், கான்யாறு-கானியாற்றில், அடர்-நெருங்கிய, திவலையால்-துளியினாலே, நனைந்து-தோயப்பட்டு, வெம்-வெப்பம்பொருந்திய, கதிரும்-சூரியனும், தண-குளிர்ந்த, கதிராம்-சந்திரனும், வேங்கடமே-திருவேங்கடமலையே, செங்கதிர்-செவ்வியகிரணங்களையுடைய, வேல்-வேலாயுதத்தைத்தரித்த, சேந்தன்-சுப்பிரமணியனுக்கும், அத்தமைந்தான்-ஐந்துகைகளையுடைய விநாயகனுக்கும், திருத்தாதை - திருத்தாதையாகிய சிவனுடைய, விற்கிளையாள்-வில்லுக்குப்பின்னே பிறந்தவளான சீதாதேவியாருடைய, பூந்தனத்து-பூம் அழகியதனத்தினிடத்து, அமைந்தான் - பொருந்தினவனுடைய, பொருப்பு-மலை—எ-று. அங்கு நனைந்த அவ்விடம் விற்கிளையாளென்பதை விற்கிளையாளென்றாக்கி வில்லுக்குத் தோற்றுப்போகாதவுமொன்றும் பூந்தனத்தமைந்தானென்பதற்குப் பெரியபிராட்டியார் த

னத்திலே அமைந்தானென்றுமாம், இன்னும் விற்கிளையானென்பதை வில்லையுடைய கூட்டமாகிய சனகர்கூத்தத்திலே பிறந்தவனெனினுமாம். (௧௮)

சேணுலவுதிங்களெனுஞ் சித்தசவேள்வெண்குடைக்கு
வேணுவொருகாம்பாகும் வேங்கடமே—கோணுமனத்
தென்னையாளாகத்தா னின்னருள்செய்தான்கமல
மின்னையாளாகத்தான் வெற்பு.

இதன்பதப்பொருள்.

சேண்-ஆகாயத்தில், உலவு-சஞ்சரிக்கப்பட்ட, திங்களெனும்-சந்திரனாகிய, சித்தசவேள் - சித்தசனாகிய மன்மதனுடைய, வெண்குடைக்கு-வெள்ளைக்குடைக்கு, வேணு-மூங்கில், ஒருகாம்பாகும் - ஒருகாம்பு போல்நிற்கும், வேங்கடமே - திருவேங்கடமலையே, கோணும் - செவ்வைப்படாத, மனத்து- மனத்தையுடைய, என்னை-என்னை, ஆளாகத்தான்-அடிமையாகத்தான், இன்-இனிய, அருள்செய்தான் - கிருபைபண்ணினவன், கமலம்-தாமரையிலிருக்கும், மின்னை-மின்போலும் பெரியபிராட்டியாரை, ஆள்-அங்கீகரிக்க, ஆகத்தான்-மார்பையுடையவனது, வெற்பு-மலை—எ-று. என்பதை நீயெனக்கென வேற்றுமையயக்கமாக்கி எனக்கின்னருள் செய்தானெனமுடிக்க. (௧௯)

தேவருடையைந்தருவின் செந்தேனிறாலொழிய
மீவருடைபாய்கின்ற வேங்கடமே—மூவடிமண்
போயிரந்தாரத்தர் புணருமொருபதினா
யிரந்தாரத்தரகம்.

இதன்பதப்பொருள்.

தேவருடை-தேவர்களுடைய, ஐந்தருவின்-ஐவகையான கற்பகவிருட்சத்தின், செந்தேனிறால்-செவ்வியதேன்கூடு, கிழிய-உடைய, மீவருடை-மேலேயிருக்கிறவரையாடு, பாய்கின்ற-தாவுகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, மூவடிமண் மூன்றடிமண் போய், சென்றுஇரந்தார்-யாசித்தவர், அத்தர்-தந்தையானவர், புணரும் - கூடாநின்ற, ஒருபதினாயிரம்-பதினாயிரம், தாரத்தர்-தேவிமாரையுடையவர், அகம்-மலை—எ-று. போயிரந்தார்த்தார் புனையுமொருபதினாயிரந் தாரத்தாரென்பதூஉம் பாடம். (௨௰)

வன்குறிஞ்சிமாதர்பால் வானோர்மருந்துக்கு
மென்குறிஞ்சித்தேன்மாறும் வேங்கடமே—நன்குறிஞ்சிப்
[illegible]ய்த்தனஞ்சுவைத்தார் பிறரக்கமுதீசனுக்கு
வாய்த்தனஞ்சுவைத்தார் வரை.

இதன்பதப்பொருள்.

வன்குறிஞ்சி-வலியகுறிஞ்சிநிலத்து, மாதர்பால்-பெண்களாகிய குறத்திகளிடத்திலே, வானோர்-தேவர்கள், மருந்துக்கு - அமிர்தத்துக்கு, மென்குறிஞ்சி-மெல்லியகுறிஞ்சிமரத்தின், தேன்மாறும்-தேனைக்கொள்ளும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நன்கு-நன்றாக, உறிஞ்சி-உறிஞ்சு, பேய்-பேயினுடைய, தனம்-முலையை, சுவைத்தார்-குடித்தா

ர், பிறர்க்கு-மற்றதேவர்க்கு, அமுது-அமிர்தத்தை, ஈந்து-கொடுத்து, ஈசனுக்கு-சிவனுக்கு, வாய்ந்த-பொருந்தின: நஞ்சு-விடத்தை, வைத்தார்-வைத்தவருடைய, வரை-மலை—எ-று. நெற்குப்பு யாறுமாபோல அமுதங்கொடுத்துத் தேன்வாங்குதல பண்டமாற்றுதல. பேயானவள்-பூதனை.

வாவுகவின்மந்திநுகர் மாங்கனிக்குக்கற்பகத்தின்
மேவுகவிகைநீட்டும் வேங்கடமே—தாவுகடல
வேவவிலங்கைக்கொண்டார் விடணனைவைத்தொழிந்தார
சாவவில்லங்கைக்கொண்டார் சார்பு

இதன்பதப்பொருள்.

வாவு-தாவுகின்ற, கவின்-அழகையுடைய, மந்தி-பெண்குரங்கு, நுகர்-தின்னப்பட்ட, மாங்கனிக்கு-மாம்பழத்துக்கு, கற்பகத்தின்-கற்பகவிருக்ஷத்தின், மேவு-பொருந்திய, கவி-குரங்கு, கைநீட்டும்-கையைநீட்டிக்கேட்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, தாவுகடல், உலாந்தெழுங்கடல், வேவ-வேகவும, இலங்கைக்கு - இலங்காபுரிக்கு, ஒளி-ஒள்ளிய, தார்-மாலையினையுடைய, விடணனை-விபீடணனை, வைத்து-இருக்கச்செய்து, ஒழிந்தார்-அவனையகலாதவர்கள், சாவ-இறக்கும்படி, வில்-வில்லை, அம்-அழகிய, கைக்கொண்டார் - கையிற்கொண்டவர், சார்பு-சாருமிடம்—எ-று. (சஉ)

வெள்ளியகன்மீதோரவிடா முளைத்தசெங்காந்தள்
வெள்ளியகல்விளக்காம் வேங்கடமே—வெள்ளியெனும
வேதியனாட்டங்கெடுத்தார் மேதினியைப்பாதலமென்
றோதியநாட்டங்கெடுத்தாரூர்.

இதன்பதப்பொருள்.

வெள்ளியகன்மீது-வெள்ளைக்கல்லினமேலே, ஓரவிடா-ஓர்கபரியே, முளைத்த உண்டான, செங்காந்தள் - செவ்வியகாந்தட்பூ, வெள்ளி-வெள்ளியான, அகல்-சகழியின்: வளக்காம் - வைத்த விளக்கைப்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, வெள்ளியெனும-சுக்கிரனை, வேதியன்-பிராமணனுடைய, நாட்டம் - கணணை, கெடுத்தார்-கெடுத்தவர், மேதினியை-பூமியை, பாதலமென்று - பாதாளமென்று, ஓதிய-சொலலப்பட்ட, நாடு-தேசத்திலே, அங்கு-அவ்விடத்திலேநின்று, எடுத்தார்-எடுத்தவருடைய, ஊர்-ஊர்—எ-று. (சங)

அல்லிமலர்க்காந்தளின்மேலாடுஞ்சுரும்பினங்கள்
மெல்லியர்கள்கைக்கழங்காம் வேங்கடமே—மல்லினைப்
பண்டறைந்தவன்படியார் பார்த்தனுக்குத்தத்துவநூல
விண்டறைந்தவன்புடையார் வெற்பு.

இதன்பதப்பொருள்.

அல்லி-அகவிதழையுடைய, மலர்-மலர்ந்த, காந்தளின்மேல-செங்காந்தளிலே, ஆடும்-ஆடாநின்ற, சுரும்பினங்கள் - வண்டின்கூட்டங்கள், மெல்லியர்கள்-பெண்களுடைய, கைக்கழங்காம்-கையிற்கழச்சிக்காய்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, மல்லினை-மல்லரை, பண்டு-முற்காலத்திலே, அறைந்த-அடித்த, வன்படியார்-வலிய

அடிமையுடையவர், பார்த்தனுக்கு - அருச்சுனனுக்கு, தத்துவநூல்-ஞானகீதையை, விண்டுவெளியிட்டு, அறைந்த-சொன்ன, அன்புடையார்-அன்பையுடையவரது, வெற்பு-மலை—எ-று. (சச)

காந்தளிரவலர்போற் கையேற்பக்கொன்றைகொடை
வேந்தனெனப்பொன்சொரியும் வேங்கடமே—பூந்துளவின்
கான்மடங்காமார்வத்தார் காணவிரும்பினார்மே
னான்மடங்காமார்வத்தார் நாடு.

இதன்பதப்பொருள்.

காந்தள்-காந்தட்பூவானது, இரவலர்போல்-யாசகரைப்போல, கையேற்ப-கையைவிரிப்ப, கொன்றை - கொன்றைமரமானது, கொடைவேந்தனென - கொடுக்குமரசனைப்போல, பொன்சொரியும் - பொன்போலும் பூவைச்சிந்தும், வேங்கடமே-திருவேங்கடமலையே, பூந்துளவின்-அழகிய திருத்துழாயின், கான்மடங்கா-வாசமொடுங்காத, மார்வத்தார்-மார்பையுடையவர், காணவிரும்பினார்மேல்-சேவிக்கவிரும்பினோரிடத்திலே, நான்மடங்காம்-நாலுமடங்காகிய, ஆர்வத்தார் - அன்பையுடையவரது, நாடு-நாடு—எ-று. பொன்போலும் பூவைப் பொன்[illegible]கூறினார், காணவிரும்பினார் விரும்பினதொருபங்காக அவரிடத்திலே தாமும் மடங்கதிகமாகத் திருவுளம்பண்ணப்பட்டவரெனக்கொள்க. (சரு)

நாகத்தின்மேற்குறவர் நன்கெறிந்தமாணிக்க
மேகத்தின்மின்புரையும் வேங்கடமே—நாகத்தின்
மாத்தாண்ட மண்டலத்தார் வாயுண்டுமிழ்ந்தளந்து
காத்தாண்ட மண்டலத்தார் காப்பு.

இதன்பதப்பொருள்.

நாகத்தின்மேல்-யானைமேலே, குறவர்-குறவர்கள், நன்கு-நன்றாக, எறிந்த-எறியப்பட்ட, மாணிக்கம்-மாணிக்ககல், மேகத்தின்-மேகத்திலுள்ள, மின்புரையும்-மின்னைப்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நாகத்தின்-ஆகாயத்துள்ள, மாத்தாண்டமண்டலத்தார்-சூரியமண்டலத்தையுடையவர், வாயுண்டு - வாயினாலேயுண்டு, உமிழ்ந்து-வெளிப்படுத்தி, அளந்து-அளக்கப்பட்டு, காத்து-இரட்சித்து, ஆண்ட-ஆளப்பட்ட, மண்பூமியாகிய, தலத்தார்-தலத்தையுடையவர், காப்பு-காக்குமிடம்—எ-று. (சசா)

செம்பதுமராகச் சிலைசூழ்பெரும்பாந்தள்
வெம்பரிதியூர்கோளாம் வேங்கடமே—உம்பருல
கோதத்தினப்புறத்தா னோராலிலைதுயின்றான்
வேதத்தினப்புறத்தான் வெற்பு.

இதன்பதப்பொருள்.

செம்பதுமராகச்சிலை-சிவந்தபதுமராகக்கல்லை, சூழ்-சுற்றிக்கொண்ட, பெரும்பாந்தள்-பெரியமலைப்பாம்பு, வெம்பரிதி - சுடரின[illegible]னை, ஊர்கோளாம்-சுற்றினபரிவேடம்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, உம்பர்-தேவர்களுடைய (உயர்ந்த) உலகு - [illegible]

று, ஓதத்தின்-குளிர்ச்சியினையுடைய, அப்பு-வெள்ளத்தில், உற-பொருந்த, தான், ஓராலிலை-ஓராலமரத்திலையிலே, துயின்றான் - நித்திரை செய்தவன், வேதத்தின்-வேதத்துக்கு, அப்புறத்தான் - மேலானவனுடைய, வெற்பு-மலை—எ-று. ஆலிலையிற் றுயிலுதலாவது பிரமபிரளயத்தின் மரத்திலையிற் றுயில வேதத்தினப்புறத்தானுவது வேதங்களுமொருவார்த்தையாகச் சொல்லொதபடிப் பலபேதமாதலால். (௪எ)

கோலமணிப்பாறையிற்பாய் கோடரங்கள்செங்கதிரோன்
மேலநுமன்பாய்ந்தனைய வேங்கடமே—நாலுமறை
யாய்ந்தபாரதத்துவந்தா னுனன்குடமாடல்
வாய்ந்தபாரதத்துவந்தான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

கோலம்-அழகிய, மணிப்பாறையில்-இரத்தினக்கல்லின்மேலே, பாய்-தாவாநின்ற, கோடரங்கள்-குரங்குகள், செங்கதிரோன்மேல்-சூரியன்மேலே, அநுமன் பாய்ந்தனைய-ஆஞ்சநேயர் தாவினதுபோலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நாலுமறை-நாலுவேதங்களாலும், ஆய்ந்த-விசாரிக்கப்பட்ட, பாரதத்துவந்தானுனன்-பாஷியத்து நிருணயந்தானவன், குடமாடல்-குடக்கூத்தாக, வாய்ந்த-பொருந்தின,பரதத்து-கூத்திலக்கணத்திலே, உவந்தான் - சந்தோஷித்தவன், வாழ்வுமிடம்—எ-று. அச்செங்கதிரோ னென்பதூஉம் குடமாடு மென்பதூஉம் பாடம். (௪அ)

கொம்பினிறால்வாங்கநிமிர் குஞ்சரக்கையம்புலிமேல்
வெம்பியெழுங்கோளரவாம் வேங்கடமே—தும்பிபல
போர்காதுமீர்ந்தார் புனையரக்கிமூக்கினொடு
வார்காதுமீர்ந்தார் வரை.

இதன்பதப்பொருள்.

கொம்பின் - கொம்புகளிலிருக்கும், இறால் - தேன்கூட்டை, வாங்க-வளைக்க, நிமிர்-எடுக்கும், குஞ்சரக்கை-யானையினுடையகை, அம்புலிமேல்-சந்திரனைத்தீண்ட, வெம்பி-கோபித்து, எழும்-எழும்பட்ட, கோளரவாம்-இராகுக்கோள்போலும், வேங்கடமே - திருவேங்கடமலையே, தும்பிபல-பலவண்டுகள், போர்-சண்டைப்பட்டு, காதும்-மோதும், ஈர்ந்தார்-குளிர்ந்தமாலையை, புனை-அணியாநின்ற, அரக்கி - சூர்ப்பனகையாகிய அரக்கி, மூக்கினொடு-மூக்குடனே, வார்-நீண்ட, காது-காதையும், ஈர்ந்தார்-அறுத்தவருடைய, வரை-மலை—எ-று. இளையபெருமாள்செய்ததைப் பெரியபெருமாள்செய்ததாகக்கூறினரென்க. ()

வண்மைதிகழ்வெண்பளிங்கு வட்டத்தின்கண்டுயின்மான்
விண்மதியின்மானேய்க்கும் வேங்கடமே—யொண்மதியா
னாலைத்தாமோதரனார் நோக்கரியார்துளவ
மாலைத்தாமோதரனா வாழ்வு.

இதன்பதப்பொருள்.

வண்மைதிகழ் - வண்மையாயிலங்காநின்ற, வெண்பளிங்கு வட்டத்தில்-வெள்ளைப்புளிங்குக்கல்லின் வட்டத்திலே, கண்டுயின்மான்-கண

னுறங்காநின்றமான், விண்-ஆகாயத்து, மதியின் - சந்திரனிடத்துள், மான்-மானை, ஏய்க்கும்-ஒப்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒண்மதியால்-நல்லபுத்தியினாலே, நூல்-ஆகமங்களை, ஓத - சொன்ன, அரனார்-சிவனாலே. நோக்க-காணுதற்கு, அரியார் - பிரயாசமானவர், துளவமாலை-திருத்துழாய்மாலையினையுடைய, தாமோதரனார்-தாமோதரனென்னுந் திருநாமத்தையுடையவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. தாம்-அசைநிலை. (௩௰)

சிலேடைகள்.

காதலித்துச்சார்ந்தவர்க்குங் காமியத்தைச்சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற்றைத்தவிர்க்கும் வேங்கடமே-போதகத்தை
மோதிமருப்பொசித்தார் முன்பதினாறாயிரவ
ரோதிமருப்பொசித்தாரூர்.

இதன்பதப்பொருள்.

காதலித்து-பரமபதத்தைவிரும்பி, சார்ந்தவர்க்கும் - அடைந்தவர்க்கும், வேதனை-பிரமனையும், கூற்றை-இயமனையும், தவிர்க்கும் - நீக்குமெனவும், காமியத்தை-இம்மைப்பேற்றை, சார்ந்தவர்க்கும்-விரும்பினவர்க்கும், வேதனைக்கூற்றை-வேதனையாகிய கூறுபாட்டை, தவிர்க்கும்-நீக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, போதகத்தை-யானையை, மோதி-அடித்து, மருப்பு-கொம்பை, ஒசித்தார்-முறித்தவர், முன்-முற்காலத்திலே, பதினாறாயிரவர்-பதினாறாயிரந்தேவிமார், ஓதி-அளகபாரத்தினது, மரு-வாசனையை, பொசித்தார் - உண்டவருடைய, ஊர்-ஊர்—எ-று. யானையாவது குவலயாபீடம். தலைமயிர்மணத்தைப் பொசித்தலாவது உச்சிமோந்துகொள்ளுதல். (௩௧)

கேள்வித்துறவோருங் கேடறவில்வாழ்வோரும்
வேள்விக்கினமாற்றும் வேங்கடமே—மூள்வித்து
முன்பாரதமுடித்தார் மொய்வேந்தர்வந்தவிய
வன்பாரதமுடித்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

கேள்வி-ஞானநூல்களையறிந்த, துறவோரும்-துறவிகளும், வேள்-மன்மதனால்வரும், விக்கினம்-துன்பத்தை, மாற்றும்-தீர்க்குமெனவும், கேடு-கெடுதல், அற-நீங்க, இல்வாழ்வோரும்-இல்வாழ்பவரும், வேள்விக்கு-யாகஞ்செய்தற்கு, இனம்-இனமானவற்றை, ஆற்றும்-செய்யப்படுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, மூள்வித்து-மூட்டிவித்து, முன்பு-முற்காலத்தில், ஆ-ஆகாநின்ற, ரதம்-இரதத்தையும், முடி-மகுடத்தையும், தார்-மாலையினையுமுடைய, மொய்-வலிமையுள்ள, வேந்தர்வந்து-அரசர்வந்து, அவிய-மடிய, வன்பாரதம்-வலியபாரதப்போரை, முடித்தார்-நிறைவேற்றினவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. இரதமென்பதற்கு ரதமென்றார் வடமொழிவழக்குப்பற்றி. (௩௨)

பொய்யாம்வினையேனைப் போல்வாருமன்பருஞ்செய்
மெய்யாம்வழுத்தேயும் வேங்கடமே—செய்யா
டனத்துவசப்பொற்புள்ளார் தானவரைமோதுஞ்
சினத்துவசப்பொற்புள்ளார் சேர்வு.

இதன்பதப்பொருள்.

பொய்யாம்-பொய்யாகிய, வினையேனைப்போல்வாரும் - தொழிலையுடைய வென்னையொத்தவரும், மெய்-சரீரத்தில், ஆம்-உண்டாகிய,வழு-குற்றம், தேயும்-நீங்குமெனவும், அன்பரும்-தாசரும், செய்-செய்கின்றமெய்யாம், உண்மையாகிய-வழுத்துதோத்திரம், ஏயும்-இசையுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, செய்யாள்-பெரியபிராட்டியார், தனத்து-தனத்திலே, வசப்பொற்பு-வசமானபொலிவை, உள்ளார்-உண்டானவர், தானவரை-அசுரரை, மோதும்-கோபிக்கும், சினம்-கோபத்தையுடைய, துவசம்-கொடியான, பொற்புள்ளார்-பொன்னிறப்பறவையையுடையவர், சேர்வு-சேருமிடம்—எ-று. கொடியான பறவையாவது கருடன். (ருங)

கோடலிலாவுள்ளத்துக் கோதிலடியவரும்
வேடருமங்கைவரைவெல் வேங்கடமே—மூட
மனமாமனைக்கொன்றார் வன்கஞ்சனென்னுஞ்
சினமாமனைக்கொன்றார் சேர்வு.

இதன்பதப்பொருள்.

கோடல்-கோணல், இலா-இல்லாத, உள்ளத்து-இருதயத்தையுடைய, கோதில்-குற்றமில்லாத, அடியவரும்-தாசர்களும், அங்கு-அவ்விடத்து, ஐவரை-பஞ்சேந்திரியங்களை, வெல்-வெல்லுவாரெனவும், வேடரும்-மறவரும், அம்-அழகிய, கைவரை-யானையை, வெல்-வெல்லுவாரெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே,மூடர்-மூடருடைய, மனமாம்-இருதயமாகிய, மனைக்கு-கிரகத்துக்கு, ஒன்றார்-பொருந்தாதவர், வன்கஞ்சனென்னும்-வலியகஞ்சனென்கின்ற, சினம்-கோபத்தையுடைய, மாமனை-அம்மானை, கொன்றார்-கொன்றவர், சேர்வு-சேருமிடம்—எ-று. (ருச)

மொய்வதனமங்கையர்கண் முன்கையும்யோகியர்கண்
மெய்வயதுமஞ்சுகமார் வேங்கடமே—பெய்வளையார்
பாற்றிருப்பாதஞ்சிவந்தார் பற்றினார்புன்பிறப்பை
மாற்றிருப்பாதஞ்சிவந்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

மொய்-பலமான, வதனம்-முகத்தையுடைய, மங்கையர்கள்-பெண்கள், முன்கையும்-முன்கையிலும், அம்-அழகிய, சுகம்-கிளியை, ஆர்-பொருந்துமெனவும், யோகியர்கள்-நிட்டையுடையவர்கள், மெய்-சரீரத்து, வயதும்-ஆயுளும், அஞ்சு-ஐந்து, உகம்-யுகமாக, ஆர்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பெய்வளையார்பால்-வளையணிந்த, கரத்தினையுடைய-பெண்களிடத்திலே, திருப்பாது-மனைதத்திரும்பப்பண்ணாமல், அஞ்சி-பயந்து, வந்தார்பற்றினார்-தன்னைப், பற்றிவந்தவர்களான-ஈசுரர்களுடைய, புன்பிறப்பை-புல்லியபிறப்பை

மாற்று-மாற்றுதலைச்செய்து, இரு-இரண்டு, பாதம்-திருவடிகளும், சிவந்தார்-சிவந்தவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. (ருரு)

இல்லக்குறத்தியரும் யாக்கைநிலைவேட்டவரு
மெல்லக்கிழங்கெடுக்கும் வேங்கடமே—நல்ல
புதுப்பூவைவண்ணத்தான் போர்முகத்துச்செவ்வாய்
மதுப்பூவைவண்ணத்தான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

இல்லம்-வீட்டிலிருக்கும், குறத்தியரும்-குறப்பெண்களும், மெல்ல-மென்றுதின்ன, கிழங்கெடுக்கும்-கிழங்கைப்பிடுங்கப்பட்ட வெனவும், யாக்கை-சரீரத்தை, நிலை-நிலைபெற, வேட்டவரும்-விரும்பினசித்தர்களும், மெல்ல-மெத்தென, கிழம்-மூப்பை, கெடுக்கும்-துறக்கப்பட்ட வெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நல்ல-நலமுடைய,புது-புதிய, பூவைவண்ணத்தான்-காயாம்பூநிறத்தையுடையவன், போர்முகத்து-பொருதுமிடத்து, செவ்வாய்-சிவந்தவாயான, மதுப்பூ-பரிமளப்பூவிலேவைக்கப்பட்ட, வள்-வளமையுடைய, நத்தான்-சங்கையுடையவன், வாழ்வு-வாழுமிடம்—எ-று. வாயாகியபூ என்றது உருவகம். (ருசா)

தேனியலுங்கூந்தலார் செங்கரமுமாதவத்தோர்
மேனியுமையம்பொழியும் வேங்கடமே—ஞானியர்க
டாங்குறியெட்டக்கரத்தார்தாளுரன்மேல்வைத்துவெண்ணெய்
தாங்குறியெட்டக்கரத்தார் சார்வு.

இதன்பதப்பொருள்.

தேன்-மணம், இயலும்-பொருந்தும், கூந்தலார் - அளகபாரத்தையுடையபெண்களது, செங்கரமும்-சிவந்தகையும், ஐயம்பொழியும்-பிச்சைமிகுதியும்பொழியுமெனவும், மாதவத்தோர்-பெருமைபொருந்திய தவத்தையுடையோர்களது, மேனியும்-சரீரமும், ஐயம்பு-பஞ்சபாணங்களை, ஒழியும்-பொருந்தாதெனவுமான, வேங்கடமே- திருவேங்கடமலையே, ஞானியர்கள்-அறிவுள்ளவர்கள், தாம்-தாங்கள், குறி-குறிக்கப்பட்ட, எட்டக்கரத்தார்-அட்டாக்கரத்தையுடையவர், தாள்-திருவடியை, உரன்மேல்-உரலின்மேலே, வைத்து-வைத்து, வெண்ணெய்-வெண்ணெய்யை, தாங்கு-தாங்காநின்ற, உறி-உறியை,எட்டு-எட்டப்பட்ட, அக்கரத்தார் - அந்தக்கையையுடையவர், சார்வு - சாருமிடம்—எ-று. எட்டெழுத்தாவது திருமந்திரம். (ருஎ)

காணையிலார்சொற்கேட்ட கந்திருவருந்தவரும்
வீணையிராகத்தைவிடும் வேங்கடமே—கோணை
யிருங்குண்டையோட்டினேற்பொழ்தான்கூனின்
மருங்குண்டையோட்டினான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

காண்-பார்க்கும், ஐயிலார்-வேலாகிய கண்களையுடையவரான பெண்கள், சொற்கேட்ட-வார்த்தையைக்கேட்ட, கந்திருவரும் - யாழ்த்தேவரும், வீணை-யாழினுடைய, இராகத்தை-சங்கீதத்தை, விடும்-விடப்பட்டதெனவும், தவரும்-இருடிகளும், வீணை-வெறுப்பையும், இரா

கத்தை-விருப்பையும், விடும்-விடப்பட்டதெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கோணை-பலத்தையுடைய, இருங்குண்டை-பெரியகாளையை, ஒட்டினன்-ஊரப்பட்டவனது, ஏற்பு - இரக்குந்தொழிலை, ஒழித்தான்-நீக்கினவன், கூனின்மருங்கு-கூனையுடையவளான மந்தரையிடத்து, உண்டை-உண்டையை, ஒட்டினன்-ஓடப்பண்ணினவன், வாழ்வு-வாழுமிடம்—எ-று. காணயிலாரென்பது தொழில்பற்றிய உவமையாய்க் கண்ணெனப்பட்டது, இரப்பொழித்தது கபாலமோட்சம், உண்டையோட்டினனென்பதற்கு வில்லாலே தெறியுண்டையைத் தெறித்தானென்றுமாம். (ருஅ)

முந்நூன்மறையவரு மூதரம்பைமாருநடு
மெய்நநூனலங்கவரும் வேங்கடமே—பொய்ந்நூலா
மச்சமயக்கத்தின ராதரிக்கத்தெய்வங்கள்
வச்சமயக்கத்தினர் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

முந்நூல்-முப்புரிநூல்தரித்த, மறையவரும்-வேதத்தையுடைய பிராமணரும், நடு-பொதுவாகியும், மெய்-உண்மையாகியு மிருக்கிற,நூல் சாத்திரங்களின், நலம்-தன்மையை, கவரும்-விரும்புமெனவும், மூதரம்பைமாரும்-முதிர்ந்ததெய்வப்பெண்கள், நடு-இடையாகிய, மெய்-சரீரம், நூல்-நூலினுடைய, நலம்-அழகை, கவரும்-கிரகிக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பொய்ந்நூலாம்-பொய்யானசாத்திரமாகிய, அச்சமயக்கத்தினர்-அச்சமயப்பிணக்கர், ஆதரிக்க-அங்கீகரித்த, தெய்வங்கள்-தேவர்கள், வச்ச-இருத்தின, மயக்கத்தினர்-மருள்கைக்குள்ளானவருடைய, வாழ்வு-வாழுமிடம்—எ-று. பொய்ச்சாத்திரமாவது பரத்துவமல்லாத தேவரைப் பரத்துவமென்று சொல்லு நூலாம், அச்சமயமாவது அந்தப்பொய்யையுடைய வச்சமயமாம், தெய்வங்கள் வச்சமயக்கமாவது பரனுந்தன்னைப் பரனல்லனெனக் கூறினபடிக்குத்தானுமிருந்தலாம். (ருசு)

ஓதுமறையோர்புரமு முள்ளுங்கலையினரு
மேதையகலாவிருக்கும் வேங்கடமே—கோதைகுழற்
கற்றாததாரணியார் தூயதிருத்தாளூன்றப்
பற்றாததாரணியார் பற்று.

இதன்பதப்பொருள்.

ஓதும்-அத்தியயனம்பண்ணுகின்ற, மறையோர்-பிராமணருடைய,புரமும்-சரீரமும், கலையின்-மானினுடைய, மேதை-தோல், அகலாவிருக்கும்-நீங்காதிருக்குமெனவும், உள்ளும்-அவர்களிருதயமும், கலையின்-சாத்திரங்களினது, அரும்-அரிய, மேதை-அறிவு, அகலாவிருக்கும் நீங்காதிருக்குமெனவும், வேங்கடமே-திருவேங்கடமலையே, கோதை-சூடிக்கொடுத்தநாச்சியார், குழல்-அளகபாரத்திலே, சுற்றாத-அணியாத, தார்-மாலையை, அணியார்-அணியாதவர், தூய-பரிசுத்தமான, திருத்தாள்-திருவடிகளை, ஊன்ற-நிறுத்த, பற்றாத-போதாத, தாரணியார்-பூமியையுடையவருடைய,பற்று-பற்றுமிடம்—எ-று. சுற்றாததாரணியாராவது கோதைநாயகியணிந்த திருமாலையைவிட்டு வேறேதிரு

மாலையைச்சேர்த்துப் பெரியாழ்வார் வடபத்திரசாய்க்குச்சமர்ப்பிக்க அதைப்பெருமாள் இந்தமாலைகோதை மணமில்லையென்று வெறுத்த து பற்றுததாரணியாரென்பது பூமியளந்தாள் பூமியிலுந் திருவடிகள் விரிந்ததென்பதாம் பூமியையாசித்து வாங்கினாரென்பதால் தாரணியை யுடையவரென்றார். (சும)

நன்முலைபோல்வெண்ணகையார் நாயகர்மேல்வைத்தநெஞ்சு
மென்முலையுங்கற்புரஞ்சேர் வேங்கடமே—முன்மலைந்து
தோற்றமாரீசனார் தோற்றமாயம்புரிய
சீற்றமாரீசனார் சேர்வு.

இதன்பதப்பொருள்.

நல்-நல்ல, முலைபோல்-முல்லைப்பூப்போலும், வெள்-வெண்மையாகிய, நகையார்-முறுவலையுடையபெண்கள், நாயகர்மேல்வைத்த-கணவரிடத்தில்வைத்த, நெஞ்சும்-மனமும், கற்பு-கற்பினாலே, உரஞ்சேர்-பலம்பொருந்துமெனவும், மெல்-மெலலிய, முலையும்-தனங்களும், கற்புரஞ்சேர்- கர்ப்புரமணியப்படுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, முன்-முற்காலத்தில், மலைந்து-எதிர்த்து, தோற்ற-வெலலாமல தோற்றோடின, மாரீசன்தோற்ற-பின்னும்வந்து, மாயம்புரிய-வஞ்சனைபண்ண, சீற்றம்-கோபம், ஆர்-பொருந்தின, ஈசனார்-சுவாமி, சேர்வு-சேருமிடம—எ-று. முன்மலைந்துதோற்றது விசுவாமித்திரர் யாகத்தில்வந்து ஓடிப்போனதாம். மாயம்புரிந்தது பொன்மானாகவந்ததாம். பின்என்பது அவாநிலையாய்க்கொள்க. சீற்றமார்ந்தது சங்கரித்தாரென்றது. சிறுமையாற் றப்பவிட்டாரென்பது குறிப்பு. (சுக)

கூறுங்கிளிமொழியார் கொங்கையென்றுங்கணென்றும
வீறுமருப்பிணைசேர் வேங்கடமே—நாறுந்
துளவமலர்க்கண்ணியார தொண்டாய்த்தமக்கன்
புளவமலர்க்கண்ணியாரூர்.

இதன்பதப்பொருள்.

கூறும-சொல்லப்பட்ட, கிளிமொழியார்-கிளிபோலும் வார்த்தையுடையபெண்கள், கொங்கையென்றும-தனங்களும்,வீறு-பெருமைபொருந்திய, மருப்பு-யானைக்கொம்பின், இணை-இரட்டை, சேர்-பொருந்தினவெனவும, கண்ணென்றும-அவர்களுடைய கணகளும், வீறும்-வளர்தல், மரு-பொருந்திய, பிணை-பெணயானை, சேர்-பொருந்தினவெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நாறும்-பரிமளியாநின்ற, துவளமலர்க்கண்ணியார-திருத்துளவமாலையினையுடையவர், தொண்டாய்-அடிமையாய், தமக்கு-தமமிடத்திலே, அன்பு-விசுவாசம், உள-உண்டான, அமலர்க்கு-பரிசுத்தமானதாசருக்கு, அண்ணியார்-சமீபமானவருடைய, ஊர்-ஊர்—எ-று. (சுஉ)

மாதரம்பொன்மேனி வடிவுமவர்குறங்கு
மீதரம்பையைப்பழிக்கும் வேங்கடமே—பூதமைந்தின்
பம்பரமாகாயத்தார் பாடினல்வீடருளு
மம்பரமாகாயத்தா னாடு.

இதன்பதப்பொருள்.

மாதர்-பெண்களுடைய, அம்-அழகிய, பொன்மேனிவடிவும்-பொலிவுபெற்றசரீரவுருவமும், மீது-உயர்ந்த, அரம்பையை - அரம்பையான தெய்வப்பெண்களை, பழிக்கும்-பழிக்குமெனவும், அவர்குறங்கும்-அவருடையதுடையும், மீது-உயர்ந்த, அரம்பையை-வாழையை, பழிக்கும்-பழிக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பூதமைந்தின்-பஞ்சபூதங்களினுலாக்கப்படும், பம்பரம்-பம்பரம்போற் சுழலாநின்றுமிருக்கிற, மா-பெரிய, காயத்தார்-சரீரத்தையுடையவர், பாடினுல்-துதித்தால், வீடருளும்-முத்திகொடுக்கும், நம்-நம்முடைய, பரமாகாயத்தார்-பரமாகாயமான பரமபதத்தையுடையவருடைய, நாடு-ஊர்—எ-று. (௩௩)

கோள்காவுகற்றவிழிக் கோதையர்கள்பொற்றளும்
வெள்கரமுமம்பஞ்சார் வேங்கடமே—நீள்காணர்
தாடணைஞர்முத்தலையார் துஞ்சவெய்துதுஞ்சாரைக்
கூடண்ணர்முத்தலையார் குன்று.

இதன்பதப்பொருள்.

கோள்-கொள்ளப்பட்ட, காவு-களவை, கற்ற-பயின்ற, விழி-கண்ணையுடைய, கோதையர்கள்-பெண்கள், பொற்றளும் - பொலிவையுடையகால்களும், அம்-அழகிய, பஞ்சு-செம்பஞ்சு, ஆர்-பொருந்துமெனவும், வெள்-மன்மதனுடைய, கரமும்-கையும், அம்பஞ்சார்-பஞ்சபாணம்பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நீள்-நெடிய, காணர்-காணும், தாடணைஞர்-தாடணையும், முத்தலையார்-திருசிராவும், துஞ்ச-சாக, எய்து-அம்புவிட்டு, துஞ்சாரை-உறங்காதஇளையபெருமாளை, கூடு-சேர்ந்த, அண்ணர்-அண்ணனான பெருமாளுடைய, முத்து-முத்துகள், அலை-அருவிகளினலையானது, ஆர்-ஒலித்துக்கொண்டிருக்கின்ற, குன்று-மலை—எ-று. (௩௪)

கோங்கைக்கோடேறிக் குலுக்குமரியுங்கரியும்
வேங்கைகோடாதரிக்கும் வேங்கடமே—பூங்கைக்குண்
மெய்த்தவளச்சங்கெடுத்தார் மேகலைவிட்டங்கைதலை
வைத்தவளச்சங்கெடுத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

கோங்கை-கோங்குமரத்து, கோடு-கொம்பினிடத்திலே, ஏறி-ஏறுதலைச்செய்து, குலுக்கும்-அசையப்பண்ணும், அரியும்-குரங்கும், வேங்கைக்கோடு-வேங்கைமரத்தின்கொம்பை, ஆதரிக்கும்-பிடிக்குமெனவும், கரியும்-யானையும், வேங்கைக்கு-புலிக்குபயந்து, ஓடாது-ஓடாமல், ஆதரிக்கும்-நிற்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பூம்-பொலிவுபெற்ற, கைக்குள்-கையினிடத்து, மெய்-உருவு, தவளம்-வெண்மையான, சங்கு-சங்கத்தை, எடுத்தார்-ஏந்தினவர், மேகலைவிட்டு-அரைநூன்மாலையைநீக்கி, அம்-அழகிய, கை-கையை, தலைவைத்[illegible]ின்மீதுவைத்தவளுடைய, அச்சம்-பயத்தை, கெடுத்தார்-நீக்கின[illegible]டைய, வாழ்வு-வாழுமிடம்—எ-று. (௩௫)

மாவிற்குயிலு மயிலுமொளிசெய்ய
மேவிப்புயறவழும் வேங்கடமே—ஆவிக்கு
ளானவருடந்தடுத்தா ரானிரைக்காக்குன்றேந்தி
வானவருடந்தடுத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

மாவில்-மாமரத்தில், குயிலும்-கோகிலமும், ஒளிசெய்ய-மறைதலைச்செய்ய, மேவி-பொருந்தி, புயல்-மேகம், தவழும்-ஊருமெனவும், மயிலும்-மஞ்ஞையும், ஒளிசெய்ய-பிரகாசித்தலைச்செய்ய, மேவி-பொருந்தி, புயல்-மேகம், தவழும்-சஞ்சரிக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஆவிக்குளான-என்னுயிருக்குள்ளாகிய, அருள்-கிருபை, தந்து-கொடுத்து, அடுத்தார்-சேர்ந்தவர், ஆனிரைக்கா-பசுக்கூட்டங்களுக்காக, குன்று-மலையை, ஏந்தி-எடுத்து, வானவருடம்-ஆகாயத்துமழையை, தடுத்தார் - விலக்கினவருடைய, வாழ்வு-வாழுமிடம்—எ-று. (௬௬)

கானோடருவி கனகமுமுத்துந்தள்ளி
மீனோவெனக்கொழிக்கும் வேங்கடமே—வானோர்கள்
மேகனயனங்கொண்டார் வேணியரன்காண்பரியார்
காகனயனங்கொண்டார் காப்பு

இதன்பதப்பொருள்.

கான்-காட்டில், ஓடு-ஓடுகின்ற, அருவி-அருவிகளானவை, கனகமும்-சொர்ணத்தையும், முத்தும்-முத்தையும், தள்ளி - நீக்கி, மீனோவென-நட்சத்திரமோவென்று சொல்லத்தக்கதாக, கொழிக்கும்-இருபுறமுமொதுக்குமெனவும், மீ-மேலாகிய, நோவு-நோவை, எனக்கு-என்றனுக்கு, ஒழிக்கும்-நீக்குமெனவுமான, வேங்கடமே - திருவேங்கடமலையே, வானோர்கள்-தேவர்கள், மேகன் - மேகவாகனனானவிந்திரன், அயன்-பிரமன், அம்-கங்கையை, கொண்டு - தரித்துக்கொண்டு, ஆர்-ஆத்திமாலையைச்சூடிய, வேணி-சடையினையுடைய, அரன்-சிவன், காண்பு-இவர்களாலே காண்டற்கு, அரியார்-அரிதானவர், காகன்-காகாசுரனுடைய, நயனம்-கண்ணை, கொண்டார் - அம்பினாற்பறித்துக்கொண்டவருடைய, காப்பு-காக்குமிடம்—எ-று. (௬௭)

கண்டடைந்தவானவருங் காந்தட்குலமலரும்
விண்டவிர்ந்துநிற்கின்ற வேங்கடமே—தொண்டருக்கு
வைகுந்தநாட்டான் மருதினிடைபோந்தவரும்
வைகுந்தநாட்டான் வரை.

இதன்பதப்பொருள்.

கண்டு-இம்மலையைக்கண்டு, அடைந்த-வந்த, வானவரும் - தேவரும், விண்-தேவலோகத்தை, தவிர்ந்து-நீங்கி, நிற்கின்ற-நிற்கின்றார்களெனவும், காந்தட்குலமலரும்-காந்தட்சாதிப்பூவும், விண்டு-வாய்விண்டு, அவிர்ந்து-மலர்ந்து, நிற்கின்ற-நிற்கின்றவெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தொண்டருக்கு-தாசருக்கு, வை-கூரிய, குந்தம்-வாளாயுதத்தை, நாட்டான்-இயமனெட்டாமற் பண்ணுகிறவன், மருதி

ன்-மருதமரமிரண்டின், இடையே-நடுவே, தவழும்-ஊறுகின்ற-வைகுந்தநாட்டான்-திருவைகுந்த நாட்டையுடையவனது,வரை-மலை-எ-று.

வாழும்புலியிறெடு வானூர்தினகரனும்
வேழங்களும்வலஞ்செய் வேங்கடமே—ஊழின்கட்
சற்றாயினுமினியான் சாராவகையருளு
நற்றாயினுமினியா னாடு.

இதன்பதப்பொருள்.

வாழ்-இன்பம்பொருந்தின, அம்புலியிறெடு-சந்திரனுடனே, வான்-ஆகாயத்தில், ஊர்-சஞ்சரிக்கின்ற, தினகரனும்-சூரியனும், வலஞ்செய்-பிரதக்ஷணம் வருவானெனவும், வேழங்களும்-யானைகளும், வலஞ்செய்-வலஞ்செய்யுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஊழின்கண்-பிரபஞ்சத்திலே, சற்றாயினும்-சிறிதானாலும், இனி-இனிமேல், யான்-நான், சாராவகை-பொருந்தாதபடி, அருளும்-கிருபைபண்ணும், நற்றாயினும்-நல்லதாயினும், இனியான்-நல்லவனானவனுடைய, நாடு-தேசம்—எ-று. (௬௬)

தாட்கமலப்பூஞ்சுனைக்குஞ் சாயகங்கள்கொய்துதிரி
வேட்கும்வடிவில்லா வேங்கடமே—வாட்கலிய
னாவியப்பாம்பாட்டினார் நச்சுமடுவைக்கலக்கித்
தாவியப்பாம்பாட்டினார் சார்பு.

இதன்பதப்பொருள்.

தாள்-நாளத்தோடுற்ற, கமலப்பூ - தாமரைப்பூவையுடைய, சுனைக்கும்-சுனையினிடத்திருக்குஞ்சலங்கள், வடிவிலலா-வற்றாவெனவும்,சாயகங்கள்-அம்புகள், கொய்து-பறித்து, திரி-சஞ்சரிக்கின்ற, வேட்கும்-மன்மதனுக்கும், வடிவு-உருபம், இல்லா-இல்லையெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, வாள்-வாளையுடைய, கலியன்-திருமங்கையாழ்வானுடைய, நா-நாக்கிலான, வியப்பாம - அதிசயமுள்ள, பாட்டினா-பாசுரத்தையுடையவர், நச்சு-விடமபொருந்திய, மடுவை - பொய்கையை, கலக்கி-கலங்கப்பண்ணி, தாவி-எழுந்து, அப்பாம்பு-அந்தப்பாம்பை, ஆட்டினா-ஆடப்பண்ணினவா, சார்பு-சாருமிடம்—எ-று. அந்திலப்பொருளுடனே பெலவாகிலத்துக்கும் பொதுபபொருளான அமைசதினையுங்கூட்டினது அவன்பலவிடத்துக் காமிபத்தைபபுசிக்கும் குதிசஞ்சரிப்பாரென்பதுபற்றியென்க. பாம்பாட்டினாரென்பதற்கு பமமை யலையப்பண்ணினாரென்பதாம் அல்லது பாம்பிலாடின கூத்தையுடையவரொன்றாலுமொக்கும். (௬௭)

ஆயுந்துறவறத்தை யண்டினமுத்தண்டினரும்
வேயுங்கிளைவிட்ட வேங்கடமே—தோயுந்
தயிர்க்காத்தாங்கட்டுண்டார் தாரணிபிற்றந்த
[illegible]க்காத்தாங்கட்டுண்டாரூர்.

இதன்பதப்பொருள்.

ஆயும்-விசாரிக்கப்பட்ட, துறவறத்தை-சந்நியாசிதன்மத்தை, அண்டினை-பொருந்தின, முத்தண்டினரும்-திரிதண்டிகளும், கிளை - சுற்றங்களை, விட்ட-நீக்குவரெனவும், வேயும்-மூங்கிலும், கிளைவிட்ட-கிளைகளைவிடுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தோயும் - உறைபொருந்தப்பட்ட, தயிர்க்கா-தயிருக்காக, தாம்-தாமே, கட்டுண்டார்-கட்டுப்பட்டவர், தாரணியில்-பூமியில், தந்த-உண்டாக்கின, உயிர்-உயிர்களை, காத்து-இரக்ஷித்து, ஆங்கு-அவ்விடத்திலே, அட்டு-கெடுத்து, உண்டார்-புசித்தவருடைய, ஊர்-பதி—எ-று. (௭௧)

தொண்டொடுமெய்யன்புடையார் தூய்மனமுஞ்சந்தனமும்
விண்டொடுபொற்பாம்பணைசேர்வேங்கடமே-தண்டொடுவாள்
கோலமருங்கார்முகத்தார் கோடாழியார்குழையின்
கோலமருங்கார்முகத்தார் குன்று.

இதன்பதப்பொருள்.

தொண்டொடு-கயிங்கரியத்தோடு, மெய் - உண்மையாகிய, அன்புடையார்-அன்பினையுடையதாசரது, தூய்-பரிசுத்தமான, மனமும்-இருதயமும், விண்டொடு-பெருமானுடனே, பொன் - அழகான, பாம்பணை-அனந்தசயனத்தை, சேர-கிணக்குமெனவும், சந்தனமும்-சந்தனமரமும், விண்-ஆகாயத்தை, தொடு-தீண்டும், பொற்பாம்-பொலிவான, பணை-கொம்புகளை, சேர் - பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தண்டொடு-தடியுடனே, வாள்-வாளாயுதமும், கோல்-அம்பும், அமரும்-பொருந்தும், கார்முகத்தார் - வில்லையுடையவர், கோடு-சங்கு, ஆழி-சக்கரம், ஆர்-இவ்விரண்டையும்பொருந்தினவர், குழையின்-குண்டலத்தின், கோலம்-அழகு, மருங்கு - பக்கத்திலே, ஆர்-பொருந்தின, திருமுகத்தார் - திருமுகத்தினையுடையவரது, குன்று-மலை—எ-று. (௭௨)

கிட்டுநெறியோகியருங் கிள்ளைகளுந்தங்கூடு
விட்டுமறுகூட்டையும் வேங்கடமே—எட்டுமத
மாவென்றுவந்தான் வாநாளைவாவின்று
போவென்றுவந்தான் பொருப்பு.

இதன்பதப்பொருள்.

கிட்டு-சமீபித்த, நெறி-மோக்ஷநெறியினுடைய, யோகியரும்-தபோதனர்களும், தம்-தம்முடைய, கூடு-சரீரத்தைவிட்டு, நீக்கி-மறுவேறு, கூடு-சரீரத்தை, அடையும்-பொருந்துவரெனவும், கிள்ளைகளும்-கிளிப்பிள்ளைகளும், தங்கூடு-தாங்களிருந்தகூடு, விட்டு-நீங்கி, மறுகூடு-வீதியிலே, அடையும்-செல்லுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, மதம்-மதத்தினுடைய, எட்டுமா - அஷ்டகஜங்களை, வென்று-தோற்கப்பண்ணி, வந்தான்-மீண்டவனுனைவிராவணன், வர-வரும்படி, இன்றுபோ-இன்றுகழித்து, நாளைவாவென்று - நாளையதினம்வருகவென்றுசொல்லி, உவந்தான் - சந்தோஷித்தவனுடைய, பொருப்பு-மலை

—எ-று. யோகியர்கள் மறுகூடடைதலாவது, பரகாயப்பிரவேசம். நாவாவென்றது, இராமாயணத்தில் முதனாள்யுத்தத்தின்கதை. இராவணனை முனிந்துகொல்லாதுவிடுத்ததினாலுவந்தாரென்றார். (எரு)

மட்டுவளர்சாரலினு மாதவத்தோர்சிந்தையினும்
விட்டுமதிவிளங்கும் வேங்கடமே—சுட்டுசடை
நீர்க்கங்கையேற்றா னிரப்பொழித்தானீள்குறளாய்ப்
பார்க்கங்கையேற்றான் பதி.

இதன்பதப்பொருள்.

மட்டு-மணம், வளர்-வளரப்பட்ட, சாரலினும்-மலைப்பக்கலினும், விட்டு-வெளியாய், மதி-சந்திரன், விளங்கு-பிரகாசிக்குமெனவும், மாதவத்தோர்-இருடிகள், சிந்தையினும்-மனதினும், விட்டு - நாராயணனை, மதி-புத்தி, விளங்கும்-துலங்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, சுட்டுசடை-சுற்றிமுடிக்குஞ்சடையில், நீர்-சலமான, கங்கை-கங்காதேவியை, ஏற்றான்-தரித்தவனுடைய, இரப்பு - வெறுமையை, ஒழித்தான்-தீர்த்தவன், நீள்-நெடுமையாகத்தக்க, குறளாய்-வாமனாவதாரமாய், பார்க்கு-பூமிக்கு, அம் - அழகிய, கை-கையை, ஏற்றான்-ஏந்தினவனுடைய, பதி-ஊர்—எ-று. கங்கையேற்றானிரப்பாவது, கபாலமேந்தியிரந்தது. குறளாவது, வாமனாவதாரம். பின்பு வளர்ந்தாராதலின் நீள்குறளாயென்றார். விஷ்ணுஎன்னும் வடமொழி விட்டுவெனநின்றது. (எச)

புக்கவருமாதவரும் பூமதுவுண்வண்டினமு
மெய்க்கவசம்பூண்டிருக்கும் வேங்கடமே—ஒக்கவெனை
யன்பதினாலாண்டா னரிவையொடுகானுறைந்த
வன்பதினாலாண்டான் வரை.

இதன்பதப்பொருள்.

புக்க-புகுதற்கு, அரும்-அரிதாகிய, மாதவரும்-மகாதபோதனர்களும், மெய்க்கு-உண்மையானவஸ்துவுக்கு, அவசம்பூண்டிருக்கும்-தங்கள்வசமழிந்து பரவசம்பூண்டிருப்பார்களெனவும், பூ - பூவிலிருக்கிற, மது-தேனை, உண்-குடிக்கிற, வண்டு-வண்டுகளுடைய, இனமும்-கூட்டங்களும், மெய்-அப்பூவினுடைய தாதுகளை, கவசம்-தங்கள்சரீரத்துக்குக் கவசமாக, பூண்டிருக்கும் - கொண்டிருக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒக்கவெனை - ஒருமிக்களன்னை, அன்பதினால்-அம்பினாலே, ஆண்டான்-ஆட்கொண்டவனுடைய, அரிவையொடு-பெரியபிராட்டியாரோடு, கானுறைந்த-காட்டிலிருந்த, வன்-வலிய, பதினால் - பதினான்கு, ஆண்டான் - வருஷத்தையுடையவனது, வரை மலை—எ-று. (எரு)

தக்கமறையோர்நாவுந் தண்சாரலின்புடையு

பூண்டார்க்குமாறுடைத்தார் பொங்கோதநீரடைத்து
மீண்டார்க்குமாறுடைத்தார் வெற்பு.

இதன்பதப்பொருள்.

நக்க-தகுதியையுற்ற. மறையோர்-பிராமணருடைய, நாவும் - நாவினிடத்தும், மனுவிளையும்-மனுக்கியான முண்டாமெனவும், தண்-குளிர்ந்த, சாரலின்புடையும்-மலைப்பக்கத்திலும், மிக்க-மிகுந்த, மனு-மனுஷர், விளையும்-சஞ்சரிக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, அக்கு-சங்குமணியும், அரவம்-பாம்பும், பூண்டார்க்கு-தரித்தவராகியசிவனுக்கு, மால்-மயக்கத்தை, துடைத்தார்-தீர்த்தவர், பொங்கு-மிகுந்த, ஓதம்-திரையினையுடைய, நீர் - ஜலமாகியகடலை, அடைத்து-அடைக்கப்பட்டு, மீண்டார்க்கும்-திரும்பினவர்கட்கும், ஆறு-வழியாக, உடைத்தார்-உடைத்தவருடைய, வெற்பு-மலை—எ-று. சிவனுக்கு மயக்கந்துடைத்தலாவது, காபாலமோட்சம். ஆறாகஉடைத்தலாவது, திருவணைகட்டி இலங்கையிற்போய் போர்வென்று மீண்டதன்பின் அத்திருவணையை வில்லினாலே கீறியழித்தது. (எசு)

நீடுகொடிமுடியி நீதிநெறிவேதியர்கள்
வீடுமகமருவும் வேங்கடமே—கோடுங்
கருத்துளவமாலையான் காணாமனின்ற
மருத்துளவமாலையான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

நீடு-உயர்ந்த, கொடிமுடியும்-மலையினதுச்சியும், மகம் - மகநட்சத்திரத்தை, மருவும்-தொடுமெனவும், நீதிநெறி-தருமவழியினையுடைய, வேதியர்கள்-அந்தணர்களினது, வீடும்-கிரகமும், மகம்-யாகத்தை, மருவும் - பொருந்துமெனவுமான, வேங்கடமே - திருவேங்கடமலையே, கோடும்-கோணிய, கருத்துள்-மனதினிடத்து, அவமாலையான்-அவமான வொழுங்கையுடையவனாகிய நான், காணாமல்-பாராமல், நின்ற-என்கருத்துணின்ற, மரு-வாசத்தையுடைய, துளவமாலையான்-திருத்துளவ மாலையையுடையவன், வாழ்வு-வாழுமிடம்—எ-று. (எஎ)

சீதங்கொள்சாரலினுஞ் சீர்மறையோரில்லிமித்தும்
வேதங்கணால்வளரும் வேங்கடமே—போதன்
சிரித்துப்புரந்துவைத்தான் தேவரொடுமண்டம்
விரித்துப்புரந்துடைத்தான் வீடு.

இதன்பதப்பொருள்.

சீதம்-குளிர்ச்சி, கொள்-கொண்டிருக்கிற, சாரலினும்-மலைப்பக்கத்திலும், வே-மூங்கில், தம்-தம்முடைய, கணால்-கணுவினால், வளரும்-வளரப்படுமெனவும், சீர்-சிறப்புப்பொருந்திய, மறையோர்-பிராமணருடைய, இலவிடத்தும்-வீட்டினிடத்தும், வேதங்கணால்-வேதங்கள் நான்கும், வளரும்-அதிகரிக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்க

மலையே, போதன்-பிரமனும், சிரித்து-நகைத்து, புரம்-முப்புரங்களை, உடைத்தான்-எரித்தவனாகிய சிவனும், தேவரொடும் - தேவர்களோடுங்கூட, அண்டம்-அண்டங்களை, விரித்து-படைத்து, புரந்து-காத்து, உடைத்தான்-கெடுத்தவனுடைய, வீடு-பதி—எ-று. (எஅ)

நன்கோடுபோலுமுலை நாரியருஞ்சண்பகத்தின்
மென்கோடுங்கற்பகஞ்சேர் வேங்கடமே—வன்கோடு
கூரிருவராகனு கோகநகைபூமியென்னு
மோரிருவராகனு ரூர்.

இதன்பதப்பொருள்.

நன்கோடுபோலும்-நல்லகொம்புபோலும், மூலை-தனத்தினையுடைய, நாரியரும்-பெண்களும், கற்பு-கற்புடைமையை, அகம்-மனதிலே, சேர்-பொருந்துவரெனவும், சண்பகத்தின்-சண்பகமாத்தினது, மென்கோடும்-மெல்லியகொம்புகளும், கற்பகஞ்சேர்-கற்பகவிருக்ஷத்தைத் தொடுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கூர்-கூர்மையான, வன்கோடு-வலியகோட்டினையுடைய, இரு-பெருமைபொருந்திய, வராகனார்-வராகவதாரத்தையுடையவர், கோகநகை-பெரியபிராட்டியாரும், பூமி-பூமிப்பிராட்டியாரும், என்னும்-என்றுசொல்லிய, ஓரிருவர்-இரண்டுதேவிமாரும்பொருந்தின, ஆகனார்-திருமேனியுடையவரது, ஊர்-பதி—எ-று. (எகூ)

கோடஞ்சுங்கோதையர்கள் கொங்கையினுங்குஞ்சரத்தும்
வேடன்சரந்துரக்கும் வேங்கடமே—சேடனெனு
மோர்பன்னகத்திடந்தா னுற்றானிரணியனைக்
கூர்பன்னகத்திடந்தான் குன்று.

இதன்பதப்பொருள்.

கோடு-மலை, அஞ்சும்-பயப்படும், கோதையர்கள் - பெண்களுடைய, கொங்கையினும்-தனத்தினிடத்தும், வேள்-மன்மதன், தன்-தன்னுடைய, சரம்-அம்புகளை, துரக்கும்-விடுவானெனவும், குஞ்சரத்தும்-இயானையினிடத்தும், வேடன்-வேடனானவன், தன்சரந்துரக்கும்-தன்னம்புவிடுவானெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, சேடனும்-ஆதிசேடனென்று சொல்லப்பட்ட, ஓர்பன்னகத்திடம் - ஓர்பாம்பினிடத்தில், தானுற்றான்-தான்பொருந்தினவன், இரணியனை-இரணியனானவசுரனை, கூர்-கூர்மையான, பல்-பல்லாகிய, நகத்து-உகிர்களினாலே, இடந்தான்-பிளந்தவனுடைய, குன்று-மலை—எ-று. (அ0)

நாரியர்தங்கூந்தலினு நாலுமருவியினும்
வேரிநறுஞ்சாந்தொழுகும் வேங்கடமே—பாரினுளா
ரற்புசுவர்க்கத்தா ரறிவரியார்முன்மேய்த்த
[illegible]

இதன்பதப்பொருள்.

நாரியர்-பெண்கள், தம்-தங்களுடைய, கூந்தலினும் - அளகபாரத்திருந்து வாசனையையுடைய, நறும-நல்ல, சாந்து-குழம்பு, ஒழுகும்-சிந்துமெனவும், நாளும்-கீழ்நோக்கியோடும், அருவியினும்-அருவியிலும், வேரிநறும்-நல்லதேனோடுகூடின, சாந்து-சந்தனக்குழம்பு, ஒழுகும்-ஓடுமெனவுமான, வெங்கடமே-திருவெங்கடமலையே, பாரினுளார்-பூமியிலுள்ளவர்கள், அற்பம்-சிறிதுகாலத்தையுடைய, சுவர்க்கத்தார்-தேவலோகத்தையுடையாரும், அறிவு-அறிதற்கு, அரியார்-அரிதானவர், முன்-முற்காலத்தில், பெய்த-பெய்யச்செய்த, கல்-மலை, பசு-ஆக்களினது, வர்க்கத்தார்-கூட்டத்தையுடையவரது, நாடு-ஊர்—எ-று. ()

மாதரார்கண்ணு மலைச்சாரலுங்காமர்
வேதராகஞ்செறியும் வெங்கடமே—பாதநாம்
போதைப்படத்துவைத்தார் போர்வளையுமாற்றரசர்
வாதைப்படத்துவைத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

மாதர்-பெண்களுடைய, ஆர்-நிறைந்த, கண்ணும்-கண்களும், காமர்-மன்மதனுடைய, வேது-துன்பமாகிய, ஆராகம்-ஆசையை, செறியும்-பொருந்துமெனவும், மலைச்சாரலும்-மலைப்பக்கத்திலும், வேதராகம்-வேதத்தியானம், செறியும்-பொருந்துமெனவுமான, வெங்கடமே-திருவெங்கடமலையே, பாதநாம்-திருவடிகளாகிய, போதை-பூவை, படத்து-பாம்பின்படத்தில், வைத்தார்-இருத்தினவர், போர்வளைய-யுத்தமுண்டாக, மாற்றரசர்-சத்துருவாய் இராசாக்கள், வாதைப்பட-துன்பப்பட, துவைத்தார்-மிதித்தவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. போதைப் படத் துவைத்தலாவது, காளிங்கன்மேலாடியதாம். வாதைப்படத்து வைத்தலாவது, பாரதயுத்தம். (௮௨)

எத்திக்குங்காம்பு மெயினருமாரத்தினையே
வித்திக்கதிர்விளைக்கும் வெங்கடமே—தித்திக்கும்
காரிமாறன்பாவான் காதலித்தார் தம்பிறவி
வாரிமாறன்பாவான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

எத்திக்கும்-எத்திசைகளிலுமுள்ள, காம்பு-மூங்கிலும், எயினரும்-வேடரும். (முறையே) ஆரத்தினையே-முத்துகளையே, வித்தி-இறைத்து, கதிர்-கிரணங்களை, விளைக்கும்-விரிக்கின்றதெனவும், ஆர - நிறைய காணும்படியான, தினையே-தினைவிதையையே, வித்தி-விதைத்து, கதிர்-கதிர்களை, விளைக்கும்-உண்டாக்குவாரெனவுமான, வெங்கடமே-திருவெங்கடமலையே, தித்திக்கும்-இனிமையான, காரிமாறன் - நம்மாழ்வானுடைய, பாவான்-பாசுரத்தையுடையவன், தம்-தம்மை, காதலித்தார்-விரும்பினவருடைய, பிறவி-பிறப்பாகிய, வாரி - சாகரத்தைக்கை.

மாறு-நீக்கும், அன்பாவான்-அன்பினையுடையவன், வாழ்வு-வாழுமிடம்—எ-று. (௮௩)

பாரோடுகான்யாறும் பல்களிறுநந்தவனம்
வேரோடலைத்தீர்க்கும் வேங்கடமே—காரோதஞ்
சுட்டகருவிற்படையார் தொண்டரைமீண்டேழுவகைப்
பட்டகருவிற்படையார் பற்று.

இதன்பதப்பொருள்.

பார்-பூமியில், ஓடு-ஓடாநின்ற, கான்யாறும்-காட்டாறும், வேரோடலை-வேர்வையோடுதலை, தீர்க்கும்-நீக்குமெனவும், பல்களிறும்-பலயானைகளும், நந்தவனம்-நந்தவனத்தை, வேரோடு-வேரோடு-கூட, அலைத்து-அலையச்செய்து, ஈர்க்கும்-இழுக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கார்-கரியநிறத்தையும்-ஓதம்-திரையையுமுடையகடலை, கட்ட-சுடச்செய்த, கரும்-பெருமைபொருந்திய, வில-வில்லாகிய, படையார்-ஆயுதத்தையுடையவர், தொண்டரை-தாசரை, மீண்டு-திரும்பி, எழுவகைப்பட்ட-எழுவகைப்பட்ட, கருவில் - பிறப்பிலே, படையார்-படையாதவர், பற்று-பற்றுமிடம்—எ-று. கடலைச்சுட்டதாவது, இராமாவதாரத்தில் திருவணைகட்டுமுன் வருணனைச்சீறினது, எழுவகைப்பிறப்பாவது, தேவர்-மனிதர்-பேய்-மிருகம்-பறவை-புழுக்கள்-நரகத்தாருமெனக்கொள்க. (௮௪)

நன்காமர்வண்டினமு நால்வாய்மதகரியு
மென்காமரமுழக்கும் வேங்கடமே—புன்காம
மேவார்கழலா ரெனதுளத்திலென்றலையிற்
பூவார்கழலார் பொருப்பு.

இதன்பதப்பொருள்.

நன்காமர்-நல்லவழகினையுடைய, வண்டினமும்- வண்டுக்கூட்டங்களும், மென்காமரம்-மெல்லெனும்பண்ணை, முழக்கும்-ஒலிக்குமெனவும், நால்வாய்-நான்றவாயினையும், மதம்-மதத்தினையுமுடைய, கரியும்-இயானையும், மென்கா-மெல்லியசோலையில், மரம்-மரங்களை, உழக்கும்-தள்ளிமிதிக்குமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, புன்காமம்-அற்பமானகாமவிகாரத்திலே, மேவார்-பொருந்தாதவர்களினின்றும், கழலார்-நீங்கார், எனதுளத்தில்-எனதிருதயத்திலும், என்றலையில்-என்சென்னியிலும்வைத்த, பூவார்-பொற்றாமரைக்கொப்பான, கழலார்-திருவடிகளையுடையவரது, பொருப்பு-மலை—எ-று. (௮௫)

பாம்புங்குளிர்சந்தின் பக்கத்தினிற்கின்ற
வேம்புமருத்துவர்க்கும் வேங்கடமே—காம்புகர
மானவரைநன்குடையா ராளாய்த்தொழுதேத்து
மானவரைநன்குமையார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

பாம்பு-அரவும், மருத்து-காற்றை, உவர்க்கும்-வெறுக்குமெனவும், குளிர்-குளிர்ந்த, சந்தின்-சந்தனமரத்தின், பக்கத்தில்-அருகினில், நிற்கின்ற-இருக்கின்ற, வேம்பு-வேப்பமரம், மரு-வாசனையை, துவர்க்கும்-துவர்க்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, காம்பு-காம்பை, காமான-கையாகக்கொண்ட, வரை-மலையை, நன்குடையார்-நல்லகுடையாகவுடையவர்க்கு, ஆளாய் - தொண்டாய், தொழுது-வணங்கி, ஏத்துமானவரை-தோத்திரஞ்செய்கின்ற தாசர்களை, நன்கு-நன்றாக, உடையார்-உடையவரது, வாழ்வு-வாழுமிடம்—எ-று. பாம்பு காற்றைவெறுத்தலாவது, சந்தனமரத்தை புசித்தலாம். வெப்பமரந்துவர்த்தலாவது, கசவாதென்பதாம். (அசு)

சாருமருவிதவழ சாரலுஞ்செஞ்சந்தனத்தின்
வேருமரவமறு வேங்கடமே—நேரு
மதுகையிடவர்கறுத்தார் மாமலரோன்சாப
மதுகையிடவர்க்கறுத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

சாரும்-சார்ந்த, அருவி-அருவிகளானவை, தவழ்-ஊருகின்ற, சாரலும்-மலைப்பக்கத்திலும், அரவம்-ஆரவாரம், அறு - ஒழியாதெனவும், செம்-செவ்விய, சந்தனத்தின்-சந்தனமரத்தினது, வேரும்-வேரினிடத்தும், அரவம்-பாம்பு, அறு-நீங்காதெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நேரும்-கிட்டின, மது-மதுவென்றும், கையிடவர்-கையிடவனொன்றுஞ், சொலவிய-இருவரை, கறுத்தார்-கோபித்தவர், மா-பெருமைபொருந்திய, மலரோன்-பிரமதேவனுடைய, சாபம்-சாபத்தை, மதுகை-பலத்தையுற்ற, இடவர்க்கு-காளையையுடையசிவனுக்கு, அறுத்தார்-நீக்கினவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. மதுகையிடவராவார் மச்சாவதாரத்திற் கொல்லப்பட்டவர் பிரமனிட்டசாபந்தீர்த்தலாவதுகபாலமோக்ஷம். (அஎ)

மண்மட்டுந்தாழ்சுனையும் வட்டச்சிலாதலமும்
விண்மட்டுந்தாமரைசேர்வேங்கடமே—எண்பட்டும்
பாதமுன்னினைந்தார் பரமபதஞ்சேர்கவென்று
போதமுன்னினைந்தார் பொருப்பு.

இதன்பதப்பொருள்.

மண் - பூமி, மட்டும் - பரியந்தம், தாழ் - தாழாநின்ற, சுனையும்-சுனையும், விள்-மலராநின்ற, மட்டு-தேனையுடைய, தாமரை - பங்கசத்தை, சேர்-பொருந்துமெனவும், வட்டம்-விருத்தமான, சிலாதலமும்-கல்லுத்தலமும், விண்மட்டும்-ஆகாயபரியந்தம், தா-தாவுகின்ற, மரை-மரையென்னுமிருகத்தை, சேர்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, எண்பட்டும்-நினைக்குமளவில், பாதம்-திருவடிக

னை, முன்னி-நினைந்து, நைந்தார்-உருகுகின்றவர்கள், பரம்பரம்-பரம்பரத்திலே, சேர்கவென்று சேர்ந்தக்கென்று, போதம்-அறிவு, முன்-முற்காலத்தில், நினைந்தார் நினைந்தவருடைய, பொருப்பு-மலை—எ-று.

போதாவிருசுடரும் போதுதற்கு மோதுதற்கும்
வேதாவினுமுடியா வேங்கடமே—மாதாவின்
விந்துகனத்துக்கினியான விம்மியழாதாட்கொண்டான்
தாங்குதுணைநத்துக்கினியான் சார்பு.

இதன்பதப்பொருள்.

போதா-போகமாட்டாத, இருசுடரும்-சூரியசந்திரரென்கிற இரண்டுபேரும், போதுதற்கும்-போகுதற்கும், மே-மூங்கிலே, தாவினுலே-தாவுதலினாலே, முடியா-நிறைவேறாதனவும், ஓதுதற்கு-அவர்களதுபெருமையைச்சொல்லுவதற்கும், வேதாவினும்-பிரமதேவனாலும், முடியா-கூடாதனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, மாதாவின்-தாயினுடைய, விந்து-பந்தம், கனத்துக்கு-கோயனையிட்டது, இனி-இனிமேல், யான-நான, விம்மியழாது-தேம்பியழாமல், ஆட்கொண்டான்-அடிமைகொண்டவன், தாங்கு-தாங்குகின்ற, துணை-துணையுடைய, நத்துக்கு-சங்கத்துக்கு, இனியான-இனிமையானவனுடைய, சார்பு-சார்பிடம்—எ-று. (அ௩)

பேய்க்குமொரு பேய்போன்று பிராய்த்திரிவோர்க்கு
வேய்க்குமணி முத்திலங்கும் வேங்கடமே—வாய்க்கமுதூ
வண்மைப்போரா யிரத்தான் மண்ணினைமாவலிபோல
தண்மைப்பேரா யிரந்தான் சார்பு.

இதன்பதப்பொருள்

பேய்க்கும்-பசாசுக்கும், ஒருபேய்போன்று-ஒருபசாசுபோலப் பிராப்மயக்கமாகி, திரிவோர்க்கும்-சஞ்சரிக்கிற சீவர்களுக்கும், முத்தி-மோட்சம், வரும்-கிடைக்கப்பெறவும், வேய்க்கு-மூங்கிலினின்று, மணி-அழகிய, முத்து-முத்துக்கள், இலங்கும்-பிரகாசிக்கப்பெறவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, வாய்க்கு-வாயிலே, அமுது-அமிர்தத்தைப்போல, ஊறா-ஊறுகின்ற, வண்மைப்போர்-வளப்பம்பொருந்திய திருநாமம், ஆயிரத்தான்-ஆயிரம்பெயர்களையுடையவன், மண்ணினை-பூமியைப்பறித்த, மாவலிபோல-மாவலியாகிய அசுரனிடத்து, தண்மைப்பட்ட-தாழ்ந்தபெயராகி, இரந்தான்-இரந்தவனுடைய, சார்பு-சாருமிடம்—எ-று. (கூ0)

வாழ்க்கைமனைநீத்தவரும் வானவரும் யாங்க
வேழ்க்கைமறந்திகழும் வேங்கடமே—தோட்கைவிழு
மாவந்தனைநகழித்தார் வாழிலங்கைப்பார்த்தனை
யோகவந்தனைக்கழித்தாரூர்.

இதன்பதப்பொருள்.

வாழ்க்கை-இன்பம்பொருந்தின, மனை-இல்வாழ்க்கையை, நீத்தவரும்-துறந்தவரும், மாது-பெண்களது, அங்கம்-சரீரத்தினுடைய, வேழ்கை-ஆசையை, மறந்து-நினையாமல், இகழும்-இகழ்ச்சிசெய்வோனவும், வாள்-விளக்கமாகிய, அரியும்-சிங்கமும், மாதங்கம்-இயானையினிடத்துண்டாகிய, வேழ்கை-ஆசையால், மறம்-வீரம், திகழும்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தோள்-புயத்தோடுகூடின, கை-கைகளை, விழ-விழும்படி, மா-பெருமைபொருந்திய, கவந்தனை-கவந்தனென்பவனை, கழித்தார்-கொன்றவர், வாழ்-வாழாநின்ற, இலங்கை- இலங்கையிலிராநின்ற, பாதகனை - இராவணாதிகளை, லோகவந்தனைக்கு-உலகத்தார், தண்டன்-சமர்ப்பிக்க, அழித்தார்-கெடுத்தவருடைய, ஊர்-பதி—எ-று. (௬௧)

கூட்டுத்தவத்தவருங் கோளரிகளின்றிரளையும்
வேட்டுவரம்பொழியும் வேங்கடமே—மோட்டுமதத்
தந்திக்கமலத்தார் தாம்பெறுவீடளித்தா
ருந்திக்கமலத்தா ரூர்.

இதன்பதப்பொருள்.

கூட்டு-கூட்டப்பட்ட, தவத்தவரும் - தவத்தினையுடையவர்களும், வேட்டு-வேண்டுகின்ற, வரம்-வரங்களை, பொழியும் - சொரிவார்களெனவும், கோள்-கோட்பாட்டையுடைய, அரிகளின்றிரளையும்-சிங்கக்கூட்டங்களும், வேட்டுவர்-வேடருடைய, அம்பு-பாணம், ஒழியும்-நீங்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, மோட்டு - பெருமையும், மதம்-மதத்தையுமுடைய, தந்திக்கு-கசேந்திரனென்றயானைக்கு, அமலத்தார்-நிர்மலமானவர்கள், தாம்-தாங்கள், பெறு-அடையாத, வீடு-பரமபதத்தை, அளித்தார்-கொடுத்த, உந்திக்கமலத்தார்-உந்தியேகமலமாகவுடையவரது, ஊர்-பதி—எ-று. (௬௨)

வஞ்சமடித்திருப்பார் வாக்குங்கலைக்கோடும்
விஞ்சமடித்திருக்கார் வேங்கடமே—கஞ்சப்
பிரமாநந்தத்தான் பிரபஞ்சமாய்த்த
பரமாநந்தத்தான் பதி.

இதன்பதப்பொருள்.

வஞ்சம்-கபடத்தை, அடித்து-நீக்கி, இருப்பார்-இருக்கின்ற பெரியோர்களுடைய, வாக்கும்-வார்த்தையும், விஞ்சம்-மிகுதியும், மடித்து-ஆராய்ந்து, இருக்கு-இருக்குவேதத்தை, ஆர்-பொருந்துமெனவும், கலைமானினுடைய, கோடும்-கொம்பும், விஞ்சம்-மிகுதியும், மடித்திருக்கார்-முந்தத்திருகுதலைப் பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கஞ்சம்-தாமரைப்பூவிலிருக்கும், பிரமா-பிரமதேவன், நந்த-இறப்பதான, தான்-தான், பிரபஞ்சம் - பிரகிருதியை, மாய்த்த-மறைத்த, பரமாநந்தத்தான் - பரமபதத்தினையுடையவனது, பதி - ஊர

—எ-று. மிருந்தசுகத்தையுடையதை மிருந்தசுகமென்று ஆகுபெயராய் பரமபதத்தின்மேலேற்றப்பட்டது. (௬௩)

சேலஞ்சுங்கண்மடவார் தேங்குழலுங்கோங்கினமு
மேலஞ்சுவர்க்கமார் வேங்கடமே—கோலஞ்சேர்
மாரிலலங்காரத்தார் மற்றும்பல்பூணணிந்த
காரிலலங்காரத்தார் காப்பு.

இதன்பதப்பொருள்.

சேல்-சேற்கெண்டைகள், அஞ்சும்-பயப்படத்தக்க, கண்-கண்களையுற்ற, மடவார்-அறியாமையுடைய பெண்களினது, தேங்குழலும்-மணமுறுவளகமும், மேல்-மேலான, அஞ்சுவர்க்கம்-ஐந்துவகையை,ஆர்-பொருந்தியிருக்குமெனவும், கோங்கினமும்- கோங்குமரக்கூட்டமும், மேல்-மேலாகவிருக்கிற,அம்-அழகிய,சுவர்க்கம்-தேவலோகத்தை, ஆர்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கோலஞ்சேர்-அழகுபொருந்திய, மாரில்-மார்பில், அலங்கு-அசையாநின்ற, ஆரத்தார்-கவுஸ்த்துவமென்ற பதக்கத்தையுடையவர், மற்றும்-அதுவல்லாமல், பல்-பலவாகிய, பூண்-ஆபரணங்களை, அணிந்த-தரித்த, காரில்-மேகத்தைப்போல, அலங்காரத்தார்-அழகையுடையவர், காப்பு-காக்குமிடம்—எ-று. ஐங்குழலாவது, முடி-கொண்டை-குழல்-பணிக்கை-சுருள்-எனக்கரண்க. (௬௪)

கொய்யுமலர்ச்சோலைக் கொக்கும்பிணியாளர்
மெய்யும்வடுத்தவிரும் வேங்கடமே—நையுஞ்
சனனந்தகனார் தலையிலிதோள்சாய்த்த
சினனந்தகனார் சிலம்பு.

இதன்பதப்பொருள்.

கொய்யும்-பறிக்கப்பட்ட, மலர்-பூவையுடைய, சோலை - சோலையினிடத்திராநின்ற, கொக்கும்-மாமரமும், வடுத்து-வடுவாகிய பிஞ்சுபருத்து, அவிரும்-பிரகாசிக்குமெனவும், பிணியாளர்-நோயாளருடைய, மெய்யும்-சரீரமும், வடு-தழும்பு, தவிரும்-நீங்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நையும்-வருந்தாநின்ற, சனனம்-பிறப்புக்கு, அந்தகனார்-கொல்லப்பட்டயமனவார், தலையிலி - கவந்தனுடைய, தோள்-தோளை, சாய்த்த-விழப்பண்ணின, சினம்-கோபத்தையும், நா[illegible]-வாளையுமுடையவரது, சிலம்பு-மலை—எ-று. (௬௫)

சேர்க்கவலைநோயினரு நீடுசிலைவேடுவரும்
வேர்க்கவலைமூலங்கல் வேங்கடமே-கார்க்கடன்மேல்
தா[illegible]ங்காலத்திறப்பார் தம்மைவிழுங்கிக்கனிவாய்
[illegible]காலத்திறப்பார் வெற்பு.

இதன்பதப்பொருள்.

நேர்-மிகுந்த, கவலை-வருத்தத்தையுடைய, நோயினரும்-பிணியாளரும், வேக்க-வேகவைசிந்த, அலை-அலைபிணையுடைய திருப்பாற்கடலிற்பள்ளிகொண்டிராநின்ற, மூலம்-உலகத்திற்குக்காரணபூதராகிய ஆதிமூலக்கடவுளை, கல-கற்றுசதொள்ளுகிறோகளெனவும், நீடு-நீண்ட, சிலை-வில்லினையுடைய, வேடுவரும்-வேடர்களும், வேக்க-வேகவைபிறக்க, கவலை-கவலைக்கிழங்கை, கல-கெல்லுவோனெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கார்-கரிய, கடல்-சமுத்திரமானது, மேல் தாண்டும்-மேலேயெழும்பாநின்ற, சாலத்து-வேலையில், இறப்பார்-தம்மையிறப்பவர்களை, விழுங்கி-உட்கொண்டு, கனிவாய்-கோவைப்பழம்போன்றவாயை, மீண்டுங்காட்ட-திரும்பியும் வெளிக்குக்கொண்டுவருங்காலத்தில், திறப்பார்-திறக்கின்றவருடைய, வெற்பு-மலை —எ-று.

தண்டாமரைச்சுனையிற் சாதகமும்வேடுவரும்
விண்டாரைநாடுகின்ற வேங்கடமே—தொண்டராகி
ஏவத்தனக்குழையா ரென்னைமுன்னாளெடுத்த
கோவர்த்தனக்குடையார் குன்று.

இதன்பதப்பொருள்

தண்-குளிர்ந்த, தாமரைச்சுனையில்-தாமரைப்பொய்கையிலிராநின்ற, சாதகமும்-சாதகப்புள்ளும், விண்-மேகத்து, தாரை-மழைத்துளியை, நாடுகின்ற-விரும்புகின்றதெனவும், வேடுவரும்-வேடர்களும், விண்டாரை-நீங்கினவர்களை, நாடுகின்ற-தேடுகின்றனரெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, என்னை-என்றனை, தொண்டராகி-அடிமையாகி, ஏவ-பணிவிடைசெய்ய, தனக்குழையார்-தனக்குழைபவர், முன்னாள்-முற்காலத்தில், எடுத்த-எடுக்கச்செய்த, கோவர்த்தனக்குடையார்-கோவர்த்தனகிரியைக் குடையாகவுடையவர், குன்று-மலை—எ-று இந்திரன் கன்மாரிபெய்தநாளில் குடைபோலவெடுத்ததால், கோவர்த்தனக்குடையென்றதுருவகமாம். (கஎ)

வாழரியுஞ்சந்தனத்தோய் மாருதமுந்தாக்குதலால
வேழமருப்புகுதும் வேங்கடமே—நீழலமர்
பஞ்சவடிகாட்டினனைப் பாரளப்பான்போலெவர்க்கும்
கஞ்சவடிகாட்டினன் காப்பு.

இதன்பதப்பொருள்.

வாழரியும்-சுகமானசிங்கமும், தாக்குதலால்-பாய்தலால், வேழம்-யானையினுடைய, மருப்பு-கொம்பு, உகுதும்-சிந்துமெனவும், சந்தனமரத்தில், தோய்-படியாநின்ற, மாருதமும்-காற்றும், தாக்குதலால்-படுதலால், வேழம்-மூங்கில்-மரு-மணம், புகுதும்-பொருந்துவதுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நீழல்-நிழல், அமர்-பொருந்திய, பஞ்சவடிகாட்டினனை-பஞ்சவடியாகிய காட்டையுடையவனை, பாரளப்பான்போல-பூமியளக்கிறவனைப்போல, எவர்க்கும்-எல்லார்க்கும்,

சஞ்சம்-தாமரைப்பூப்போலும், அடி-திருப்பாதங்களை, காட்டினான்-காண்பித்தவன், காப்பு-காக்குமிடம்—எ-று. (கூஅ)

எவ்விடமுமாறுதோய்ந் தெல்லோரும்பல்பாம்பும்
வெவ்விடரினீங்கியெழும் வேங்கடமே—தெவ்விடையேழ்
அட்டவனாகத்தணையா னாதிமறைநூன்மார்க்கம்
விட்டவனாகத்தணையான் வெற்பு.

இதன்பதப்பொருள்.

எவ்விடமும்-எவ்விடத்திலும், ஆறுதோய்ந்து - நதிபடிந்தோடுதலால், எல்லோரும்-சகலருக்கும், வெவ்விடரில்-வெவ்விய துன்பத்தில், நீங்கி-விட்டு, எழும்-நீங்குவதானவும், பலபாம்பும்-பலபாம்புகளும, வெவ்விடரில்-வெய்ய வெடிப்புகளினின்றும், நீங்கி-விட்டு, எழும்-புறப்படுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தெவ்விடையேழ்-பகைத்தகாளையேழையும், அட்டவன்-வென்றவன், நாகத்தணையான்-பாம்பைமெத்தையாகவுடையவன், ஆதி-முதன்மையாகிய, மறைநூன்மார்க்கம்-வேதநூன்மார்க்கம, விட்டவன் - நீங்கினவனுடைய, ஆகத்து-சரீரத்தினிடத்து, அணையான்-சேராதவனுடைய, வெற்பு - மலை—எ-று. எழுகாளைகளை வென்றதாவது, பின்னைப்பிராட்டியார் திருக்கலியாணத்தில் நடந்ததை. (கூகூ)

பாடுமதுகரமும் பச்சைத்தழைக்குடிலில்
வேடுமணமருவு வேங்கடமே—நீடு
மகராலயங்கடந்தார் வாழ்வசுதேவர்க்கு
மகராலயங்கடந்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

பாடு-கீதமவாசிப்பதுபோலக் கூப்பிடுபடியான, மதுகரமும்-வண்டும், மணமருவும்-பரிமளத்தைப்பொருந்துமெனவும, பச்சை-பச்சைநிறத்தையுடைய, தழை-இலைபோலேசெய்த, குடிலில்-சிறுவீட்டில், வேடு-வேடருடைய, மணமருவும்-கலியாணத்தைப் பொருந்துமெனவுமான, வேங்கடமே - திருவேங்கடமலையே, நீடு-நெடிய, மகராலயங்கடந்தார்-சமுத்திரங்களைக்கடந்தவா. வாழ்-வாழ்வையுடைய, வசுதேவர்க்கு-வாசுதேவர்க்கு, மகரால-பிள்ளைகளால, ஐயங்கள்-சந்தேகங்கள், தந்தார்-கொடுத்தவருடைய, வாழ்வு-வாழுமிடம—எ-று. (ர)

ஆதிதிருவேங்கடமென் றாயிரம்பேரானிடமென்
றோதியவெண்பா வொருநூறும்—கோதில
[illegible]வாளபட்டர்திருக் கோகனகத்தாள்சேர்
[illegible]வாளதாசன்றன் வாக்கு.

திருவேங்கடமாலை-முற்றிற்று.

௧.

கடவுள் துணை.

ஸ்ரீ தண்டபாணி துணை.

கீதாமிர்தசாரம்.



இதில் ஸ்ரீமத் பழனிமாமலையி லெழுந்தருளிய ஸ்ரீசுப்பிரமணியக் கடவுள்பேரிற் பற்பல பஜனைக் கீர்த்தனங்களும் மதுராபுரி மீனாட்சியம்மன் பேரிற் சில பஜனை கீர்த்தனங்களும் ஜாவளிகளும் அடங்கியிருக்கின்றன.

ஷை பழனிஸ்தலத்தில் வசிக்கும் மகா-ள-ள-ஸ்ரீ,

மு. மாம்பழக்கவிச்சிங்கநாவலர்.

அவர்களா லியற்றப்பட்டு,

இஃது,

மணிமங்கலம்,

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

பி. நா. சி. கடைகாரியம்

மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

பிடாரித்தாக்கல்.

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை:

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

.915.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது-நெம்பர் வீடு.

உ

கணபதிதுணை.

புதிதாய் அச்சிட்ட

வள்ளியம்மை சுயம்வரம்.

இஃது வள்ளியம்மை மான்வயிற்றிற் செனித்து குறவர்க்கரசராகிய நம்பிராசன் கிரகத்தில் வளர்ந்து கன்னிப்பருவங்கழித்து தக்க பருவதிசையடைந்து வனஞ்சென்று செந்தினைக்கதிரைப் பக்ஷிஜாதிகள் கொய்யாது காவல்புரிந்து நாரதயாமுனிவரோடு வாதுகூறிச்சுப்மண்ய வேடுவனோடு வாதுபேசிப் பண்டாரக் கிழவனோடு மனமகிழ்ந்து பாண்மீதிருந்து அன்னவருக்குத் தொண்டுசெய்து சுனையையடுத்து யானையாற் சிவசுப்பிரமணியரை காந்தர்வமணம்புரிந்துதினைகதிரறுத்து அண்ணமார்களோடு சிற்றூர் சென்று குகனை நினைந்துக் சோதித்துப் பின்னர்ச் சிவசுப்பிரமணியரைப் பாணிக்கிரகணஞ் செய்து திருப்பரங்குன்றஞ் செல்லுதல். இப்பாகங்களில் சாஸ்திரயுக்தப்படி நவரசங்களாலும் இந்துஸ்தான், பார்ஸீ, கெஜல், டோமரி, துக்கடா, சிந்து, கீர்த்தனை, கலிப்பா, வெண்பா, விருத்தப்பா, ஓரடிப்பதம் முதலிய வர்ணமெட்டுகளினு லியற்றப்பெற்று நல்ல கிளாஸ் கடிதத்தில் ஆங்காங்கு ஐதீகப்படங்களமைத்து அச்சிட்டுத் தயாராகயிருப்பதாலும் காப்பி சொற்பமாய் அச்சிட்டிருக்கிறபடியாலும் வேண்டுவோர் எமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 0 12 0

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானல் அரையணா ஸ்டாம்பு அனுப்பினல் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

☞ பி. நா. சிதம்பரமுதலியார்.

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

மதராஸ்.



உ



பரமசிவஸ்தோத்திரம்.

ஈ-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாஹிபரமாபதித்தயாளா
பன்னகேந்த்ராத்ருபரண-மாம்

அநுபல்லவி.

யோகீஸ்வரநுத தயாகிசுசரித
வோங்கார-நிவாசாதி கிரீசா பாஹிபரமா

சரணங்கள்.

நீலகிரீபக பாலத்ரிசூல
காலஜெயசுசீலா
கோலகாமதஹன பாலலோசனமன
கோகனகவிசாலா குணளா பாஹிபரமா

வேதத்தீபாதன தேவவினோதா
சீதவனஜபாதா
பூதகணசகித நாதபவரகித
புண்யதுரியாதீதா அபேதா பாஹிபரமா

சந்த்ரஜடாதர சுந்தரவாகா
மந்த்ரகல்யாணிபாகா
கந்தர்வாதிபசுர வந்திதசிவாவா
கவிசிமஹசுதேகா நிர்மோகா பாஹிபரமா



௳

சிவமயம்.



பெரியநாயகிஸ்தோத்திரம்.

எ-இ-ம்-பந்துவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாராமுகமேனம்மா இன்னமுஞ்சும்மா
பாராமுகமேனம்மா

அநுபல்லவி.

நேராமுனிவரிமை யோராதியர்பரவு
சீராலுயர்பழனி யூராள்ப்ரஹநாயகி
தெருளுறுபலகலை தேர்ந்ததொண்டர்த
மிருள்செறிபழவினை தீர்ந்திடும்படி
தெரிவருமுபய தாம்புயமிணை
பரிபுரநவமணி சூழ்ந்தகிண்கிணி
திரிகுகுதகணக தரிகிடதணசெணு
திமிதகவெனவொலி ஜெயமுனமழகிய
சிற்சபைநடிவினி தற்புதநடமிடு
சிற்பரரெனுமொழி கற்பகமருவிய

கீதாமிர்தசாரம்.

தேனேயன்புசிறந்த　　மானேசிந்தைதணிந்து
தேனேயுன்றனைநம்பி　　னேனேசந்ததமிந்தப்　பாரா

சரணங்கள்.

வாணிமலரழக　　வேணிமதுரரச
கேணிநிர்விஷயபு　　ராணிபணவுரத
பூணிமவுனந்த　　கோணிகதியுதவு
காணிபத்மைதருக்　　ராணிநித்யகல்யாணி
கனிதருமழை　　கான்றகுஞ்சர
முக்கணபதியையு　　நேர்ந்துபொங்கிய
சயவுடையசுரர்க்கு　　ழாங்கலங்கிட
வயனில்விடுகணையு　　மீன்றசம்ப்ர
கமலைதிகம்பரி　　யமலைபுரந்தரி
கவுரிபரம்பரை　　பைரவியம்பிகை
காரணிதிரிபுரை　　நாரணிசுகபரி
பூரணமதிநுத　　லாரணியுமைசிவ
காமிகுறவனிதை　　மாமிசரவவயி
சாமிவடிவைகொள　　நேமிசமயமிது　பாரா

வீரியுசிதகவு　　மாரிகுயின்மொழிவிஸ்
தாரிபிரணவோங்　　காரிமயிடகோப
சூரிசக்ரதரமு　　ராரிசோதரியின்ப
வாரிபஞ்சாக்ஷரவ　　கோரிஜெயகெம்பீரி
மரகதநிறவொளி　　வாய்ந்தபைங்கிளி
திரள்கெடமதன்முடி　　கோங் ரும்பொடி
வடத　கிரிசிமில்　　பூங்குரும்பையு
மினையலவெனவிற　　மாங்குதிண்பரி
மளமிநுதுங்கும　　களவமணிந்தின
வடமுமணிந்தலை　　கடலமுதந்தனை
வைத்துளபொற்கல　　சங்கைதநிகர்த்தும்
தர்த்தடவட்டவி　　சித்ரனத்தெழின்
மாதேகொழுமேனியன்　　மீதேவரும்பினை
யாதேநினைவதுதகாதேசொன்னே　　னிப்போதே
ஓலிகிரணதிரி　　சூலிக்கரலக
பாலிவினைதரும்　　வேலிகனகவிர்த

ஜ தாமிர்க்ஷசாரம்.

நீலசலவதந கூலியதிகபாக்ய
சாலிங்யகிலாதய ஃலாலிதிவ்யகுணலி
ததமதிவலகுற லார்சரியம்பகி
சுவைபெருகியகனி மாம்பழம்பகர்
தருதமிழினின்மகிழ் கூர்ந்தசுந்தரி
பொருதிறலடல்தனை யேர்நதலந்தரி
சாமளகுண்டலி கோமளசண்டிகை
தாமதுரந்தரி நேமசுமங்கலை
சங்கரியிங்கித வங்கசடங்கிம
தங்கியிணங்குல கெங்குமிலங்கிய
தாயேதுணைபலவு நீயேயினிக்ருபை
யாவேவாமுதவு வாயோயேயழமீதினிங-பாரா



விஷ்ணுஸ்தோத்திரம.

அ-இ-ம்-மோஹனகல்யாணி-தாளம்சாப்பு

பல்லவி.

ராமாபராமுகமாமா என்னை
ரட்சிசமயமுதாவிகுலசோமா

அநுபல்லவி.

காமாதிமயோளி காரய்ரபஞ்சங்
கடப்பதெப்படியென்று கலங்குதேநெஞ்சம்-ராமா

அகன்றஅகலிகையும்பெண் ணாக்கியபாதம்
இன்றுநல்கிடலதி லக்ஷணவிரோதம்-ராமய

தந்தைதாய்குருதெய்வஞ் சகலமுநீயே
சிந்தைதேறவபாயஞ் செய்தருள்வாயே-ராமய

புவியிலிளையலது புகலுண்டோதானுங்
கவியின்மகிழ்வுகூர்ந்தேக கவிதீர்க்கவேணும்-ராமய

புயவுபுரியாபட்டமுந் தமிழலங்கார
நயகுணதசரத ராஜகுமார-ராமய



சரஸ்வதிஸ்தோத்திரம்.

—()—

சு-இராகம்-ஆனந்தபைரவி-தாளம்ஆதி.

பல்லவி.

வாணிசரணஞ்சரணம்-வேதபுஸ்தக
பாணிசரணஞ்சரணம்

அநுபல்லவி.

ஆணிமுத்துநிறைந்த பூணிபுஷ்பவிசித்ர
வேணிநித்யவருள்கல் யாணிமுத்தமிழ்விநயா-வாணி

சரணங்கள்.

வேதாமுகத்தினிலுற்றாய் சகலலோக
மாதாவெனப்பெயர்பெற்றாய்
ஆதாரமத்தனையு நீதான்மயக்கமதி
லேதாருனக்குநிகர் கோமீர்தப்ரபல வாணி

சொந்தமொடுபலதுதி செய்யவென்றனில்
வந்தஜெயசரஸ்வதி
சந்தமதுபகர மந்தவிகசிதக
கந்ததவளவர விந்தமதுர வாணி

பக்கமதனின்லக்ஷி திவ்யகவிப்ர
சங்கமகிமைதுலக்கி
பொங்கவுனதியவி ணங்கவரமுதவுந்
துங்கமாம்பழக்கவிச் சிங்கந்தனைரட்சிக்கும் வாணி

கீர்த்தனங்கள்.

ராம்ராம்ராம் சீதாராம் ராம்ராம்.

என்றபேராவினவர்ணமெட்டு.

௧-இரா-மோஹனகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

காப்பாயேமுருகாநீயே

அநுபல்லவி.

தீப்பாதவினை தன்னைத் தீர்த்துத்திருத்திப்பின்னைப்
பூப்பாதகல்கியன்னை போலென்னைக்-காப்பா

சாலவருணர்சொந்து சாய்ந்துசிந்திடமுந்து
நீலமயிலுகந்து நேர்வந்து-காப்பா

மாசிற்புவியையானை பயக்குமன்மதசேனை
யாசைக்கிடமில்லானை பானேனைக்-காப்பா

மாவிஜேதவில்தாரா மாம்பழந்துதிவீரா
தேவியுமைகுமாரா செந்தூரா-காப்பா

ராமாராமாராமாரவிகுலசோமாபீமாஸ்ரீஜனகாமா.

என்றக்ருத்தியின்வர்ணமெட்டு.

உ-இராகம்காப்பிதாளம்-ஆதி.

பல்லவி.

நாதாநீதாதா காதா க்ருபையின்னம்
வாதாரூதா மனமிரங்காதா

அநுபல்லவி.

ஆதாரமூலைய லாதாரினியருள்
வேதாகமவுனவி னோதாசிவகிரி-நாதா
ரோதாகமருணா பூமாவினைதொடர்
காமாதியில்விட லாமாநிதமெனை-நாதா
தீராநடனம யூராசுரப
காராவசுரசம் ஹாராசரவண-நாதா
சுகபாதாம்புய குகதேன்கூர்தமிழ்
பகர்சீர்மாம்பழ மிகவேதான்றொழும்-நாதா

பஜனுமேமேசாபமேமானுபஜனுமேமேசாயமே

என்றஇந்துஸ்தானியின்வர்ணமெட்டு.

பல்லவி.

ஆதரித்தெனையினியாண்டருள்வாயே
அசட்டைசெய்வதுநீதியலவே ஆதரித்

அநுபல்லவி.

மாதவத்தவரும் பூதலத்தவரும்
வழுத்தும்பழனிமலை வடிவேலா
சாதனைத்தொழிலேனே சோதனைக்கெதிர்நானோ
சரசவள்ளிதெய்வகுஞ் சரிலோலா ஆதரித்

கனவினுந்தவி மனமெனும்பாவி
கலங்குவதுகொஞ்சமோ கணதொல்லை
வனமுழும்பெருமாத வனதுரஞ்சித
வணக்குத்துக்கிணக்கமாய் வருதில்லை ஆதரித்

தடியவரைநாடி வடிதமிழ்பாடி
சஞ்சலத்தாலனுத்த தளர்வொன்றோ
கடினமதுநின்சொந்த வடிமைசகியேனெனக்
காலமுமுனக்கடைக் கமலன்றோ ஆதரித்

வாக்கினிலடுத்துப் பாக்கியங்கொடுத்து
மாம்பழுக்கவிச்சிங்க மதிதேற்றிக்

காக்குமறுமுகவா — நீக்குவதுதவா
கமைமெஜெமசமுத்ரக் — கரையேற்று ஆதரித்

௪-இராகம்-மோஹனகல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்முகம்பார்த்தருளையா-நான்
ஏழையுனடிக்கடிமையென்பதுபொய்யா

அநுபல்லவி.

வண்மைமென்மைபழனி — மலைமுருகோனே
வகையொன்றுந்தெரியாமல் — வாடுகின்றேனே-என்முக

சண்டாளனிவனென்று — தள்ளாதேயென்னைத்
தெண்டாயுதாநீயன்றித் — திக்குண்டோபின்னை-என்முக

தவமெத்தனைசெய்திருந் — தாலுமிங்குடனே
தயைமுற்றுமனம்பொறுத் — தாள்வதுன்கடனே-என்முகம்

வருத்துதேயடிக்கடி — மாயாவிகாரந்
திருத்திழுமனவலி — தீர்த்திங்கேநேரம்-என்முக

ஒன்றுமிரண்டாகும்மா — வேயாகதுன்பம்
மென்றுவினியெந்தநா — ளெய்துவதின்பம்-என்முக

மாம்பழங்கமிழ்புனை — வள்ளிசமேதா
பூம்பதந்தொழுநெறி — புசலலாகாதா-என்முக

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாதுகாக்கவேணுமையா
பழனிமலைத்தண்டாயுதக்கையா

அநுபல்லவி.

போதுமெளியேன்மேல் — வாதுதுயர்தனைப்
போக்கியுனக்கேயா — ளாக்கினியெனைப்-பாதுகா

சரணங்கள்.

ஆசைவிகாரப்ப — சாசைநின்றுமொழுத்
தாகியமந்திரத்தாலே — யோட்டி
யப்பாலெப்போதுமதுதொடராவகை
யன்பேந்திசத்தைமென்மேலே
பூசைமுறையொடுபூட்டி — ஞான
பூமாறைசையுங்கூட்டி — மெள்ள

மாசைவநன்னெறி வாய்வுதனிலுய்த்து
மற்றொன்றிஞலு மயங்காமலேவைத்துப்-பாது

ஜென்மமரணதாற் கன்மத்தையெண்ணித்
திணைக்குதயசிந்தை யுனைச்
செந்தமிழால்வாழ்த்தியுபிகக்கலக்கந்
திருந்தாமடிவாருநிந்தை
நின்மலர்ப்பாதமேமதஞ்சம் சாற்றும்
நீசெய்பலாதமோவஞ்சம் இது
தன்மமல்லப்பெற்ற தாயேபிள்ளைமுகந்
தான்பார்த்திடாதிருந தாலென்சொலுஞ்சகம்-பாதுகா

மீனவனுக்குமுன் கூனல்வெங்காந்தல்
விலக்கியவேவதனிநோதா சொர்ண
விம்பமெனவளர்கும்பப்பரிமள
மென்முலைவள்ளிசமேதா
வானவர்தம்பெருமானே கனி
மாம்பழத்துக்கருள்வோனே பல
தானவருத்தத் தளிக்கும்படிசென்று
தாக்கியவேலா தருணமஞ்சேலென்று-பாதுகா

௬- இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாவாவாபொன்-மயூரமீதேறியென்முன்

அநுபல்லவி.

தேவாதேவாபழனிக்-தெண்டாயுதபாணியென்முன் வாவா

சரணங்கள்.

நன்னிலையாளு தலைந்த நான்மிகவுமட்டி
யெனைநீயாளொண்ணுதா
வெண்ணெனினிபட்டி யென்முன்-வாவா

பாதவர்ச்சனைசெய்யாத பாவியேனாலும்
ஆதரிக்கவேணுந்தவ
ருதேபொருக்காலு மென்முன்-வாவா

எத்தனைசொன்னாலுநெஞ் சிரக்கமேயிராதா
சித்சுகிர்விஷயசிற
சொரூபானந்தம்பாதா என்முன்-வாவா

தஞ்சபூனையன்றியில்லைத் தாமதமேனப்பா
அஞ்சலெனறிடலாகாதா
வத்தனேவெறுப்பா என்முன்-வாவா

வள்ளிதெய்வானைவிரு தண்டுநகர்த்தேனே
தெள்ளியசுவைமாம்பழந்
தியானிக்கும்பெம்மானே என்முன்-வாவா

எ-இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

நம்பினேனுன்பதமே-பழனுபுரிவேலாநிதமே.

அநுபல்லவி.

எம்பிரானீ நானடிமை

சரணங்கள்.

ஆதாரமில்லாதபட்சி யாமெனவலைந்துருட்சி
வாசைபாலுலோகபட்சி வஞ்சனைக்கொஞ்சாதுரட்சி ந

துணைமனத்தின்விருத்தி சொல்லொணாதருள்பொருத்தி
யன்பரினத்தேயிருத்தி யால்வதல்லவோதிருத்தி ந

புள்ளிமாமயில்விசாகா பூரணானந்தப்பவாகா
வள்ளிதெய்வானைமோகா மாம்பழம்போற்றும்வைபோகா ந

அ-இதுவுமந்தவர்ணமெட்டு.

பல்லவி

அஞ்சலென்றிங்குடனே-யெனை
யாண்டுகொள்வதுன்கடனே

அநுபல்லவி.

செஞ்சரணைநம்பினேனென்
தென்பழனியெம்பிரானே அஞ்ச

சரணங்கள்.

என்பழனிவினைசள்போக்கி யின்றுயிர்த்துளாக்கி
துணைபசமயத்தைநீக்கிச் சோரவிடாமற்கைதூக்கி-அஞ்ச

தொண்டரினத்துடன்கூட்டி சுத்தமெய்ஞ்ஞானத்தைகாட்டி
சண்டனைவாராமலோட்டி சண்முகாநினைசலைகாட்டி-அஞ்ச

வேறுவிதவாசைதங்கி வேலவாவறிவுமங்கி
மாறுமுன்கிருபைபொங்கி மாம்பழமணத்திணங்கி-அஞ்ச

கூ-இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

பரப்பிரம்மசொரூபாசரணம்-பற்
பலபுவனமுநிறைபரப்பிரம்ம

மருக்குலாவியதிருப்பழனிநகர் வாழ்கின்றசின்
மயசரவணபவ நயகுருபரசிவ-பரப்ரம்ம
பரபுளகிதப மயபுயவமிர்த
பாகசுகுணதீப யம
பாசவிபரிதவி நாசமதடிகடின
பாபதுரிதிகோபர
கோராகலகரண-சூரதலவிஜய கோலாகலா
கொங்காகுகவணி துங்காமறைமணி-பரப்ரம்ம
நாதபரிபுரவி நோதபரவித
நடவதிடமயூர சுக
ஞானப்ரணவவடி வானகவுரிதரு
நாகரீக்குமாரா
சீதளநளினபரதயுகளகுகதேவாமகா
சித்தர்க்குயர்தரு முத்தர்க்கெதிர்வரு-பரப்ரம்ம
வாலகிரணரவி ோலவொளிர்கனக
மகுடமவுனயோகா புண
வாசகனதனவி லாகசரஸகுற
வனிதைமருவுமோகா
சிலமதாகவெங்நாளுமாம்பழக்கவிச் சிங்கம்புகத்
திடவரமதுபரி வுடனினிதருள்புரி-பரப்ரம்ம

ய-இம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சற்றேதயவுசெய்யொணுதா
சாமிசண்முகாவென்மேல்வாதா

அநுபல்லவி.

முற்றுமுனை நற்றுணையென்
முற்றனன்யான் மற்றறியேன்-சற்றே

சரணங்கள்.

சற்கதியுடையதெய்வ நீயே
சந்தேகிக்கவேன் சுழித்தாயே
புத்திவிசா பக்தினுன்மூழ்
கிதகிரியா கித்தினமே-சற்றே

வெத்தமயக்குதையோமாயை
வெல்வதெதனாலந்தப்பேயை
பத்தர்களை முத்தர்கள்பூ
சித்தமகா வுத்தமனே-சற்றே

வரிசையுறுதவள்ளி பாகா
மாம்பழஞ்சொன் மாலிகைவாதா
அரிமுதலோர் சொரிமலர்க்கோ
விரிபழனி புரிமுருகா-சற்றே

௰௧-இ-ம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்-கண்ணிகள்.

பல்லவி.

அடிமைநானுன்னடைக்கலமினியாகிலுமென்னையாளையா
கொடியனேனென்றாலுந்திருத்திக்கொள்ளவிதுநந்தாளையா அடி

கடினவசுரகுலகண்டனகங்கணசுரதளசேகரா
படிதொழுமம்பழனிபுரித்தண்டபாணிஞானதிவாகரா அடிமை

நின்பெயரொருதரஞ்சொன்னாலெந்தநீசருமும்பரால் லவர்
என்பழவினைதீர்கிலாவிதமென்னகுஞ்சரிவல்லவா

அன்பர்க்கெளியனுமென்றுனைக்கொண்டாடுவதுபொய்வழக்கமா
அன்பத்திடைநமபினையைவிழுத்துவதுன்னுடையபழக்கமா அடிமை

மாகவியுதவாதநீயிந்தவஞ்சனைசெய்யலாகுமா
ஆகமமுதல்வாசும்மாவிருந்தாற்பழிவிட்டுப்போகுமா அடிமை

மோகமயவுலோகவலையன்றாழ்ந்திமனதுபதைக்குதே
வேகமுடனனேகதழியின்மேவிபறிவைச்சிதைக்குதே அடிமை

கனவிலுந்தெளியனவிலும்பலகவலைசுழற்றியாட்டுதே
யுனதுசெஞ்சரணவருதஞ்சமுண்டோவிருதாவினில்வாட்டுதே அடி

அநுதினங்கவிமாம்பழம்புகழுயிர்தருணநிரஞ்சனா
தனிதையம்பிகைமகிழ்குழந்தையாய்வந்தருள்பவபஞ்சனா அடிமை

௰௨-இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

காப்பதுனின்பாரங் காட்சிதந்தின்னேரங்கா

அநுபல்லவி.

பூப்பதும்பாதந்தன்னைப்
போற்றவுமறியேனென்னைக் காப்பது

ஆவினன்குடியுள்ளானே ஆறுமாமுகவல்லோனே
கூவியிங்கயர்கின்றேனே கோரியபடிக்குத்தானே-காப்
மேகம்போற்கறுகறுத்து மிஞ்சுநமனைச்செறுத்து
சோகந்தீவினைபறுத்துத் துற்குணமெலாம்பொறுத்து-காப்
புந்தியெத்திசையுஞ்சென்று புண்படர்வதையிதென்று
மந்திரப்பொருள்புகன்று மாம்பழந்தனைமுன்னின்று-காப்

௰௩-இராகம்-பமுறுகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

வையாபுரிவாழுமுருகையாகைவிடாதே
வந்தெனையாட்கொள்வாய்நீயிப்போதே

அநுபல்லவி.

பொய்யாசைநீரேன் பூஜிக்கநேரேன்
மெய்யானதோரேன் விரைந்துன்னைக்கோரேன்-வையா
வம்பினைக்கோதை மார்களின்சூதை
நம்பிநற்பாதை நழுவினேன்பேதை-வையா
எங்குமுன்றனு மிகழ்ந்தநல்போனும்
நீங்குமென்மேலுஞ் செய்திருந்தாலும்-வையா
சுரர்திரள்கூட தொழுதுகொண்டாட
வரர்தினநாட மாம்பழம்பாட-வையா

அசருணைகா.

௰௪-இராகம்-சுருட்டி-தாளம்-சாப்பு.

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

பல்லவி.

சுவசுப்ரமண்ய-தேவே-யெங்கோவே
சித்தமிரங்கியருள்செய்யநீவாவே

அநுபல்லவி.

புவனத்தின்மேலே தவனத்தினாலே
புண்ணுபலேந்தேன்காற்றிற் பூனைப்பூப்போலே - சுவ
தெளிவுறுஞ்சென்மங் களில்வெருகன்மங்
தேடியிருந்தாலுந்தீர்த் திடுவதுதன்மஞ் - சுவ
மெய்யோபொய்யுருவ மையோவின்பருவம்
வினையாதெனையாட்சிக்க வேயிதுபருவம் - சுவ

வகையறியேன் தகையுடையோன்
மாம்பழக்தொழுங்குற வள்ளிபூமானே - சிவ

௫௫-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவேளைநீயே-யென்னைரட்சிப்பாயே

அநுபல்லவி.

சந்ததமுகானன சிந்தனைசெய்தேனே
தாரகப்ரம்மமா முருகோனே - இந்த
பத்திசுத்திபூணேன சித்திமுத்தியேனேன்
பாவியேனொருவரை யுங்காணேன் - இந்த
எத்தனைவிசார மத்தனைகுரூரம்
ஏழைசகிப்பேனோ பெருப்பாரம் - இந்த
மங்களகுணாளா வெங்களனுகூலா
மாம்பழம்புகழ்பழ வேலா - இந்த

இந்துமுகிவாணிமனசிந்துலதாயா
என்றஜாவளியின்வர்ணமெட்டு.

௫௬-இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தஞ்சமென்றேநம்பினேனல்ல
சந்ததப்பமீதே கைதவறவிடாதே

அநுபல்லவி.

நஞ்சமதனில்தஞ்சவரும்நினைவதுவாகாதெய்வ
குஞ்சரிகுறவஞ்சிதழுவுங்குங்குமதேகாபூம்
காவமாபோகா தஞ்சமென்றே
விகற்பரூபஜகத்துமயக்கமெத்தப்ரம்மாதம்
கைப்படாமலிகத்தும்பரத்துமானந்தபோதந்
தருள்செய்நின்பாதம் தஞ்சமென்றே
சின்னவயதுதன்னிலுமுதிதேடிலேன்முன்னைநா
மென்னபிசகிபிருந்தபோதிலுமேழையாமென்னைநா
ளொக்தையேயுன்னை தஞ்சமென்றே

வாசம்விசுமஹாவரசுபூபா-மல
பாபவலிமோசனதாண்டபாணிப்ரதாபா-மாம்
பழுகவிலாபா தஞ்சமென்றே

௧௭-இதுவுமந்தவர்னமெட்டு.

பல்லவி.

இந்தமனமென்வசப்படு-இல்லையேசாமி
ஈடேறிடநேமி

அநுபல்லவி.

சந்தமுமுயர்ந்தமகிமை-சச்சிதானந்தா முதிர்
செந்தமிழ்முனிவந்துதிசெய்-திவ்யப்ரபந்தா னென்
சிவகிரிக்கந்தா இந்தமனம்

க்ரமக்ரோதலோபமோகக்கடலிடைதோயும் மத
மாமச்சரம்விடாமற்சுழன்வான்மூதற்பாயும் விண்
மாயையாலோயும் இந்தமனம்

நீதவசனசாதுஜனரைநிந்திக்கமுந்தும் பல
மாதர்களின்விநோத வகையைவாஞ்சித்தும்சொந்தும் சன்
மார்க்கத்திற்பிறந்தும் இந்தமனம்

தேம்படிந்ததினைப்பைம்புனத்துத்திகழ்வள்ளிபங்காசின்
மயவகளங்கா இந்தமனம்

௧௮-இ-ம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கண்கள்பனிரண்டுளகுகநாதா-தமியேனையோர்கைக்
கண்ணாகிலும்பார்க்கலாகாதா

அநுபல்லவி.

பண்குயில்பாரும் பழனியிற்றண்ட
பாணியாயல்லும் பகலுங்கடலுண்ட
வண்குறுமாமுனி மற்றுமுயர்ந்தோரண்ட
வாணர்தொழவளர் வாழ்வேயருள்கோதண்ட-கண்கள்

காலமுழுதுங் கயலையிலேமதி
கலங்கினுளின்பத்தைக் காணுவதெத்ததி
சாலவுன்றூற்றிருந் தாதோவயன்விதி
சண்முகசற்குரு சாமிநீக்ரகெதி-கண்கள்

ஏழைபங்காளனென்
  வென்மட்டுஞ்சும்மா
பாழ்வினைத்தூளாம்
  பண்டிதனை
மங்களமாக
  மாம்பழஞ்சொல்கவி
குங்குமமாகா
  கோவேகனினைக்

றெக்குழுனைக்கொல்ல
  விருப்பதழகல்ல
படிசெய்யவேவல்ல
  பழம்பொருளேகல்ல-கண்கள்
மகிழ்ந்துகொண்டாடியே
  மாலையுஞ்சூடிய
குறமகள்கூடிய
  குருவெனநீடிய-கண்கள்

௬-இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

உனக்கபயமுனக்கபயம்
உன்னைத்தவிரவேறுண்டோபுகலினி   உனக்கபய

அநுபல்லவி.

மனக்குறைதீர்முனி   வரர்சுரர்   பேணி
வணங்கப்பழனிமலை   வாழுந்தண்டபாணி-உனக்க

சரணங்கள்.

நன்றிதுதீதிது   வென்றினி   தறியேன்
ஞானவழிதனிலே   நடக்கவுங்   குறியேன்
அன்றியுமபல்பிடித்   தாடிய   வெறியேன்
ஐயாகைதவறவி   டாதேதாகான்   சிறியேன்-உனக்க

பாவதுற்குணங்களைப்   படித்திளங்   காளைப்
பருவமுழுதுங்காற்றிற்   பறக்கின்ற   பூளைப்
பூவெனச்சுழன்றுவீண்   போக்கினேன்   நாளைப்
பொய்யனென்றெனை   தள்ளப்போகா   திந்தவேளை-உனக்க

மலஜெனனமரண   வாதையின்   மேவா
வரங்கொடுப்பதற்கென்முன்   மயின்மிசைவாவா
பலதுதிமாம்பழம்   பகர்குக   தேவா
பக்ஷம்வைத்துக்கடைக்கண்   பார்பழமாறு   பாவா-உனக்க

௨௰-இராகம்-தங்பாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

பரமகுமரகுருபரிபுறப்
பதமலர்தினைமனமே

அநுபல்லவி.

தரணிபுகழுமதி தனைமுழுதாங்குந்
தண்பொழிற்சிவகிரி தனிலவனார்ந்தோங்கும்-பரம

சரணங்கள்.

நீரிலெழுகுமுழி நிகரென்றுசொல்ல
நீடியவாழ்வுநன் னிதிநிசமல்ல
சீரியகவைமுதிர் செழுந்தமிழ்வல்ல
தென்முனிக்கன்றுப தேசிக்குநல்ல-பரம

வெஞ்சினவஞ்சக மிஞ்சியகூர்னம்
விலகிடும்படிபொருள், வெளியெதிர்தோற்றுஞ்
சஞ்சிதமாம்பவ சாகரமாற்றுந்
தயவுபுரிந்துநமைத் தான்கரையேற்றும்-பரம

தெள்ளியவமுதினுந் திருந்துசொல்லான
தெய்வகுஞ்சரிபசுந் தினைவினைகான
வள்ளிதழுவும்பெரு மானினிகான
மாம்பழகவிக்கருள் மவுனமெய்ஞ்ஞான-பரம

தாரகமேநீ-பவந்-தாண்டியேகரையேறு
என்றகீர்த்தனையின்வர்னமெட்டு.

உக-இ-ம்-முகாரி-தாளம்-திரிபுடை.

பல்லவி.

நெஞ்சமேநீநில்லு வினை
வஞ்சகந்தனைவெல்லு பொல்லாத-நெஞ்ச

அநுபல்லவி.

விஞ்சையர்வானோ ரஞ்சலிசெய்ய
வீறதோகைமீதே வருங்
குஞ்சரிரமணனை னுஞ்சரவணசற்
குருபதமறவாதே யிப்போதே-நெஞ்ச

நிதகலாத பாதகரூப
தேகபோகமெய்யா வின்தப்
பூதலவாள் சிதமேகமின்
போலுமென்பதுபொய்போ ஐயையோ-நெஞ்ச

நேசவுல்லாச வேசையராசை
நிலையெனவேநத்திப் பந்த
பாசமதான மோசவலைதனிற்
படில்வருமோமுத்தி முற்புத்தி-நெஞ்ச

இத்தருணத்தின் மெத்தவுநயமே
நின்பசுகத்தைத்தேடு வளர்
முத்தமிழ்மாம்பழ நித்தமும்போற்றிய
முருகன்புகழைப்பாடு கொண்டாடு-நெஞ்ச

உஉ-இ-ம்-காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னென்னவிதமாகச்-சொன்னபோதினுமதை
யேன்மறக்கிறாய்மனமே

அநுபல்லவி.

தன்னைநம்பினபேர்க்கு நன்னிலம்புகழ்முத்தி
தருந்தண்டபாணியைத் தினந்துதியெனப்புத்தி-என்னெ

சரணங்கள்.

தெரியமென்முலைகாட்டிச் சிரித்துச்சிரித்துமாயஞ்
செய்யுமாதர்மேலாசை செய்குவதனியாயம்
வரிசைமிகுந்ததமி ழருணகிரியைநேயம்
வைத்தாட்சித்தவனை வணங்கிகென்றுனக்குபாயம்-என்னெ

சந்ததமுநமக் கிந்தவுலகபாசம்
சதமென்னவேநினைப் பதுவெல்லாம்வெருமோசங்
கொந்தலர்விடம்பணி குமரன்மேல்விசுவாசங்
கொண்டுதியானித்துக்கொள்ளென் றுனக்குபதேசம்-என்னெ

அருளில்லாவேறொரு தெய்வத்தைகொண்டாடி
யலைவதும்பலந்தி யதனில்முழுகவோடித்
திரிவதுநலனல்ல முருகன்பதத்தைத்தேடிச்
சென்னைபூசனைபுரி யென்றுபாடிப்பாடி-என்மன

விடாதகொடுவினை மதமாச்சரியபோகம்
வஞ்சமுறங்குடிகொண்டு வளருமிந்தத்தேகம்
ஈடேறவுந்தனுக் கினிதானதுரையோகம்
ஈய்ந்தானைநீபணி யென்றுமதியனேகம்-என்னெ

மயின்மிசைவருஞான மவுனகுருநாதனை
மாமபழந்தனைககாக்கும் மந்தரங்நோதனை
புயர்சிவகிரிதனி லோங்குநன்னீதனை
யுவந்துவந்தனைசெய்யென் றுனக்குநான்போதனை-என்னெ

உக-இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதிசரவணபவகுகனே-ஓம்
அரகரசிவசிவ

அநுபல்லவி.

சோதிமறைமுடியின் மீதிநடனமிடுந்
தூயபரமசுக நேயமுனிவர்புகழ் ஆதி

சரணங்கள்.

பந்தஜெனனமரணந்தனில்வீழும்
பாசமொழிந்துனது பதமலர்தாழுஞ்
சிந்தையுதவியருள் செய்வாயல்சூழும்
திருவாருமயசிவ கிரிமிசைவாழும் ஆதி
மதமொழிவினைபுரி விமிசுமீறும்
மயல்விலகிடவரு முயர்ச்சிதேறும்
அதிமகிமையுந்தன் தாள்விடையேறும்
அரசனதுசெவிதனி லொருபொருள்கூறும் ஆதி
வந்தனுதினந்தொழு மதுரப்ரபந்த
மாம்பழந்தமிழினின் மகிழ்வுமிகுந்த
சுந்தரஞான சொரூபசுகந்த
துங்ககனதன சுமங்கலைதந்த ஆதி

காணவேணும்லக்ஷணங்கள் சீதாதேவிதன்
காலுக்குநிகரோபெண்கள்.

என்ற இராமகீர்த்தனையின் வர்ணமெட்டு.

உஉ-இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தயவுபுரிந்தருள்வாயே சண்முகாநல்ல
தருணமிது சாமிநீயே

அநுபல்லவி.

கயல்விழியுமைபெற்ற கந்தாமனதிலுற்ற
கவலைமுழுதுந்தீர்த்துக் கடைக்கண்ணாலெனைப்பார்த்து தயவு

அடிமைமைபக்கைவிடலாமா சிறுகுழந்தை
பன்னைபவிட்டுப்பின்போமோ
கொடியவினையைநோக்கிக் கோதையர்மயக்கம்போக்கி
நெடியபேரின்பந்தேக்கி நினைவையுன்வசமாக்கி தய

திரிந்துமெய்ப்பொருள்தேடியே ஞானநிலையைச்
சேர்வதற்கெண்ணிவாடியே
வருந்துந்தமியேன்மீது வாதுசெய்யலாகாது
கருங்குழற்குறமாது கணவாமகிழ்ந்திடபோது தய

பரமனிதயகெம்பிரனே மாம்பழஞ்சொலும்
பைந்தமிழ்க்சலங்காரனே
சுரர்புகழ்பெருமானே சொந்தயாகவேலனே
தரணியிலுனைத்தானே சதமென்றுநம்பினேனே தய

ஒருக்காற்சிவசிதம்பரமென்றுநீசொன்னால்
இருக்காதுழ்வினையே

என்றகீர்த்தனையின்வர்ணமெட்டு.

உரு-இ-ம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

மனப்பேயேதொல்லைவினைக்கொருமருந்தாகி
மந்திரமிதுதானே

அநுபல்லவி.

உனக்கோர்பயமுமில்லை யினித்தேர்ந்துகொள்வீரே
யோசனைஎன்னமுரு கேசனையெண்ணியிரு-மனப்

சரணங்கள்.

கடியபொய்களைச்சொல்லி வீணிலேபொல்லாத
காமத்தைத்தேடாதே மாதர்
வடிவைநினைந்துநினைந் துருகியுருகிமோக
மையலால்வாடாதே சற்றுந்
தடைபடாதவெங்கோப மூடர்குருத்துரோகிகள்
தம்மொடுகூடாதே நாளும்
அடியவர்பவிருள் விடியவந்தருள்குமரயனைஅறிப்பினமெரு தெய்வங்களைப்பாடாதே-மனப்

துன்பமிதுசிவபோ | ரின்பமிதுவென்றுங்
கோணுமலலையாதே | வளர்
பொனபுலிமுதலான | செல்வநீர்மேற்குமிழி
போலநிலையாத | துஷ்ட
வஞ்சிலரொருவர் | தம்பொருளைவிரும்பி
மானமுங்குலையாதே | நல்ல
அன்பினொடுகுருப | ரன்பதங்களைப்போற்றி
யஞ்சலிமெய்மதி | கொஞ்சமுமலையாதே-மன
கர்மமேசதமென்று | நீமருள்கொண்டுசும்மா
காலத்தைக்கழிக்காதே | வந்த
நாமெனுமகந்தையி | னலொழுங்குமறந்து
நல்லோரைப்பழிக்காதே | நெடும்
பூமிதனிலொருவர் | தாமினிதுசெய்விக்கும்
புண்யத்தைபழிக்காதே | நெடும்
தோல்முலைவள்ளிம | ணாளம்புயசெழுந்
திருப்பரமிசைம்பெறும் | விருப்பினையொழிக்காதே-மன
வானைகதநம்பரபஞ்ச | மாயையினாலாகாத
மார்க்கத்தைபெடுக்காதே | முதிர்
வேதநெறிதவறி | மாதவமாமவுன
விரதத்தைக்கெடுக்காதே | யென்ன
நீதுபுரியவந்த | போதினுநீயொரு
செந்துவைப்படுக்காதே | தமிழ்
ஓதுகவிமாமயூ | மீதுக்ருபைவைத்தரு
ளுயர்பரமனைப்பணி | செயுவினைவிடுக்காதே-மன

நாராயணநாராயணஜெய
கோபாலகரே

என்றகருதிகையின்வர்ணமெட்டு.

௩௫-இ-ம்-பியாக்-தாமம்-ரூபகம்.

பல்லவி.

நாதாமனுநீதா அருள் தாதாவிதுசமயம்

அநுபல்லவி.

வேதாமலர்ப் | பாதா
போதாவெனபல | வாதாகுருநாதா

சரணங்கள்.

மவுனுகம வசிதாஜெப ஜெகன்மோகன மயில்வாகன-நாதா
கவிநாவலர் கருணாகர பணிகாரண பரிபூரண-நாதா
புனிதர்திறல் புயசம்ப்ரம புனிமந்திர நயசுந்தர-நாதா
தினமாம்பழ தெருளாகிய மனமீதுறை பொருளேநிறை-நாதா

நன்னுப்ரோவராதா நின்னுனம்மலேதா.

என்றக்குநிகையின்வர்னமெட்டு.

உஉ-இ-ம்-காகரப்ரியா-தாளம்-ஆதி.

பல்லவி.

நித்தமென்னவாதா சித்தமிரங்காதா
நித்தமென்னவாதா

அநுபல்லவி

நத்யமனுநீதா சத்தியகிரிநாதா நித்த

சரணங்கள்.

விரிகுணதீபா சூரதளகோபா ஆரமலர்நீபா தாரகசொரூபா-நித்த
வானவர்சகாயா மோனகீர்த்திநேயா தானநயநாயா ஞானகார்த்திகேயா-நித்த
வரமருள்வேளே தருணமிங்காளே மாம்பழஞ்சொற்கேளே தமியேனையாளே-நித்த

உஅ-இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இன்னந்தயவில்லையோ-யிதுவுனக்குமல்லவோ

அநுபல்லவி.

இமையோர்பணி குமாரயனு[illegible] வுமையாளருள் வளமாகிலும்-இன்ன

சரணங்கள்.

காதற்கண வேதப்பொரு வாதப்பர ளேயப்பழும்-இன்ன

கந்தாமகிழ்ந்திங்கோர் கார்ப்பதுணைதுபாரங்
கலசத்தமிழ் முனிவர்கடொரு
நலசற்குண நெறிசெப்பியகந்தா
சிந்தாகுலவிசார
தீரும்படி நீயன்பொடு
பாருன்றனை யேநம்பினேன்-இன்

உல்லாசமுருகோனே யுற்றதுணைநீதானே
யுலகெங்கனு நிறையும்பிர
பலவிங்கித சுபமங்கள உல்லா
நல்லோர்தொழுங்கோமானே
நண்ணுஞ்சிக மென்னனஞ்சினி
லென்னுந்திரு முன்னின்னருள்-இன்

மயில்வாகனவிநோதா மாம்பழம்புகழ்பாதா
வையாவுரி வளர்பன்னிரு
கையாமற கதநன்னிறமயில்
உயர்சிவகிரிநாதா
வுத்தமவுறு திக்கிடமெனு
நித்தியமுத வந்தருணம்-இன்

௨௬-இராகம்-சங்கராபரணம்-தாளம்சாப்பு.

பல்லவி.

மறவாதேமனதேயதில்-வரும்-வெகுகனமே. நீ

அநுபல்லவி.

திரமேசதுர்வேதந்-தேடுஞ்சண்முகன்பாதம் மறவா

சரணங்கள்.

விவரிதமதகாமம விடுவதுசுபக்ஷேமங்
தவபுனிதநந்தேமங் தழைக்கமுருகநாமம்-மறவா

இன்னமென்னயோசனை யிதுபழக்கவாசனை
மன்னுமன்பர்பூசனை மகிழுங்குமரேசனை-மறவா

வல்லகிருஷ்ணசாமிநிதி மாம்பழநாளுங்கருதிச்
சொல்லும்பழனியம்பதிச் சுப்ரமண்யமூர்த்திதுதி-மறவா

வினலோரா நாமனவிச்சைகொனவோரா

என்றக்ருத்திகையின்மெட்டு.

௨௰-இராகம்-பியாக்கு-தாளம்-சாப்பு.

பல்லவி.

முருகையா-வரமருள்-பன்னிருகையா

அநுபல்லவி.

திருவளர்கதிருஞ் சிவகிரிதனில்வரு-முருகை

சரணங்கள்.

தந்தைதாயுறவினர் சகலமுநீயே

சந்ததமுமெளியேன் றனைரட்சிப்பாயே-முருகை

சிந்தைதனிலிறக்கஞ் சிறிதேனுமில்லையா

தீவினைதனைமாற்றுஞ் செயலென்னமலையா-முருகை

தருணமயிலில்வரத் தாமசமேனோ

தமியேன்மயங்குவது சம்மதந்தானோ-முருகை

கருதுதமிழ்மாம்பழங் கவிக்கநுகூலா

கலசமுனிபரவுங் கதிர்வடிவேலா-முருகை

——

௨௧-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுநல்லசமயம்நீ-யெனைரட்சிப்பாயே

அநுபல்லவி.

சதுர்மறைவேலா மதுரகுணாளா

சந்த்ரவதனதெய்வகு ஞ்சரிலோலா-கன

மந்தரத்திரிபுர சுந்தரிபாதா-இதுநல்

ஞானவிநோதா மோனவதீதா

நாகரிகசுகபர நயநீதாமலர்

கோதகனகபதசிவ குருநாதா-இதுநல்ல

சரதவொய்யாரா பரதமயூரா

சத்துருஜனகண்டன தளவீரவள

வுத்தமவடியர்தமக் குபகார-இதுநல்ல

பன்னிருவாகா வேள்பணிதியாகா-மிக

பத்தருங்கிஷ்ணசாமி வேள்பணிதியாகா-மிக

நித்தியமாம்பழமனதி விலசியோகா-இதுநல்

௩௨-இ-ம்-உசேனி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாதுசெய்வதுமனப்பேயே யினியென்
வார்த்தைதனைகேட்டுநிற்பாயே

அநுபல்லவி.

போதகுருநாதனருள்வேலா குகன்
பொற்பதமவழுத்தென்றுநான்புத்திசொல்லச்சொல்ல

சரணங்கள்.

மைந்தர்புசந்தனசுகந்தந்தி திரு
மாதர்தருகாதலனந்தம்
இந்தவிதத்தொந்தபாசபந்தம் புன
விற்குமழியாக்குநமக் கென்னவந்தசொந்தம்-வாது

வீடுதனைத்தேடுவதுவீரந் துயற்குள்
வீழுமுடல்வீண்பெரும்பாரம்
நீடுநோய்நரிக்குமுபகார என்ற
நிச்சயந்தெரிந்திருந்தும் நீயித்தனைதூரம்-வாது

ஆறுதகோபாக்கினியையாற்று பக
மூனதலையாவகைதேற்று
மாறுதமயக்கமதைமாற்று தமிழ்
மாம்பழம்புகழுமயில் வாகனனைபோற்று-வாது

௩௩-இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஓம்ஹரஹரசரவணபவ
வுன்னைநம்பினேன்-ஓம்

அநுபல்லவி.

மாமரகத வனகலாப
மயிலில்வருசின் மயசொரூப-ஓம்ஹர

சரணங்கள்.

தாரகாதிசோரகாந்த தளநிக்ரஹதயாநன்னேத்ர
சேராராஜகானஸ்தோத்ர சிவகிரிவரதிவ்யக்ஷேத்ர-ஓம்ஹர

சரிதசுகுணசக்ணநேச ஜனஹிருதயசெஞ்சலலவாச
ஹரிதரஹிதசுவிலாச சுப்ரமண்யஸ்வயம்ப்ரகாச-ஓம்ஹர

சந்த்ரமகுடசம்ரக்ஷக தகனபதவதனயநேம
வந்திரசிதமதுபதாம மாம்பழஞ்சொன்மதுரநாம-ஓம்ஹர

௰௮-இம்-மாஞ்சி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வடிவேலரசே-நான்
வருத்தஞ்சகிக்கமாட்டேனென்னரட்சி

அநுபல்லவி.

அடியேனாலுன் னடைக்கலமித்தி
அஞ்சவிடாதே யையாபழனிம்பதி-வடிவே

சரணங்கள்.

அலலும்பகலும் புண்
ணாதுகேடாவிநெஞ் சையோவென்னசெய்வேன்
சொல்லுந்தமியேன் றுதிசெவிகேளாதோ
சும்மாகபட வி தொழிலிதுதானேதோ-வடிவே

உனதுதய வென்மே
லுண்டாயிருந்தா லொருதாழ்வுமில்லையே
ஜெனனசாகரத் திற்சுழன்றேபுத்தி
தேறுதயர்வேனே திவ்யபராசத்தி-வடிவே

என்றுந்துணை சிதா
னென்றுந்புணிந்தே னெல்லாமுன்னைச்சேந்ததே
சென்றிந்திபனிடர் தீர்த்தருகாமுதிர்
செநதமிழ்மாம்பழந் தியாணித்திடுங்கதிர்-வடிவே

நாஜிகஜிய்யாரேபேதாதி
எனறஇந்துஸ்தான்வர்னமெட்டு.

௩௫-இம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

கோலமாமயின்மீது-வந்தடிமை
கொள்வாயிப்போது

அநுபல்லவி.

வேலவாவுன்னை வேண்டினேனென்னை-கோல
கதியினிநீயே கவுரிதன்சேயே-கோல
துதிமிகுபுலவர் தொண்டனவர்-கோல
பார்முழுதும்யும் படினடஞ்செய்யுங்-கோல
மார்பணியின்ன மரகதவன்ன-கோல

இன்னந்தயவில்லையோ இதுவென்ன நல்லையோ-கோல
மனந்துயர் தணிய மாம்பழம்பண்ணிய-கோல
அந்தவினைக்கேள்தெள்ளுமாறே
என்ற வருணவரின் வர்ணமெட்டு.

௬௬-இ-ம்-மாஞ்சிராகம்-தாளம் - ரூபகம்.

பல்லவி.

கந்தா தாரு இந்தவேளை
கருணைசெய்யவேணுமேசுகந்த

அநுபல்லவி.

சொந்தமுடைய பந்தவிடைய
அனபதகமுந்தி வெம்பினேனை
சிறைதம்திளிவ நொந்தவகைநினை
செம்பொற்பாத நம்பினேன்-கந்தா

பண்டுகருது தொண்டர்தமது
பாவந்தீர்க்க வில்லையா
அநாடுமெளிமை கண்டுமெனையா
மாகதென்ன சொல்லையா-கந்தா

சோதிப்பதுந சாதிப்படிக்கை
சோரவிடுதல் நீதியோ
எந்தனையென் மீதிற்கொடுமை
யேழைநான்வி சோதிமேயா-கந்தா

மதுரமாக மாம்பழநுசொன்
மகிழ்குஞ்சரிம ணுகரா
பதுமமாது நிதமுலாவும்
பழனிமலைக்கு பாகரா-கந்தா

௬௭-நாட்டை-இ-ம்-பங்காளா-தாளம்-ஆதி.

பல்லவி.

சந்தப்பாவந்துநிந்தைக்
கதிதீர்த்தியிதுநதியே

அநுபல்லவி.

பந்தப்பாசவிமோசனமாம் பவிசுத்தசரவணபவநாதா
பழனுப்பிரபகபுத்தண்ட பாணிவிநோதமகேந்திரா

புண்டிகந்த்ரன் நண்கஞ்சகன்
கண்டின்பக் தங்கும்படிபுகழ் கந்த

சரணங்கள்.

மரகதபரிபுரநடனசிகர வளதுரகதஜெயவடிவேலா
மவுனப்ரவணசொரூபகிரா மயங்கிஸ்ஹளஸ்லோலா
மந்த்ரகுங்குமபுயவீரா சுந்தரசம்ப்ரமவதிகாரா
வரகிபுரை பரமகுரை
வளர்தருணை மகிமையின்மிகவுயிர்-கந்தப்

பலிதபுவனசராசரவ்யாபகஜெகன்மோகன பவகோபா
பாரகிரீடம ாகனசாம்-பதரசுனசுரகுல தீபா
பக்தஜனப்ரியவனுகூலா-முக்தர்குறிததலைதருசீலா சீலா
பரிமளசிங் துரகமுகம்
பரதனகுஞ் சரிதனைமருவிய-கந்தப்

சந்ததமதுரகவிச்சிங்கந்தமிழ்மலர்புனைரக்ஷாபரனே
சாமிநதமகிபன்-தனிவிலகியசுபகரசரணை
சகலசுபாக்கியகுமுதவுகுஹாய்சிகரசிவாத்திரியுசிதசுகா
தந்திரதடா மந்த்ரதிடா
சந்திரஜூடா தாகயலோலா-கந்தப்

கெடிகெடி பகுஜாலமா

என்றஜாவளியின்வர்ணமெட்டு.

௬௮-இ-ம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

அரகரகுருநாயகா
அருள்புரிவாயிதுசமயம் அரகர

அநுபல்லவி.

சரவணபவஓம் சண்முகமெய்யா
சரணஞ்சரணந் தடையேதையா அரக

மனஞ்சிறிதருகா வகையேனமால்மருகா
வளர்தென்பழனி மலைமுருகா அரக

அனந்தசற்குணதண் டாயுதமுதல்வா
அகிலாண்டமுமீன் வகையேனமால்மருகா அரக

மாம்பழக்கனிகா வலன்பணியமரா
மகிசாவலசின் மயாகுமரா அரக

சாமிகானாதோமாட்லாடாகெந்துரா

என்றஜவாளியின்வர்னமெட்டு.

இ-ம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதாகிலுஞ்சொல்லையா-சாமிநீவகை
ஏதாகிலுஞ்சொல்லையா

அநுபல்லவி.

தாதாவுனைப்போலுண்டா தண்டாயுதவுத தண்டா
சூதாவல்லதுமுரண்ட சாமிநீவகை ஏதாகிலு

செவிகேட்டுமேப்ரசன்னதெய்வமாகியுஞ்சொன்ன
சுவிமேற்பராமுகமென்னசாமிநீவகை ஏதாகிலு

வினையின்மிகமருண்டுவிசனமனேகங்கொண்டு
நினைவுமென்னிலைமைகண்டுசாமிநீவகை ஏதாகிலு

மகிமையருளிச்சொந்தமாப்பழத்தையுவந்த
சுகிர்தசிவாசலகந்தசாமிநீவகை ஏதாகிலு

மதிலோனபேஜனபூட்டலேதா

என்றகிருத்திகையின்வர்னமெட்டு.

௫௧-இ-ம்-அபுரூபம்-தாளம்-ஆதி.

பல்லவி.

மயில்வாகனுவரவேணுமென்முன்-மயில்வாகனு
வள்ளிகுஞ்சரிமோகனு-மயில்வாகனு

அநுபல்லவி.

கயிலாசபதிஸ்ரீ கௌரிநந்தனு
கன்றுதீதாக்க நின்றுபாதுகாக்க-மயில்

சரணங்கள்.

உண்மையாகநானே யுன்னைநம்பினேனே
ஓங்காரத்தேனே யுற்பனவானே
சண்முகாபழனித் தண்டபாணியாஞ்
சாமிமாம்பழஞ் சந்ததம்பணியும் - மயில்

சம்-இம்-தோடி-தாளம்-சாபு.

பல்லவி.

சரவணபவனைபோற்-றாரமிது நினைத்தாற்

சகலசித்தியுமாமே

அநுபல்லவி.

வரமருவியமேரு கிரிதனைநிகரான
மருதகிரியில்வளர் மவுனசுரதஞான
வரதன்மணிமுடி யுரகர்தவமுனி
வரர்களிமையவர் பரவியடிதொழ
வந்தகுருபர கந்தனுமையருள்
மைந்தனதிகச வுந்தரநயகுண-சரவண

சரணங்கள்.

நடுக்கம்பொய்கொலைபோட கெடுக்குநதிவினைநீக்கும்
நமையனுதினங்காக்குந் தமிழ்மதுரிதவாக்கும்
கொடுக்கும்யமபாசத்தைக் கெடுக்குங்கருணைதேக்குங்
குறைமுழுதையும்போக்கு நிறைசெல்வமுண்டாக்குங்
குக்குடத்துவ சக்கரக்குகன்
மிக்கபற்பற தர்க்கமிட்டவ
கோரமேவிய சூரசேனைகள்
போரிலோடிட வீரவேள்விடு-சரவண

உலகவஞ்சனைமாயை விலகமெய்வழிகாட்டும்
ஓதரியமமது நீதியேபாராட்டும்
அலைவரும்பரகதி நிலைமையதைக்கூட்டும்
அன்புடனினியபே ரின்பரசத்தையூட்டும்
அடலனந்தனு நடுநடுங்கிட
வடியர்வெம்பிணி கெடாநடஞ்செயு
மழகுமரகத மயிலின்மிசைவரு
குழகனரிதிரு பருகனரக-சரவண

சிந்தூரநுதல்வள்ளி சிந்தைதமகிழ்குணாளன்
சித்திமிகுதெய்வ மூர்த்தியேழைபங்காளன்
மந்தாமாமென வணங்கும்பன்னிருதோளன்
மாம்பழம்போற்றிசெப் வனசமென்மலர்த்தாளன்
வண்டிருந்திசை கொண்டெழுந்தக
ழுண்டறைக்குக யம்பணிந்தருள்

வாசமார்சவி லாசஞுமுரு
கேசன்மோகன நேசபூரணு-சரவண

ஓரமணிமனுசாமினித்தேவே
என்றபோரவின்வர்னமெட்டு.
சக-இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாமயிலேறிய கூர்வடிவேலா
கூர்வடிவேலா பார்வதிபாலா

அநுபல்லவி.

கோமளதேகா பூமலர்வாசா
தாமசமாகா தேகமகாத்யாகா-மாமயி
இத்தனைசூதா பத்தன்மேல்வாதா
சித்தமிராதா முத்தமிழ்வேதா-மாமயி
சொல்வதுகேட்டு நல்வழிகாட்டு
வல்வினையோட்டு கல்வியைநாட்டு-மாமயி
சோம்பல்கள்வெய்ய பாம்பனைகையை
மேம்படுதுய்ய மாம்பழமுய்ய-மாமயி

என்தவேடுகொந்தாாகபா
என்றக்ருத்திகையின்வர்னமெட்டு.
சஉ-இராகம்-சரஸ்வதிமனோஹரி-தாளம்-ஆதி.

பல்லவி.

வர்மமின்னமென்ன வேலவா
தர்மமில்லையா ஓவேலவா

அநுபல்லவி.

கர்வமஞ்சகக் காடுலாவினேன்
நிர்மலாவுனை நின்றுகூவினேன்-வர்மமி

சரணங்கள்.

என்றுமொனரபோலே யுந்தகஷ்டமா
இப்படிநீசெய்வ தேயிஷ்டமா
மன்றலந்தமிழ் மாலைசூழ்பொற்பாதா
மாம்பணியும் வன்னிப்பாணநாதா-வர்மமி

ஹரிநேநெந்துவெதருதுரா
என்றக்ருத்திகையின்மெட்டு.
சக-இராகம்-அரிகாமபோதி-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்னைநானம்பின வனல்லவா

அநுபல்லவி.

தானந்தவத் தருஞானகுண
சந்தானதண்டாயுத சதா-உன்னை

சரணங்கள்.

அறியாதவ ஞானும்அடிமை
யதனாலென்னை யாளையா
கறைதீரசெல்வக் சாங்கையா
கனிமாம்பழத் யானகாரணா-உன்னை

முன்பேதெவியகபோயனே
என்றக்ருத்திகையின்வர்ணமெட்டு.
சச-இராகம்-பங்காளா-தாளம்ஆதி.

பல்லவி.

முருகாக்ருபைதர வில்லையா
முழுவதும்பிருவாமா சொல்லையா

அநுபல்லவி.

திருவளர்செந்தி லம்பதிவேலர்
ஜெகமெங்கு மேபுகழ்சீல-முருகா

சரணங்கள்.

காமாதிதுன்பக் கடல்படியாது
கைதூக்கியென்னை யாளிப்போது
பாமாலைபுனைமாப் பழம்பணிநாதா
பவவிருள்விலக்கிரி பார்க்கலாகாதா-முருகா

தயாநிதிக்கண்ணிகள்.

வெண்செந்துறை

சீர்பூத்தகொங்கையுமைமைந்தா தயாநிதியே
வார்பூத்தகொங்கையுமைமைந்தா தயாநிதியே. க

இந்திரனைக்காத்தவுன்றனென்னமுடியாதிடர்தீர்
தந்திமுகத்தெந்தைசகோதரதயாநிதியே. உ

மாமறைநாலுந்தொடரமாட்டாவுனையெளியிப்
பாமரனென்றும்பழனித்தயாநிதியே. ங

கீர்த்திவிஜயகிரித்துரைகாலத்தினிற்செய்
பூர்த்திமகிமையெல்லாம்பொய்யோ தயாநிதியே. ச

இக்கலிகாலத்திலுமிங்கேயுனைப்போதுந்தெய்வந்
தக்கமெலாநீங்குவெட்சி சூடுந்தயாநிதியே. ரு

சற்றுமறிவில்லாத சண்டாளனெனினு
முற்றுமெனையாள்வாய் முருகா தயாநிதியே. சா

பத்திசிறிதேனுமில்லாப் பாவியெனென்றாலுஞ்
சித்தியருளையா சிவாசலதயாநிதியே. எ

என்னபிழைநான்செய் திருந்தாலுநீபொருத்து
வன்னமயிலேறியென்முன்வாவா தயாநிதியே. அ

வாராயோமயிலில்வந்துகலிதீர்ந்துவரந்
தாராயோதென்பழனிச்சண்முகதயாநிதியே. கூ

மாயவிகாரமயக்கையெலாமாற்றியெனை
நீயாள்பழனிநிமலா தயாநிதியே. ய

உனையன்றியுண்டோவுலகிலெனக்குற்றதுணை
யென்னைவஞ்சியேல்பழனியெந்தாய்தயாநிதியே. யக

தீராதவெவ்வினையுந்தீர்க்குநீயறுமுகம்
பாராததென்ன தண்டபாணித்தயாநிதியே. யஉ

எப்பாவமுமகற்றியீடேற்றல்வேண்டுமெனை
யப்பாசிவகிரித்தண்டாயுதத்தயாநிதியே. யங

சூதுதான்கற்றனையோசும்மாவிருக்கனைநின்
காதுதான்கேளாதோகந்தா தயாநிதியே. யச

ஈராறுகாதிருந்துமென்சொற்கேளாததென்ன
பேராறுசூடிபெற்றபிள்ளாய்தயாநிதியே. யரு

பன்னிரண்டுகண்ணிருந்தும் பாராததென்னவென்னை
யுன்னிரண்டுதாளுநம்பியுற்றேன்தயாநிதியே. ௰௬
நீமனதுவைத்தாநிறம்பாததுவுமுண்டோ
பூமனதுயாமனைத்தும்போக்குந்தயாநிதியே. ௰௭
எல்லாவினைப்பயனுமென்னிலுனக்கென்னபுகழ்
சொல்லாயுள்ளாசவள்ளிநேசாயுந்தயாநிதியே. ௰௮
ஆறுலுமிந்தவனியாயமுனக்காகாது
தேறுநடம்புனைதிண்புயதயாநிதியே. ௰௯
இப்படியேநீயிருந்தாலென்னசெய்வேனொருநீதி
செப்படியேனுந்தனுக்குச் சிவாசலதயாநிதியே. ௨௰
நீயிருக்கநின்னேர்வினைநிருக்கவென்னுடலி
னேயிருக்கலாமோநுவலுந்தயாநிதியே. ௨௧
அட்டியென்னவின்னுமெனையாதரிப்பதாலுனக்கு
நட்டியென்னசொல்லுவள்ளிநாயகத்தயாநிதியே. ௨௨
காலமெல்லாம்வீணேகழித்துமயங்காதுநல்ல
சீலமெலாநல்கிவினைதீர்க்குந்தயாநிதியே ௨௩
எத்தனைதுன்பங்களெளியேனெப்படிசகிப்பே
னத்தனையுந்தீர்ப்பழனியப்பாதயாநிதியே. ௨௪
நானனந்தமாகநின்றுமிரங்காததென்ன
தீனபந்துநீயலவோ செந்தூர்த்தயாநிதியே. ௨௫
பாடவறியேனெனினும் பற்றினேனின்னையெனை
வாடவிடலாமோவடிவேற்றயாநிதியே ௨௬
கற்பனையோபூர்வசுதைசனெல்லாமல்லதுநீ
சற்பனையோசெய்கின்றாய்சாமிதயாநிதியே. ௨௭
பொய்த்தெய்வபத்தருஞ்சீர்பூண்டனர்நானம்பியநீ
மெய்த்தெய்வமென்னசொல்வேன்வேலாதயாநிதியே. ௨௮
பானுமுனமேதுபணிநீகண்பார்க்கவிடர்
தானுமுளதாமோசடாட்சரதயாநிதியே. ௨௯
ஒன்றுந்தெரியாதுழன்றேனைக்காப்பதுனக்
கென்றுங்கடமைசெய்வேலந்துந்தயாநிதியே. ௩௰

சிவசுப்பிரமணியக்கடவுள்பேரிற்
கீர்த்தனைகள்-முற்றிற்று.



உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

பழனிவெண்பாவந்தாதி.

காப்பு.

நேரிசை-வெண்பா.

மதிமென்பூதகந்தன்மேல்வந்தார்பழனிப்
பதிவெண்பாவந்தாதி பாடத்-துதிபுரிவாம்
சாமகோட்டத்திக்கலசமுலைப்பாலருந்தித்
தாமகோட்டத்தினே.

நூல்.

கார்தாங்குபூமரங்கள் காமரெங்கள்யாடிவரு
சீர்தாங்குவண்டுவப்பத்-தேன்பிலிற்றி
வண்வமப்பழனிமயில் வாகனுநீயெனையா
ளுண்மைத்துணையாக வுற்று. க

உற்றார்பெற்றார்பிறரா லுண்டோ வுறுதிமிகக்
கற்றார்மற்றாருங் கனிந்[illegible]ர்தாங்கு
வடிவேற்குகாபழனி வள்ளால்[illegible]க
ணடியேற்குநின்னருளே யாம். உ

ஆமைப்புறவடியா [illegible]க்க லமுந்துந்
தீமைப்புலையேனைத் தேற்றாயோ-மாமைக்
கழனிக்குகாமுக்கணி[illegible]ந்தன்பாய்
பழனிக்குகாகடைக்கண் பார்த்து. ௩

பார்த்துயருமேலைப் பசும்பொற்பதிதுபருந்
தீர்த்துயருநின்னைத் தியானித்தும்-பார்த்து
மனமலையினென்னும் வளர்பழனிக்கந்தா
தினமுநிலைநிற்கவருள் செய. ௪

செய்யவினைதுதிருவடி போற்றித்தமியேன்
துய்யவிரைவினுளந் தொளிப்பாய் துய்யவடி
வேலாபழனி விமலாவுமையீன்ற
பாலாதநியி துவப்பா. ௫

பாவலர்சூழ்தென்பழனிப் பண்ணவா விண்ணவர்கைப்
பூவலர்சூழ்நின்னருமைப் பொன்னடிமை-மேவலர்தாங்
காமமுதலாய் கடலைப்படிக்கடந்து
மாமவுனவாழ்வுபெறுவார். ௬

வார்கமுகின்மாகமுகின் மன்னுபழனிக்குமரா
தீர்கவலைமோகவலை சின்னவெனக்-கார்கதிமற்
றுன்னையவதென்னைசொல வுள்ள தூநீதள்ளவொண்ணு
தென்னைவகைதன்னையறியேன். ௭

ஏனய்யாவன்மமிரக்கமிலையாவிணி
ஞனய்யாதென்னையுன்னைநண்ணுவிப்பார்-வானை
யடரும்பொழிற்பழனியாண்டவாவிண்டெம்
விடருந்தவிர்த்தருளியே. ௮

ஏதுமறியாதுழலுமேழைநானெனணினுமென்
மீதுதயவேபுரியவேணாயிது-நீதுணைபெண்
றுற்றேன்பழனி யுடையாயயிற்படையா
மற்றேன்பராமுகஞ் சும்மா. ௯

மாதாபிதாகுருதெய் வங்களெலாமிங்கெனக்கு
நீதானெனைவிலக்கநீதியன்று-லாதாரம்
வேறுணர்கிலேன்பழனிவித்தகாவெவ்வினையை
நீறுசெயல்வேண்டுமின் தேர்ந்து. ௰

நேர்ந்துனதுநாமநிகழ்த்துவெளியேனபவநோய்
தீர்ந்துவிடநீகருணைசெய்குவாய்-சோர்ந்து
பராமுகமாயுற்றூர் பாலாகரும்பழனிக்
குமிராவடிவேலாபழிப்பாகும் ௰௧

கும்பிட்டிறைஞ்சாக கொடியேன்குணமிலிநான்
வம்பிட்டகொங்கைகமின்னார்மாலுழந்து-வெம்பிப்புண்
ணானேனெனினுமறிவுதிருத்திப்பழனிக்
கோனேயெனையடிமைகொள். ௰௨

கண்களித்துளையெறும்பாய்க் கோரநொய்க்கஞ்சமெனைத்
தண்ணிற்பழியுனைத்தான்சாராதோ-பள்ளிக்கு
நண்பார்தமிழ்ப்பழனிநாதாவுனக்கபயந்
தண்பார்கருணைகனிந்து. ௰௩

கனிந்தகனியின்பொறையாற்குப்புடைமாலூரிற்
குனிந்தவளிநோக்குந்தருக்கொம்பர்-முனிந்தளிலாச்
சிந்தமுதுவண்டுதெவட்டியிசைக்கும்பழனிக்
கந்தசாமியேயெனைமுற்றுங்கா. ௰௪

காவிசூழ்வாவிக்கழனிப்பழனிவள்ளல்
பாவிநானெனினுங்கண்பார்த்தருளித்-தீவினையை
மாற்றுவதுநின்கடமையஞ்சிப்பாயாகிலெனைத்
தேற்றுபவர்நீயலதார்செப்பு. ௰௫

செம்புக்களிம்புவல்லோர்தீர்ப்பதுபோலென்னிதயத்
துப்புகளைந்துனையேதோத்தரிக்கு-மப்புத்தி
தந்துசதிராட்டச் சமயமிதுமாயவிவில்
வந்துபழனிக்குகதேவா. ௰௬

வாவாவினித்தமதியேல்வளர்பழனித்
தேவாதிதேவசிகாமணியே-நீவாது
பண்ணுவதுமுறையோபாவமுனக்கிலையே
நண்ணுமுனதடிமைநான. ௰௭

நான்முகனும்மான்முதலநல்லோர்மற்றெல்லோருங்
கான்மருவுதேன்மலர்தூய்க்கைக்குவிக்க-மேன்மைதரு
தென்பழனியின்பச்செழுஞ்சுடரேநீயெனையா
டுன்பமணுகாமலெப்போதும். ௰௮

தும்பிமுரல்சோலைபுடைசூழ்பழனிவாழ்பரம
வெம்பிணியிலென்னைவிடலாமோநம்பி
யுனக்கபயமென்றாலுபோகோவிரங்கா
மனக்கபடமென்னசொல்லுவாய். ௰௯

வாய்துதிக்கச்சென்னிவணங்கக்கரங்கடொழத்
தூய்துபெற்றுச்சித்தமுனைச்சூழ்ந்துருகப்-பாய்திரைப்போற்
கஞ்சமடுத்தென்பழனிக்கார்த்திகேயாநியமித்
தஞ்சலெனத்தேற்றியெனையாள் ௨௰

ஆளிமுகனாதியவுணரையெல்லாமடர்ந்த
மீளியெனுநீயெனவெல்வினையைத்-தூளிசெய
மாட்டாயோவஞ்சலையேன்வாழ்பழனிவேல்முருகா
காண்டாயோநல்லகதி. ௨௧

கதிர்வேலா நின்சிங்காரப்பழனிப்
பதிஞானபண்டிதனிப்பாவச்-சதிநோயை
நீப்பதரிதோநினைவின்படிக்கென்னை
காப்பதுனதுகடன். ௨௨

கடனேயடாதுசனிநோய்தொடாது
திடனேவிடாதெனைநீதேற்றி-யுடனேயாட்
கொண்டலதனாற்குறைவுனக்குண்டோபழனித்
தண்டாயுதாகுகநா கா. ௨௩

தாமதியேலென்றாற் சகிக்கமுடியாதுதுயர்
தீமதியேனென்னினுநான் நீறுதியுய்ப-நீமதியே
நட்டமுனக்கென்னதனி நற்பழனியப்பாநின்
னிட்டமனைத்தும்பிறிதொன் றில். ௨௪

இல்லாமையில்லாமையெவ்வளவும்வெவ்வினைநோய்
புல்லாமையுள்ளம்புலராமை-நல்லாமை
மல்குபுனல்சூழ்பழனிவாசமுருகேசவரு
னல்குசனியேயெனையிந்நாள். ௨௫

நாளின்பகையிலக்குனப்பகைராசிப்பகைபல்
கோளின்பகைக்கொடுமையும்-வாளின்கட்
குஞ்சரிபங்காபழனிக் கொற்றவாதீர்த்தெனது
நெஞ்சகநின்றேயருள்வாய் நீ. ௨௬

யேகவியுநீகத்தினிச்சயதெய்வம்புவிக்கோர்
தாயேயெனைவர்தனையன்றோ-நோயேகச்
செய்யாயெனிலுனினுர்தெனபழனிமேவியவென்
னய்யாவருளினர்மற்றோர். ௨௭

ஆராரோமுன்னினருளடைந்துய்ந்தாரெனவிப்
பாரோதுஞ்சொற்பழுதேயோ-நேராக
வென்னமுறையிட்டுமிரக்கமிலையேபழனி
மன்னவிதுதன்மமன்றுள்வந்து. ௨௮

வந்தலைவுபஞ்சாய் மனதுசுழலாதுறுதி
தந்துபிணிதீர்த்தாளின்றாய்த்தந்தை-நொந்து
வெப்பாரோதென்பழனித்தெய்வமேவைது
தப்பாரோகாதலிமார் தாம். ௨௯

தாம்பார்வலேவிழ்தனிமான்போன்மாலுழந்து
சோம்பாவறிவுதுலங்கியே-பூம்பாத
சேவைதரல்வேண்டுந்திருப்பழனிச்செல்வநின்னாள்
யானவைமுடியாதனவையா. ௯

யாழுந்தலேவணங்கயாணர்வண்டுபாடும்பொழில்
சூழுந்தமிழ்ப்பழனித்தோன்றலென்-றூழ்வினைநோய்
தீரேகருத்தைத்திருத்தேயருட்கண்ணாற்
பாரேயுனக்கெனகோபம். ௧௧

பம்புபுனல்வாவிப்பழனிப்பிரானேயென்
வெம்புபிணிதீர்க்காவிட்டாலிவ்-வம்புவிதா
னேதுசொல்லாதுனையதிலென்னமக்கென்னிலொரு
போதுமெய்யாமோநின்புகழ். ௧௨

புகழ்த்தெரியாதபுன்மையனென்றென்னை
யிகழத்தகாதுநின்பாலென்றுந்-திகழ்பத்தி
நாட்டவமைத்துப்பழனிநாயகாநீயிதய
வாட்டமொழித்தாள்சலியாமல். ௧௩

மல்லார்புயப்பழனிமாமுருகாநெஞ்சமென்ன
கல்லாசிறிதுங்கரையாதா-பொல்லாத
வேலேபலபாவநின்னால்வெல்லமுடியாதனவா
தாளேநினேவேனையின்னேதாங்கு ௧௪

தாங்கச்சியிலேசார்தற்கிதுதுலேயா
நீங்கச்சமுசந்தீர்த்திடேன்மலேயா-பூங்கச்சிங்கட்
டோங்குதனப்பொன்மாதுலாவுபழனிப்பதியா
மீங்குவரத்தாமதிப்பதென். ௧௫

என்னுவினிச்சகிப்பதெப்படியப்பாவருத்த
முன்னால்விலக்குவதற்கொண்ணாதே-பொன்னுடு
கத்தாயேதென்பழனிக்கந்தாவடியரிடர்
தீத்தாயேநெஞ்சகத்தினின்று.

நின்றுனேயுண்டாகிலெந்தநீசரும்வெம்பாசவினே
வென்றுசுகம்பெற்றுவிளங்குவரா-லென்றுயரம்
பற்பலவுமற்பகலாப்பார்த்துமிரங்காததென்ன
பொற்பழனியத்யுதவிப்போது. ௨௧

போதுபலதூவினைப்பூசித்திறைஞ்சுகிலேன்
சாதுவெனநீதிசழுவுகிலேன்-சூதுபல
கற்றேன்பழனிக்கடம்பநின்பேர்பன்னவுன்னைப்
பெற்றேன்பொறுப்பாய்பிழை. ௧௮

பிழைத்தோமவுனப்பிணிதவிர்ந்தோமெல்லாந்
தழைத்தோமெமைப்புவிதாதாழா-மழைத்தொளியிற்
போற்றதடிவேலெடுத்தபொற்பழனியப்பவென்புன்
னூற்றவிதுவேபருவமால். ௧௯

ஆல்வளர்சுஞ்ஞானவாசின்றபூங்குருந்தே
மேல்வளர்செந்நெற்பழனிமெய்ப்பொருளே-மால்வளர்புன்
நெஞ்சேன்வருத்தத்தைநீக்கிச்சுகந்தேக்கி
யஞ்சேலெனக்காத்தருள். ௨௰

அருள்சிறிதுநீபுரிவா யாகிற்கொடிய
மருள்சிறிதுமென்பால்வருமோ-தெருள்செறியு
மன்பர்புகழ்தென்பழனி யாறுமுகதேவவிரைந்
தென்பழயவல்வினை தீரின்று. ௨௧

இன்றுதியொன்றுந்தெரியா தென்றுமுனியேலெனைநீ
யன்றுதிண்டென்புமுரு வானதன்றே-நின்றுபெருந்
தெய்வமதித்தாற்பழனிச்செல்வாமுற்றுதவுண்டா
மெய்வருபெற்றுய்வகையைவிள். ௨௨

விள்ளும்புதியமலர்மென்மணம்போல்விண்புவிமற்
றுள்ளும்புறமுநிறைந்தோங்கு-நின்பாற்
விருப்பமகலாதருளிமெய்யுருகிதந்து
திருப்பழனிவேலவினைதீர். ௨௩

தீர்த்தமனந்தம்படிந்தென்றெய்வம்பலதொழுதென்
பார்த்ததலந்தோறும்பயின்றுறைந்தென்-கார்த்திகைமுன்
னேந்தியமைந்தாபழனியெந்தாயுனதருளாற்
சாந்தியமைந்தாசையறுதார். ௨௪

தார்புனைதோளுங்கமலத்தாளுந்தனிவேலு
மார்புறைநூலுஞ்சேவலுமயிலு-நேர்பொலியக்
காட்சிகொடுத்தென்னைமுற்றுங்காப்பாற்றல்வேண்டுமினி
யாட்சியுடைத்தென்பழனியாய். ௨௫

ஆயுங்கலைகற்றருந்தவஞ்செய்தாலுமெனைத்
தோயுங்கனிவெளிதிற்றேன்றாமோ-தாயும்
பிதாவுமெனநீயருளிப்பேணிநல்லாற்செம்பொற்
பதாபழனிவேலா பணி. ௪௬

பணியெனக்குநின்னைப்பணிவதுவேதாகத்
துணிவுமுற்றுநல்கித்தொடர்ந்த-பிணிநொடிக்குன்
மாற்றிப்பழனி வரதாவருளாவீ
டேற்றிப்புரப்பாயெனை. ௪௭

எனைத்துமுனதின்னருளாலிங்கியங்குமென்று
னுனைத்தவிரவேறுபொருளுண்டோ-வனைத்துமொரு
நீயேயெனக்கன்னியனுச்சேயேல்கவுரி
சேயேபழனியரசே. ௪௮

சேவியேனின்னைவலஞ்செய்யேனய்யோகொடிய
பாவியேனுனெப்படியுய்வேன் மேவியெனை
யாளாயோதென்பழனியப்பாவிண்ணப்பமொன்றுங்
கேளாயோவுள்ளங்குளிர்ந்து. ௪௯

கிளர்ந்துவடமேருவையுங்கீழடக்கிமென்மேல்
வளர்ந்துபடல்சிறிவறினுங்-தளர்ந்துவிடாச்
சித்தருங்காணவுனைத்தென்பழனியப்பாநா
னெத்தாங்காணப்பெறுவேனிங்கு. ௫௰

இங்குமுளாயெங்குமுளாயென்பதனாற்
பொங்குபுராணாகமங்கள்போதுமோ-மங்குதறீர்
வேதமுமெய்ப்பாமேவின்மேன்மைபெறவப்பழனி
நீதவுனக்கேதுநிகர். ௫௧

நிகர்விகளாயநீநிநெறிநின்றுதுதியென்றும்
பகர்பெரியோருள்ளுறைபொற்பாதப்-புகர்மதமால்
யானைதுணைவர்பழனியவ்வனவேதமிய
னேனையினிநீவஞ்சியேல். ௫௨

ஏலாதனவுமக்கேனுமெனவென்னிதையை
மாலாயுழன்றுவருந்துமந்தோ-மேலாந்
கதிதேறுவதினியெக்காலம்பழனிப்
பதியாய்பரிபாலிப்பாய். ௫௩

பாயும்புலனைப்பலவழிச்செல்லாதடக்கி
வாய்ந்தனுவுமனமுகமாத்து-நோயுந்
துயருமகன்றன்னைத்தொழப்பழனிகந்தா
தயவுபுரிந்தாளெனைநித்தம். ௫௪

தம்பமுயிர்க்கெல்லாநின்றாளலதுவேறில்லை
யிம்பரெனைக்காக்கவுனக்கென்னதடை யம்பழனிக்
காங்கேயாவள்ளிகணவானிச்சிறிதுந்
தீங்கேயாவண்ணந்திருந்து. ௫௫

திருத்துவசத்தோகைச்செழும்பழனியாயென்
கருத்துவசந்தோகைக்கனிவைப்-பொருத்து
மயக்கவலையும்வருத்தும்பலகா
மியக்கதலையும்விட. ௫௬

விடத்தாலோதொல்லைவினையாலோவிஞ்சங்
கடத்தாலோமாதர்கல்வி-நடந்தாலோ
வேதினாலோவினைந்தவிந்நோயாற்றென்பழனி
யாதிபர்தீர்த்தாளுண்டாக்கு. ௫௭

ஆக்குலமும்பொன்னாட் டவர்குலமுமன்பர்களின்
மாக்குழமுங்காக்குநெடு மான்மருகா-தாங்குலமு
வன்னபுயத்தென்பழனி யப்பாவடியோன்மே
லென்னவெறுப்பின்னமுமீட்டு. ௫௮

ஏற்றுநடையாள ரெனினும்பிணிப்பட்டா
லாற்றுவதுகால வரிதன்றோ-போற்றுவது
மோராநாளெனனசெய்வே னோகோபழனியப்பா
தாராயோதேகசுகந்தனை. ௫௯

தையலரும்பிறருந்தாமொள்வோர்தன்மையெண்ண
மையலரும்பிணிக்குள்வாடுவனோ-மொய்யலர்சூழ்
நந்தவனத்தென்பழனி நாயகாநீயெனையா
ளிந்தவனத்தெந்தனிர்த்தேயீண்டு. ௬௰

ஈண்டுகடவுட்புலவோரின்கவிகளெத்தனையோ
பூண்டுவளர்கிறநின்சீமறயுன்மையினேன்-வேண்டுவன
பாடினுமின்பமர் பழனிக்குகாநீயே
வாடினவென்பாற்கருணையை. ௬௧

வைவார்தமையுயர்த்தி வாழ்த்துவரைவாட்டுவது
சைவாகமதெய்வ சம்மதமோ-கைவேழ
மூர்பழனிவேன்முருகா வுண்மையறிவேயனருளித்
தீர்பழயவெவ்வினையாந்தீங்கு. ௬௨

தீங்குதலைவள்ளிபுணர் தென்பழனிக்கந்தநா
னேங்குதலைநீசிறிது மெண்ணிலையே-யோங்குதலை
மீதுவிதியெழுத்தை வெல்வதரிதென்னினுனக்
கேதுமகிமை யியம்பு. ௬௩

இயம்புவிநாங்காங் கிசைக்கும்பழனிச்
சுயம்புமுருகாகிடங்கிச் சோர்ந்து-கயம்புகல்போற்
பந்தபாசத்திடைவீழ் பாவியேனைப்புரப்ப
தெந்தநாளந்தோ வினி. ௬௪

இனிக்கவுபசார மியம்பியுடம்பெல்லாம்
பனிக்கமுழுநாவும் பதறத்-துணிக்கயவர்
தம்பாலலைந்து சலித்தேன்குருபழனி
வம்பார்க்கடம்பா வளம். ௬௫

வளர்கின்றதுகவலை வாட்டுகின்றதாசை
தளர்கின்றதுமனது சால-வளர்கின்ற
வண்டலொஞ்செச்சைமணி மார்பழனிக்குகநின்
றொண்டனான் கண்டிடஞ் சொல். ௬௬

சொல்லு பசுங்கரும்புஞ் சூழ்பழனியாய்முறையிட்
டல்லும்பகலு மலருவனே-கல்லு
மிரும்புமுருகுந்தவே னில்லையுனக்கென்மேல்
விரும்புவனதந்தாள் விரைந்து. ௬௭

விரைமலர்தூவிக்கனியை மென்றளிர்க்கைக்கொண்டு
விரைவில்கணீர்பொங்கி வணங்கி-நிரைநிரையே
பூசையன்பர்போலும் பொழிற்பழனிப்புங்கவவென்
மாசையின்றுதீர்த்தருள்செல் வம். ௬௮

வம்புலபுநின்மலர்த்தாள் வாழ்த்துனர்க்கெல்லாம்பழனி
யம்புனிதபண்டிதனீ யன்றியுண்டோ-நம்பும்
வகைவருந்தேனுங்கனவில் வந்தாகிலுஞ்சொன்
மிகையுறுந்தீய்நோய்தொலையவே. ௬௯

வேற்றுமருந்தேன் விபூதியொன்றேபோதாதா
தேற்றிணருண்மந்திர மிருந்தார்-காற்றளவு
யஞ்சாமேநேர்யனைத்தும் பார்த்துபழனியுள்ளா
வஞ்சாமேயாள்வதானை. ௬

அறக்கொடிதேசெய்வாதழகாவுனக்குக்
குறக்கொடிசேரும்பழனிக் கோவே-மறக்குலத்
துன்பமெல்லாமின்னே தொலைத்துதொழுதுய்ய
நின்பதமோகல்கியென்முன் னில். ௬

நில்லாதனபலவு நின்பனவென்றேமயங்கிக்
கல்லாதவரிற் கடைப்பட்ட-பொல்லாத
வென்னைநீகாம்பரசோ வெமபடியோபொற்பழனி
மின்னையில்வேலாவுணரேல மெய். ௭

மெய்யோபழமின் விட வப்பனற்குமிரு
யப்போநினை வனேகவிதப-பொயயோதி
வீணுள்கழித்தேன் வினைதீர்த்தருள்பழனி
வாணுகுறித்த வரம். ௭

வரம்பிலடங்காதுபொல்லா மாயாவிகாரந்
திரம்பிறிதோன்றித் திகைத்தே-னிரப்புசெழுங்
கெச்சைப்புயம்பழனித தேவேயெனைத்திருத்தி
யிச்சைப்படிக்குவரமீ. ௭

ஈயுமெறும்புள் ளினமுநரியும்பலபேய்
நாயுமருந்தூ னுடம்பை நானென்ற-வோயுங்
கருத்தினேனைப்பழனிக் கறபகமேமுற்றுந்
திருத்தினுல்வாழ்வுநின் சீர். ௭

சீர்தனைகுன்றுங்கவிபோற் றெனபழனியப்பாநான்
பார்தனிநிதிககப் பமிலவேனு-னோர்தழுவுந்
தன்மையில்லைதநின்மைமணி சஞ்சலமெல்லாம்விலக்கி
நன்மைவிளைத்துண்மைநலை நாட்டு. ௭

நாட்டுள்ளசெல்வர் நகைக்கநகைப்படுசொற்
கேட்டுள்ளமொல்கிக் கெடாமனினை-வேட்டுள்ள
மூதறிவுநீதருவாய் மும்மைத்தமிழ்ப்பழனி

நீத்தமெலவையும்பொன் னிறைபொழிக்குந்தென்பழனி
யாத்தனிடமுண்டுபுவி யண்டமெல்லாங்-காத்தசிவ
சம்புசுதனீகொடுமை சாதிக்கலாகாது
நம்புமெனையாள்வாய் நயந்து. ௭௮

நயந்துயர்தோன்றுமன ஞானிகளுமெய்தி
வியந்துபரவும்பழனி வேந்தே-பயந்துசதா
வாடுவனோநோயான் மருந்துமருந்தென்றுசும்மா
தேடுவனோதேற்றுதி வந்தே. ௭௯

தேவரிடர்தீரன் சிறைநீக்கினையொருபெண்
கூவவெதிர்வந்தனைசெங் கோல்வழுதி-தாவகர
முன்பகலச்செய்தாய் முதல்பழனிக்குகவென்
றன்பமிதைத்தீர்ப்ப தரிதோ. ௮௰

தோற்றியருணகிரி துன்பந்தனைத்துடைத்தாய்
தேற்றியயனைச் சிறைவிடுத்தாய்-யேற்றிமுனம்
பொய்யாமொழிப்புலவன் போற்றவந்தாய்தென்பழனி
யையாவென்பாலேனடம். ௮௧

அடங்கவில்லையாங்கார மாறவில்லைகோப
மடங்கவில்லைமாச்சரிய வன்மை-தொடங்கவில்லை
சித்தந்தம்பழனிச் செல்வவினிநானுய்வ
தெந்தந்திரங்கொண்டிருந்து. ௮௨

இருந்துறவோபூணவறி வில்லைநல்லோர்பாலுந்
திறந்துறவோகோசிறிதுஞ் செய்யேன்-வருந்துறவோ
வினைபிறப்பித்தாய் மெய்ப்பழனியப்பவென்னைப்
பேசோதனியேபிணி. ௮௩

பிணியவிழ்செந்தாமறையும் பிந்துனதுபாதப்
பணிதழுவும்பத்தி பழுத்துத்-துணியுமனத்
தந்தாதரிஞான தண்டாயுதாபழனி
கந்தாகருணைகரா. ௮௪

கராமடுவிற்பற்றக் கலங்குங்கயற்பால்
விராவுதுயர்க்குள்ளாய் மெலிந்தேன்-குராவடிவே
லப்பாபழனிக் கதிபாகரையேற்றித்
தப்பாதருளுனதுதாள். ௮௫

தாளமதங்கந் தழங்குபழனிக்கருணை
யாளமதங்கொண் டலைந்தனை-நீல
வருத்துவதுநீதியென்று வாழ்த்தன்பினரு
டிருத்துவதுதானே யிதம். ௮௬

இதனுலிதவினையு மென்வறியேனுக்குன்
பதசேவைநல்கும் படாதோ-முதலான
வீயென்னசெய்தாலு நின்பெருமைதென்பழனித்
தாயன்னனுனேதயா. ௮௭

தயாநிதிநீயென்பதுதான் சத்தியமேயானல்
வியாதியினலென்னை வெளிக்கை-நியாயமதோ
சொல்லாய்விரைவிற் சுகந்தால்வேண்டும்பழனி
வல்லாய்தகாதுகண் மை. ௮௮

மையற்குள்வீழாது வன்பிணிதோன்றாதுமருண்
டையைக்கனுவி லழுந்தாது-ஐயங்க
மில்லாதுணைமறவா தெங்கள்பழனிக்குப்போய்
கல்லாதுறவரு ளுக்கம். ௮௯

கம்பித்தமாவிமனங் காட்சிபொருந்தித்திருத்த
வெம்பித்தமேமுதலோ விட்டேக-நம்பித்து
பத்தர்புகழ்தென்பழனிப் பாலதண்டபாணியெனு
முத்தவருள்செய்தளரா முன். ௯௦

முன்னேமகிமைபல மூட்டருள்காணச்செலுத்திப்
பின்னேதிருவுளமேன் பேதித்தாய்-நின்னேர்மை
பாரறிவார்தென்பழனி யாறுமுகதேசிகவென்
கோரவினைதீரவருள் கூர். ௯௧

கூறியவேலாபழனி கோலாகலசீலா
வாரியமாலாமெய்க் கனுகூலா-காரியநா
னென்றுமறியேன்வழக்க னுள்ளனவெல்லாந்திருத்தி
நின்றுதுதியென்றுறநிகல்கு. ௯௨

நல்குரவும்வல்வினையு நையவருள்செய்பனிகள்
புல்குரவும்வெட்சியும்பைப் பூங்கடம்பு-மல்குரவுத்
தங்காபழனிச் சுகாதெய்வயானைவள்ளி
பங்காவளர்சிம்பார. ௯௩

பராபரமாயல்லாப்பகலாப்புவன
சராசரமாய்மேலாய்த்தனியாய்-நிராமயமா
யுற்றுநீயொன்றுமுணரார்பன்றேப்பழனிக்
கொற்றவாநிற்கிதொழுங்கோ. ௯௪

கோபமுண்டானோர்பாற்குணமுண்டெனுமுலக
நீபரிந்தோயாளாநிலையெனன-காபமெனரே
வெத்தனையென்றேதுவன்யானெங்கும்பிலகும
வித்தகநின்பார்வையென் மேல். ௯௫

மேலறியேன்கீழறியேனமெய்யறியேன்பொய்யறியேன்
மாலறியேன்போதவழியறியே-னூலறியே
னுன்னையறிவதெவ்வாறேங்குபழனிக்குகவென்
முன்னைவினையைமுனி. ௯௬

முனிவரதவாலைமுடிக்கும்பழனித்
தனிவரதவாலைதயவு-கனிவரத
னத்தங்கமயனகைபுனைநின்றேளிலென்னுள்
ளொத்தங்கமயவுடன். ௯௭

உடலுளநோயுமுள்ளத்துட்சஞ்சலமுங்
கடலிலெழுசெங்கதிரைகண்ட-மிடவிருள்போ
லின்னவிட்டேகவருளிகுபசாரம்பழனி
மன்னேநீர்கென்னமொழிவல். ௯௮

வலலேயருட்சுரந்துவந்துவகையேதேனுஞ்
சொல்லேசொலியிட்டுயர்தணிமே-நிலமலயென்
சித்தமிசைத்தென்பழனித் தேவசேனைபதியா
முத்தமநிற்கென்னகுறையும். ௯௯

உம்பரிடர்தீர்த்தேனையென் றுண்மையாகத்தெரிந்தா
லிம்பயரும்பழனியெம்மானே-வம்பவருஞ்
சீருலவாநின்பிறதெய்வந்தொழுதுவணங்
காருணையேசேர்வர்மயங்கார். ௱

வாழி.

மின்பரவுகார்வாழி விண்வாழி மண்வாழி
யன்பர்குலம்வாழி யருள்வாழி தென்பழநி
வாமிதமிழ் வாழிகுகன் வாழிகன்னி மார்வாழி
வாழியயில்வாழி மயில்.

பழனிவெண்பா வந்தாதி

முற்றிற்று.



உ

மதுராபுரி

மீனாட்சியம்மன்பேரிற் கீர்த்தனங்கள்.

அந்தலோனே-தெல்லவாறே

என்றஜாவளியின் மெட்டு.

க-இராகம்பியாக்தாளம்-ரூபகம்.

பல்லவி.

சொக்கநாதர் பக்கமேவுஞ்
ரூட்சியேமீனாட்சியே

அநுபல்லவி.

திக்குவிஜையசக்கத்தரசு நீதியேதிரிசூலியே
பக்குவஜனகாதிமுனிவர் பரவுங்கபாலியே-சொக்க
ஜென்மதுரிதகன்மமகல சிறிதுகடைக்கண்பாரம்மா
வன்மநினைவதென்னவுனது மகிமையறிவாராரம்மா-சொக்க
மோகனவினையனேகமதனின் மூழ்குவதுவிரோதமே
தாகவருமைசகிக்கொணாது தஞ்சமெனக்குன்பாதமே-சொக்க
ஏதித்தனைபராமுகமன திளகவில்லையோவின்னமே
மாதுத்யகனிமாம்பழமிக வாழ்த்துமதுரையன்னமே-சொக்க

உ-இராகம்-பீல்-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னமென்மிதில்வர்ம-மென்னசொல்லம்மா
இனிநீயல்லதுபுக-லில்லைசும்மா

அநுபல்லவி.

வன்னவிலாச-வுன்னதவாச
மதுராபுரகதம்-பவனமானே
தென்னகர்குலம்பொற்புஜ-னென்னுமலையத்வஜ
சிமான்வரத்துதித்த-தெளிதேனே இன்ன
வஞ்சனையேதா-நெஞ்சிளகாதோ
வருத்துதனக்குச்-சம்மதிதானோ

அஞ்சியுனதடிமை யுஞ்சிறியகுடிமை
யாகியபேய்பிடித்தலைவேனோ இன்ன

இகபரலோக-சுகமுமனேக
இன்பமுநீதருவா-யெனவுன்னை
பகலுமிரவும்போற்றி மிகவுநம்பினேன்தேற்றி
பரிபாலிப்பாயிஷ்டப்-படியென்னை இன்ன

மதுரவனந்த-விதபிரபந்த
மாம்பழந்தியானிக்கு மலைமாதே
சதுர்மறைபுகழ்-மதிலதனமீனாட்சித்
தாபேதயவுசெய்யச்-சலியாதே இன்ன

௩-இராகம்-மோஹனகல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

தாயேயென்னைரட்சிப்பாயே-நல்ல
சமயம்சர்வலோகதயாபரிபாலய

அநுபல்லவி.

மாயோன்முதலோர்போற்ற-வளர்சிவதாட்சி
வடிவமாகியமஹா-மதுரைமீனாட்சி தாயே

சிறிதும்பராமுகஞ்செய்யாதேயம்மா
வெறிகொண்டுவீணில்நா-னலைவேனோசும்மா தாயே

பிள்ளைபிழைபொறுத்தல் பெற்றவள்குணமே
தள்ளாயிதெனமனஞ்-சலியாதிக்ஷணமே தாயே

விதிக்குஞ்சாஸ்திரபுராண-வேதங்கள்யாவுந்
துதிக்குங்கடம்பவன-சுந்தரமேவும் தாயே

கலைகற்றவர்கட்கொரு-கற்பகம்போன்ற
மலையத்வஜபாண்டியஸ்ரீ-மானினிதீன்ற தாயே

செந்தமிழ்மாம்பழந் தியானிக்குங்கனியே
மந்தாரசுபாஷிக வரதாரதனியே தாயே

இராகம்-செஞ்சுருட்டி-திரிபுடை

பல்லவி.

லையாகனம்மம்மா

அநுபல்லவி.

சும்மாவசட்டைசெய்யாதே
சொந்தமாயிப்போதே அம்மம்மா

சரணங்கள்.

உற்றபுண்ணியபாவங்க-ளொன்றுமறியேனே
குற்றமெனையும்பொறுத்துக்-கொண்டுமிகத்தானே அம்மம்

பாதகப்பிள்ளையைக்கூடப்-பாதுகாப்பதன்னை
யாதவிற்கைவிட்டிடாமல்-லாளவேணுமென்னை அம்மம்

சித்தமோர்சிறிதேனுந் திரும்பினலாகாதோ
சுத்தமாயிரக்கமில்லாச்-சூதுகற்றதேதோ அம்மம்மா

ராஜராஜேஸ்வரியென்று-நம்பினேனுன்பாதம்
மோசம்நினைக்கின்றது-முறையல்லவீதம் அம்மம்மா

மாம்பழம்புகழ்மதுரை வாழும்பசுபொன்னே
சாம்பசிவசோமசுந்-தரர்மருவுமின்னே அம்மம்மா

நாஜிகஜிய்யாரீ-பதாதி

என்ற இந்துஸ்தான் மெட்டு.

இராகம்-செருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மீனலோசனியே-வந்தெனது
வினைதவிர்ப்பாயே மீனலோ

அநுபல்லவி.

வானவர்சூழும்-மதுரையில்வாழும் மீனலோ
பராமுகமேனோ-பகைசரிதானோ மீனலோ
சராசரமெங்கும்-தழைத்தருள்பொங்கும் மீனலோ
மாமலைமானே-மனதுநொந்தேனே மீனலோ
இங்கிதசுந்த-ரேசர்க்குகந்த மீனலோ
மங்களமிணங்கு-மாம்பழம்மணக்கும் மீனலோ

ஓமணீ மனுசாமினித்யாவே
என்றஜாவளியின்மெட்டு.
இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மதுராபுரபார்வதிபாதம்
பார்வதிபாதம்-சேர்வதுபோதம்

அநுபல்லவி.

கோமளவாணி பூமலர்வேணி
க்ஷேமபுராணி சேமகல்யாணி மாமது

யோகபுராரி பாகசரீரி
நாகருமாரி யேகவுதாரி மாமது

பக்தியும்வாக்கும் புத்தியுந்தேக்கும்
சித்தியுண்டாக்கும் நித்தியங்கேக்கும் மாமது

வேமப்பிமான பூம்பரைகா
மாம்பழத்யான சாம்பவியான மாமது

கெடிகெடிபருஜாலமா
என்ற ஜாவளியின்மெட்டு.
இ-ம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

வரவரயனவர்மமா

அநுபல்லவி.

மாமதுராபுரிக்கரசி வரவர

சரணங்கள்.

பரமகல்யாணி பரிமளவேணி
பன்னகாபரணி பரிபூரணி வரவர

இரக்கமிராதா இவ்வளவுரூதா
இதுவோதருமம் என்னசெய்குவேன் வரவர

கதியினிநீயே காப்பாற்றுவாயே
கனிமாம்பழஞ்சொல் கருணாகரியே வரவர

இதுவுமந்த வர்னமெட்டு.

பல்லவி.

ஜயஜயஜெகதீஸ்வரி ஜயஜய

அநுபல்லவி.

ஸ்ரீமதுரா திலசுந்தரி ஜய

சரணங்கள்.

நபதிவ்யகுணசின் மயசுபமீன
நயனும்பிகைபன் னக பூஷணி ஜய

நிஜசுகமலையத் வசகுமாரி
நித்தியோச்சவசந் நிதிநாயகி ஜயஜய

விமலபுராணி கமலசர்வாணி
மிகமாம்பழஞ்சே வித்தாயகி ஜயஜய

சின்னதானரா-டே

என்றஜாவளியின்மெட்டு

இ-ம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நம்பினேனம்மா நானம்பினேனம்மா

அநுபல்லவி.

அம்பிகையே-தென்மதுரை
அங்கையர்கண்ணன்னமே நாந

சரணங்கள்.

வாக்கினிமையாக்கிமுன்னை-வல்வினையான்றொல்லைதன்னை
நீக்கியிந்தநேரமென்னை-நீரட்சியென்றேயுன்னை நாந

எத்தனையோதுன்பநிதம்-ஏழையுய்வதெந்தவிதஞ்
சித்தமதுவேசம்மதங்-தேவியுனதுபதம் நாந

அரனரவெனவேயதி-யன்புடன்மாம்பழந்துதி

கோட்டு-இராகம்-பங்காளா-தாளம்-ஆதி.

பல்லவி.

நின்பொற்பாதம்பத்தியினோடு
நினைய்க்கிருபைபுரிநீதாயே
நினைய்க்கிருபைபுரிநீதாயே நின்பொ

அநுபல்லவி.

மென்பத்மாசன-விமலைமகா
வேதபுராதனஜயவீரி
மேலவர்சூழ்மதுராபுரிவாழ்
மீனவிலோசனக்குமாரி

மிஞ்சுஞ்செம் சஞ்சுங்கண்
டஞ்சுள்ளூசலை தந்தங்கியதரு நின்பொ

சரணங்கள்.

சகலசராசரமருபூரணுங்-தரிசுந்தரபரசிவகாமி
சங்கரிபாலாம்பிகைபலசாட்சரிஜகன்மோகனபிராமி
காமளவத்புததவமித்ரி-மாமலையத்வஜவரபுத்ரி

சந்த்ரன்கண் டன்கண்பொங்
கிந்த்ரன்பண் தின்புங்கவர்தொழு நின்பொ

மணிமயகுண்டலகேயூரா-மகுடாலங்க்ருதசுகவாணி
மகிடாசுரமர்த்தினசிம்ம-வாகினிமதுராமிர்தவேணி
மந்திரபிரணவகுணசீலி-தந்திரகனதளதிரிசூலி

வண்டுங்கொங் கும்பஞ்சுங்
கெண்டும்பின் துங்குங்குழுதென

மங்களதுங்ககதம்பவனே-ஸ்வரிமா ங்கியுமாதேவி
மாம்பழக்கவிநாவலன்-மனதகலாத தினமேவி
மகிமைவினைத்தருள்சுயஜோதி-சகிர் சுலட்சணவனுபூதி

வஞ்சம்பங் கங்கெஞ்சம்

மாம்பழக்கவிச்சிங்கநாவலரது

இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு

பல்லவி.

இன்னமென்கொடுமை யென்னம்மா

அநுபல்லவி.

தன்மதயாபுரி தென்மதுராபுரி
நின்மலகவுரி என்னம்மா இன்ன

சரணங்கள்.

மானதபூசனை தானருள்வாசனை
நீனலீலாசனை நீயென்னம்மா இன்

ஸ்ரீசுகன்மாதாவென் றேஜனர்யாவரும்பணி
ராசராஜேசஸ் வரியென்னம்மா இன்

முத்தமிழியனா நித்தமுமேபுகழ்
உத்தமியேனை யாளென்னம்மா இன்

இ-ம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதரியெனையனுமம்பிகைநின்
பாதமேபங்கபமேனன்

அநுபல்லவி:

ஸ்ரீகரசோதரி திவ்வியசடாதரி
மாதவர்சூழ்மதுராபுரிவாழ் நீதகுணதாமோதரி ஆதரி

மானசவுங்கரி மகுடதுரந்தரி
ஞானதயாநிதிசேரந்தரி கானரசஸ்ரீகந்தரி-அம்பா ஆதரி

மங்களநாரணி முனிஜனவாரணி
பொங்கபரியாசனசம்பூரணி சங்கரிஜகத்காரணி-அம்பா ஆதரி

சதயமனோகரி தளஜனசேகரி
நித்யமுமாம்பழநேர்வனதரு தத்யகனகிருபாகரி ஆதரி

கீதாமிர்தசாரம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பத்திராசல

ஸ்ரீராமதாஸ்கீர்த்தனை.

குத்தனூர்

[illegible]ன் - சின்னசாமிசாஸ்திரியார்

அவர்கள் இயற்றியவை

வை. சாஸ்திரியாரவர்கள் சிஷ்யர்

திரிசிரபுரம்

இராஜகோபாலநாயுடு அவர்கள்

இயற்றிய

முகவுரையுடன்

அமரம்பேடு

இரங்கசாமிமுதலியார் அண்டு சன்ஸ்

அவர்களாற்றமது

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

1927.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

சாற்றுக்கவிகள்.

சென்[illegible]வகலாசாலை ஆந்த்ரப்ரதானபண்டிதர்

ஸ்ரீரங்கம்-இரா[illegible]நுஜஸூரி அவர்கள் இயற்றியது.

உத்பலமாலா விருத்தம்.

த்ராவிடபாஷனுக்கக்ருதி ரம்யதரம்புகசின்னஸ்வாமிஸ
த்பாவஸமூஹசேகருடு பாவிதவிஷ்ணுபாதாரவிந்துடை
கோவிதலோகமெல்லகடு கூரிமிஸந்துதியும்பலஜஸெனெள
பூவிதிதாதிசக்திக்ருதி போடிமினொந்ததெபூமினெல்லெடன.

ஸம்ஸ்க்ருத ஸ்லோகம்.

க்ருதிம்ப்ரகாசயாமாஸ த்ராவிடம்கூஷிராஸாகர
ஸுதாமிவமஹாஸத்வ சின்னஸாமிஸதீமணி.

ம-ா-ா-ஸ்ரீ,

வித்வான் திருநீர்மலை பரவஸ்து

நம்பெருமாளையரவர்கள் இயற்றியது.

ஸீஸபத்தியம்.

ராமகதாஸதா ரஸமானமத்துடை
மதராத்திரினுண்டேகோ பன்னுமூனு
[illegible]னுசாரித்திர மத்புதம்புகுத்த
ராரிநிவாஸண்டு பூரியகடு
தீமந்துடகுசின்ன சாமிசாஸ்திரிவிண்புடு
த்ராவிடம்புனவிபு தபதுலெலமி
கொனியாடஸ்ரீயதீஷணி சரிக்கிரமுதோட
ரசியிஞ்செபக்கினு ராமதாஸ
வருணிவ்ருத்தாந்த மெல்லபுவ்னமுனந்து
ப்ராகரமொனரிஞ்செ தத்ஸத்பரபாவமெறிகி
ராமக்ருஷ்ணாயுடு ரம்யசீது
டமரனுசந்தாராகக்க கைசெலங்க.

புரசை அஷ்டாவதானம்

சபாபதி முதலியாரவர்கள் இயற்றியது.

கழிநெடில் விருத்தம்.

இன்புறுபத்தி காரணமாக விறைவனையுளமிசை யிருத்தி
பண்புயர்முத்திக் கினியனாமிராம தாசன்றனருட் பெருஞ்சரிதை
மன்பதையுணர்வான் கீர்த்தனையாக வனைந்தனன் கச்சியம்பதிவாய்ப்
பொன்புனைமதில்சூழ் குத்தனூர்ச்சின்ன சாமியாம்பூசுரன்மாதோ.

சென்னை சர்வகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

கோ. இராஜகோபாலபிள்ளை அவர்கள் இயற்றியது.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிரந்தருமூணுகர்மிக்கட் டேவுமென்கட்
டேவுபோராயிரங்கட் டேவுமல்லார்
வரந்தருநான்மறைசூடணி பரமன்செங்கண்
மாலென்னு மெம்மையுளம் வலித்தேனோர்க்கும்
திரந்தருவான்றெரிக்கனுறு சின்னசாமித்
திருப்பெயர்பெருமான் ராமதாச
தரந்தருவான்சரிதங்கீர்த் தனமாவிக்குத்
தந்திட்டானங்கண்மனங் குவந்திட்டானே.

பிரபன்ன வித்துவான் காஞ்சீபுரம்

இராமசாமிநாயுடு அவர்கள் இயற்றியது.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

பண்ணுமறைமுடிபொருளைப் பத்தியென்னப்
பகர்வலையிலகப்படுத்த பான்மையாலே
பின்னலறுமுத்தியுற்ற ராமதாச
னெனும்புனிதன்சரிதைதனைக் குத்தனூர்க்குத்
தென்னமரவந்தசின்ன ஸாமிவிப்ரன்
தேசமர்கீர்த்தனத்தமைத்திச் செகத்தோர்காம
மன்னனைச்செற்றி ராமதாஸர்னாய்த்தூய
வைகுந்தமெய்துமா வழங்கினனே.

புரசை, அஷ்டாவதானம்
சபாபதிமுதலியாரவர்கள்மாணாக்கரும்
ப்ரீசர்ச்மிஷின் காலேஜ் தமிழ்த்தலைமைப்புலவரும் ஆகிய
திரு-சின்னசாமிபிள்ளை அவர்கள். இயற்றியது.

எண்சீரடியாசிரிய விருத்தங்கள்.

மேருபுரிதவமகவாம் பத்ரசைல
ஸ்ரீஜானகிவல்லி படாபிராம
தாருவெழிலருட்கனியைக் கபீருதாசன்
றன்னுரையாஞ்செங்கெறியே சென்றுதுய்க்குஞ்
சீருறுகோபன்னுவா மிராமதாசச்
செம்மலினெண்சரிதமெனி துணர்ந்துமுத்தி
தாரணியோருறும் வண்ணஞ்சின்னசாமி
தாசனுடகத்தமிழாற் சாற்றினுனல்.

விப்பிரர்தங்குலமணியாஞ் சின்னசாமி
வித்தாரனுரைவரையு மறுவாராக்கிச்
செப்பறுசீர்த்திருமாலின் சரிதமென்னுஞ்
செழுந்தேனையன்பருக்குப் புகட்டுந்தூயோன்
ஒப்பில்புகழ்மேவுமெழி லிராமதாச
னெண்சரிதந்தனைத்தமிழ்நா டகத்தமைத்தான்
இப்புவியோரீடேற விதயத்துன்னி
யிவ்வரியவுதவிக்குங் கைம்மாறுண்டோ.

வித்துவான் காஞ்சிபுரம்
இராமநுஜப்பிள்ளை அவர்கள் இயற்றியது.

எழுசீரடியாசிரிய விருத்தங்கள்.

உலகினிலுயிரி னுணர்வினிலுணர்த்து
மூத்தமாசிரியரிலியலில்
இலகுசீர்த்தெரிப்பா னவ்வப்பேர்கவே
ணெழுத்தினை மூறையுறவியற்றி
கலமுறுஞ்சின்னசாமிப் பேர்கொண்டேர்
நானிலங்குத்தனு ருறைவோன்
அலகில்சீரிராம தாசர்தஞ்சரித
மானவினவையர் வாழ்வுறவே.

றும் ஆனந்தபாஷ்பங்கள் தாரைதாரையாய்ப்பெருகி, ஸ்ரீபகவத் திவ்விய சரண கமலங்களில் திருமஞ்சனநீர்போற்பரவு பத[illegible] ஆநந்த ஸாகர மானர்களானதினுல் கைகளைக்குழற, நமோஞானஸ்வரூபா! ஸ்ரீமந்நாராயணு! ஸ்ரீ ஜனார்த்தனு! நமோநமோ! அதிகாரணு! சர்வபரிபூரணு! நமோநமோ! [illegible]ரீஹரீ! [illegible]ஹரீ! முராஹரி! என்னும் இத்யாதி சர்வமத சம்மத [illegible]ருதி வா[illegible]யங்களாகும் சுகந்த மலர் களால் அர்ச்சித்து நீர் சர்வவியாபகன்; உன்னிடத்தில் சர்வமும் நிற்கின்றது; அன்றியும் சர்வ வல்லவனும் நீயே; ஆதலால் சகலமுமறி கின்றாய். ஆகையால் யாது காரணத்தைப்பற்றி எங்களையிங்குவரும் படிச்செய்தீரோ; அதை முழுதும் நீயே அறிவாய். ஆதலால் நாங்கள் விண்ணப்பஞ் செய்வானேன். ஆயினும் நினது நியமனமஉல்லங்கனம் செய்யப்படாதாகையால் விண்ணப்பஞ்செய்கிறோமெனச் சொல்லத் தொடங்கினார்கள்.

ஓ! ஆபத்பாந்தவாகிய ஸ்ரீ ஹிருஷிகேசனே! பூலோகத்தில் ஞானமயமாகும் ஆத்மஸ்வரூபமே தாங்களென்றுணர்ந்து ஸ்ரீ அச்சுத னாகும் நின்னை யனுபவிக்கத்தக்க யோகநிலைக்கு யோக்யமான நிர்ம லாந்தக்கரணமும் வேதசாஸ்திரங்களா லுணர்த்தப்பட்ட சதாசாரமு முடைய ஜனங்களுக்கு கலிகாலமகத்துவத்தால் சுபாவத்திலுண்டா கத்தக்க ஜீவகாருண்யம் பொறுமை மனவூக்கம் ஐம்பொறியடக்கல் முதலிய நற்குணங்கள் குறைந்துபோயின. அதனல் பரிசுத்தமான ஹிருதயத்தில் ராகத்வேஷாதி தோஷங்களென்னும் புழுதிபடிய அவர்கள் பரலோகசாதனங்களான தான தவ யக்ஞ யாகாதி ஸத்கரு மங்களின் பிரீதியற்றவராயினர். அதனல் மேகம் அற்பமான மழை யைப்பொழியும்படி நேரிட்டது. அதனல் எல்லாப்பயிர்களும் செழி த்து வளர்தல் தவிர்ந்தன. அதனல் எங்கும் பஞ்சமுதலிய பலவித துன்பங்களுண்டாக ஜனங்கள் பசிப்பிணியினற் சோர்ந்தவர் களாய் ஒருவரை யொருவர் விசுவசிக்காமல், கொலை களவு கள் காமம் குருநிந்தை என்னும் பஞ்சமா பாதகங்கள் முதலிய அக்கிரமச் செய்கைகளையே செய்து வருங்காலத்தில் ஜனித்தது யாசததசயும் கூடியது பிரிவையும் உலர்ந்தது தாவையும் பெறவே ண்டியதாகையால் சூரியசந்திரவம்ச ராஜாக்கள் முதலிய பரிபூரணு னுக்கிரகம்வைத்திருந்த சகல ராஜாக்களிடத்தினின்றும் தேஜோபலத் தைரிய வீரியாதி மகிமைகளெல்லாம் தூரமாய்ப்போயின. போகவே மிக்க கோபமும் கடினநெஞ்சமும் அகருமத்திற்பதிந்த மனமும் கொல்லுங்கையும் துராசாரமுமுடைய மிலேச்சர் முதலானவர்கள் ராஜ்யம்பெற்று அகங்காரமிகுதியால் எங்கும் மதயானைகளைப்போல் ஓடி தங்களைப்போன்ற தீயொழுக்கமுள்ளவர்களையேகூடி மண்பெண் பொன்னாசையென்னுங் கள்ளையுண்டுமதிமயங்கி இதுசெய்யத்தக்கது இதுசெய்யத்தகாதது என்றுபகுத்தறியும் விவேகசூன்யராய் ஆலயங் களை யிடித்தும்பட்டணகிராமங்களில் கொள்ளையடித்தும், துர்க்குண பரணம்பூண்டஇவர்களுடையபூர்வீகராகிய அநேகவாசர்கள் எவ்வித பாபேட்டும் கூடக்கொண்டுபோகச்சக்தியற்றுத்தீரப்பொறியாய்விட்

முகவுரை.

[illegible]க்ஷேத்திரங்களைத் தங்களுக்கும் தங்களுடைய மக்களுக் கும் வி[illegible]ப்படுத்திவைக்க வேண்டுமென்னுங் கவலை மனதிற் குடி-கொள்ள சகோதராதி பந்துக்களை[illegible]ம் மற்ற நேயர்களையும் நிர்த்தா க்ஷண்யமாய்க் கொலைசெய்வதில் தி[illegible]த்தினராயிருக்கின்றதைக் கண்ட ஜனங்கள் ஓகோ! இ[illegible]ன்னவி[illegible]ம்! நமோகுரோமென்றெழும்பும் அனற்கொழுந்தோடுகூடிய அக்கினியானது தன்னிடத்திலுற்றவனை மாத்திரந் தகிக்கின்றது. இந்த அரசர்களாகிற அக்கினிக்குக் கோபம் ஜனித்தால் குருநாக்ருத்யங்களுக்காலயமாகிற சித்தத்தினையுடைய இஷ்டதுஷ்டஜனங்களாகிற காற்றில்கூடி மாதா பிதா பிராதரு களத்ர புத்ர மித்ராதிகள் அத்தனையும் அழிகின்றதேயென்று சிந்தித்தவராய் அந்த அக்கினியைத் தணிக்கத் தாங்களும் அப்பிலேசவொழுக்கத் தையே கைக்கொண்டவராயினர்.

மேலும் இக்கொடியகாலத்தில் புருஷர்கள் விவேகமாகிய ஐஸ்வரி யத்தினைப் பெறத்தக்கது. ஆத்மோஜ்ஜீவனமென்று சிறிதேனும் நினை யாது நீர்மேலெழுத்தை நிரந்தரமாயதனைச் சிலையிலெழுத்தென்று கருதினவராய் உள்ளகிலுள்ளமர்ந்து,

“அடாதகாரியஞ்செய்தால் படாதபாடுபடவேண்டும்.”

என்று தண்டோராவிறைவிபைப்போல் பலமாகிருபா விசேஷத் தால் வேய்நிவித்துவரச்செய்தும் முன்பின் எண்ணிப்பாராமல் பிறர் பிரயத்னங்களைக் கெடுத்தல், துராக்கு உதவிசெய்திடல், பரத்தார முறைத்தல் முதலிய அனியாயமார்க்க உதவியைக்கொண்டு தங்கள் காரியங்களை முடிக்கவும் பேராசையோடும் வைத்தியப்பிடித்து மேன் மேலும் பொருளையே ஸம்சீகித்துவருகின்றனர். இவ்வாறு சம்பாதித்த பொருள் மறுமைகாரியங்களுக்குப் பிரயோசனமாகாமல் தங்கள் தேகத் தைப் போஷிப்பதிலும் வெளிப்படக்கேசெய்யும் பரத்தையர் விஷயத் திலும் வீணாய்ப்போகின்றது.

இந்திரியங்களை சேர்த்துக்காட்டிய கம்பம்போன்ற பனமுடையவர்க ளாய் பர்த்தாவே கர்த்தா என்னும் பழையவார்த்தையைமறந்து பார பு[illegible]யையேயிச்சித்து வியபசாரிகளாயிருக்கின்றனர். அன்றியும் வேத ஞேசதன ஸ்தான் ஆதிமங்களான ஸர்வ பிரபந்தங்களிலும் ஸர்வ சாஸ்திரங்களிலும் வியாபித்துள்ள கண்திறைஸ்வாமியாய ஸர்வஸ் வாமியாகின்ற நின்னையாராதியாமல் மனுஷ்யகல்பிதசமயங்களாகிற அந்தகாரத்துக்காய் கூணங்களிற்பிரவேசித்தாலும், அதர்மம் செழித்து வளர்ந்து உலகத்தைப் பாபம் மூடிக்கொள்ள, மனம் நிலைக்காமல் மந்திரம் பலிக்காமல் எங்கள் தவம் பங்கப்பட்டு நின் திருவடிகளை சரணம்புகுந்து முறையிட்டுக்கொள்ளவந்தோமென்று மொழிந்து சொல்லிநிற்க, பக்தபரிபாலனை பிரபுவாகும் ஸ்ரீ எம்பெருமான் தன் சன்னிதியில் பாதக்ஷத்தை வெளியிட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ ஆஞ்ச நேயமூர்த்தியையும் வால்மீகர் வியாசர் முதலான மஹரிஷிகளையும் திருவனந்தாழ்வானையும் பார்த்தருளி இந்த நித்ய விபூதிவாசிகள் நித்யவஸ்துவாகிற நமது நித்ய சின்மயகுணாலயத்தால நித்தியா

னந்தானுபவஞ் செய்துக்கொண்டிருக்கும்வாறு லீலாவிபூதியாகிற பூலோகத்தில் உண்மைநிலையறியாது மஹாமாயை யென்னுங் கோடையிலுலே தபிக்கப்பட்டு அலைகின்ற ஜீவாத்மாக்கள் நம்மை யடைந்து கிருதார்த்தர்களாக வேண்டுமென்று திருவுளங்கொண்டிருக்கின்றோம். ஆகையால் நீங்கள் அப்பூலோகத்தில் அவதரித்து அஜ்ஞ்ஞ கோடிகளுக்குப் பேரின்பமென்னும் அளவிலாச் சாயையோடுங்கூடிய வேதநிச்சய தத்வார்த்தங்களென்னும் ஆலாவிருக்ஷங்கள் சூழ்ந்த அதிக குளிர்ச்சி பொருந்திய ரம்யமான தாமரைத் தடாகம்போன்ற விசிஷ்டாத்வைத சித்தாந்த ஸ்தாபகஞ்செய்தும் பக்தியோக மார்க்கத்தையும் சொரூப நிஷ்டையும் பிரமக்ஞானத்தையும் மாசறவிளங்கச்செய்து, அன்பு ஆசாரம் ஜீவகாருண்யம் சத்தி வாய்மை முதலியவைகளைத் தழைக்கும்படி செய்து பின்பு நமது பரமபதம்வந்து சேரக்கடவீரென்று திருவாய் மலர்ந்தருள, சுவாமிநியமனப்படியே திருவனந்தாழ்வான் ஸ்ரீபெரும்பூதூரில் ஜகத்குருவாய் ஸ்ரீபாஷ்யகாரரென்றும், வேதவியாசர் ஜெகந்நாதத்தில் ஜெயதேவஸ்வாமிகளென்றும், வால்மீகர் டில்லியில் துளசி தாசரென்றும், சுகர் காசியில் யோனிசம்பந்தராய் கபீர்தாசரென்றும், அனுமார் டாகூர்தேசத்தில் இராமதாஸசுவாமிகளென்றும், மற்றுஞ் சிலர் சில வேறுபட்டணங்களில் லோகோஜ்ஜீவனநிமித்தம் அவதரித்தார்கள்.

இப்படிப்பட்ட ஜீவன்முக்தர்களுடைய சரித்திரங்கள் போதஞானரோகத்தோடுவருந்துகின்ற ஜனங்களுக்கு ஞானரசம் ததும்புகின்ற பிரமானந்த தேவாமிர்தத்தைப் புகட்டி அவ்வியாதியைநீக்கி அழிவில்லாத சாயுச்சியமளித்தலால் மேற்சொல்லிய பிரமக்ஞானிகளுடைய சரித்திரங்களுள், சேஷாம்சபூதரான ஸ்ரீ உடையவர் சரித்திர பிரபாவமும், ஸ்ரீ ஆஞ்சநேயாம்ஸரான இராமதாஸசுவாமிகளுடைய சரித்திரவைபவமும், பகவத்பக்தியிலும் பாகவதத்திலும் சிறந்தும் மஹாயோகீந்தரராகிய ஸ்ரீபாத்துவாசமுநிவனது தோத்திரத்தில் யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான். குத்தனூர்-சின்னசாமிசாஸ்திரியாரவர்களால் இனிய தமிழ் சிறந்தசொற்களால் கீர்த்தனரூபமாக இயற்றப்பட்டிருக்கின்றன.

மேலும் இந்நூலாசிரியர் சகலரும் சகுணக்கியானத்தில்முன்னாதேர்ந்து சம்சாரமென்னும் விருட்சத்திற்கு விதைகளாகிற நான் எமது உமதென்னும் பற்றுக்களினின்றும் பேர்ந்துபின்னர் நிர்க்குணதியானத்திற் பிரவேசித்ததிலே ஜீவகோடிகள் உஜ்ஜீவிக்கத்தக்க வழியென்று தெரிவிக்கப் புகுதி சித்தி விரத்தி முக்தியடைவதற்கு அந்தரங்கமான பகவத்பக்தியே எல்லாவழியிலும் லேசான வழியென்று ரூபிக்கவும் பக்தியே வடிவாகக்கொண்டு ஓர் பெரியவரால் பத்ராசல மஹாத்மியத்தை யுணர்ந்து அக்கினியின்மீது திவ்ய திருமண்டபத்தில் கோபுராதிகளைக் கட்டுவித்தல் முதலான கைங்கரியங்களைச்செய்தும், திவ்ய தேசயாத்திரை செய்துக்கொண்டு பத்ராசல சமீபம்வந்த சர்வேஸ்தர விக்ரக ஸதாப்ரமானந்தானுபவ ஸ்ரீசுகப்பிரம்மரிஷியாம

ஸரான ஸ்ரீகபீர்தாசரால் மனமொடுங்குமார்க்கம் உபதேசிக்கப்பெற்றுக்கொண்டும் ஸ்ரீபுருஷோத்தமரின் திவ்ய கல்யாணகுணங்களை ஆந்த்ர க்ரந்த சொற்களென்னுஞ் சுகந்த மலர்களாற்றொடுத்த கீர்த்தன மாலைகளைத் தினந்தோறும் ஸ்ரீபத்ராசலேசனுக்கு மதுவுண்ணும் வண்டுகள்போலவே மொய்த்த ஆத்மகோடிகளுக்குப் பிரமாண புத்தியாகும் ஸ்ரீ எதிராஜாசாரியைப்போல திருமந்த்ராதிரஹஸ்யார்த்தங்களை அநுக்கிரகித்தும் இந்த லீலாவிபூதியில் கோபன்னவென்னுந் திருநாமத்தோடுங்கூடி யெழுந்தருளியிருந்த ஸ்ரீபத்ராசல ராமதாஸ் சுவாமிகளையே அத்தாக்ஷியான சாக்ஷியாக யவதரித்து அவர்சரித்திரத்தைப் பகவத்ப்ரீதியர்த்தமாய்ச் செய்தருளினர்.

அன்றியும் இவர் இச்சரித்திரம் கீர்த்தனரூபமானமையினால் கற்றவர்க்கேயன்றி, மற்றவர்க்கு எளிதில் புலப்படாதெனக்கருதி மத்யே மத்யே சிலவிருத்தங்களும் வசனங்களுஞ் சேர்த்துக் கீர்த்தனங்களுக்குள்ள சந்தர்ப்பானுசந்தர்ப்பத்தைத் தெரிவிக்கின்றனர். இக்கீர்த்தனங்கள் திஸ்ரமிஸ்ர கண்ட சங்கீர்ண தாள சகித ஸந்தர்ய ராகங்களோடுங்கூடியதாகையால் பாகவதர்க்கேயன்றிச் சங்கீதவித்வான்களுக்கும் அளவிலா மகிழ்ச்சியைத் தரத்தக்கதாயிருக்கின்றன.

இவ்வளவோ இச்சரித்திரப் பிரபாவம் அன்று. மற்றென்னெனின்; பதார்த்த ஞானமுணராது ஒழிக்கத்தக்கவைகளில் வீணாக வைத்த ஓர் மமதையினால் எண்ணாததுமெண்ணி எங்குந்திரிந்து கலங்குகின்றன. ஒவ்வொருவரும் இப்பக்தி யோகநூலிலுள்ள வேதமுடிவானது பாராயணத்தால் அநித்திய ப்ரபஞ்சத்திற் பற்றொழிந்து திவ்ய மங்களமூர்த்தியை, திருமங்கையாழ்வாரைப்போல,

"வாடினேன்வாடி வருந்தினேன்மனத்தாற்
பெருந்துயரிடும்பையிற்பிறந்து
கூடினேன்கூடி யிளையவர்தம்மோ
டவர்தருங் கலவியேகருதி
ஓடினேனோடி யுய்வதோர்பொருளா
லுணர்வெனும் பெரும்பதந்தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டுகொண்டே
னாராயணா வென்னுநாமம்."


என்று அனலிலிட்ட வெண்ணெய்போற் கரைந்து ரூபமில்லாமலே ஒன்றும் பலவுமாய்த்தோற்றி எப்பொழுதும் மாறாத நிர்மலஸ்வரூபியாகியும் தனக்கு வேறோராதாரமில்லாது தான் சர்வ ஜகதாதாரபூதனாக அபயஸ்தான காரணகர்த்தாவாகியும் சகலபாபக்ஷயநாமதேயியாகி சர்வலோக சரண்யஸ்வாமியாகின்ற ஸ்ரீதாரக பரப்பிரம்மமே நித்தியமாகிற பரவஸ்துவென்று கண்டுகொண்டு சாசுவத சுபானுபவஞ்செய்வார்களென்னின் இதன் மாட்சிமை யறியாக்குழந்தையாகிய என்னால் புகழ்ந்து சொல்லக்கூடியதோ.

இங்ஙனம்:

திரிசிரபுரம்-இராஜகோபால்நாயுடு.

ஸ்ரீ பத்ராசலம்.





ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீராமதாஸ்சரித்திரக்கீர்த்தனைகள்.

நான்முகம்.

விருத்தம்.

தாராதலத்தவதரித்த ஜானகிமனங்களிக்க
காராவதாரஞ்செய்தோங்கும் ராகவமூர்த்தியென்னும்
புராதனப்பொருளைநம்பிப் பூமிசைமகிமைபெற்ற
இராமதாசன்கதைக்கோர் சொற்றருபதங்காப்பாமே.

௧. இராகம்-ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சதாசாரிய சரணம் சரணம்
சங்கார்ணவ தரணம்

அநுபல்லவி.

உதாரமுகுந்த பாதாரவிந்த
கதாரஸாநந்த சுதாரஸகந்த (சதா)

சரணங்கள்.

௧. திருபுவியகாரணம் கவிகுலாபரணம்
அவித்தியாவரணம் குவியரவிகிரணம் (சதா)

௨. அகுணமெனவெறுக்கும் சகுணமெனப்பொறுக்கும்
தகுந்தகாதென்றிருக்கும் மிகுமிருளையறுக்கும் (சதா)

௩. தொந்தமிலாநாமி சந்ததாபிராமி
அந்தமுகதிசாமி இந்தச்சின்னசாமி (சதா)

நூல்.

பத்ராசலஸ்தலமஹத்வஸங்கிரஹம்.

ஸ்ரீமதமலகுணோபேதராயும் சகலபுராண வியாக்கியான வைகரீ
சமேதராயும் நித்தியபூதருமாகிய சூதரைப்பார்த்து மௌனசீலராகிய
சௌனகாதிமுனிகள், ஐயா! புராணவித்யாதரரே? பத்ராசல மஹாத்
மியத்தை நன்றாகச் சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்திக்கச்,
சூதபுராணிகர் ஓமகாமுனிகளே! பிரம்ம ருத்திராதிகளாலும்சொல்லற்
கரியபத்ராசல மகிமையைச் சொல்ல என்னாலாகுமா; ஆகிலும் அறிந்
தமட்டும் சொல்லுகிறேன் கேளுங்கள்: பூர்வத்தில் மேருபர்வதராஜன்
தனது மனைவியோடு அதியுக்கிரமாய் வெகுகாலந் தவஞ்செய்யக் கமல
பவன் அகங்களித்து இவன்முன்வந்து என்னவரம் வேணுமென்ன;
பரமபாகவதசிகாமணியாகிய புத்திரன் தேவையென்று மேருபர்வத
ராசன் கேட்க, அப்படியேதந்து அரவிந்தபவன் அந்தரத்தானமடைய
அநுக்கிரகப்படிக்கு மேருபர்வதராஜனது மனையாளிடத்தில் பத்திர
னென்கிறபிள்ளை ஒருவன் பிறந்து பாலப்பருவத்திற்றானே குணங்
களிற்சிறந்து ஞானபோகத்தைத்துறந்து இதர தேவதைகளையும் மற
ந்து ஆராவமுதமான ஸ்ரீராமமூர்த்தியை அகில லோக மாதாவென்
னும் சீதாதேவியோடும் லட்சுமணரோடுங்கோரி கோதாவரிதீரத்தில்
வெகுகாலந்தவஞ்செய்ய எம்பெருமான் சானகி சௌமித்திரசகித
ராய் பிரத்தியட்சமாகவந்து தரிசனந்தந்துஎன்னவரம்வேணுமென்று
கேட்டருள தங்கள் திருவடியே வேண்டுமென்று அவன்கேட்க, பக
வான் எனது தரிசனம்போகத்தைக் கொடாமல் ஆதியிலேயேமோட்
சத்தைக் கொடாததைையால் நீயிவ்விடத்தில் உனதுபேருள்ள பர்வத
மாகி எங்களுடைய அர்ச்சாரூபங்களை சிரசாகத் தரித்துக்கொண்டு
அடியார்கள் செய்யும் அலங்காரப் பிரதட்சண வந்தன ஸ்தோத்தி
ராதிகளையுங் கொண்டு பிரம்மபிரளயம்வரையில் ஆமோதித்துக்கொ
ண்டிருந்தகாலத்தில் என்னிடத்தில் ஐக்கியமடைவாயென்று ஜகதீச
னருள, அவன் அப்படியே பத்ராசலமாக அவனது சிகரத்தில் திவ்யா
லயத்தில் சீதாலட்சுமண சமேதராய் ஸ்ரீராமமூர்த்தி அர்ச்சாரூபியாய்
எழுந்தருளி, அத்யாபியெல்லவர்க்கும் தரிசனந்தந்துகொண்டிருக்கி
றாரென்று எனது ஆசிரியரான வேதவியாசபகவானால் கேட்டபடிக்
குத் தங்களிடத்தில் விஞ்ஞாபனஞ்செய்தேன். கேட்டீர்களோ சௌ
னகாதிகளே! என்று சூதபுராணிகர் அருளிச்செய்ததாக பிரமாண்ட
புராணம் உத்தரகாண்டத்தில் ஸ்தலமகியாத்மியவர்ணன பிரகணத்தில்
சொல்லப்பட்டிருக்கிறது.

விருத்தம்.

கோதாவரிதீரந் தனிலத்தியந்த
கோமளமாகிய பத்ராசலத்தில்வாழும்
சீதாலட்சுமண பரதசத்துருக்கன்

பாதாரவிந்தங்களிற் பக்திசெய்து
பார்மிசைவாழ்வதற்கும் பரஞ்சேர்வதற்கும்
ஆதாரமவன்றுவொன் றெண்ணிநன்று
யடுத்திட்டார்வாசமங்கு கொடுத்திட்டாரே.

௨. இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சுயோகிபகவது பயோகிகியோகு
சுகிருதபாகி யாகியிருந்தார்

அநுபல்லவி.


பயோநிதியைவிட் டயோத்திவந்த
பத்ராசலராம பத்தனையுகந்த (சுயோ)

சரணங்கள்.

ராயசத்திலிருந்து நாயசம்ரக்ஷணம்
ஞாயமாய்ச்செய்துமு பாயமாய்லக்ஷணம்
பாயசரூபராம பாருநலலபட்சணம்
பரசுதந்தருமென்று பக்திசெய்யத்தக்ஷணம்
தோயஜநேத்திர னருமருளாலே
சுபேதாராகி யொருக்காலே
மாயமின்றிநல் வழியின்மேலே
வாஞ்சைகொண்டு தொண்டுருவம்போலே
ஹேயமதாகிய காயஜபாதையைவெல்ல
நேயமதாரது நாயகநாமஞ்சொல்ல
தூயசின்னசாமி போலநல்ல(சுயோ)

வசனம்.

இவ்விதமாகப் பத்ராசலத்தில் தாலூகா கச்சேரியில் இராயச உத்தியோகத்திலிருந்த கோபண்ணாவானவர் பன்னிரண்டத்தியாய முள்ள பத்ராசல ஸ்தல மகாத்மிய கிரந்தத்தைக்கண்டு பரமானந்தங் கொண்டு தாசில்தாரன் முதலான பெருத்தஉத்தியோகஸ்தர்களிடம் இந்தப் பெருமையைவிண்டு மாதந்தோறும் அவரவர்கள இவ்வள வென்று கொடுக்கும்படிச் சந்தா யேற்படுத்திக்கொண்டு அவர்களைக் கொண்டு அந்ததாலூகாவைச்சேர்ந்த பெருத்தகுடித்தனக்காரர்களுக் குஞ் சந்தா யேற்படுத்திப் பிரதிமாதம் பணத்தைத் தானே தண்டிப் பத்ராசலத்தின்மீது மரம் செடி கொடி மூடியிருந்த சந்நிதியில் மரா மத்துசெய்து சம்புரோக்ஷணம்பண்ணி மலையேறியிறங்குவதற்கு மார் க்கத்தை யேற்படுத்திப் பகவதாராதனநிமித்தம் ஒரு ஸ்ரீவைஷ்ணவரை யேற்படுத்தி நித்தியபூஜை நடந்துக்கொண்டுவரக் கண்டு அண்டு கொள்ளாத சந்தோஷம் பூண்டு இராமதாஸர் பகவானைத் துதித்தல்.



இ-ம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்நாளு மறவேனே
இனிநானிங்கு பிறவேனே

அநுபல்லவி.

அந்நாளாதிமூலமே யென்னை
யாளென்றழைக்கவ ஆண்டவனேயுன்னை (எந்நா)

சரணங்கள்


க. இடையையும்பொன் னுடையையுமெழிற்
றுடையையும்நல்ல நடையையுந்திவ்ய
படையையும்முத்துக் குடையையுமென்றுங்
தடையில்லாத கொடையையும்
கடைவிழியுடை வாளழகையும்
விடைபெறுமத வேளழகையும்
தொடைமருவிய தோளழகையும்
சடையனும்பணி தாளழகையும்
அடைந்திடும்படி யாரையுந்தான்
புடைதங்கிய பேரையும்நான் (எந்நா)

உ. ஹாரத்தையும் நற்கோடிரத்தையும்
அலங்காரத்தையும் மஹாவீரத்தையும்
மேருதீரத்தையும் மிகுசூரத்தையும்
வசோதாரத்தையும் கெம்பீரத்தையும்
தாரகமந்திர சுகத்தையும்
சாரஸபதகர சுகத்தையும்
நீரஜநேத்திர சுகத்தையும்
சேரவரும்பர சுகத்தையும்
பூரணமாம கத்துவத்தையும்
காரணகாரண தத்துவத்தையும் (எந்நா)

ந. தலத்தையும் இந்நிலத்தையும்
பத்ராசலத்தையும் இதன்பிலத்தையும்
ரவிகுலத்தையும் தேஜோபலத்தையும்
நதிஜலத்தையும் நிர்மலத்தையும்
பலவிதமாந் திருநாளையும்
வலதுகரந் தருநாளையும்
புலன்வசமாய் வருநாளையும்
பலனுண்டாம் பெருநாளையும்
அலரிலாகுணகண சிந்தனை
நலமிகுசின்னசாமிதொழு முந்தனை (எந்நா)

வசனம்.

இந்தப்பிரகாரமிருக்குங்காலையில் டில்லியைச்சேர்ந்த ஹைதரா பாத் தானேஷாவென்னும் பாட்சாவானவன் தனதிராஜ்ஜீயத்தைச் சேர்ந்த தாலூகாக்களை குடிகளினதுசம்மதியின்மீது அனேகம்பெயர் களுக்குச் சுபாவாகக்கொடுத்ததுபோலப்பத்ராசலதாலூக்காகுடிகளை வரவழைத்துக் கேட்கும்போது,கோபன்னபேருக்குசுபாவாகக்கொடு ப்பதெங்களுக்குச் சம்மதமென்றுசொல்லக்கேட்டு,அப்படியே இராம தாஸரை வரவழைத்து ஜாரிதாகிதும் கொடுக்கப் பெற்றுக்கொண்டு பாட்சாவை நோக்கி வருடத்திற்குப்பதினாயிரம்வராகன்விதம்பன்னி ரண்டுவருடம்சேர்த்துப் பதின்மூன்றாவது வருடமுதலில் மொத்தம் இலக்ஷத்திருபதினாயிரம் வராகனையும் ஒரேதேதியிற் செலுத்துகிறே னென்று வணங்கிக்கேட்க, தானேஷா அப்படியே சரியென்று உத்த ரங்கொடுக்கப் பெற்றுக்கொண்டு பத்ராசலம் வந்துசேர்ந்து சீதாலட் சுமண பரத சத்ருக்கன் அனுமத்சமேதரா யெழுந்தருளியிருக்கும் வேதண்ட சுதண்டாய பாகுதண்ட சாக்ஷாத் கோதண்ட தீக்ஷாகுரு வின் ஆலயகைங்கரியத்தைவிசேஷமாய் நிறைவேற்றிநித்தியோற்சவம் வாரோற்சவம் பக்ஷோற்சவம் மாசோற்சவம் ருதோற்சவம் அயனோற் சவம் பிரம்மோற்சவங்களெல்லாம்நடத்திக்கொண்டுவரக்கண்டுஇஷ்ட ஜனங்கள் சர்க்கார்பணத்தைஇப்படிசெலவுசெய்தால்பின்புவருத்தம் நேரிடுமேயென்று சொல்லும்போது பன்னிரண்டுவருடம் நாமிருப்ப தென்ன நிச்சயமென்று சொல்லிக்கொண்டு தன்னிடமிருக்கும் உத்தி யோகஸ்தரையெல்லாம்சம்பளதாமாஷாபிரகாரம் ஸ்ரீராமஜெயம் எழு தும்படி செய்துக்கொண்டிருக்கையில் பத்ராசலத்திற்குச் சுமார் மூன்றுகாதவழி தூரத்திலிருக்கும் நாராயணபுரமென்னும்கிராமத்தில் ஒரு யோகிபிராமணன் உத்தமகுணச் சம்பன்னனாயும் உத்தமவதி யாயுமிருக்கும் தனது கன்னிகையை யிவருக்குக் கொடுக்கிறதாகநிச்ச யித்து முகூர்த்த தினத்தையும் ஏற்படுத்திக் கலியாணப்பத்திரிகை யனுப்பக்கண்டு சர்வாச்சிரமங்களுக்கும் ஆதாரமான நல்லற மில்லற மென்று அளவற்ற வஸ்துக்களையுஞ் சேகரஞ்செய்துக்கொண்டு அநே கம் பிராமணர்கள் சுயம்பாகிகள் பரிசாரகர்கள்சேவகர்கள்வண்டிகளு டன் புறப்பட்டுமார்க்கத்திற்போகக் கணவாய்ப்பிரதேசத்திலிறங்கின முன் நடந்த பிராமணர்கள் சாயங்காலம் சுமார் நாலுமணிகாலத்தில் இவர் சுபேதாராகையாலும் கலியாணநிமித்தம் வருகிறசமயமாகையா லும் பொருள் விசேஷமாயிருக்கும் அபகரித்துக்கொண்டு போகலா மென்கிற துர் அபிப்பிராயங்கொண்டு அங்குவந்துகும்புகூடிக்கொண் டிருந்த சுமார் இருநூறுபேர் திருடரைக்கண்டு பயந்து கையிலிருந்த சொம்பு மடி சஞ்சி பஞ்சபாத்திரம் உத்தரணிமுதலானவைகளைநழுவ விட்டுக் கண்ணீரொழுகவிட்டு எதிர்கொண்டு ஓடிவந்து சேதியைச் சொல்லக்கேட்டு இராமதாஸர் புன்னகைகொண்டு அபயந்தந்து சர்வ



௪. இ-ம்-பரிசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

காக்கவரவேணும்-ராமா-வலக்
கைதரவேணும்-ராமா

அநுபல்லவி.

ஆக்கலளித்த வழிதற்குமாதாரம்
ஆனவனேமுன்பின் னருகில்லேனேரம் (காக்க)

சரணங்கள்.

௧. கும்பினுள்ளம் வெதும்புவதைக்கண்டு
தம்பியும்நீயும்வில் லம்பிரண்டுங்கொண்டு (காக்க)

௨. நாவலர்பாவலர் ஆவலாய்வருந்தும்
கேவலனேயென்றும் காவலாயிருந்தும் (காக்க)

௩. கருடபகவா னிருதிருத்தோளை
மருவிதிருடர் நெருங்குமிவ்வேளை (காக்க)

௪. அடியேனென்றெண்ணி யருள்மழைபெய்து
கொடியிலரிகள் நூங்கியோடச்செய்து (காக்க)

௫. தும்பிமுகன்குக னம்பிகைபன்பாயே
தம்பிரானென்றிடும் எம்பிரானேநீயே (காக்க)

௬. வேதனேடுபூத நாதனுள்ளப்போது
பாதனேயாநந்த போதனேயிப்போது (காக்க)

௭. சாமான்யதெய்வ சங்கத்துக்காளல்ல
சீமானேசோதனை செய்திடும்நாளல்ல (காக்க)

௮. வணக்கமாயோதும் வார்த்தைதட்டாமல்
இணக்கத்தையறிந் தென்னைக்கைவிடாமல் (காக்க)

௯. ஆதிமூலமென்னும் ஆனைக்கபயம்
சாதித்தபடிக்குச் சாதிக்கச்சமயம் (காக்க)

௧௦. பாஞ்சாலிக்கும் அபயந்தந்தவேக
வாஞ்சையோடுகண வாயிலென்முன்னுக (காக்க)

௧௧. குணத்தைக்கொண்டாடும் கொத்தடிமையென்று
மணம்நிறைமேவறும் வண்ணம்முனனின்று (காக்க)

௧௨. சத்தியவுருதனைத் தாங்கியொருக்காலே
வெற்றிபெற்ற வித்தகனேயதுபோலே (காக்க)

௧௩. மந்தரமேந்தி யருந்தவமுதம்
தந்தப்படி யுகந்துசந்ததம் (காக்க)

௧௪. கிடியாகியொரு கடியாமேபகை
மடியகை யடித்திட்டவகை (காக்க)

கரு. நரசிங்கனாகி — யிரணியனைக்கொன்று
சுரன்பர் துன்பந் — தொலைத்தோனேயின்று (காக்க)

கசா. வாமனனாகி — மாபலியடங்கி
க்ஷேமம்பெறச்செய்த — சீருட்டொடங்கி (காக்க)

கஎ. கார்த்தவீரனையுங் — கண்டித்துப்பூமி
தீர்த்தங்காசிபனைச் — சேரச்செய்தஸ்வாமி (காக்க)

கஅ. சத்துருவாகிய — பத்துமுகத்தானைக்
கொத்துடனேகொன்ற — கோனேயடியேனைக் (காக்க)

கசு. விபீஷணன்சுக்ரீபன் — விண்ணோருங்களித்துப்
பாடப்பெற்றோனே — பாராகந்தமளித்துக் (காக்க)

உ0. வஞ்சகனாகிய — கஞ்சனையும்முறித்து
துஞ்சச்செய்தநின்பிர — பஞ்சவரந்தந்து (காக்க)

உக. வம்பாடும்ராட்சதன் — வணங்கச்செய்தங்கே
நம்பாடுவானை — ரட்சித்ததுபோலிங்கே (காக்க)

உஉ. பண்டுஜகந்நாத — பார்த்திவேசனஞ்சம்
உண்டும்வாழச்செய்த — உனதடிதஞ்சம் (காக்க)

உங. தொடருமிடர்கள் — தொலையப்பொடித்துப்
படருஞ்சோரரைப் — பறக்கவடித்துக் (காக்க)

உச. ஆடகம்வருமென் — றாசையினாற்சுற்றிக்
கூடவந்தோரையுங் — கோபன்னனைப்பற்றிக் (காக்க

உரு. என்னமோசொன்னானென் — றெண்ணமலேர்த்துச்
சின்னசாமிபோலே — யென்னையும்பார்த்துக் (காக்க)

வசனம்.

இந்தவிவரமாகச் சர்வேசுவரனைத் துதித்துக்கொண்டு தீரமாய்க் கனவாய்ப் பிரதேசத்திலிறங்கும்போது பத்தியில் வரப்பட்டகோயிலாழ்வான் ரொக்கம் நகை நட்டு சேவடி சேலை முதலியவைகளுள்ள வண்டியின் இரண்டுபக்கத்திலும் இரண்டு வெள்ளைக் குதிரைகளின் மீது இரண்டு சூரர்களாய்க்கட்கபாணிகளாயும்மற்றச்சாமான் வண்டிகள் பரிசனங்களின் இருபுறமும்துப்பாக்கிகளைபார்பண்ணிக்கொண்டு சிபாயிகள் இரண்டாயிரம்பேர்களாயும் ஜகதீசன்ரூபிகரித்து அந்தத் திருடர்களுக்குமாத்திரம் மூன்றுதரம் மறைந்து மறைந்து தரிசனங் கொடுக்கக்கண்டு அவர்கள் கோபன்னா பரமபாகவதனே என்று நினைத்து எல்லாரு மிவருடைய பாதாரவிந்தங்களில் தண்டம்சமர்ப்பித்து அஞ்சலியஸ்தர்களாய் சேதியைச் சொல்லக்கேட்டு உங்களுக்கு எம்பெருமானுடைய திவ்யசேவை கிடைத்தபடியால்நீங்களே பரமபாகவதோத்தமர்களென்று சொல்லிச்சேவித்து அந்தச் சேவை தனக்குங் கிடைக்கவில்லையே யென்று உருகி எம்பெருமானைத் துதித்தல்.

௯. இ-ம்-ராகராமக்கிரியை-தாளம்-அடதாளம்.

பல்லவி.

நாராயணா நதஜன
பாராயணா

அநுபல்லவி

பாராய்நீராய் பாவகங்கால்விண்ணாகி
காரணக்காரணங்க ளானமகாயோகி (நாரா)

சரணங்கள்

௧. ஆராயுமறிவிலுங் கறிவாகிப்பெருக்கும்
நேயன்பர்கள் சித்தத்தினிலிருக்கும் (நாரா)

௨. பஞ்சதன்மாத்திரமாய்ப் பரவிப்பஞ்சகோச
ரஞ்சகனாகியெங்கும் ரமிக்கும்ஜகதீச (நாரா)

௩. ஒருபதத்தா லுலகந்தாங்கும்
திருபதத்திவி நிகழ்ந்தேதாங்கும் (நாரா)

௪. பூரணப் பூரணஞான
காரணக் காரணஞான (நாரா)

௫. விதியுமப்பதி நிதிபதியுமதி
கதிர்பசுபதியுந் துதிஸ்ரீபதி (நாரா)

௬. நாராதீசுவர சிராதீசுவர
பராதீசுவர பராத்பரதர (நாரா)

௭. நித்தமுமித் தனைபார்க்கும்
பத்தனைச்சுத்தனென் றேர்க்கும் (நாரா)

பூதமய வேதமயவாதி
நாதமய கீதமயஜாதி
பேதமய மோதமயபூதி
போதமய பாதகற்சோதி
பொன்னடியைத் தன்னகத்திலணைத்திடும்
சின்னசாமியைச் சேர்த்தணைத்திடும் (நாரா)

வசனம்.

இவ்வகைச் செவ்வையாய் அய்யனிடம் மனம்பதித்து துதித் துத்துதித்தும் வாராதிருக்கையில் தீராக்கலக்கங்கொண்டு கண்ணீர் ஆறுகப்பெருக மயிர்க்கூச்சலிட்டுத் தனது அன்பின் உறுதியால்விசய நிஷ்டூர யுத்தமாகப் பகவானைத் துதித்தல்.

௬. இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னம்பராமுகமா ராமா
இதிலுனக்குச் சுகமா

அநுபல்லவி.

பன்னகபூஷணனும் பரகாரியும்போதில்
துன்னவனும்பணியும் துரையேயென்மீதில் (இன்)

சரணங்கள்.

௧. சினமிராஜஸத்தையும் சேராமற்சோராமல்
மனமுன்னிடம்நிலைக்க வைரந்தாவாராமல் (இன்)

௨. பின்னமதியின்வேரைப் பேர்த்தெறிந்துய்யாமல்
உன்னதசந்தோஷம் உண்டாகச்செய்யாமல் (இன்)

௩. என்னத்துதித்தாலும் என்வார்த்தைபோமல்
சின்னசாமியென்று சிந்தித்துப்பாராமல் (இன்)

வசனம்.

இவ்வண்ணம் துதிக்கும்போதெல்லாருங்கேட்க, ஆகாசவாணியைக்கொண்டு பின்பு தரிசனங்கொடுப்பேனென்று எம்பெருமான் அருள, வினவி சந்தோஷமடைந்திருக்க கோபன்னவை நோக்கி அந்தத் திருடர்கள் ஐயா! நீர் பரம பாகவத சிகாமணியாகையால் நாங்கள் இதுவரையில் களவுசெய்து இவ்விடத்தில் புதைத்துவைத்திருக்கும் பொருளை ஸ்ரீராமார்ப்பணமாய உமக்குக்கொடுக்கநிச்சயித்தோம் ஆகையால் அடியேங்கள்மீது தயைசெய்து ஸ்வீகரிக்க வேண்டுமென்றுபிரார்த்திக்கும்போது கோபன்ன அங்கீகரிக்க, அந்தக்ஷணத்தில் அவர்கள் பொருளையெல்லாங் கொண்டுவந்து சமர்ப்பித்து வணங்கக்கண்டு பரிபூரண அனுக்கிரகஞ்செய்து அனுப்பிவிட்டுத் தனது பரிவாரத்துடன் நாராயணபுரஞ்சென்று மஹோற்சவமாகத் திருக்கலியாணத்தை நிறைவேற்றிக்கொண்டு பத்ராசலம் வந்துசேர்ந்து தினந்தோறும் தெலுங்கில் தானே ஸ்ரீராமபரமாய் அநேக கீர்த்தனங்கள் பாடிக்கொண்டு தினந்தோறும் தனது திருமாளிகையில் பக்தஜனங்களுடன் தம்பூரு மிருதங்க தாள சகிதமாய் பஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில், கார்த்திகைமாசம் பானுவாரதினத்தில் வனபோஜனஞ்செய்ய எத்தனித்து நானாவித சம்பாரங்களைச் சேகரஞ்செய்துக்கொண்டு கோதாவரிதீரவனத்திலிருக்கும் மண்டபத்தில் எம்பெருமானை எளனம்பண்ணி ஆராதித்து அநேக தீபாராதனஞ்செய்து தானும் போசனம்பண்ணிப் பாகவத கோஷ்டிகளுடன்கூடிப் பகவத்கதா சல்லாபஞ்செய்துகொண்டிருக்கையில் எதிரிச்சையாய் காசியிலிருந்து மகா பாகவதோத்தமராகிய கபீர்தாசர் பத்தினி புத்திர பக்தஜனங்களுடன் திவ்ய தேசயாத்திரை செய்துக்கொண்டு இந்த வனத்தில் சிலதூரத்தில் வந்திறங்கிப் பகவன்னாமசங்கீர்த்தனம் பண்

ணிக்கொண்டிருக்கையில் அந்த மங்களத்தொனியைக்கேட்டு பாகவதர்கள் வந்திருக்கிறார்களென்று அறிந்துக்கொண்டு தங்கள் கோஷ்டியுடன் அங்குசென்று அருகிருந்தபெயரால் கபீர்தாசரென்று அறிந்துக்கொண்டு அவரிடத்தில் தான் உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கொண்டிருந்த கோரிக்கை ஈடேறும்படியான நற்காலம் உதயமாச்சுதென்று மனமகிழ்ந்து அவரைத் துதித்தல்.

எ. இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

பல்லவி.

கபீர்தாசரென்றீர கடைத்
தேறும்வகைசொல்வீரே

அநுபல்லவி.

அபீதராயுதித்தவர் நிலைக்கப்புரியும
அருள்பெற்றவரென் பதற்கட்டியுமுண்டோதெரியும் (கபீ)

சரணங்கள்.

௧. நதிஜலத்தின்மீதுநடக்கிறவித்தையும்மைநண்ணும்போது
அதிதஞானிநீரன்றோ பாரும்பாரும்
அடியேன்பாக்கிய மகபடபட்டீர்வாருமவாரும் (கபீர்)

௨. சாதுசேர்வைதுர்லபம் தாசரதியினதுகருணைசுபம்
அதுசந்தேகமில்லை யினியெனக்கீடார்
இப்படிக்கொத்தவும்மை யெவர்தான்தேடார் (கபீர்)

௩. ஆமையடக்கும்வகைபோல் ஐந்திந்திரியங்களையடக்கியதால்
சீமையிலுமக்கிடு தேடினுங்கிடையாது
சின்னசாமியே யென்னுரைதப்பாது (கபீர்)

விருத்தம்

மனமகிழ்ந் தன்புகூர்ந்து வணங்கியே ராமதாசர்
கனகபீர் வதனம்நோக்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு
வனத்தினி லடியாரோடு வந்தகாரிய மென்னென்றே
வினவிப்பின் னிடரையெல்லாம் வெல்லுவான் சொல்லுவானே.

அ. இ-ம்-ஸ்ரீராகம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

உபாயஞ்சொல்லவேணும்
ஒடுமனதடங்கிடாணும்

அநுபல்லவி

அபாயங்களை யளிக்கதம்தோணும்
அவித்தையையொழித் தையனேக்காணும (உபா)

சரணங்கள்

ஸ்ரீதாராம தபோவன
வாசக சாலை.

ஸ்ரீ பாரகனென்றழுந்த — குருவாகியராமானந்த
தீரனதுபயமுஞ்சிந்திச் — செய்துபாதாரவிந்த
சாரமறிந்தவன்தந்த — தாரகமந்திரஞ்சொந்த
சீரமுதமென்றுநந்த — சின்னசாமியெயிந்த
பூரணனுனைம்வந்த — காரணங்களோடந்த (உபா)

விருத்தம்.

இந்தவகை கோபன்னா னடியிற்சேவிக்
கியம்புமுறை வினவிக்கபீ ரென்பாணையா
எந்தப்பொருளு மிராம மயந்தானென்றும்
இவனன்றி யேறுதுணவு மசையாதென்றும்
உந்தவுக்கு [illegible] பார்க்கமேதை
உணடாகி யூர்ஜிதமா மனமொடுங்கும்
பந்தமெல்லாம் பறந்தோடு மிதுவேமார்க்கம்
பாரென்றான் பின்புனக்கீ டாரென்றானே

வசனம்.

பரம பாகவதோத்தமராகிய கபீர்தாசர் உபதேசிக்கப் பெற்றுக் கொண்டு கோபன்னா அந்தக் கபீரை மறுபடியும் வணங்கித் தேவரீருக்குப் பகவத்சாந்நித்தியமுண்டென்று கேள்வியாகையால் அடியேனுக்கும் பகவத் தரிசனம் கிடைக்கச்செய்யவேண்டுமென்று வெகுவாய்ப் பிரார்த்திக்கக் கபீர்தாஸர் மனமிறங்கிக் கிருபைகூர்ந்துநாளைய தினம் பினிரண்டுமணிக்குச் சுவாமியை உமதிடம் அனுப்பிவைக்கிறேனென்று அருளிச்செய்ய விடைபெற்றுக்கொண்டு அவருக்கு வேண்டியசாமக்கிரியைகளை அபரிமிதமாய்வரவழைத்துக்கொடுத்துத்தனது திருமாளிகை வந்துசேர்ந்து மறுநாளும் அந்தவனமண்டபத்தில் எம்பெருமானை எழுந்தருளச்செய்து அனேகதீபாராதனர்த்தம்சால்யன்ன சாக்குப் பக்ஷயலேக்ய சோஷ்ய நதிட்சீரகிருதாதிகளையும்சித்தம்பண்ணிப் பகவதாகமனர்த்தம் புஷ்பமண்டப கஸ்தூரி குங்குமம் கற்பூரம் ஹிம்சல மிளிச கந்த புஷ்பஹார சதமூஹார முக்தாஹார பீதாம்பராதிகளையும் சித்தம்பண்ணிப் பிரமாண போசனநிமித்தம் இலைகளைப் பந்திபந்தியாய்ப் பரிமாறி அன்னாதிகளையும் பரிமாறிக்கொண்டிருக்க, அந்தவேளையில் கபீர்தாசர் பகவானைப்பிரார்த்திக்கப் பிரத்தியட்சமாய்வரக்கண்டு அடியேன் கோபன்னாவுக்குவாக் தத்தம்செய்தபடி இப்போது அவருக்குத் தரிசனங்கொடுத்து வரவேண்டுமென்று விக்கியாபானம் செய்யக்கேட்டு எம்பெருமானனவனுக்குச் சர்வசமக்கியானமில்லையே அங்கேனைப் போகச்சொல்வது சரியோவென் றருளக்கேட்டு அடியேனைப்பற்றி அவசியம் போய்வரவேண்டுமென்று கபீர்தாசர் சொல்லக்கேட்டு பகவான் மகிஷரூபியாய் சேற்றில்வீழ்ந்து புரண்டெழுந்து அதிவேகமாய் கொம்மாளமடித்துக்கொண்டு ஓடி

வந்து இலைகளில் பரிமாறியிருந்த வஸ்துக்களையும் யாகசாலையிலிருந்த வஸ்துக்களையும் மிதித்துவைத்து அங்கேயேவளர்ந்தோடிருக்கக்கண்டு பரமகோபங் கொண்டு கட்டைகளாலடிக்கும் பிராமணருடன்கூட கைப்பிரம்பால் தானும் சூடுசூடாகவடித்துத் துரத்திவிட, பகவான் இந்த ரூபத்தை மறைத்து நிஜரூபத்துடன் கபீர்தாஸரிடம் வரக் கண்டு, அந்தத்தாஸர் சுவாமி! நோபன்று நல்ல பூசைகொடுத்தாரா? என்று கேட்க, ஆ! ஆ! கொடுத்தார் ஒருடம்பிருடம்பாச்சுதென்று பரிகாசமாய்ச்சொல்லி வீக்கத்தையும் காயத்தையும் காட்டக்கண்டுகபீர் தாஸர் மனம்நொந்து சைத்திய உபசாரஞ் செய்யும்போது பகவான் இராவணாதிகளிடத்தில் பட்ட அடியைக்காட்டிலும் இது மிஞ்சிய தல்ல நீ அஞ்சவேண்டாமென்று கெஞ்சிக்கெஞ்சிச்சொல்லி அந்தரத் தனராக இங்கே கோபன்று நூதனபாக பாகம்செய்வித்துத் தீபாரா தனம்பண்ணித் தானும் புசித்துத் தனது கோஷ்டியுடன் கபீர்தாஸரிடம் வந்து சொன்னபடிக்குப் பகவான் வரவில்லையே யென்று கேட்கப், பகவானு வரவில்லை, மகிஷ ரூபியாய்வந்த ஜகதீசனை அடித்துத் துரத்திவிட்டு என்னிடத்தில்வந்து இப்படிச்சொல்வது சரியோவென்று கபீர்சொல்ல, அனைதங்கேட்டு மனம்நொந்து மகா பாவியாய் விட்டேனே யென்று உருகிப் பகவானைப் பாடுதல்.

௬௯. இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

எனையேனுளக்கூடாது என்னுடனுனக்
கென்னவாதிப்போது

அநுபல்லவி.

தினையளவுக்கருணை செய்தாலுமென்கலி
தீருமாகையால்மனந் தேறும்வகையைச்சொல்லி (எனை)

சரணங்கள்.

௧. அன்னை தந்தைகுருவு மருந்தோழனுந்தம்பியும்
அகிலமும்நீதானென் றனவரதம்நம்பியும் (எனை)

௨. ஆதாரம்வேறில்லையென் றறிந்தவர்க்குக்கிட்டும்
பாதாரவிந்தங்கிட்டும் படிக்கடிமைபட்டும் (எனை)

௩. கனவிலுமுனதடி வனசமனதிலுறும்
கனமேமனமென துனவுனதினந்தோறும் (எனை)

௪. தஞ்சம்பாத கஞ்சமென்பதைநாடி
அஞ்சலஞ்ச லஞ்சலென்றுரையாடி (எனை)

௫. பார்த்தனன்று பணிந்திடவெற்றி
ஏர்த்தவன்சங்கை யினையகற்றி (எனை)

௩. தீர்த்தனுன தறிந்தேபுத்தி
சேர்த்தணைப்பா யெனக்கைப்பற்றி (என்னை)

௪. பொன்னடிக் களவாகவுன்னும்
சின்னசாமி தாசனென்னும் (என்னை)

வசனம்.

இராமதாசர் இவ்விதமாய் எம்பெருமானைத் துதிக்கும்போது கபீர்தாசர் அவருக்கும் சர்வேஸ்வரஸ்வரூபத்துவத்தை யுபதேசித்துச் சிலநாள் அங்கு பத்ராலோசனைப் பஜித்துக்கொண்டுகோபன்னுவின துவிருந்து புசித்துக்கொண்டு சத்காலக்ஷேபராயிருந்து உடனே திருநாராயணபுரத்தில் திருவைரமுடிசேவை செய்யக்கருதிப் புறப்படும்போது தானும் பாரசம்பாரதேசாஞ் செயதுக்கொண்டு புறப்பட்டுக் கோமளபுரமென்னும் கிராமத்திற்குச் சமீபத்தில் கிடக்கும்போது அவ்வூரிலிருக்கும் பரமபாகவதோத்தமிபாகிய சக்குபாயென்னும் மாத்வ ஸ்திரீ தாம் இவர்களுடன் திருநாராயணபுரம்போய பகவானைச் சேவிக்க அபிப்பிராயங்கொள்ளுதல்.

௯0. இ-ம்-பிலஹரி-தாளம்-ஆதி.

பல்லவி

சேவிக்கமனம்பூண்டாள் திருநாராயணபுரத்
திருநாளிற்பெருமானைச் (சேவி)

அநுபல்லவி.

ஆவிக்காவியாயெங்கு மேவியிருப்பவனைப்
பாவித்தவனையன்றி நாவிற்நாதவர்தங்கள்
தேவியர்தனையரைக் கூவிமாவிநோதமாயக்
கோவிந்தாவென்றேகும்ய சோவிசாலரைக்கண்டு (சேவி)

சரணங்கள்.

௧. இக்குவலயத்தின்மீது முக்குறும்பையொழித்ததா
லெக்குறையுமில்லாத பக்குவக்கபிர்நம்மு
ருக்குமணிநாதன்பாதம் சிக்கும்படிசெய்வார்சுகம்
தக்குமென்றுலோசித்திந்தச் சக்குபாய்பின்னேநடந்து (சேவி)

௨. மட்டிக்கணவன்மாமனும் அட்டிசொல்லமாமியார
தட்டிமிரட்டிக்கம்பத்திற்கட்டி முட்டியாலேகுட்டி
எட்டியடித்துக்கோபித்துக் கிட்டிப்பதத்தாலுதைத்துக்
கெட்டிக்காரியென்றிருந்தேன் பட்டிநீயென்றுதிட்டியும(சேவி)

௩. இன்னமுள்ளபந்துக்களும் என்னடியடமாவென்று
சொன்னமொழியைக்கேளாமற் றன்னபிமதத்தின்படிப்
பன்னகசயனனெழிற் பொன்னடிகளையேமனம்
உன்னவுன்னிப்பன்னிநிதம் சின்னசாமிதாசனைப்போல் (சேவி).

வசனம்.

சக்குபாய் இவ்வண்ணம் கருதி ஊர் அருகில் நடந்துகொண்டிருக்கும் கபீர் கோபன்ன முதலியவருடன் திருநாராயணபுரம்போய் வருவோம் வாருங்களென்று வீட்டில் கணவன் மாமி மாமனாரையும் பார்த்துச் சொல்லக்கேட்டு அவர்கள் கோபித்து வைது அடித்ததுமன்றி ஒருவேளை சொல்லாமல் நடந்தாலும் நடப்பாளென்று கூடத்துக் கம்பத்திலிறுக்கி முறுக்கிக் கட்டிவிட்டு உள்ளே போகக்கண்டு இவளது அன்பினால் பகவான் சதுர்ப்புஜராய் சங்குசக்கரகதாபாணியாய் பீதாம்பரதாரியாய் கிரீட குண்டல நூபுர கேயூர கௌஸ்துப ஹாராதியாபரண சஹிதராய் தரிசனங்கொடுத்து அம்மா! சக்குபாய்? நான் நிஜரூபமாய்த் தரிசனங்கொடுத்திருக்க எனது அர்ச்சா ரூபத்தில் இன்னமேன் உனக்கு இச்சையென்றருளிச்செய்ய, அது நிரந்தரமாய்ச் சேவிக்கத் தக்கின ரூபமானையால் அதில் இச்சை மாறாதென்று சொல்லக்கேட்டு, ஆனால் நான் உன்னைப்போல் ரூபிகரித்து உனது கட்டையவிழ்த்துவிடுகிறேன் உனக்குப்பதில் என்னைக் கட்டிவிடு; நீபோய் வாவென்றருளிய படியே ரூபிகரித்து கட்டையவிழ்த்துவிட, அவள் எம்பெருமானைக் கம்பத்திற் கட்டிவிட்டுப் பகவான் மாயையால் ஒருத்தர் கண்ணிலுந் தென்படாமற்போய் கோபன்ன முதலானவர் நடந்துகொண்டிருக்கு மிடம்வந்துசேர அவர்கள் இவளைப்பார்த்து உனது உடம்பு மெலிந்து நலிந்து சூடு கொண்டிருப்பானேனென்று கேட்கும்போது சக்குபாயி நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லவினவி இவளுடைய பக்தியையும் இவளுக்காகப் பகவான் கட்டுண்டதையுமெண்ணி வேதங்களுக்கும் பிரமாதி யோகிகளுக்குங் கட்டுப்படாத பரப்பிரமம் கட்டுண்டதன்றோ! இவளுடைய பாக்கியமே பாக்கியம்! இது நமக்குக் கிடைக்கவில்லையே! என்று உருகிக் கபீர்தாசரும் இராமதாசரும் சொல்லுதல்.

கக. இ-ம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கட்டுண்டானே கண்ணன்மணிவண்ணன்
கட்டுண்டானே

அநுபல்லவி.

எட்டக்ஷரத்தை எண்ணுஞ்சக்குபாய்
இஷ்டம்நிறைவேற இவணங்குபோய் (கட்டு)

சரணங்கள்.

க. வரபாக்கிய வதிசோதையாலே
உரலிலேகட் டுண்டதுபோலே (கட்டு)

உ. கறைக்கண்டன்கஞ்சன் காணாததேவன்
மனைக்குமெட்டாத மகானுபாவன் (கட்டு)

௩. மனங்குவிந்து வரவாநான்
எனதற்றவரிடம் தங்குந்தான் (கட்டு)

௪. சின்னசாமியுள்ளம் சேர்ந்தவனென்று
சொன்னசாமிகட்கும் சுலபநின்று (கட்டு)

வசனம்.

இந்தப்பிரகாரம் சொல்லிச் சக்குபாயையுங் கூட அழைத்துக் கொண்டு கபீர் முதலியவர்கள் திருநாராயணபுரத்திற்கு ஏகும்போது பகவானைப்பாடுதல்.

௧௭. வடமொழி-இ-ம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி

பாலயகிரு பாலயமாம்

அநுபல்லவி

பாரத்பரதர மங்களகர (பால)

சரணங்கள்.

௧ பரமதயாசமுத்ர ராமபத்ர (பால)
௨. பதங்ககுலகலச பாராவாரசந்த்ரராமசந்த்ர (பால)
௩. பங்கஜதளநிபலோசன சங்கரசங்கடமோசன (பால)
௪. பாபஹரநாமதேய பார்வதீசபாகதேய (பால)
௫. பங்கேருஹபவவந்தித பாதபத்மசுபசரித (பால)
௬. பாலிதசின்னசாமிதாஸ பத்மினீசமத்யவாஸ (பால)

வசனம்.

இவ்விதம் பாடிக்கொண்டு திருநாராயணபுரஞ்சேர்ந்து பாகவத கோஷ்டியுடன் பகவானைச்சேவிக்கும்போது கபீர்தாஸர் அய்யனைத் தோத்திரஞ்செய்தல்.

௧௮. இ-ம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னையெனக்களிக்காது ஞாயமா
இன்னம்மாயமா

அநுபல்லவி.

தன்னையறியாமற் றவித்துவெம்பியும்
உன்னையபிக்கய்யா வணர்க்கசுகம்பியும் (என்)

சரணங்கள்.

க.	இதராலாபத்தி	விச்சையில்லாமல்	
	இந்திரியங்களி	லென்றுஞ்செல்லாமல்	
	மதபேதமான	வார்த்தைசொல்லாமல்	
	மண்ணுடலைக்கண்டு	மயங்கிநில்லாமல்	
	சததமுநெஞ்சை	யுருக்க	
	சந்தோஷமே	பெருக்க	
	சிதநலமிருளைக்	கருக்க	
	சின்னசாமியா	யிருக்க	(என்)

வசனம்.

இவ்வண்ணம் மைவண்ணனைத் துதித்துத் தொழுது உற்சவ பூர்த்திபரியந்தம் அங்கிருந்து உடனே புறப்பட்டுத் திரும்பி வரும் போது சக்குபாய் அவர்களுடன்கூடத் தனக்கு முன் அவ்விடம்போ யிருந்த பக்கத்து வீட்டுக்காரி சஹிதையாய் வருதல்.

கச. வடமொழி-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

புனராகதா புருஷோத்தம தரிசனமதா

அநுபல்லவி.

மனஸ்ஸமாதானங்கி	ருத்வா	
மாணினீசுத்த	ஸத்வா	(புன)

சரணங்கள்.

க.	நாராயணபுரமமலம்	கத்வா	
	நாராயணமாநந்தம்	நத்வா	
	பாராயணசுகீர்த்தவிதித	தத்வா	
	பாபம் ஹித்வாபரமம்	மத்வா	(புன)
உ.	சர்வேசுவரம்	ஸ்தம்பேபத்வா	
	ஸஜ்ஜனசேவா	மத்வனிலப்த்வா	
	நிர்வாணப்ரதேய	மிதிபுத்வா	
	நிகடக்கிரஹஸ்தயா	ஸஹவத்வா	(புன)
௩.	பன்னகசயன	பிரசிதகீதா	
	பாவக்ஞபரம	குணோபேதா	
	சின்னஸாமிஸம்	ஸேவிதபூதா	
	ஸ்ரீசக்குபாயி	திவ்யயாதா	(புன)

வசனம்.

இவ்விதம்வந்த சக்குபாயை யழைத்துக்கொண்டு கபீர் கோபன் னுமுதலானவர்கள் கோமளபுரத்தின் அக்கிராரத்தின் வீதியில் பகவத்பஜனை பண்ணிக்கொண்டு வரும்போது அவ்வூராரனைவரும்வந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்க, இந்தச் சக்குபாயி புருஷனும் மாமன் மாமியும் வெளியில்வந்து பார்க்கும்போது நாலைந்து தினமாய்த் தங்கள் வீட்டில் வசித்துக்கொண்டிருந்த மாயாசக்குபாயும் மெள்ள வந்து எட்டிப்பார்க்கும்போது அவர்கள் இரண்டு சக்குபாய்களைக் கண்டு ஆச்சரியமடைந்தசமயத்தில், மாயாசக்குபாயி மறைந்துவிட நிஜசக்குபாய்தனது கிரகம் வந்துசேரக் கண்டு அவளால் முன்நடந்த சேதிகளை யறிந்துக் கொண்டு அம்மூவரும் கபீர் முதலானவர்களுடைய சந்நிதியிலுருகுதல்.

கரு. இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மோசம்போனோமே மூவரும்
மூடர்களானோமே

அநுபல்லவி

நேசமேனுடமேவர் வாசனறியாமல்
இன்னார்மீதுமேவ னென்றுகுறியாமல் (மோச)

சரணங்கள்.

க. செப்பியபடிக்குச் செய்ததென்னபொய்யோ
இப்படிச்சோதித்தா லென்னசெய்வோமையோ (மோச)

உ. சக்குபாயுருவம் துன்னியவன்றிரு
விக்கிரமனென்று மேவாமற்பெரு (மோச)

௩. திருநாளென்னச் சிறக்கியென்றுபேசி
ஒருநாழிகையையோ வோயாமலேயேசி (மோச)

ச. கணிசமில்லாமற் கண்டபடிவைது
துணையனைத்துந் தோய்த்திடச்செய்து (மோச)

ரு. களபகஸ்தூரி கந்தந்தந்துதொழு
துளபமெங்கென்று சொல்லிச்சொல்லிமுழு (மோச)

௬. தூபாதிகளைச் சுருக்காகக்கொண்டு
வாபார்ப்போமென்று வகைகவகைவிண்டு (மோச)

எ. தன்னவளுங்கோபக் தரிக்கும்படிக்கு
சின்னசாமிகூடச் சிரிக்கும்படிக்கு (மோச)

வசனம்.

இவ்வண்ணம் உருகக்கண்ட மூவரையும் நோக்கி கபீர்தாசர் அவர்களுக்குப் பக்திமார்க்கத்தை யுபதேசித்துச் சக்குபாயின் பெருமையுஞ்சொல்லி அவர்களால் பூஜைகளைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டு மார்க்கத்தை யனுவர்த்தித்து வரும்போது கோபண்ண முதலானவர்கள் கேட்க, ஸ்வானுபவத்தை வெளியிடல்.

௧௬. இ-ம்-கேதாரம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

௧. அடக்கியாண்டவனிந்திரிய — யானந்தத்தாண்டவனை
மடக்கிக்கொண்டாண்டி பேசாத — வகையும்விண்டாண்டி

௨. தனித்துநானிருந்தஎன்னை — யவன்தழுவிக்கொண்டாண்டி
இனித்தவிரவிடேனென்றுருகி — யெனக்குரைத்தாண்டி

௩. பேசாதிருப்பதுவேபேரின்பம் — பேசக்கூடாதே
பேசாமற்பேசாமலிருக்கும் — பேரின்பம்வாராதே

௪. என்றுரைசெய்தாண்டி என்னைச்சுற்று — மிருளைக்கொய்தாண்டி
அன்றுரைபொய்தாண்டி பரிபூர — ணானந்தமெய்தாண்டி

௫. ஆசையினுலுனக்குச்சம்பவித்த — தாகமென்றாண்டி
பூசைபுரிந்ததனால்வந்தது — போகமென்றாண்டி

௬. தோணுவதுபொய்யென்றொதுக்கச் — சுகமுண்டாகாதோ
காணுவதொன்றுமில்லாப்பதம்பெறக் — கஷ்டம்போகாதோ

௭. நீயாய்நானுகிநீயாய் — நீயும்நானுமாகி
நீயும்நானுமாய்கையென்றகற்றி — நிலைத்தவன்யோக

௮. இதையன்றியோகமில்லையென் — றியம்புமன்னண்
எதையுநம்பாதேயென்னை — யென்றுசொன்னண்

௯. இந்தவகைக்கலந்தபின்னுசாமிந் — கெங்குபயமென்றாண்
சொந்தமாயிந்தவகைக்கலப்பது — துர்லபமென்றான்

இதுவுமது.

௧௭. இ-ம்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பேசாதிருப்பதேசுகம்மனதே
பின்னையொன்றைக்குறியாதே என்னைவிட்டுப்பிரியாதே
ஆசாபாசத்திலழுந்தி மனதே
அங்குமிங குந்தேடித்தேடி யெங்குநிலைக்காமலாடி
வேசாறிமயங்காதே மனதே
ஜீவனென்றுஞ்சிவனென்றும் ஜீவனுஞ்சிவனென்றும்

ஆசாரியனென்றும் பாவனைபண்ணாதே
  அக்ஞானியிவனென்றும் சுக்ஞானியிவனென்றும்
பேதபுத்தியெட்டாதே நிர்விசேஷ
  பிரமத்துக்குப்பேதமில்லை கர்மத்துக்குண்டென்றுஞ்சொல்லை
நிதானித்துநீதானே கண்டுகொண்டு
  நிலையாமலிதைத்தள்ளி யலையாதே துள்ளித்துள்ளி
எழுந்துலச்சைகெ[illegible] பரம்பொருள்
  எட்டுதிக்குந்தேடினாலுங் கிட்டுமோகிட்டாதுமேலும்
வானம்காணக்கோபுரமேறும் வாறுபோல
  வாதஞ்செய்துபராநந்த போதத்தைவிடாதேயந்த
மகாதெய்வமந்தர்யாமியை பிழைக்கடை
  [illegible]துவிசாரியஞ்செய்யும் அருந்துவினையைக்கொய்யும்
ஏகசாக்ஷியான வழக்கையதிகாரி
  எடுக்காமற்றானேவிட்டு விடுக்காதேபாடுபட்டு
ஒன்றுதானென்றாலு மிரண்டைப்பாரிந்த
  ஊமைசின்னசாமிசொன்ன தாகையாலதிகமென்னப் (ம்பசா)

க௮-ம்-சங்கராபரணம்-தாளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

பாழுந்தெய்வத்தைநம்பிப் பாழாய்ப்போனேனே
பாதேசியானேனே

அநுபல்லவி.

சூழும்பவமதிக துக்கமென்றடமாகத்
தொலைத்துக்கர்மபந்தத்தைக் கலைத்திடமாக (பாழு)

சரணங்கள்.

அளவில்லாதாசைகொண்டலைந் தெங்கெங்குஞ்சென்று
அவஸ்தைப்படும்வகையை யகற்றிநிலைநின்று
குளவிதன்னிறமாக்கும் கொள்கைபோலநன்று
கொடுக்கும்பரமசுகங் கொண்டிருக்கலாமென்று (பாழு)

மானிநான்ஞானிய மந்திரத்தைத்தேகம்
மறந்திருக்கச்செபித்த மகிமையின்பரிபாகம்
ஞானியக்காரன்வீடு ஞானியமென்றபோகம்
சொன்னபடிக்கிருந்த [illegible]

கூ. தானிறக்கமருந்து தானேதின்றமுழுறிக்கும்
ஜடருண்டோவெனுமுறை தானெப்படிசஹிக்கும்
நானிறக்கமருந்து நானேதின்றுவஹிக்கும்
நலத்தோடசின்னசாமி நாடிக்கூடிச்சுஹிக்கும் (பாமு)

வசனம்.

இப்படி சுவாநுபவத்தை வெளியிட்டுக்கொண்டுவந்த கபீர்தாஸரோடு கோபன்ன முதலானவர்கள் மார்க்கத்தில் ஓர் நதிதீரத்தில்வேறேயிரங்கித் திரைகட்டிக்கொண்டு தளிகை பிரயத்தினம் செய்யும்போது கோபன்ன தீர்த்தமாடி நெல்லிமரத்தடியில் திருவாராதனம் செய்துக்கொண்டிருக்கும்போது கபீர்தாஸர்வந்து சீதா லட்சுமண சமேத ஸ்ரீராமவிங்கிரகத்தைத் தூக்கி நதிசலத்தில் விட்டெறியக்கண்டு கோபன்ன மனம்தளர்ந்து என்குலதனத்தைவிட்டெறிந்தீரேயெனக்கு என்ன கதியென்று சொல்ல, உமது குலதனமானால் நீரழைத்தால் வருமென்ன, அவர் சொல்லைக்கேட்டு கோபன்னமிகவும் பாடியும்வராதிருக்க உடனே கபீர் அழைக்க, தக்ஷணம் மூன்று விக்கிரகங்களும் நதிஜலத்திலிருந்து கிளம்பிப் பூஜாஸ்தானம் வந்து சேரக்கண்டு, சந்தோஷங்கொண்டு அடிபேனுக்கு இந்த அநுபவம் வரவில்லையென்று பத்தியுடன் பிரார்த்தித்துக் கேட்கும்போது சகுணபத்தியூர்ஜிதமாய் பகவச்சாக்ஷாத்கரம் கிடைத்தபின்பு கிடைக்குமாகையால் அதற்கு தகுந்த சாதனம் செய்யுமென்று உபதேசித்துக் காசிக்குப்போகயோசித்து அவரைநேசித்து எல்லோரும்பூஜித்து மந்திரத்தையாசித்துஜகத்குருவாய்ப் பிரகாசித்து இருப்பிடஞ்சென்று தன் குருவாகிய இராமாநந்தரைக்கண்டுவணங்கிக்களிகொண்டிருக்க, இங்குகோபன்னபத்ராசலம் வந்துசேர்ந்து பகவத் கைங்கரியபரராய் எழுந்தருளியிருக்கும்போது பன்னிரண்டுவருடமும் பூர்த்தியாக இவரது இளையமாமனார் பாட்சாவிடத்தில்சித்திரக்கதைகளைச்சொல்லிகொண்டிருந்தகௌரவத்தால் சுபேதார்களிடத்தில் வருடந்தி மமொருதரம்போய் அவர்கள் கொடுக்கும் பொருள்களைப் பெற்றுக்கொண்டு சுகசீவனம் செய்துக் கொண்டிருந்தவழக்கத்தின்படி அவ்வருடமும்மற்றசுபேதார்களிடத்தில் விசேஷபொருள்களைச் சம்பாதித்துக்கொண்டு பத்ராசலம்வந்து ஓர்வீட்டிலிறங்கித் தனது சேவகனை நோக்கிக்கோபன்னவைக் கையோடழைத்துக்கொண்டு வாவென்றனுப்ப, அவன் அந்தப்படியே சொல்லக்கேட்டுத் திருவாராதனஞ்செய்துக்கொண்டிருந்த கோபன்னஇப்போதுவரச் சரிப்படமாட்டாது; இதுவரையில் பார்க்கவேண்டுமென்கிற அபிப்பிராயமிருந்தால் அவனையிங்கே வரச்சொல்லுபோவென்று சொல்லக்கேட்டு, அவன் அப்படியே வந்துசொல்லக் கோபித்து அப்போதே புறப்பட்டு அருகிருந்த அவ்வூரில்போயிரங்கிப்போஜனம்பண்ணிக்கொண்டு மறுநாள் பாட்சாவிடமபோய் சித்திரக்கதைகள் சொல்லிக்கொண்டிருக்கும்போது பாட்சா இவனை நோக்கிவெளியில்சஞ்சரித்துவந்தீரே எங்கெங்கிருந்த சுபேதார்களுடைய குணங்கள் எவ்விதங்கள் அதைச் சொல்லுமென்றுகேட்க, இவன்மற்ற சுபேதார்களெல்லாரும்

மகாயோக்கியர்கள் பத்ராசல சுபேதாரானை கோபன்னுமாத்திரம்மிக வும் அயோக்கியனாய் சர்க்கார்பிரீதியில்லாமற் பணத்தைத் தாறுமாறு செய்து தங்களிடத்தில் சொல்லிப்போனபடிக்குப் பனிரெண்டுவருடம் பூர்த்தியாயும் பணத்தைச் செலுத்தாமலிருக்கிறானென்று கார்ப் பண்யத்தால் சொல்ல தக்ஷணம் முன்மொழியைக்கொண்டு தாகீது பிறப்பித்து இரண்டுசேவகர் வசமாய்கொடுத்து நாளன்றையதினம் கோபன்னுவை நம்மிடம் ஹாஜர்படுத்தவேண்டியதென்று சொல்லக் கேட்டு, நாளையதினங்காலையில போவோமென்று சேவகர் வீடுபோய்ச் சேரமுனிகள் வீடுவந்ததக்ஷணம் கோபன்னுவினிடத்து அன்பினால் சேதியை இன்றிரவிலேயே தெரிவிக்கவேண்டுமென்று கருதிஒருபிராமணனையனுப்ப அவன் அதிவேகமாய் இராத்திரி பனிரெண்டுமணிக் கெல்லாம் கோபன்னுவினது திருமாளிகைவந்துபகவதபஜனம்பூர்த்தி யானபின்பு கீர்த்திமிகுந்த கோபன்னுவை நோக்கி ஆர்த்தியுடன் பிராமணன் சொல்லுதலு.

கக. இ-ம்-இந்துஸ்தான்காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

ராமதாசரே ராம
நாமநேசரே

அநுபல்லவி.

காமதாசன்	மாமன்பண்ணிய	
கலகமீது	காணும்புண்ணிய	(ராம)

சரணங்கள்.

க.	செல்வமென்ப	தென்னமெய்யா	
	தெய்வபக்தி	யென்னபொய்யா	
	பல்வகை	மதியைக்கொய்யாப்	
	பாவியென்ன	செய்தானையா	(ராம)
உ	புருஷபாவ	புருஷனொன்றுவேதா	
	படைக்கவந்த	பாதகனெடுவாதா	
	வருஷக்கோறுக்	தருவதும்பாலேதா	
	வதனுக்கு	முதலிடலாகாதா	(ராம)
ங.	மேதா	விகளாகியபேரும்	
	விளங்கும்	வேதமுடிவிலூரும்	
	சீதாபதி	திருவடிசேரும்	
	சேதனர்க்கேது	தீதுயாரும்	(ராம)
ச.	பலபலவித	கலமருளுங்கோசல	
	பதிரகுபதியே	கிரிபத்ராசல	(ராம)

௪. சங்கைநமே விலங்கைவிபீ
ஷணனுக் களித்தசெழும்
செங்கையா விருக்கநிதம்
சின்னசாமி தாசன்தொழும் (ராம)

வசனம்

இவ்வண்ணஞ்சொன்ன பிராமணனுடையவார்த்தையைக்கேட்டு ராமதாசர் தாமரையிலையின் தண்ணீர்போல டோலாயமான மனஸ்தராய்த் தளரும்போது சமீபத்திலிருந்த பெரியோர்கள் இவருக்குத் தைரியஞ்சொல்லுதல்.

உ0 இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கோபன்ன கோபன்ன
ஆபன்னரக்ஷகனை மறவாத (கோப)

அநுபல்லவி.

ஸ்ரீபன்னகசயனனருள் நிறம்பிய
சித்தமொத்தவன் திருவடிநம்பிய (கோப)

சரணங்கள்.


க. அகிலேசுவரி ஜானகியென்னுந்தாய்
அடிபணிந்துநல் லகத்தினிற்றுணிவாய்
பகிரங்கமாகப் பாக்ஷாவிடம்போய்
பாக்கியைசல் பண்ணிவாருமோய் (கோப)

உ. சிந்தையென்பது ஜெகத்தினிலெவருக்கும்
க்ஷேமகரமன்று தேகத்தையுருக்கும்
எந்தைமுகுந்தனை யிணங்காதிருக்கும்
ஈனருக்கன்றோ விடாமெபருக்கும் (கோப)

ங. சுந்தரமாம்ஜப சூத்திரங்தன்ன
துளசிமணிமாலை களத்தினிலென்றுமின்ன
சந்ததம்பரமானந் தபகவச்சின்ன
சாமியாமுமக்குப் பூமியிற்பயமென்ன (கோப)

வசனம்.

இந்தவகை ஆபன்னசரண்யராயும் ஆஸ்ரிதஜனரக்ஷகராயும்நித்ய புண்யராயுமிருக்கின்ற எம்பெருமானுடைய திருவடியை நாம்முக்கியமாய் நம்பியிருக்க நமக்கேது பயம் அஞ்சாதேயுமென்று மறுபடியும் அந்தப்பெரியோர்கள் கோபன்னாவைப் பார்த்துச் சொல்லுதல்.



விருத்தம்.

பண்டியாக்கியவல்க்கியபகவான்வைசம்
　பாயனமுனியினிடம்வந்ததுபோல்திவ்ய
தண்டுழாய்முடி விஜயராகவன்வாழ்
　சம்பாதியின தநுஜன்தீர்த்தமென்னும்
வண்டுலாவியசோலைநகரில்யாத
　வப்பிரகாசன்சமர்த்தயதிவன்பால்
அண்டிகொளாமறைப்பொருளையறியவேண்டி
　யடுத்திட்டார்அத்யயனந்தொடுத்திட்டாரே.

உ௩. இ-ம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

யாதவப்பிரகாசனிடத்தில் ஓதவந்தாரே யாத

அநுபல்லவி.

வேதசாஸ்திரங்களை யற்புதமாய்
விதம்விதமாய்ப் பதம்பதமாய் யாத

சரணங்கள்

க. நமஸ்காரம்புரிந்து அகம் மமகாரஞ்சரிந்து
கமனீயமலர் களடிசொரிந்து
கலைவல்லானவனென்று தெரிந்து யாத

உ. சுபார்த்தமேதும்விடுத் தபார்த்தவாதும்
உபாயத்தின் னுரைசெய்தெப்போதும்
ஓங்கும்வாதிகள்பின் வாங்கும்படியோதும் யாத

௩. தன்னகஞ்சேர்திக்கும்வகை சொன்னதைச்சாதிக்கும்
சின்னசாமிதாஸன் தினமும்மே திக்கும்
சிந்தையுகந்தவர் சிந்திக்கப்பேர்திக்கும் யாத

விருத்தம்.

இந்தவிதங் குருவினிடம் படிக்குநாளில்
　எண்ணெயொரு தினமிவருந் தேய்க்கும்போதி
லந்தமுருக் தனையவ னிகழ்ந்துபேச
　அகங்கலங்கி முகம்வாடி யழுதகண்ணீர்
சந்ததமாய்ப் பெருகித்துடை யுருகக்கண்டு
　சங்கடங்கொண் டேசிலநாள் கழிந்தபின்னே
எந்தவிதத் திலுமிவரைக் கொல்லமோசம்
　எண்ணினன் யோசனையாய் [illegible]

உச. இ-ம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

எண்ணினன்-யோசனை-பண்ணினன்

அநுபல்லவி.

மண்ணிலிவனிருந்தா — லிவ்வண்ணம்
மதமீட்டருமென்றே — பெண்ணம் (எண்)

சரணங்கள்.

ந. மங்கைகாந்திமதி — மைந்தனையுள்ள
சங்கையில்லாமல் — கங்கையில்தள்ள (எண்)

உ. சாஸ்திரங்கற்ற — சந்நியாசிநல்ல
பாத்திரிவைக்க — படமாய்க்கொல்ல (எண்)

ந. தன்னடியாரொடு — சந்தோஷமேவி
சின்னசாமிபதந் — தெரியாப்பாவி (எண்)

விருத்தம்.

வந்தியா நந்தனனென்பது போலென்றும்
வாக்கியார்த்தஞ் சொல்லியவன் வழியிலேக
பந்தியா யடியார்கள் வரக்கோவிந்த
பட்டரவ னதுநாடகஞ் சொலையிடைந்தே
சந்தியா வந்தனஞ்செய் பாமலங்கே
தவித்தெங்குந் தீர்த்தமில்லா திருக்கவாடி
விந்தியா டவியிலொரு மரத்தின்கீழ்
வெதும்பினார் கண்களினீர் ததும்பினாரே.

உரு. இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னமாய்வருமோ துணை
ஈஸ்வரக்கருணை

அநுபல்லவி.

அன்னமாகாரமில்லாமல் — மனத்தில்
அச்சமடிக்கடிமிச்சமாம் — வனத்தில் (என்)

சரணங்கள்.

க. புலியரிகரடிகள்வாசம் — புரிவதன்றோவித்தேசம்
கிலிவிடுவதுபேயாசம் — கிட்டுமன்றோமோசம்
சலித்திடாமற்படிக்குச் — சின்ன
சாமிதன்னிடமே — துன்ன
மலினமகன்றுப்ர — சன்ன
மதியோடெந்தநாளும் — உன்ன (என்)

விருத்தம்.

இப்படியே யிளையாழ்வான் துதிகள்பேசி
யிருள்சூழ்ந்த விடத்திலிருந் திடவன்பாக
மைப்படிக்கண் பெருந்தேவி யுங்கஜேந்திர
வரதனும் வேடுவச்சியும் வேடனுமாய்வந்தே
செப்படிவித்தை யைப்போலக் காஞ்சிந்தசஞ்
சேர்த்துமறைந் திடவிழித்தாச் சரியங்கொண்டு
மெய்ப்படிந்த மனத்தினராண் டவனைநன்றாய்
வேண்டினார் பவக்கடலைத் தாண்டினாரே.

உசு. இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தபக்ஷம்மறவாதே
எந்தவேளையுமென்மீதே

அநுபல்லவி.

சந்ததமுனது சரணாரவிந்தம்
சிந்தைதனிலிருந்தச் செய்தாலேதுபந்தம் (இந்த)

சரணங்கள்.

க என்னைச்சொல்ல வுன்னித்துகை
யில்லாவடி யாரொடுசிகை
தன்னொடு பூணவில்லாப்பகை
சந்யாசியி னுள்ளம்புகை (இந்த)

உ. துன்னபயங் கொண்டேகுகை
சோர்ந்திடு மக்கணமேநகை
சின்னசாமி கொள்ளத்தகை
சோராமற் செய்திடும்வகை (இந்த)

விருத்தம்.

இளையாழ்வா னிதவிதந் துதிக்கவங்கே
யிவரைவிட யாதவப்ர காசனெண்ணம்
விளையாமனங்கலங்கிக் கங்கையாடும்
வேளையந்தக் கோவிந்த பட்டர்கையில்
முளையாத சிவலிங்கம் மாயையாலே
முளைத்திடக்கண் டுடன்குருவி னேவல்கொண்டே
வளையாத வழிவந்து ப்ரதிஷ்டைசெய்து
வலம்வந்தார் மழலைமங் கலம்வந்தாரே.

சந்த விருத்தம்.

மழலை மங்கலம் வந்து விழிகளாய்த்
தழலைப் பானுவைச் சந்த்ரனைத் தாங்கினான்
கழலை நம்பிநற் களத்தி நாயகன்
நிழலைப் பற்றியே நேசித் திருந்தனர்.

உஎ. கட்கா-இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

உடனேநடந்ததைக்கேளும்-அநுபவமே
ஓகோவைஷ்ணவமே

அநுபல்லவி.

ஜடமதியாம்பர தவப்பிரகாசன்
தடமடங்களுங் கடந்ததீசன்
ராமாநுஜனை ரட்சித்ததறிந்தே
சீமானென்றெண்ணிச் சினமதையெறிந்தே (உட)

சரணங்கள்.

௧. காஞ்சிவந்திவர் கமனிய்யதாளில்
வாஞ்சைகொண்டிவர்க் கோதிவருகின்றநாளில்
ஆளவந்தாரந்த அரங்கத்தைவிடுத்தே
காளமுகிற்பரவுங் கச்சிநாடுத்தே
இவரைக்கண்டுமகிழ்ந் திருதயந்தணிந்தே
தவத்தோர்க்கருள்வர தனைக்கண்டுபணிந்தே (உட)

௨. அரங்கமேகஇங் கரசன்சுதனை
பிரமராட்சசொன்று பிடித்திடவதனை
துடைசெய்யுங்குருவதைத் தடுத்ததுஜாட
உடையவர்வாக்கிய முணர்ந்துவிட்டோட
மகிமைகண்டவனும் வைஷ்ணவனாகி
மகிழப்பெரியதிரு மலைநம்பியேகி (உட)

௩. கோவிந்தபட்டரைபாட் கொண்டதைக்கண்டார்
மாவிந்தையென்றெண்ணி மனக்குறைவிண்டார்
தெய்வாதீனமென்று தெரிந்தருள்பூண்டார்
மெய்மகிழ்ந்தன்பரை மேன்மையிலாண்டார்
பொன்னடிகளைநம்புஞ் சின்னசாமிதுரிதம்
பன்னும்பஞ்சாய்ப்பறக்கப் பண்ணுமிவர்சரிதம் (உட)

விருத்தம்.

இவ்வகையிளையாழ்வானும்
செவ்வையாய்த்தேறிமுன்னோர்
எவ்வகையியம்பினாரோ
அவ்வகையநுஷ்டித்தாரே.

௨௮. இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நம்பிதிருவடியை நம்பினோர்
நற்கருணைநிதி ரம்பினோர்

அநுபல்லவி.

எம்பிராணியம்பிட வினவிபெச்சி
யிருமூன்றுரைபொரு ளருளியதிருக்கச்சி (நம்பி)

சரணங்கள்.

௧. பெண்டுசெய்தமூன்று பிழையாலில்லறவலை
பிரிந்துபெருமானைவல் பெற்றுக்காஷாயக்கலை
தண்டுங்கொண்டுமேதுராங் ககத்தேரிசென்றநிலை
சப்தசங்கசங்கராங்க தாரகிப்பெரியதிருமலை (நம்பி)

௨. ஹவிதவைதனரா யாங்கவுரைக்காட்டியூர்
அறியும்படிமூன் றுவர்த்திரிமாட்டியூர்
வகிமுதலாமமைபயர் வகிக்கின்றிமேட்டியூர்
மகிமைபெற்றதென்று மைமுங்குந்திருக்கோட்டியூர் (நம்பி)

௩. பரிமுகதேவனையு பாசித்திருத்தப்படியை
பரிசுத்தஞ்செய்யவாதம் பண்ணித்திரிதடியை
தரித்துக்கொண்டசின்ன சாதிதாசன்முடியைத்
தாளாலலங்கரிக்குஞ் சாமிராமனடியை (நம்பி)

வசனம்

இப்படிக்கு நம்பிகளுடைய திருவடிகளையாஸ்ரயித்து ஸர்வக்ஞராண உடையவர் சோழராஜன்சபையில் வித்வான்களை ஜயிக்கிறநிமித்தம் அனுப்பப் புறப்பட்டு ஸ்ரீகூரத்தாழ்வானது பெருமையைத் தெரிக்கமட்டுஞ் சொல்லுகிறேன் கேளும் கோபண்ணாவென்று அந்தப் பெரியவர் சொல்லுதல்.

௨௯. இ-ம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

கூரத்தாழ்வானைப்போ லேது
குவலயத்தின் மீது

அநுபல்லவி.

சீரத்தாலகில திரவியங்களோடும்
தேகாபிமானமு மாகாதென்றுவிடும் (கூரத்)

சரணங்கள்

மடியிறுகனமிருந்தால் வழியிற்பயம்
  வருமென்றுரை — பேசி
மனையாளிடமிருந்த தங்கவட்டிலை
  வாங்கிப்போங்கி — வீசிச்
செடியிலெறிந்துவிட்டு ஸ்ரீரங்கத்திற் — கிடந்த
திருக்கோலத்தைக்கண்டு சேவித்திட — நடந்த (கூரத்)

மண்ணையாளுஞ் சோழராசன சபையினில
  வாதிகளை — வென்று
வாசுதேவனே பரனென்று சாதித்த
  வனையறிந்தவ — னன்று
கண்ணைவாங்குவேனென்ன கசடனுனை — யறிந்த
கண்களைநானென்று கழற்றிவிட் — டெறிந்த (கூரத்)

காமாதிகளா மாதமசத்துருக்
  களைநன்றாப் — ஜயித்தாக
கருணைநிதியதிபதியை யாஸ்ரயித்தாக
  கலைகளிலதி — ஸயித்த
ராமாம்சமானதால் ரங்கனெனி — யாரந்த
ரமணிய்யசரண ஸரசிஜத்தைச — சேர்ந்த (கூரத்)

திருவரங்கத் தமுதனைரயுடையவா
  திருவடிக்கா — ளாக்கித்
திருவரங்கத் தருமாதிகாரமிட்டுத்
  தேசிகன்சீர் — தூங்கித்
கருமபுத்திரனெனனுந் தனதுசின்ன — சாமி
தாசனுக்குமபாரதத்துவஞ்சொன்ன — சாமி (கூரத்)

வசனம்

அங்க ஸ்ரீ கூரத்தாழ்வானது திருக்குமாரராகிய பட்டர் பெருமையைக் கூறல்.

கூ0. இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பட்டருக்கேயடிமை — பட்டோம்
பரமததிலாசை — விட்டோம்

அநுபல்லவி.

கஷ்டமில்லாகலம் — கண்ணுஞ்சராசர
நாதன்ஹரியென்று — நாட்டமேபாசர(பட்ட)

சரணங்கள்.

க. பிக்காங்குணமென்னுமலையிற் சிக்காமலவாவலையில்
புக்காமலசத்கலையில் சொக்காதுதனதுநிலையில
எக்காலத்திலு மிருந்துபிரபந்த
இச்சைமிகுமார்வா னிதயமுகந்த
அங்காரவடிசல வக்ரமமாயிந்த
அவனிமுழுது மானந்திக்கவந்த (பட்ட)

உ. உர்வியோகநிஷ்டனை துர்வழக்கினிலிஷ்டனை
கர்வமிகுந்துஷ்டனை சர்வக்ஞபட்டனை
நிர்மூடனுங்க னைத்தொருகரம்
நிறைந்தமண்ணால் நிக்ரஹித்தப்புரம்
பருவமதி பாவிமவசரம்
பாவிக்கும்பாக்யத்தைப்பார்த்து நிரந்தரம் (பட்ட)

ந. ஏகசந்தக்ராகி தீகரரனுப்போகி
நாசமில்லாயோகி சேகரென்றன்பாகி
லோகமெல்லாந் துதிக்கவேயென்ன
மேரான்புகள் நூர்த்தானபின்ன
ஸ்ரீகரிதானென்று சிநதிக்கும்ப்ரபன்ன
சின்னசாமிதாஸ சித்தப்ரசன்ன (பட்ட)

வசனம்

இந்தப்பட்டர் முதலிய பாகவதோத்தமர்கள் பரமாசாரியரான பாஷ்யகாரருடைய பாதாரவிந்தத்தைப்பற்றிய பாக்கியத்தைப் பகர்தல்.

கக. இ-ம்-உசேனி-தாளம்-ரூபகம்

பல்லவி.

தாசரய்யா தாச நேசரய்யா

அநுபல்லவி.

பாசமான மூர்த்தியாகிநிஜ
பக்தரைப்பாலனம் பண்ணும்ராமாநுஜ (தாச)

சரணங்கள்

க. வாசவகம லாசனஹர
வருணதிலோக ரக்ஷணதத்பர
கோசலேசுவர குணஸாந்த்ர
குதூஹலமானஸ யதீசுவர (தாச)

உ. மகிமைபெற்றபாவனி சுரதுனி
வந்தபனிமலர்ப் பதஞானக்கனி
அதிபதியாகையா லாரையுந்தனி
யானந்தவெள்ளமாட்டும் லட்சுமணமுனி (தாச)

விந்தையாயரிகளை வெல்லும்ஸாயக
விமலநாம மலவாரதாயக
சிந்தைசின்னசாமி தாசாதிநாயக
சேதனேபய விபூதிநாயக (தாச)

வசனம்

யாத்திரை பாகவதகோஷ்டியுடன் உடையவர் திக்குவிஜயஞ்செய்தல்.

கூஉ. இ-ம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

சஞ்சாரஞ்செய்தார் சத்க்ருஸபமெய்தார்
சங்கைகளைக்கொய்தார்

அநுபல்லவி.

அஞ்சாவாதிகள் ஐஞ்சாநிலத்தினில்
பஞ்சாய்ப்பறக்கும்படித் தஞ்சாவூர்தலத்தினில் (சஞ்சா)

சரணங்கள்.

கும்பகோணந்திருந் கோவிலூரிலொரு
கூட்டமாகவந்து கூடிவாதிக்கவரு
சம்பிரமஜனமெல்லாந் தம்பித்திருந்தகுரு
சரணந்தான்சரணென்னப் பொங்கும்
கருணைமயவருணைலய ரெங்கும் (சஞ்)

வெள்ளைச்சாத்தின்கொண்டு வேகமாநடில்லி
மேவிக்கண்ணனையிட மேவியிருக்கச்சொல்லி
நொள்ளைக்காலமுதற் கூடும்பூபிவல்லி
நொஞ்சியமதக்கெஞ்சியதைத் தொழுதும்
மிஞ்சியபூவஞ்சியுடல் முழுதும் (சஞ்)

நந்திக்கிராமம்ஜநந் நாதங்கோவர்த்தனம்
நாராயணனொடு நாலும்வாழும்வனம்
இந்தத்தேசமுமின்ன மெந்தத்தேசமுங்கனம்
யோத்துக்கிருபைபார்த்தவாவ ரார்த்தி
தீர்த்துமதஞ்சேர்த்திடுங்குரு மூர்த்தி (சஞ்)

அப்பனுக்குச்சங்காழி யளித்துநீட
அன்னைவாணியும்விதிவஷ்டாத் வைதத்தைக்கொண்டாட
செப்பரியவின்பொடு சின்னசாமியும்பாட
செல்வங்கள்பல்வகையும் அமலமதி
நல்வழியாங்கல்விதந்த யதிபதி (சஞ்)

மங்களம்.

கூகூ. இ-ம்-நன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

மங்களம் ஸ்ரீராமாநுஜாசார்யருக்கு மங்களம்.

அநுபல்லவி.

பிங்களவஸரை ரவி பிரமர்க்குமதிசய
பெருமானென்றேத்துமெம் பெருமானுருக்குஜய (மங்)

சரணங்கள்.

நாட்டார்தனதுபதம் நம்பத்தடையவர்க்கு
நண்ணுமத்திவ்யஞானம் நல்கியடையவர்க்கு
காட்டிநிரங்கொஹித்துக் களிக்கும்விடையவர்க்கு
கனபத்தியுண்டாக்கிக் காக்குமுடையவர்க்கு (மங்)

உ. உலகைப்பாவனஞ்செய்ய வுதித்தசுரதுனிக்கு
ஒப்பிலாதமகிமை யுதவியபத்திமினிக்கு
நலங்களைப்பாடியா நந்திக்குஞ்ஞானக்கனிக்கு
நாகேசுவராவதார லட்சுமணமுனிக்கு (மங்)

கூ. ஆசூரிகேசவா ரியகுமாரருக்கு
அகிலவாதிகளையு மகற்றியதீரருக்கு
தேசுலாவுமெதி சேகரோதாரருக்கு
திசைமுகனுங்கொண்டாடும் ஸ்ரீபாஷ்யகாரருக்கு (மங்)

சு. தன்னடிக்கமலமே சரணென்றுதாழ்வாருக்கு
சகலசௌபாக்கியமுந் தந்தென்றுஞ்சூழ்வாருக்கு
சின்னசாமியைப்போற் சீர்தந்துவாழ்வாருக்கு
சீமையெங்கும்புகழும் ஸ்ரீயிளையாழ்வாருக்கு (மங்)

உடையவர் சரித்திரம் முற்றிற்று.

வசனம்

ஆபன்னசரண்யன் சேஷாவதாரபாஷியகாரரை இவ்விதங் காப்பாற்றினனென்று அந்தப் பெரியவர் சொல்லியுஞ் சிந்தைதெளிந்துந் தெளியாததுமாய்க் கோபன்னு எம்பெருமானைத் துதித்தல்

கூஉ. இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி

பல்லவி.

இதம்புரியவேணும் உனதுகிருபை
இனிதெரியவேணும்

அநுபல்லவி.

சதமயுதக்கொடுநி யுதமர்ப்புதம்நிர்ப்புதம்
சங்கஞ்சிலவழித்துச் சார்ந்தேனுனதுபதம் (ஹித)

சரணங்கள்.

பனிரண்டுவருஷத்திற் பலகைங்கரியம்பண்ணிப்
புனிதனுனநினைத்துப் பூர்த்திசெய்ததையெண்ணி (ஹித)

கிடைக்கிடும்பதமிந்தக் கெடுவிலென்றுயோசித்துத்
தடையின்றிப்பொன்னுனக்குத் தந்ததையோசித்து (ஹித)

உமையவளுமனு மோதும்நாமதேயா
சமயத்திற்கைவிடாதே சாமியாபத்ஸகாயா (ஹித)

எந்தவேளையினி யென்னவருமோபின்னேன்
இந்தவேளைதானே யெனதபிப்பிராயஞ்சொன்னேன் (ஹித)

ரு. அதிதூரவெள்ளத்துக் கணைகட்டுவதுபோலே
மதிபலத்தாலேமுன்னம் மனுசெய்துகொண்டதாலே (ஹித)

௬. [illegible]காலமெண்ணுமலா மோதித்திருந்துதனம்
சர்க்காரதென்றிப்போது தளர்கின்றதென்மனம் (ஹித)

௭. வானந்தருமளவும் மானத்துடனேநிதம்
தானதருமஞ்செய்யத் தலைக்கட்டும்மனோரதம் (ஹித)

௮. மனையாளருகில்வந்துந் தினையளவுமுடமை
தனையிடாமலிருக்கு மெனையாள்வதுன்கடமை (ஹித)

௯. சின்னசாமிதனாங்கு சேலவனென்றுசொல்லும்
உன்னருஞ்சுதரைப்போ லுன்னிப்பகலுமல்லும் (ஹித)

வசனம்.

என்று மிகவும் மனந்தளர்ந்து ஐயனைப்பாடும் இவரைநோக்கி பருகிலிருந்த பெரியோர்கள் அநேகவிதமாய்த் தைரியஞ்சொன்ன பின்னும் கோபன்று நன்றுப்த் தெரியாதிருக்குதல்.

விருத்தம்.

இவ்வகைப்பெரியோரோது மியல்பானவார்த்தையைக்கேட்
டவ்வகைராமதாஸ ரையனைநினைத்துக்கொண்டே
யெவ்வகைப்பாக்கிதீரு மெ[illegible]சிந்திக்கப் பின்னாள்
செவ்வையாய்ப்பாச்சாவிட்ட சேவகர்வந்திட்டாரே.

௩௫. இ-ம்-வசந்தா-தாளம்-ஆதி.

பல்லவி.

பாச்சாமதமிதுபாரும்
பூக்கிக்குவழிசொல்லவாரும்

அநுபல்லவி.

பேச்சாகிலும் பேசாமற் பணத்தையுங்கள்
பெருமானுக்கருளப்பெறுஞ் சினங்கொள்ளுமெங்கள் (பாச்)

சரணங்கள்

௧. ஏராளுண்டாம்பின்னே கைகூடித்
திருந்திறையிரப்பிரான்மேன நீர்
சேராய்த கருவைதாமழுந்தீன் சொன்னது
தெருநிலில்லேபோய திம்ன்மேன என்றம்
பாராளுமரசனைப் படுத்தவர்பயக்கரை
சேரவொன்றுணாப்பது தெரியாதோ துரை (பாச்)

௨. திவானமென்பதுநமக் என்று
சிந்தைபொருக்கா தங்கொண்சம் கூட
மேவிதகவல்புராசம் இன்று
விளைந்ததுகாணுமப்பாபராசம் முழுதும்
தேவாம்சமேகர சிதவினன்றுமன்றும்
பாவாகத்தடில்லி பதிதாமேகூடினென்னும் (பாச்)

௩. ஜெகதீசுவரனிடத்திப்பொருளைக் கொண்டு
செலுத்தியுமனுபயவிருந்தா யுடன்
அகற்றவாமேனையவனருளை இதில்
அறியவேனுமுமதுதெருளை ஏதுக்கும்
பகவானை யோகப்பிரி பாடும்விசுவாசமீர
சுகமாகச்சின்னசாமி தொழும்ராமதாசமீர (பாச்)

வசனம்.

இவ்விதமாகப்பாட்சாவின தமேசவகரிருவரும் அழைக்கும்போது பிழைக்கவுந் தழைக்கவும், பெருமானைக்கோரிப் புறப்பட்டுப் பாட்சாவினிடம்போய்ச் சேர்ந்தார். அப்போது இவரைநோக்கி முன்னம் சொன்ன வார்த்தை பின்னமாகும்படி யின்னம் பணத்தைச் செலுத்தாதிருப்பதென்ன புத்தியென்று பன்னக்கேட்டு இவர் நன்னயமாகச் சலாஞ்செய்து பணம்முழுதும் பிராமணசந்தர்ப்பணமாயும் பகவதர்ப்பணமாச்சுது உமது பாவமெல்லாம் போச்சுது பாக்கியமும் வாச்சுதென்று இவர் சொல்லக்கேட்டு அரசன் நகைத்து உடனே கோபித்துக் கிட்டவந்து மட்டகல்வியாக்குதுபோதும் அந்தமட்டும் மகாயோக்கியந்தான் பாக்கிக்கு வழிசொல்லும் சர்க்கார்பணத்தையாவது செலுத்தும் அல்லது ஜாமீனாவது சொல்லிவையும் இல்லாவிட்டால் பனிரண்டுவருஷம் பந்தேகானாகிடைக்கும், சந்தேகமில்லை யென்று சொல்லி வினவி இவர் ஐயனைநினைந்து அகம் விகசித்துடனே யாக்கினைக்குப்பயந்து அதனால் நயந்து உபசாரவார்த்தைகள்சொல்லி பணமும் ஜாமீனுங் கிடையாது பந்தேகானா பத்ராசலத்திலிருக்கவேண்டு



பாட்சா கொலுவு.

கோபன்னு காராகிருகத்திலிருந்தே பகவானைத் ஸாக்ஷாத்கரித்தல்.

மென்றும் நித்தம் கோதாவரி ஸ்நானமும் பத்ராஜல ராமபத்ரதரிசனமும் க்ரஹத்திற் போசனமும் நடக்கவும் மற்றகாலத்திற் பந்தேகானுவிலிருக்க உத்தரம் தரவேண்டுமென்றுகேட்க, ஆத்மாராமப்ரேரேபணத்தால் அவனப்படியே உத்தரந்தந்து இவருக்குப்பதிலாக வேறொருவன் பேருக்குச் சுபாசந்நதுகொடுத்து இவரைநோக்கி இந்தப் பனிரண்டுவருஷத்தூர்க்குள் பணத்துக்கு வழிசொல்லாதபக்ஷத்திற் பதின்மூன்றும் வருஷம் ப்ரதமதின பாஸ்கரோதயகாலத்தில் பருத்தயானையின்காலால் இடறப்படுவீரென்று பயப்படுத்தியனுப்ப, பத்ராசலத்திற் பந்தேகானுவில்வந்து பலசேவகர் பாராவோடுங்கூடி பாகவதசிகாமணியாகிய கோபன்னவானவர் பக்திமிகுந்து பகவானைப் பூஜித்தல்.

௧௬. இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கடைக்கண் பாராயோ
கவலை தீராயோ

அநுபல்லவி.

அடைக்கலமென் றடையுமெந்தன்
அகம்பராநந்த சுகம்பெறவுந்தன் (கடைக்)

சரணங்கள்.

௧. சுபேதாரனுச் சுகித்ததெல்லாம்போய்
அபேதஞான மகனொருக்காலே
அலைந்துநிலை கலையுமென்மேலே (கடைக்)

௨. பந்தேகானுவில் பயப்படாதேநில்
வந்தேனென்றோதி மலரடிக்கஞ்சம்
மனதினில்வைத்துத் தனதாகக்கொஞ்சம் (கடைக்)

௩. நிதமும்பாடி நினைத்துன்னைக்கூடித்
திரசுகம்பெற்றுச் செழிக்குந்தீர்க்க
சின்னசாமிகளி லென்னையுஞ்சேர்க்கக் (கடைக்)

இதுவுமது

௧௭. இ-ம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ராகவாவீ ணாகவா
நம்பினதுவெம்பிப் போகவா

அநுபல்லவி.

தேகவாசனை தீரக்கிருபைபுரி
தேவாவென்றதுந் தெரியாதோஹரி (ராக)

சரணங்கள்.

க. பணத்தையுனக்கர்ப் பணஞ்செய்திருக்கப்
பலவிதபாதை படர்ந்துநெருக்கக்
குணங்கெடத் தருமமாசொல்லுருக்க
குலசேகரதீரசூர ஜலநிதிகம்பீரவீர (ராக)

உ. துளசிகபீர் சூகரதாஸர்
துதிசெய்துபரி சக்கராணகேசர்
வளங்கண்டுன்னை வணங்கும்விஸ்வாசர்
மலரடிதொழுதுமிதென்னமாயஞ்சொல்லும்பரசன்ன (ராக)

பண்ணவர்களும் பாடிப்பாடி
பந்தமகன்று நந்தத்தைக்கூடித்
திண்ணமீதென்றுரை செய்ததைநாடி
சின்னசாமிதாஸனும்பல தேவரும்பணிபத்ராசல (ராக)

இதுவுமது.

ருஅ. இ-ம்-உசேனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கடனைத்தீர்ப்பதுந்தன்கடனே
காக்கவேணுமிப்போதுடனே

அநுபல்லவி.

அடமாகக்காவலி லடைத்துமவன்பேச்சா
அனலெனத்தகிக்கின்ற தானையிறைப்பாச்சா (கட)

சரணங்கள்.

க. பணத்திலாசைபற்றும்போதுபுவிமீது பாகவதரேது
குணத்தையறியாமலிதடிக்கடிவாது கொடுக்கச்செய்ததுசூது
பிணத்தையலங்கரிக்கும் பேருக்கன்புதகாது
மணமிரும்பதகமலமகாந்தமனான கருமவிமோசியாமிந்த (கட)

உ. நரைவணங்கிநடுங்கிப்பாணனைதொன்றும்நான்கேட்கமாட்டேன்
அரவிந்தபவபுரஹரபுராந்தராதிக ளடியில்மனதைநாட்டேன்
பரதெய்வமாமுன்னைப்பணிந்துபணிந்து கேட்டேன்
பாரிலுன்றிருநாமம்பாகில்பக்தனென் றுரைப்பதுமெய்யாகில் ()

ரு. துருவனுக்குபதமளித்ததென்ன பொய்யாசொல்லாயம்புதமெய்யா
பரிதிமகனுக்கும்வீடணனுக்குமாசிட்ட பங்கேருகக்கையா
திருமனுளகுலதெய்வமே யெனதையா
சின்னசாமியையாள்முந்து சீக்கிரமாகவேயோடிவந்து (கட)

வசனம்.

இங்கப்படிக்குத் துதித்துக்கொண்டிருந்தும் பகவான் கிருபை செய்யாதிருக்கக்கண்டு வேதசாஸ்திர புராணேதிகாஸ காவ்ய ப்ரதிபாத்தியனான ஒப்பற்றகடவுள் ஸ்ரீராமனென்றும், அவனை நம்பின பேர்களுக்கு ஒரு குறைவுமில்லையென்றும், முன் அவனைநம்பி வெகு பேர்கள் கடைத்தேறினார்களென்றும், அவனுக்குக் கைங்கரியஞ்செய்தபேர்கள் அளவற்ற சம்பத்தையடைவார்களென்றும் சொல்லுவதெல்லாம் அபத்தமாகத் தோன்றுகின்றதேயன்றி சுபத்தமல்லவென்று கலங்கி முகம்வாடி ஐயனைக்குறித்து நிந்தாஸ்துதிசெய்தல்.

௩௯. இ-ம்-ப்யாகடை-தாளம்-ஆதி.

பல்லவி.

நம்பினத்திற்கு நல்லஸ்திதியில்வைத்தாய்
நல்லகீர்த்திபெற்றாய்

அநுபல்லவி.

எம்பிரானே ஆஹா இந்தநாளிலென்னை
இம்மாத்திரஞ்செய்தாயேயிதுபோதும்பாதுமுன்னை (நம்)

சரணங்கள்.

௧. ஆர்த்தசரண்யனென் றநந்தன்புரியாமல்
அனுதினமுந்துதிப்ப தறிந்திடப்பறியாமல்
கீர்த்தனங்களைக்கண்டு கிருபையாகக்குறியாமல்
கெருவங்கொண்டிருக்கும் கிருபணனென்றறியாமல் (நம்)

௨. பொதுவானதுதெய்வம் பூஜைசெய்திடநன்று
புரிந்தருளுமென்றுசை பூண்டதுதெரிந்தன்று
விதுரனுக்குதவிய விதமெந்தன்மீதுமின்று
விருப்பங்கொண்டுநல்ல மேன்மைதருவாயென்று (நம்)

௩. மகிமையைக்காணாத வரிதுவனையிற்சொன்ன
வார்த்தையானதுசெவி வழியாயிதயந்துன்ன
தகிக்கின்றதீதனக்குச் சரியேமுன்னேனோசின்ன
சாமிநட்கும்பெரிய சாமீப்யகதியென்ன (நம்)

வசனம்.

இவ்விதம் நிந்தாஸ்துதிசெய்து உடனே பயந்து நீயே பரனென்றும், உன்னைநம்பினபேருக்கு ஒரு குறையுமில்லையென்றும் உபநிடதவேதாதிகள் உரைக்கின்றவைகளும் உண்மையாயிருக்க உள்ளந்தெளியாத நான் உன்மீது தோஷாரோபணஞ் செய்யத்தகுமோவென்று உருகி அபசாரக்ஷாமணஞ் செய்துகொள்ளுதல்.

௪0. இ-ம்-தர்பார்-தாளம்-ஆதி.

பல்லவி.

கிந்திந்தெனென்றுனின்னாதே
நெஞ்சத்தில்கோபங்கொள்ளாதே

அநுபல்லவி

வந்திக்கவந்தித்துச் சிந்தித்துச் சிந்தித்து
சந்தித்திடப்புந்தி மந்தித்து மந்தித்து (கிந்தி)

சரணங்கள்.

௧. எந்தனைப்பாரிக்கும் பந்தந்தனைக்கஞ்சி
இந்தவலைசொன்ன துந்தனையுமஞ்சி (கிந்தி)

௨. கைசந்தருள்மாரி பொய்தருளுமெம்மானே
வைதாலுங்கோத்திரஞ் செய்தாலுமுன்னைத்தானே (கிந்தி)

௩. குன்னமாகநெருக்குங் கின்னங்களைமாற்று
சின்னசாமியென்று மென்னையுங்காப்பாற்று (கிந்தி)

வசனம்,

இப்படிக்கு நானாவிதபாவமாய்த் தெலுங்குகீர்த்தனம் அநேகம் பாடிக்கொண்டு பந்தீகானாவிலிருந்தும்போது பதினொருவருஷம் பதினொருமாதம் இருபத்தொன்பது தேதியுமாக முப்பதாந்தேதி பாட்சாவிடத்திலிருந்து மறுநாள் உதயகாலத்தில் யானையின்காலாலிடறுகிறதாக வுத்திரவு வரக்கண்டு சித்தமிகத் தத்தளித்துக் கொடுத்து ரகுபத்தமனைத் துதித்திரங்குதல்.

௪௧. இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ரட்சிக்கவேணும் ரவிகுலகலசஜலதி
சந்திரராம சந்த்ரா
பட்சிராஜவாஹன பங்கயனேத்தி
தந்திரராம சந்த்ரா (ரட்சி)

பனிரெண்டுவருஷம் பந்தீகானாவில்
பார்த்தும்ராக வேந்த்ரா
இனிபாகிலுங்கிருபை வாராதோதிக
ரிலாதராம சந்த்ரா (ரட்சி)

ஆலாலமுண்ட காலகாலனுமைக்
கருளுந்திவ்ய நாமா
மேலானதெய்வ மென்றநம்பினேன்
வீணாக லாமா (ரட்சி)

ச. மதிலொடுகோபுர மண்டபஹேம
வாகனங்களுண் டாக்கி
அதிபணஞ்சில வழிந்திடவேர்ப்பா
டானதிந்தப் பாக்கி (ரட்சி)

ரு. பரதலட்சுமண சத்துருக்கரொடு
பவனாத்மஜன் றனக்கும்
தரணியிலிருந்தவ தாரஞ்செய்தவெங்கள்
ஜானகிதனக்கு முனக்கும் (ரட்சி)

சு. கலிகிதுராய்மணி மகுடமாரம்பதக்கங்
கவசம்புரியக் கொண்டு
குலிக்கிக்கொண்டிருப்ப தாரப்பனுடைமையோ
கூறவேணுங் கண்டு (ரட்சி)

எ. மாமன்சனகனோ டப்பன்தசரத
மகிபனனுப்பி னானோ
ராமபக்தி வீணாகாதென்றே
நவில்வது பொய்தானோ (ரட்சி)

அ. நிந்தனைசெய்திடு மகங்காரியென்று
நினைவினிற்கொள் ளாதே
இந்தப்பவக்கடலி லின்னமுமழுந்திட
வெந்தனைத்தள் ளாதே (ரட்சி)

சு. என்னசாமியிவன் சாமிதுரோகி
யென்றடிக்கடி நல்லாய்
சின்னசாமிக ளுனக்குப்போதனை
செய்தாரோ சொல்லாய் (ரட்சி)

வசனம்.

இவ்வண்ணமுருகி அன்றையத்தினம் விஷம் சம்பாதித்து வட்டியில் வைத்துக்கொண்டு இப்பொழுது பானஞ்செய்தால் ப்ரதாகாலம் ஒருவேளை பஜனையில்லாமற்போகுமாகையால அந்தக்காலமும்பஜித்து உடனே விஷபாணம்பண்ணினால் யானையின் காலாலிடறப் பாச்சா வருகிறதற்குமுன் பிராணன் போய்விடுமென்றெண்ணிப் பகவானைப் பாடி யுருகுதல்.

சஉ. இ-ம்-சஹாரு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

க. தாசரதிகண்பாராயோ தயியேனுரையையோராயோ
தாசனையாளவாராயோ சங்கடங்களைத்தீராயோ

உ. இந்தகாருஞ்சோதனையா இஷ்டஜனங்கள்போதனையி

௩. துதிசெய்யச்செய்யாயமா — சொல்லுனக்கிதிலாதாயமா
விதியென்றுரைப்பதுநேயமா — வினைக்குவதுஞாயமா

௪. பெண்ணென்றுரைத்ததுமெய்யாச்சே — பெருமானென்கிறபேர் [போச்சே
மண்ணுளவர்க்குமீதாச்சே — மகிமைகளெல்லாமேற்பூச்சே

௫. கல்லுமிடர்கொள்ளெல்லையோ — கருணைகிருன்னில்லையோ
சின்னசாமியபயறுபுல்லையோ — சிந்தக்காவதுசொல்லையோ

வசனம்.

இவ்வாறு உருகியழுதுங் கொருசக் கிருபகண்ணைக்குசமயத்தில் பத்ராசல திவ்யக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்ற கோதையாயும் சகல லோகமாதாவாயும் அகிலஜகத்துற்பத்தி ஹேதுபூதையாயும் அகாரணகருணையுமான சீதாதேவியென்னுமெம்பிராட்டி கோபன்னவின் பரிபவத்தைப் பார்த்துப் பொறாதவளாய்த்து எம் பெருமானைச் சேவித்துப் புருஷகாரம்புரிதல்.

௪௧. இ-ம்-மிரந்தநுட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எழுந்திரும்ராமநாதா
தொழுதேன்தாமரைநேதா

அநுபல்லவி.

தொழுதேச்சனுமீரும் — பழுதற்றசாருண்யம்
தொண்டர்க்கருளைத் — கொடுப்பதன்றோதன்மயம் (எழு)

சரணங்கள்.

௧. கனிந்துபணிந்தாலும் — காவலிருந்துவேண்டும்
புனிதனாகிய — பூசனையப்போதே
போவதற்காதகுற்றம் — போகும்படியிப்போதே (எழு)

௨. எந்நாளுமென்னையம்மை யென்றுந்தந்தையென்றும்மை
அந்நாளாதியா — யடுத்தவனுக்கிம்மை
யருளாதிருக்க — லாமாவிதுவாசெம்மை (எழு)

௩. சாசுவதமாகியகீர்த்தி — தாவுந்தயாபரமூர்த்தி
ஈசுவரனென்றும்மை — யெப்படியியம்புவார்
இப்படிக்குச்செய்தா — லெவர்தானம்புவார் (எழு)

௪. பக்தன்றிருவுள்ளங்களிக்கப் — பாக்கியமவனுக்களிக்கச்
சிக்காமிரங்கிக்கச் — சின்னசாமியும்நீரும்

வசனம்.

பிராட்டி புருஷகாரத்தால் புராரிநுதனென்றும் சராசராத்மகனென்றும் நிராகாரனென்றும் ஸாகாரனென்றும் தாராதாரனென்றும் ஸுராதீசனென்றும் முராராதியென்றும் கராராதியென்றும் துராராதியனென்றும் புகழப்படும் இராமமூர்த்தியும், நிர்க்குண கணபூரித குணபாசன சிக்ஷண விசக்ஷண சுபலக்ஷண லட்சுமண மூர்த்தியும் தேவரும் காவலரும் கேவலரும் நாவலரும் மேவரிய சேவகவேஷந் தரித்தல்.

௪௪. இ-ம்-சஹாநா-தாளம்-ஆதி.

பல்லவி.

சேவகவேஷம் பூண்டாரே
சேவகருமையைத் தாண்டாரே

அநுபல்லவி.

பாவமலைந் துகிர்ப் பந்தத்திலழுத்த
பாகவதனுக்காகப் பணங்களைச்செலுத்த (சேவ)

சரணங்கள்.

௧. திருமண்ணூரண மல்லங்கரித்து
திருவுளத்தி லருளினைவரித்து
சருமகடாரி கத்தியும்பரித்து
ஜல்லடமங்கி நிஜார் தரித்து
இருவர்க்குமிருமையு மீந்திடஸ்மரித்து
திருமகள்மொழிகளைச் செவிகொண்டுசிரித்து (சேவ)

௨. தலைப்பாகையின்மீ துருமாலும்
தாங்கிடில்லிபதி யொருக்காலும்
கலைப்பார்சொல்லுமுறை யொருபீலும்
கறவாப்பசுவென்று மென்மேலும்
அலையாமனத்துட னறியாதிருந்தாலும்
மலைநிலைக்கேதுவென்று பணங்கொண்டதுபோலும் (சேவ)

௩. மாசறுமுனிவர்கள் துதிபேச
வன்னியும்பாஸ் கரனுங்கூச
தேசமெங்குமிவ ராளிமூச
திருமேனியின்பரி மளம்வீச
நேசரிதாப்ரபு விசயத்தையேச
தாசரதிகள்பத்ரா சலராமதாச (சேவ)

௪. அன்னவாகன னபிராமியும்
அயனுமாலுஞ் சிவகாமியும்
பன்னுமிந்திரன் பௌலோமியும்
பாஞ்சகன்னியமும் க்ஷேமியும்
இன்னமள்ளசிவர்க்கு மிகுப்பாம்பமியும்

வசனம்.

இவ்வகை குணபூஷண பவசோஷண மிருதுபாஷணராய் இவர் சேவகவேஷங்கொண்டு தானேஸனது அந்தப்புரத்தின்ஏழுப்பரிகை கதவுகளும் தாமே திறந்துக்கொள்ளச்செய்து நேராய் அங்கிருந்த சூராதிசூர வீராதிவீர பாராகாரருக்குத்தரிசனங்கொடாமல்ஸௌத ஸோபானுரோஹணஞ் செய்யக்கண்டு அணிமிகுமணிமயஹம்சதூளிகாதல்பத்தில்பாட்சாவின் அருகில் சயனித்துக்கொண்டிருந்தசதியாகிய மதியென்பவள் கோஸாவிலிருக்கும் யோஸாவாகையால்எழுந்து மறைவிலிருந்து பார்த்தாச்சரியங்கொண்டு மாச்சரியம்விண்டுஇந்தச்சூரர்களால் கர்த்தாவானபர்த்தாவுக்குச்சங்கடம்ஜனிக்கிறதாகவிருந்தால் அப்போது ஆபத்துக்குப் பாபமில்லையென்று பொன்னடிகளைப் பற்றி வணங்கலாமென்கிற பக்தியோடும் கூடிப்பார்த்தும் பரமாநந்தமொத்திருக்க ஸ்ரீராமலட்சுமணர்கள் பாட்சாவினதுமுதுகைத்தட்டியெழுப்பி யருளிச்செய்யல்.

சுரு. இ-ம்-ஸௌராஷ்டிரம்-தாளம்--ஆதி.

பல்லவி.

இந்தாரும் டில்லிபதியே
என்னபாக்கிசொல்லும் பூபதியே

அநுபல்லவி.


அந்தோதாநம் கோபன்னவின்குணம்
அந் ாதவர்நீ ராகையினுற்பணம் (இந்)

சரணங்கள்.

க. ஈராறுவருஷங் காவலிலே
இருக்கச்செய்தீர்பொரு ளாவலிலே
நோய்ஜவாங்க ளேவலிலே
நிரதபாயவரை மேவலிலே
நாராயணனே நண்ணவித்தனத்தைத்தரும்
பாராயணபலம் பாருமெழுந்திரும் (இந்)

உ. வீணரிலொன்றென்னை ங் கொள்ளாமல்
ள்ளுமெங்குருநாயைத் தள்ளாமல்
மாணுறித்துமவரை விள்ளாமல்
மறுபடியுஞ்சேவகர் துள்ளாமல்
காணக்காணமனங் களித்தநலுவலைக்கொடும்
நாணயங்களைக்கண்டு ரசீதுகொடுத்திடும் (இந்)

ங. வணக்கமாகவிளக் கேர்க்கச்சொல்லும்
வார்க்கச்சொல்லும்



ராமலட்சுமணன் சேவகவேடம்பூண்டு தானீஷாவிடம் வருதல்.

தானீஷா கோபன்னவிடம் வந்து வணங்குதல்.

கணக்கையும்நன்றாய்ப் பார்க்கச்சொல்லும்
சஜாரணைவிம்பிதைச் சேர்க்கச்சொல்லும்
இணக்கமாகவன்ன செழுகச்சொல்லுமிதக்கும்
குணமாகுஞ்சின்னசாமி கொடுத்தனுப்பியரொக்கம் (இந்)

வசனம்.

இவ்வண்ணம் இராமலட்சுமணர்க ளியம்பிய திருமொழிகளைக் கேட்டெழுந்து அருகிற் சபரிக்கிருந்த பத்தினியைத்திரும்பிப்பார்க்க அச்சங்கொண்டு இவரொளியிசைசயங்கண்டு வியந்துடன் பயந்து நயந்து கேட்குதல்

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

கண்ணிகள்

இந்தராத்திரியி லிங்கென்னகாரிய
மெவரையா நீங்கள்
அந்தராமதாசர் சேவகரா
யனுப்பவந்தோம் நாங்கள்

சுபநயனரேகுல மகமுறவின்னதென்று
சுருக்கமாய்ச்சொல் வீரே
தபலகுலசீரா மராஜூதமண் பன்
தம்பிகளென் றீரே

காம ஸ்ரீந்த மடிகாராகுழங்களது
நாமி மனுநிறைப் பீரே
ராமசிந்துலட்சுமண சிங்கென்றுகுரு
நாதனிட்ட பேரே

ஸ்ரீரங்கரேயுமக்குச் செல்வம்வந்த
சேதிகனறு போதும்
ராமன்கொடுத்த ஸ்ரீதனமன்றி
மற்றுமில்லை பாதும்

நிம்பளமாய்ச் சிவன்நடக்கிறதா
நிஜமாக வியம்பும்
சம்பளமெங்களுக்கு வேறொன்றுமில்லைப்ர
சாதமிதனை நம்பும்

இதுவரையிலும்நான் கண்டதுங்கேட்டது
மில்லையுங்கள் சொல்லை
சதகமும்வீட்டினி லிருப்பவர்வெளியினில்

தலையாடியெத்தனை நாளாய்ச்சேவகம்
நீங்கள்சொல்ல வேணும்
தலைமறைதலைமறையா யடிமைகாங்கள்
சத்தியமிது காணும்
இருங்களுங்கள்மாதரி வேறுகம்பளத்தினி
லிரண்டு பேரும்
இருங்கிரோமெங்கும் போகிறதில்லைபண
மெல்லாமிங் தாரும்
என்றுசொல்லிகுலத்தி னுடிபுரமேருகிழித்
தெழுதும்படிக்குப் பேசி
நின்றுதம்பலமுமிழ்ந்தக்கணமே
நிகநிகவெனுந்தன ராசி.
தந்தையொப்பவித்து ராம்ராமென்றுரை
சாற்றியுத்தரம் பெற்று
பந்தேகானுவிலடிமை படுத்திருக்கும்
படுக்கையின்கீழ் வைத்து
அருகிருந்தவிஸ வட்டிலைவிட்டெறிந்
தானந்தித்தொருக் காலே
பெரியசாமியும் சின்னசாமியும்சிதையொடு
பேசினர்பரி வாலே

வசனம்.

இவ்விதம் இராமலக்ஷ்மணர்கள் பத்ராசலம்வந்து சேர்ந்தபின்பு மூன் பாட்சாவிடத்திற் செலுத்தியபதினாயிரம் ராமடங்கை யொன்று மில்லாமல் மறையக்கண்டவன் மிகவுங் கோபங்கொண்டு இதென்ன அநியாயமாயிருக்கின்றது அந்தக் கோபனையை சூரியோதயகாலத் தில் யானையின் காலாலிடறும்படி சரிவேற்றுச்சொன்ன வார்த்தையைக்கேட்டு அவனது பத்தினியருகில்வந்து பந்தாவைப் பார்த்துச் சொல்லுதல்.

௬௭. இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சொன்னதென்னதெரியாதா

அநுபல்லவி.

நன்னயமாக சந்நிதிநின்று
ராமசிங்கு லக்ஷ்மணசிங்கென்று (சொன்)

சரணங்கள்.

ஆதவகுல மோதனமேசம்பளம்
அன்னை ராஜனென் றெண்ணுமென்றவராதுவளம் (சொன்)

௩.	பாதிகிசியிற்	பாராகடந்தாரே
	பத்ரிசலமிடம்	பாருமென்றுரேரே (சொன்)
௪.	கந்தர்ப்பகோடி	சுந்தராங்கர்
	கம்பீரமாகக்	கருணாபாங்கர் (சொன்)
௫.	ஸ்ரீ தனமென்பது	சீதா
	தேவிமூலமிதுசூதாடில்லிபுர	நாதா (சொன்)
௬.	சின்னசாமி	சேவகராகிமுந்து
	தேஜோரா	சிகளாகவந்து (சொன்)

வசனம்.

இவ்விதமந்த உத்தமிசொல்லக் தக்ஷணம் மறைந்திருந்த பொருளை முன்போலவே கண்டுதெளிந்து ஆலோசனைசெய்து பத்தினியைப்பார்த்து இனி யான்செய்யவேண்டுவது என்னவென்று தாமேஷாவினவ, வேறென்னவிருக்கின்றது உதயகாலத்தில் ஸ்நானம் பண்ணிபரிசுத்தமாய் வேறு ரசிதமூநிக்கொண்டு பரிவாரங்களோடு கோபன்னுவிடம்போய் வணங்கிக்கொடுத்து இராஜ்ஜியத்தையும் ஒப்புவித்து அவர்கொடுப்பதைவாங்கிச் சேவனம் செய்கிறதே நலமென்று பலவிதம் சொல்லுதல்.

சஅ. இ-ம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்வார்த்தையைக்	கேளும்
எந்நாளுமாசை	யாளும்

அநுபல்லவி.

முன்வார்த்தையை	முனிந்திந்தச்சோக
மோகமும்மைவிட்டுப்	போகப்பரிவாக (என்)

சரணங்கள்.

க.	நிலமுமவராதுமா	தங்க
	நிசயதுரங்காதிசது	ரங்க
	பலமுமவரதென்றுந்	துங்க
	பாக்கியந்தந்தின்பம்	பொங்க
	வலமுஞ்செய்து	வணங்கி
	மமகாரமது	பிணங்கிக்
	குலமுமய்வண்ண	முணங்கி
	கூறுங்கொஞ்ச	மிணங்கி (என்)
உ.	தலத்திலுயர்ந்தது	பத்ரா
	சலமென்றுகண்டல	ருத்ரா
	கலவிதிகள்துதித்து	முத்ரா
	ரசத்தையறிந்து	நித்ரா

குலமொன்று மில்லாமல்
குதிர்ந்ததைப் புல்லாமல்
சலங்கொண்டே [illegible]ல்லாமல்
தடுத்தொன்றுஞ் சொல்லாமல் (என்)

௩. பலபேர்பலவித கலகம்
பண்ணுவதாரகலா மலகம்
கலந்தராதவலமென் றுலகம்
கவிலும்வார்த்தை திலகம்
சிலவழிந்ததை யெண்ணமல்
சின்னசாமி நண்ணமல்
அலமென்றே யுண்ணமல்
ஆலோசனை பண்ணமல் (என்)

வசனம்.

அப்படியே உதயகாலத்தில் உத்தியோகஸ்தர்களை வரவழைத்துக் கோபன்னுவுக்கும் பதிலாகயிருந்த சுபேதாரனுக்கு பர்தாப்கானீதும் அந்தக் கச்சேரியிலிருக்கும் உத்தியோகஸ்தரெல்லோரும் கோபன்னுவின் யாக்ஞைப்படி நடக்கும்படி வெவ்வேறு தாகீதுகளும் கோபன்னுபேருக்கு சுபாஜாரிதாகீதும் எழுதியனுப்பிவிட்டு தானவேறுரசிது தயார்செய்துக்கொண்டு பரிவாரங்களோடு புறப்பட்டு பத்ராசலம் சமீபம் வந்துகொண்டிருக்க இங்கே கோபன்னு ப்ராதகாலத்தில எழுந்திருந்து விஷவட்டிலைக்காணமல் மெலிந்து கலிந்து ஸ்ரீரகுநந்தனு! விஷபானஞ்செய்து மானத்தோடு யான் பிராணபரித்யாகம் செய்வது உனக்கு அசம்மதமாச்சுதன்றோ? அடியேன் விஷயத்தில் கல்லகீர்த்தி சம்பாதித்தாயென்றுசொல்லி வெறுத்துக்கொண்டு வந்து கோதாவரியில ஸ்நானம்செய்து நித்யகருமத்தைநிறைவேற்றிக்கொண்டு கரையேற்றி பவக்கடலிலிருந்து பக்தஜனங்களைக் கரையேற்றும் பத்ராசலவாசியான பகவானைநோக்கிப்பாடுதல.

௪௬. இ-ம்-கன்னடா-இந்துஸ்தான்காபி-தாளம்-ஆதி.

தங்க[illegible]சிந்து.

௧. பொன்னடிகதியென்று சொன்னவனையிருக்க
இன்னமிலையலாமா ராமா இப்படிச்செய்யப்போமோ

௨. குமபிட்டுக்கொண்டாடி நம்பினதென்னமனம்
வெம்பி[illegible]ந்துபோகவா ராகவா விருப்பமும்வீணாகவா

௩. பொல்லாமனமடங்கச் சொல்லாமலிருப்பதேன்
*எல்லாருங்கண்டேசவா கேசவா இவ்வகைதினம்பேசவா

௪. பாதிக்கும்பந்தமதைப் பேதிக்காதிருப்பதேன்
ஆதிமூலகாரணா காரணா ஆனந்தபரிபூரணா

௫. எப்படியுரைத்தாலும் அப்படிப்புரியாமல் ஸீதாராம நீயோவன
இப்படிச்செய்தாலேதவா மாதவா எந்தனுக்கிதேனோசாலே.

௬. செப்பியமொழிகளில் தப்பிதமிருந்தாலும்
ஒப்பியாளப்பாவிந்தா கோவிந்தா உளங்குடிவாதாவிந்தா

௭ தாந்தஜனகஜா காந்தமஹாநந்தாசு
ஸாந்தஸர்வஸஹிஷ்ணுமேவ விஷ்ணுமேவ ஸர்வேசப்ராஜிஷ்ணுமேவ

௮. அந்நாளுமிந்நாளும் எந்நாளுமென்னையாள
மன்னுமதுசூதனை ஸாதனை மாய சூதனைப்பேதனை

௯ பொய்யாமிந்தஜகத்தை மெய்யாமதென்றெண்ணச
செய்யாதேதிரிவிக்ரம அக்ரம சேதனஜனவிக்ரம

௧௦. நயங்காட்டுமெருமை குயவங்கண்மகத்தைக்கண்டு
மயங்கச்செய்யாதேயாமனை ஸமனை மருவில்லாதம்நமனை

௧௧. ஆதராதிசயத்தோடு பாதராயணியணியும்
நாதராதாலோலஸ்ரீதரா நீதரா கலைமுன்னேடாபாலைசாதரா

௧௨. உனையன்றிவேறுதெய்வம் தனையறியேனையா
எனையாளிருடிகேசனை கேசனை இதயகமலவாசனை

௧௩. சிவனுதிதேவரோ டெவரையுந்தந்தகஞ்ச
பவன்வந்தபத்மநாபனே நீயனே பகரொணாதபாதாபனை

௧௪. நாமோதந்தாராமல்நீ மோசஞ்செய்யலாமோ
தாமோதரமுகுந்தனே நந்தனை ஸத்தியவைகுந்தனை

௧௫ நாமத்தைநம்பினவர் காமமடங்கநல்ல
சேமந்தருமபாஷனை புஷனை சின்னசாமிதாஸபோஷனை

வசனம்.

இவ்வாறு முறையிட்டும் பலனுமுனக் காரணமாகசுமெதென்றுமய ப்ராபஹணமென்று மந்த்ராமறுபார்க்கதகொடங்கும்பாட்சாமுதல பராவம்சார பாராவார மகனர்களாகிய ஜனங்கள் கூலனமாயுஜீவிப் பாகமென்று வகாருண்யத்தால்ஐயனைக்கேட்பதுபோலஉரைத்தல்

௩௦. இ-ட-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

அநப்பட்டேனுங்களுக் கென்னகதி
சநப்பட்டவழியொல்லுஞ் சீதாபதி

அநுபல்லவி.

நிகமகோசரனை நின்னையறிந்தாரில்லையில
நிநாமலமனக் திக்குத்திககாயல்லைபவிலையில (அநப்)

சரணங்கள்.

அன்னதநுவிலுமுள்ள ஞானகத்திலே
அநாமநுபவிநன்றந்த ரங்கத்திலே
பின்னதநுவிடுபடாமற் றங்கத்திலே
பேதநிலேபாற்றிமாத ரங்கத்திலே

யோகஸ்தர்கள்வந்து வணங்கிக் கைகூப்பிநிற்க பக்கீதகானை மேலேக் காரி இவர் படுக்கையின் கீழிருந்த பரிமளம்பொருந்திய ரசீதைக்கோ பன்னாவின் கையிற் கொடுக்கப் பார்த்து அர்த்தியடைந்து பாட்சா வாகிய தானேஷாவுக்குத் தரிசனங்கொடுக்கும் பணத்தைச் செலுத்தி வந்த நீ பயப்படாதேயென்று பகரக்கூடாத பாவி யானிருந்தென்ன பிரயோசனமென்று பக்கத்திலிருந்த சேவகனது கத்தியை பலாத் காரமாய் வாங்கித் தனது கழுத்தைத் தறிக்க நோக்கும்போது இராத்திரி கொண்ட வேஷங்கொண்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் கத்தியி னுடிநுனிகளைப்பிடித்து வாங்கி அந்தச்சேவகன் கையிற் கொடுத்து கோபன்னாவுக்கும் அங்கிருந்த எல்லோருக்குந் தரிசனங்கொடுத்து மறையும்போது கோபன்னா மிகவும் களிப்புற்று ஐயனே யென்றுருகி நின்றவனைப் பார்த்தானந்தித்தல்.

௬௨ இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்துகுந்தேரோ	ஸ்ரீராமா
என்னையாட்கொண்ட	ஸ்ரீராமா

அநுபல்லவி.

சாகேதாதிப	காருண்யத்தரங்கும்
ஆபதீமேழு	தருணத்திலே தாங்குவாய் (எந்)

சரணங்கள்.

பஞ்சபூத	பஞ்சதன்மாத்ரகோச
பஞ்சேந்திரி	யங்களிடத்திலுமீச
கஞ்சபவ	கனசமித்ராதித்யபாச
காகோதர	கபீசசகேச
குஞ்சரமுக	பந்தத்திலும்
குருவானவ	மந்த்ரத்திலும்
செல்வசோபித	வேதாந்தத்திலும்
இராமதாசு	சந்தத்திலும் (எந்)

வசனம்.

இவ்விதம் இராமதாசர் ஆநந்தித்துக்கொண்டிருக்குஞ் சமயத் தில் பாட்சா பாதசாரியைக் கொஞ்சதூரத்திலிருந்து சொல்லிக் கொண்டு வருதல்.

௬௩. இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்

பல்லவி.

சலாமையா சலாம்
சலாமையா சலாம்

அநுபல்லவி.

பலாமொரா	னிலாதெலாம்
பன்னிரெண்டு	கோபமோதுலாம் (சலாம்)

சரணங்கள்.

வரங்கொடுக்குந்தெய் | வமதமலாம்
தரங்கமாக | ஸாமிக்கோரிலாம்
குரங்க | தானைப்போலதலாம்
குகோதாமென் | றூடலாம்
புரங்களுடனே நீளும் | பூமிபுரந்தத்தாளும்
திரங்கொண்டிடைத்தேகளும் | சினை சாமிநீராளும் (சலாம்)

வசனம்.

இவ்வித மரியாதை செய்துக்கொண் டருகில்வந்த தானேஷாபய பந்தியுடன் தான்கொண்டுவந்த ரசீதை யிவரிடங்கொடுத்தல்.

௫௪. இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ராமதாசரே | வாரும்
ரசீதைத் | தாரும்

அநுபல்லவி.

காமகோடி | சுந்தராமல
கமலக்கண்ணரை ஹிருதயகமலத்திற் கொண்டவிமல (ரா)

சரணங்கள்.

௧. மாமேருஸமதீரிந்து | வதனமாகியஸதயருகந்து
தாமேயங்குதனத்தைத்தந்து | தாஷணமிங்குவந்து
ஸ்ரீமேவியபத்ராசல | தேசத்தினிலேநிர்மல
பூமேவியவட்குச்சொல | புதுக்தாரையாரவிகுல ரா


௨. நீசரிலும்நீசனைப்போலே | நிர்ப்பந்தித்ததனாலே
கேசங்கொள்ளாமலொருக்காலே | நிர்ப்பந்தித்ததனாலே
மோசம்வாராமற்பத | முளரியடுத்தேன்துர்மத
வாசனைவிடுத்தேன்சதசத | வந்தனஞ்செய்தேனத்புத (ரா)

௩. நிமிஷமுந்தேகவியாபாரம் | நீங்காததனாற்கோரம்
நமியென்செய்தவைசாரம் | சகிக்கக்கூடாதபாரம்
ஸஷிமித்தருளுவதீரம் | ஸஜ்ஜனங்களுக்கலங்காரம்
திமிரந்தனையிக்கோரம் | சேதிப்பதுமதுபாரம் (ரா)

௪. ஜெகதீசுவரனவதாரம் | திகழுந்திவ்யகுணவிஸ்தாரம்
அகத்தினில்கொள்ளுங்கம்பீரம் | அடியார்களுதாரம்
சுககரமாமென்றுன்ன | சூக்ஷமமறிந்தவர்சொன்ன
சகலமுந்தெரிந்தசின்னசாமி | யுமக்குச்சொல்வதென்ன (ரா)

வசனம்.

என்று சொல்லி யிராச்சியத்தை ஒப்பவித்ததைக்கண்டு சந்தோஷங்கொண்டு இராச்சியமுழுதும் எனக்கேதுக்கு? ஆளவும் என்னாலாகாதாகையால் இந்தப் பத்ராசலதாலூக்காவைமாத்திரம்பகவதர்ப்பணமாய்க் கொடுத்தாற் போதுமென்றுகேட்க, அப்படியே கொடு



ஸ்ரீராமதாசர் தானீஷாவுக்கு ஸ்ரீராமருடைய தரிசனம் காட்டுதல்.

ஸ்ரீராமதாசர் விமானத்தின்மீது பரமபதத்திற்குப்போதல்.

த்து ப்ரமோத்சவகாலத்தில் சீதாராம கல்யாணத்தன்று பிராட்டிக்கு வரிசைமுதலானது தாங்கள் வம்சபாரம்பரியமாய்க்கொண்டுவந்து சமர்ப்பிக்கும்படியாயும் தாங்கள் பெண்வீட்டுக்காரரென்றும் இவர் பிள்ளைவீட்டுக்காரரென்றும்வழங்கும்படிக்கும் வரம்பெற்றுக்கொண்டுபாட்சா இருப்பிடம் போய்ச்சேர அந்தத் தாலூக்காவில் உற்பத்தியாகும் இருபதினாயிரம் வராகனையும் நம்பெருமானுக்குதஸ்தீக்காக யேற்படுத்திப் பரமானந்தங் கொண்டிருக்கும்போது கோபன்னாவைக் காத்த விஷயத்தில் பத்ராசலவாசியே கிருபாசமுத்திரரென்று பரமஸாதுக்களும் மேனேயோருமாகிய சகல புருஷர்களும் ஒன்றுகூடிச் சந்தோஷமாக தேவதேவேசனுக்குச் சுபமங்களம் பாடுதல்.

மங்களம்.

௫௫ இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்களங்களைப் பாடுவோம்-நா
மங்களங்களைக்கொண் டாடுவோம்

அநுபல்லவி.

பங்கஜபத பக்தனாகிய
பத்ரகிரிராம பத்ரனுக்குஜய (மங்கள)

சரணங்கள்.

௧. அங்கஜகோடிலாவண்யனென்றும் அகிலதேவாக்ரகண்யனென்றும்
புங்கவர்புகழும்புண்ணியனென்றும் புரந்தராதிஸரண்யனென்றும்
வங்கவரையானுகைப்பக்குச்சொல்லி வரதனாகியவரதற்குச்சுப (மங்)

௨. தங்கமலைநிகர்தீரனுக்கு தசரதகுமாரனுக்கு
சங்கையில்லாவில்வீரனுக்கு சமரில்திகசூரனுக்கு
பிங்களவசனபெருமானுக்கும் - ராகல்லுதாரனுக்கனிஸம்(மங்)

௩. ராமதாசரிடர்தீரவே நல்லசெல்வங்களுஞ்சேரவே
க்ஷேமமிகும்படியூரவே தீவினையனைத்துஞ்சோரவே
தாமமருளியதயாநிதிக்கு ஸாரஸதரனும்ரகுபதிக்கு (மங்)

௪. கங்கையுதித்திடும்பாதனுக்கு கரையில்லாதமோதனுக்கு
நங்கைமணிசீதைநாதனுக்கு கண்ணுமகாதபோதனுக்கு
செங்கமலப்பதம்சிரம்வைத்தசத்ய தேவனுக்குபகாநுபாவனுக்குநித்ய

௫. எங்கும்புகழும்ப்ரசித்தனுக்கு என்னாளும்பரிசுத்தனுக்கு
தங்குமிங்கங்கும்ப்ரபுத்தனுக்கு சந்ததமும்ப்ரமத்தனுக்கு
செங்கமலமங்கைசேரும்பதிக்கு சின்னசாமிதுதியுன்னதமதிக்கு

வசனம்.

இவ்வாறும்தபேதமேயின்றி புருஷர்கள் கொண்டாடிக்கொண்டிருந்ததுமன்றி பெண்களும் அங்கங்குக் கும்புகூடி ஸர்வலோகேசனாகிய ஐயனுக்குச சோபனம் பாடுதல்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இராமாயணக் கும்மி.

இ-ம்-உசேனி-தாளம்-ஆதி.

கும்மியடிபெண்ணே கும்மியடி அரி
குணங்களைச்சொல்லி கும்மியடி
நம்மையாளும் சீதாராமனை
நாடிப்பாடிக் கும்மியடி. (௧)

மாதமும்மாரி மழைபொழிய
வஸ்துவனைத்துஞ் செழித்தோங்கும்
கோசலமென்னுந் தேசத்திலேமிகு
கோமளசரயு தீரத்திலே. (௨)

வாசமலர்மடந்தை யருள்பெற்று
மன்னும்பனிரண்டி ரொண்ணரையாம்
யோசனைநிகள மகலமாகும்அ
யோத்தியென்று சிறந்தோங்கும். (௩)

ராஜதானியை தசரதமஹா
ராஜனாண்டு வருகையிலே
ஈசனிருடி கேசனடியே
யெல்லோருந் தொழுதேத்தவே. (௪)

தருமந்தழைக்க வர்ணாச்சிரமந்
தப்பாதவ ரவர்க்குரிய
கருமங்களை ஜனங்களநுஷ்டித்து
களித்துவாழுங் காலத்திலே. (௫)

சந்தானார்த்தக் துரகமேதத்தை
சாந்தாதேவி சமேதமுனி
வந்தானபின் வசிஷ்டமுனிவனும்
மன்னன்மகிழ நிறைவேற்ற. (௬)

வரமாகிய பகவந்நாம
மதுரத்திற்குச் சமமான
பரமான்னத்தை யாகபுருஷன்
பாங்காகக்கையி லேக்திவர. (௭)

பார்த்திவேந்திர னவனைப்பார்த்துப்
பணிந்தெழுந்ததை வாங்கிக்கொண்டு
பூர்த்தியான மனதொடுகுல
புரோகித னனுக்கிரகிக்க. (௮)

கீர்த்திமிகுந்த கோசலைக்குங்கை
  கேயிக்கும்பாதி பாதிதர
ஆர்த்தியடைந்த சுமித்திரையைக்கண்
  டவளுமிவளும் பாதிதர. (௯)

பத்தினிகள்பர மாநந்தமடைந்து
  பரிபூரணகர்ப்பந் தரிக்க
சித்திரைமாசந் தவளநவமி
  செழிக்குங்கடக புனர்வசுவில். (௧௦)

மங்களகோஷ மெங்குமுழங்க
  மாஞ்செடிகள் தழைத்திருக்க
கங்கைமுத லெல்லாந்தெளிய
  கற்பகத்தரு மலர்சொரிய. (௧௧)

அந்தர துந்துமி யிந்திரனடிக்க
  அவனிதுந்துமி யும்முழங்க
திந்திமியென்னும் வாத்யகோஷம்
  தேசமெல்லாம் பூரிக்க. (௧௨)

ஸ்ரீவசந்திர யோகத்திலவர்
  திகழ்ந்துச்சத்தி லிருக்கையிலே
தேவரூபிணி கோசலைதேவி
  தேஜோராசி யென்றுகாண. (௧௩)

அநந்தகோடி யண்டங்களையனு
  வாயுள்ளடக்கிக் கொண்டிருக்கும்
அநந்தசயனனம் புஜநயன
  னவதரித்தான் சோபனமே. (௧௪)

அந்தவேளை மந்தநகையோ
  டருமரதக வண்ணராய்த்
தந்தகாந்தி யனந்தகோடி
  சந்திரகிரணம் போலிலக. (௧௫)

சங்கசக்ர கதாபத்மம்
  சார்ங்ககட்கங் களைத்தரித்துந்
தங்கவஸ்திரந் தரித்துக்கொண்டு
  சதுர்ப்புஜராய்க் குண்டலமும் (௧௬)

அங்கதகிரீ டங்களுமணி
  யரைஞாணும் கௌஸ்துபமும்
பங்கயபதங்களிற் றண்டைகளும்
  பளபளெனத் தரித்துகொண்டு. (௧௭)

எங்களாண்டவன் வந்ததைக்கண்
  டெழுந்தாநந்தக் கண்ணீர்பெருக
மங்களபுள காங்கிதத்தோடு
  வணங்கியஞ்சலி செய்துகொண்டு. (௧௮)

அன்னையான கோசலையார
 மாநந்தக்கூத் தாடிக்கொண்டு
என்னையுனது மாயையனுகா
 திருக்கவரந் தரவேணும். (௧௯)

உனதுவயிற்றி லகிலஜகத்து
 மோரணுவாகி யிருக்க
என்றுவயிற்றி லிருந்துவந்த
 தென்னபுதுமை சொல்லுமையா. (௨0)

பக்தபரா தீனனென்னும்
 பழயவார்த்தை பொய்யாமோ
புத்திமுக்தி யளிக்கப்பரம
 புருஷனாய் அவதரித்தீரே. (௨௧)

இப்படியிருந்தா லெனதுபிள்ளையென்
 றெப்படிசொல்வா ரென்னவே
மைப்படிகண்ணினா ளுக்குவரந்தந்து
 மானிடக்குழந்தை யாயினரே. (௨௨)

பூசத்திலு மாயில்யத்திலும்
 பூவைகைகேசி சுமித்திரையும்
மாசறமீன கடகத்திலொளி
 மயமாயொன்று மிரண்டும்பெற (௨௩)

தாசரதிக ளவதரித்திட
 ஜாதகருமஞ் செய்துடனே
ஆசார்யனைக் கொண்டுமன்னவன்
 அமிர்தபுஞ்சமா யிருக்கும். (௨௪)

ராமபரத லக்ஷ்மணசத்ருக்ன
 நாமமுந்திரந் தந்திடவே
க்ஷேமமளிக்கும் நாலுவேதங்களுமா
 சிறந்துவளரு வதைப்போலே. (௨௫)

பொழுதொருவர்ணம் நாளொருமேனியாய்
 புத்திரர்நால்வரும் வளரவே
தழுவித்தழுவித் தந்தையுந்தாயரும்
 சந்தோஷங்கொண் டிருக்கையிலே. (௨௬)

பாயசாநு சாரமாகப்
 பாலப்பருவ மாதியாய்
மாயனைலட்சும ணனுங்கைகேசி
 மகனைச் சத்துருக்கனுமாக. (௨௭)

அநவரதமு மநுசரித்திட
 அரசன்நாலு சுதருக்குள்ளே
ஏனதாண்டவ னிடத்திலதிக
 இன்பமேவி யிருக்கையிலே. (௨௮)

ஒருநாளந்த மன்னவன்வழக்க
 முண்டானவகைப் பூஜித்து
திருவரங்கனுக்கு நைவேத்
 தியம்புரிந் துபசாரமாய் (௨௯)

இருதகவையுஞ் சாத்திவெளியி
 லிருந்து திறந்துள்ளேகியே
மருவும்பதார்த் தங்கள் குறைந்த
 வாறுகண்டு மனமகிழ்ந்து. (௩௦)

குருவசிஷ்டரைக் கேட்கலே
 கூறுவே னென்றவர் கூற
திருபனைத மறுநாள்பார்க்க
 நீலவண்ண னுண்ணக்கண்டு (௩௧)

ஆச்சரியங்கொண்டுள் வெளியிலும்
 ஆநந்தராமனைக் கண்டிடனே
மாசசரிய மில்லாதவசிஷ்ட
 மாமுனிவனைக் கேட்கவே (௩௨)

மேதினிபாரம் நீக்கவிதியும்
 விண்ணவருங்கூடி வேண்டவே
ஆதிமூலப் பொருளேராம
 னாகிவந்தது பாருமையா (௩௩)

சோதிகோசலை நீருஞ்செய்த
 சுகுர்தாமி யாகவே
ஆதிமத்திய மந்தமில்லா
 னவதரித்தது பாருமையா. (௩௪)

சேயிழை கைகேசிசுமித்திரை
 தேவிகளிடத்திற் சங்கமும்
ஆயிரவாயரவும், சக்கரமு
 மவதரித்தது பாருமையா (௩௫)

என்றுவசிஷ்ட முனிவனிவ்வா
 றியம்பக்கேட்டு மன்னவனதான
அன்றடைந்திடும் ஆனந்தத்திறத
 மளவுண்டோபார் சங்கரியே. (௩௬)

பின்னொருநாளங் கணத்திலெம
 பெருமான்விளை யாடிக்கொண்டு
பொன்னொரு காத்தினிலிருக்கும்
 அரூபத்தொடு வரும்போது. (௩௭)

பொறுமைமிகுந்த ரோமமஹாரிஷி
 புகலுமுறையைச் சோதிக்க
மறுவில்லாத புசண்டாமாமுனி
 வாயசரூப மாகியே. (௩௮)

பக்ஷணத் தினி லாசைகொண்டு
பார்ப்பதுபோ லருகுவர
தக்ஷணமுனிவன் றனையெடுத்துத்
தாசரதி விழுங்கிடவே. (௩௯)

பலகால மிராமமூர்த்தி
பண்டியுனுள்ளவன் திரிந்தும்
சிலநாழிகை போலக்காட்டித்
திரும்பமுனியை யுமிழவே. (௪0)

புசண்டமாமுனி புன்னகைகொண்டு
போற்றும் புதுமையைப்பார்த்து
நிசமுரையுமென் றையனேக
நிர்மலமுனிவனுஞ் சிரித்து. (௪௧)

கண்டதெல்லாஞ்சொல்ல விதிலைய
காலமளவும் போதுமோ
கொண்டல்வண்ணனே யாகிலுங்கொஞ்சங்
கூறுவேனென்று தொடங்கினன். (௪௨)

ஏழுகடலீ ரேழுபுவனம்
ஏழுசிரஞ்சீவி களையும்
வாழுமேழு ரிஷிகளையும்
வசுமநுக்களையும் பார்த்தேன். (௪௩)

மூவராகும் விதிபசுபதி
முகுந்த மூர்த்தியையுங்கண்டேன்
தேவர்களும் ராசரிஷிகள்
தேவரிஷிகளையுங் கண்டேன். (௪௪)

இந்திரனக்கினி வாயுகுபேரன்
எமன்வருணனையும் பார்த்தேன்
சந்திரர்சூரியர் குஜபுதகுரு
சனிகவிராகு கேதுக்களும். (௪௫)

கந்தருவகின்னர கிம்புருஷ
கருடாதிகளை யுங்கண்டேன்
நந்திவாரண முகன்குகனையும்
நாகராசரையும் பார்த்தேன். (௪௬)

பக்ஷிநரபசு தருமிருகாதி
பலவும்நால்வகைத் தோற்றமும்
குக்ஷியுளிருக்கக் கண்டேனையா
கோமானேசார்வ பூமானே. (௪௭)

இத்தனைகூடியதா மிவ்வண்டம்போல
எத்தனையோகண்ட தென்னசொல்வேன்
பத்தனையாளு மென்றுதுதித்து

ஸத்துவகுண நிதியாம்பரதன்
சத்திரம்பிடிக்க லக்ஷ்மணனும்
சத்துருக்கனும் சாமரங்கள்வீச
ஜானகி சமேதனாய். (சக)

அங்கதனும் பதங்கதநயனும்
ஆஞ்சனேய விபீஷணரும்
தங்கும்வானர புங்கவர்களும்
ஜாம்பவான்முத லானவரும். (ருo)

வந்திமாகத பிருந்தங்களுஞ்சு
மந்திராதி மந்திரிகளும்
சந்தித்தாநந்தங் கொண்டெச்சரிக்கை
சாற்றிப்போற்றுஞ் சபையிலே. (ருக)

மூர்த்தாபிஷேகங்கொண்டு
முநிவர்தேவ ரியாவரும்
பார்த்தாநந்த மடையபூமி
பாலனஞ்செய்யும் காலத்திலே. (ருஉ)

நித்தியானந்த னுத்தியான
நிலமேவியொரு நிசியிலே
சத்தியான ஜானகியோடு
தங்கமணி மயமாகும். (ருங)

உப்பரிகையிற் சகலசம்பத்தும்
ஒங்குங்கோமள தேசத்திலே
செப்பரிய பரமசுகங்கொண்டு
சேர்ந்திருக்குஞ் சமயத்திலே. (ருச)

இந்துநிகர மயிலுங்குயிலும்
எதிரெதிராய்க் கூவவே
மந்தமாருத மலர்வாசனை
வகித்துவகித்து வீசவே. (ருரு)

அந்தவேளை யமரப்பெண்களும்
அரம்பைபெண்களும் அங்குவர
கொந்தளகமுறு மானவப்பெண்களும்
கூடிச்சோபனம் பாடினரே. (ருசு)

வசிஷ்டமுனியா னுபநீதனாய்
மருவுந்தம்பிய ரோடுகலை
விசிஷ்டமுஞ்சில நாளிற்கிரகித்த
விமலமூர்த்திக்குச் சோபனம். (ருஎ)

காதிதநய னேதியசேதியால்
கண்டகிதாடகையை வதைத்து
கோதிலாது மகத்தைக்காத்த
கொண்டல் வண்ணனுக்குச்சோபனம். (ருஅ)

பால்யமுதற் பக்திபண்ணும்
  பாக்கியம்பெற்ற தம்பியுடன்
மல்யவந்த பருவதந்தினில்
  வசித்தவனுக்குச் சோபனம். (௭௯)
மாருதியா லென்தன்னை
  வசிக்குமிட மறிந்துகொண்டு
வாரிதியின்மே ராம்வந்த
  மாதவனுக்குச் சோபனம். (௮௦)
தம்பியைப்போ லாதரித்து
  சரணடைந்த விபீஷணனுமை
நம்பிக்கிலங்கை நகரையளித்த
  நல்லவனுக்குச் சோபனம். (௮௧)
உளமகிழ்ந்து வானரங்க
  ளோடிக்கொண்டு வந்தமலைகளால்
களனைக்கொண்டு திருவணைகட்டிய
  நாயகனுக்குச் சோபனம் (௮௨)
இலங்கைநகரை வளைத்துக்கோதண்ட
  மேந்தியரக்க ராயிருளை
விலங்கச்செய்த தினகரகுல
  வீரனுக்குச் சோபனம். (௮௩)
அதிகாயன் கும்பகர்ணன்
  அகம்பனிந் திரசித்துடனே
மதிகெட்டரா வணனைச்சயித்த
  மஹானுக்குச் சோபனம் (௮௪)
அனலிற்குளித் தெழுந்திடுமெங்க
  ளன்னைஜானகி மகிமையை
வனஜபவனு மரனும் துதிக்க
  மகிழ்ந்தவனுக்கு சோபனம். (௮௫)
வீடணனுக்கு மகுடஞ்சூட்டி
  விமலபுஷ்பக மேறியே
மாடமாளிகை சூழயோத்தி
  வந்தவனுக்குச் சோபனம். (௮௬)
மிகுங்களியொடு சிங்காதன
  மேவிதிரு சமேதனாய்
மகுடம்புனைந் துலகையாளும்
  மங்களனுக்குச் சோபனம். (௮௭)
மன்னரும்வான ரருஞ்சுரரும்
  மாமுனிவரும் யோகிகளும்
சின்னசாமியு மென்றும்பணியும்
  சின்மயனுக்குச் சோபனம். (௮௮)

அசுரகாண்டம்.

[illegible]ரகஸ்பதிபகவான் ஷண்முகநாதனுக்கு சூரபத்மன் முதலிய அசுரர்களின் வரலாற்றைக்கூறல்.

விருத்தம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௧)

காமவல்லியென்னும் மாயை சுக்கிரபகவானிடத்தில் இந்திரஜாலங்களைக்கற்றுக்கொண்டு [illegible] அதிசுந்தர வடிவை எய்தி காசிபரிஷி ஆச்சிரமத்திற் சென்றனள்.

விருத்தம்.

பொருவில்ஷடா[illegible] [illegible] பொருளே கேண்மின்
பொறை[illegible] [illegible] வேந்தன்
[illegible]
[illegible] பெண்ணை நோக்கிப்
[illegible] ஜாலப்
[illegible] செய்ய [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]யெனவுருக்கொண்டாளே. (௨)

(௩) கீர்த்தனை இராகம் - எதுகுலகாம்போதி—ஆதிதாளம்.

பல்லவி.

[illegible]மாயையுருக்கொண்[illegible]
[illegible]

அனுபல்லவி.

[illegible]சைபக[illegible] [illegible] மீட்டி
[illegible]விழியா லஞ்சனந் தீட்டி
ச[illegible]லளித அபிநயங் காட்டி

சரணங்கள்.

(க) பைங்களபம்பனிநீர் கலந்து பூசியே - யெழிற்
பஞ்சவர்னவஞ்சுகம்போற் கொஞ்சிப் பேசியே - மணிக்
கங்கணந்தோளணியிட்ட செங்கை வீசியே - புவிக்
காமுகர்மயங்கமுகங் கவிழ்ந்து கூசியே - செழுங்
பங்கஜமுகவிர தியுமுப சரித்து
பரவிவணங்கும்படி திருவுருத் தரித்து
எங்கினுந்தனக்கிணை யிலையெனச் சிரித்து
இருடியோகியர்மன தையுமப கரித்து (சூரசை)

(உ) தீயதக்கன்வேள்வியின்முன் வாய் மதத்தாலே - நிந்
தித்தபாவமுருக்கொண்டுதித்தது போலே - நல்ல
வாய்மைநந்தியிட்டசாப வன்கண் மையாலே - அஷ்ட
மத்துச்சனியாகவந்து தொட்டு விண்மேலே - வளர்
தூயவமரர்களைத் துன்பஞ்செய் தலைக்க
சூறையிற்பட்டபஞ்சுப் போரெனக் குலைக்க
வேயமராபதிபட் டினங்குடி சலைக்க
விதியைநொந்தனைவரு மதிமயங்கி யலைக்க (சூரசை)

(ங) மாசசுரகுலங்களை வர்த்தனை பண்ணி - புவில்
வாழ்விக்கவேணுமென்றன்னி னைக்கருங்கண்ணி - தானுங்
காசிபனாசிரமந்தன்னைக் கானமென் றெண்ணி - யந்த
கானத்தின்வழிசென்றவன் ஞானத்தை நண்ணி - திவ்ய
வாசமலர்மிகுமுத் யானத்தை மதித்து
வானுலவுமுபரி மாளிகை விதித்து
தேசுறுங்கனகவி மானமும் பதித்து
திருமுனியைமயக்கி மருவவன் புதித்து (சூரசை)

காசிபராசிரமத்தை யடைந்தமாயை முனிமனதைக் கலக்க எண்ணி வீணாகானம் செய்தல்.

விருத்தம்.

காசிபனா சிரமத்தில்வந்த மாயை தானுங்
கபடத்தான் முனிமனதைக் கலக்க வேண்டித்
தேசுறுந்தன் வடிவாலவ் வனங்க ளெல்லாந்
திகழ்சோதி மயமாகத் தோன்றச் செய்து
வாசமலர்க் கொடியாடக் கழைவில் லேந்தி
மணிமகரக் கொடியாட மதனன் றானும்
வீசுதென்றற்றேரில்விளை யாட வீணை
மீட்டினன் கனகயும் பயராட்டி னளே. (ங)

(உ.) அடிபடக்த திபதை. இராகம் - தனுசரி—ஆதிதாளம்.

(க) மயல்மீறுதென்செய்குவேன் - உ
மதிலிகலொடுசிலைமதன்விடுசரா திறல் - அதிமயல்

(உ) வனமே - நானெவ் - வனமே - என்றன்
மனதிசைபுருஷார்த் தினமொன்றுகாண்கிலனே - பூ - வனமே

(ந) அனமே - தீம்பா - லனமே - கசந்
தருவருத்தெனுளம் - பாதவிக்குதய்யோவெழி - லனமே

(ச) மயிலே - நானிள - மயிலே - நிறை
மதிசொரிகொடுதழல் - மகிக்கமுடியவில்லையே - மா - மயிலே

காசிபர் தவங்கலைந்து மாயையைக்கண்ணுற்று மயங்கி
அவளழகை வியத்தல்.

விருத்தம்.

சுரலைமன்காசிபன்றபோ வனத்தி னின்று
தூண்டிலிட்டுப் பருவரா லிழுப்பார் போல
சரஸமுங் கீதவிசை படிக்கு மோசை
தவமுனிதன் செவித்துளைக்கா லோடி நெஞ்சம்
பரிதிநவ நீதமென வுருக்கிக் கண்ணுற்
பார்த்தவுடன் றவவிரத மிழந்து காமத்
திரைகடலின் மூழ்கியமா ளெழிலைக் கண்டு
தியங்கினு னறிவுழன்று மயங்கினனே. (ச)

(ந) திபதை. இராகம் - காபி—ஆதிதாளம்.

(க) மலர்மங்கையோபூ - வனமங்கையோயவ்
வனமங்கை யிவ ளோரோ - மா
நிலமங்கையோவா - னிலமங்கையோவிந்த
நேரிழைக்கென்ன பேரோ

(உ) கொண்டைச்சொருக்கழகைக் கண்டுபயஞ்சனித்துக்
கொண்டல்கணீர் சொரியுதே - முகத்தை
முண்டகங்கண்டுபங்க முற்று மிகுபயத்தின்
மூழ்கித்தவம் புரியுதே.

(ந) மாரன்மதிக்குடையைக் கீறிநுதலெனவ
மைத்ததென்ன வண்மையோ - முனை
வீரவாளையும்வடி வேலையுங்கண்ணிணையாய்
விதிசெய்தவன் கண்மையோ.

(௪) பனியார்குமிழ்நாசியின் - முனையால் மருங்காற்றுச்செண்
பகவாசமது வீசுதே - செங்
கனியாரதரவூறற் கிணையோவமுதந்தானுங்
கடைபட்டதென்று கூசுதே.

(௫) மங்கைமொழியைக்கேட்டுப் பைங்கிளியுங்குயிலு
மயங்கிப்பஞ்சரஞ் சென்றதே - இவள்
செங்கனிவாயிள நகையேயகல்கொண்டந்தத்
திரிபுரந்தனை யென்றதே.

(௬) பூட்டுமதனனம்பு தீட்டுஞ்சாணை நிகர்க்க
போலஞ்சுதரி சனமே - ஊச
லாட்டுஞ்செவியிற்றோடு பூட்டுமணிகண்டுசே
லாடுதையோ மனமே.

(௭) சங்கமிவள்கழுத்தி னங்கங்கண்டுவெள்றித்
தடங்கடல் சேர்ந் திட்டதே - இளஞ்
செங்கரும்புமிவள்பு யங்களைவெல்லமாரன்
செங்கை வில்லாகி விட்டதே.

(௮) பாணியைக்கண்டுமக - நாணிமகரயாழும்
பட்டுறை யுறைந் திட்டதே - இந்த
மாணிழையிருகுப்பத் தனத்தைக்கண்டஞ்சிச் சக்ர
வாகம்வின் மறைந் திட்டதே.

(௯) மட்டார்முலையிணையூ டுற்றகருப்பைபோம
வரிசையென்பது பொய்யே - பொல்லாத்
துட்டமதனன்வில்லி விட்டநாணைத்தறித்துத்
தொடுத்திருப்பது மெய்யே

(௰) உந்தியின்சுழியென்ற வைந்துபுலன்களைய
முருக்கியப கரித்ததே - ஆறு
லெந்தவிதமுமன்பு பைந்தொடிக்கிருக்குமென்
றெண்ணியுயிர் தரித்ததே

(௰௧) மழைக்கண்கொடிமின்னலைப் பழிக்குமிடையில்விலை
மதிக்கவொண்ணாதம் பரமே - செம்பொ
னிழைத்தமணிமேகலை யிறுக்கியவெழிலென்கண்
ணிணைக்குற்றசுப கரமே

(௰௨) கணைமாரனரண்மனை - மணிமுகப்பிணிலுற்ற
கம்பமோதொடை ரெண்டுமே - உய
ரணிசேர்மானதவாவி தனிலனம்பாலினை
யாநந்தமோநடை கண்டுமே

(௰௩) படலார்கூந்தலுஞ்செம்பொன் - மணிமுதலானமுத்து
மடஞ்சேர்பயோ தரமுமே - தாங்கா
திடையொடிந்துவிழுமென் றடியணின்றுமுறையிட்
டிறைஞ்சுதேநா ரமுமே

(௰௪) திருமகண்முதலான அரிவையரை யிவளாய்த்
திரட்டியே வகுத்தானோ - பிரமன்
மருவிநான்செய்ததவப் பெருமையையறிந்துகைம்
மாறெனப் பகுத்தானோ

காசிபருக்கும் மாயைக்கும் நடந்த சம்பாஷணை.

விருத்தம்.

இந்தவித மாய்முனிவன் மயங்கிப் பாய்ந்
    கிலக்காக வெதிருறுமண் டிகம்போ லோடி
வந்துநின்று வணங்கியடி மானே தேனே
    மடமயிலே நீயாரென் றுரைக்கக் கேட்டு
விந்தைபெறு மாயைசிறு நகைசெய் தட்டின்
    மேவிவந்த முயலினித்தப் பாதென் றெண்ணி
யைந்தவித்துத் தவம்புரியு முனிக்கீ தென்ன
    அடைவென்று ளன்னபதி னடைவென் றாளே (௫)

(௪) திபதை. இராகம் - காகாப்ரியா நவரோஸ் — சாப்புதாளம்.

(க) தனித்து நானிருக்கின்ற வனத்தினி னீரென்ன
தயிரியமாகவந்தீர் முனிவோனே - செய்ய
வனப்பினிலுயர்ந்தவெள வனப்பெண்ணே யுனைக்கண்டு
மயல்கொண்டுவந்தேனடி மடமானே.

(உ) மெய்த்தவம்புரிவதற் குற்றசெய்கையோமட
மன்றைரை முயங்குதல் முனிவோனே - லோபா
முத்திரையுடனேய கத்தியமுனிகூடி
முயங்குவதறியாயோ மடமானே

(ந) தக்கபரிசரியத் துக்கவனையக்கினி
சாக்ஷியாய்மாலையிட்டார் முனிவோனே - நா
னிக்கணமந்தப்ப டிக்குடனமும்புரிந்
தேற்றுக்கொள்கிறேனடி மடமானே.

(௪) தவசிக்குப்பணிசெய்ய - அவசியமெனக்கென்ன
தலைவிதியோசொல்லு முனிவோனே - இன்ப
நவரஸமேயுனக் கவசியம்பணிவிடை
நானேசெய்கிறேனடி மடமானே.

(௫) ஒப்பில்லா நீரெனக் - குப்பணிவிடைசெய்தா
லுலகத்துக்கடுக்குமோ முனிவோனே - நல்ல
திப்பியமென்று ஈா - ளைப்பினபிறகுநீர்
திப்பவாராடி மடமானே.

(௬) அகோரதவசிவிப ரீதநிபுணனென்ப
தறிந்துகொண்டேன்காணு முனிவோனே - மயல்
விகாரங்கொண்டவெனக் காதாரமில்லாமல்வி
ரோதஞ்செய்யலாகுமோமடமானே

(௭) ஆய்ந்துநானுமைக்கூடிச் - சேர்ந்ததிளைலெனக்
காலைதுண்டோசொல்லு முனிவோனே - மிச
வாய்ந்தபதல்வர்களுந் - தோய்ந்தநிதிசகல
வரமுந்தருவேனடி மடமானே

(௮) ஆத்திரத்துக்குத்தக்க - வார்த்தைசொல்லுவதுங்கட்
சடையானதொழிலல்லோ முனிவோனே - நா
னேத்திடும்யோகத்தி - யானத்தினிலுறுதி
யிட்டுச்சொல்கிறேனடி மடமானே

பிறகு காசிபர் மாயையுடன்சோ அவ்விருவரிடம் சூரபத்மன்
முதலிய அசுரர்கள் உதித்தல்.

விருத்தம்.

மாதவத்தோ னீதுரைக்கப் புலவி யாகி
மாயைவட மேருவுக்கு வடபாற் சென்று
சீதாநதிக் கங்கையரு கிருக்கும் போது
சிவயோகி தொடர்ந்தழல்வாய் மெழுகாய் நொந்து
காதலொடு புலம்புதல்கண் டவளும் வந்து
கனிவாய்முத் தமுங்கொடுத்துக் காம வாரி
மீதிலிரு வரும்புணைபோன் மிதந்து போக
மிகுந்திட்டார் கலவியினி துகர்ந்திட் டாரே. (௧)

(ரு) திபதை. இராகம் - முகாரி—ஆதிதாளம்.

(க) மாயையுங் காசிபனும் - நேயமுடனேபெரு
மலையெனவேயுருவ மெடுத்தாரே - கதிர்
தோயும்பொன் மண்டபத்தி - லேயமர்ந்தினிதொடுஞ்
சூதலீலைகள்செய்யத் தொடுத்தாரே.

(உ) இ விமறைந்தமுதற் சாமத்திலிர்தவித
மிணைபிரியாமற்புணர்ந் திடும்போது - அந்தச்
சுரஸைமாயையிடத்திற் கருமலைபை நிகராய்ச்
சூரன்வந்துதித்திட்டான் புவிமீது.

(ங) ஆர்வமுடனிருவர் - வேர்வையிலிருந்துமூன்
றயுதவெள்ளவசுரர் குதித்தாரே - யந்தப்
பாரிலுள்ளோரும்விண் - ணூரிலுள்ளோர்களும்
பதைபதைத்துமனங் கொதித்தாரே.

(ச) வயந்தனிலிரண்டாஞ் சாமத்தினிற்சிங்கம்போ
லிருவருஞ்சேர்ந்துகளி கூடவே - சற்றுந்
தாமதமின்றிச்சிங்க - மாமுகச்சூரன்ருனுந்
தாரணிதனில்வந்து சேரவே.

(ரு) ஆயிரஞ்சிரமுண் டாயிரங்கரமுள்ள
அரிமுகன்றனைப்பெற்ற தகையாலே - தேக
மேயவேர்வையினுற்பத் தாயிரவெள்ளஞ்சிங்க
மெனவந்துதித்தாரிந்தப் படிமேலே.

(சு) தானத்தைவிட்டுமூன்ருஞ் சாமத்தோர் மண்டபத்திற்
றந்திமுகமாயிரு வருங்கூடப் - பரு
யானைத்தலையுங்கொம்பு - நாலுடனேதாரக
னவதரித்தானமரர் பயந்தோட.

(எ) சிந்துமுகத்துடன்பு ணர்ந்தவேர்விலசுரர்
செனித்தவெள்ள நாற்பதாயிரந்தானே - பூவில்
வந்துதித்திடத்திசை யுந்திடுக்கிடச்சேடன்
மலைத்தலைந்தானுயிரஞ் சிரந்தானே.

(அ) இருந்தமண்டபத்தைவிட் டிரணியமண்டபத்தி
லிசைந்தஜமுகத்துடன் புல்லவே:-அப்போ
திருந்து நாலாஞ்சாமத்திற் பிறந்தாளஜமுகியுஞ்
சீவவதைகள்செய்து கொல்லவே.

(௩) உபரியாயந்தவேர்வி லசுரராஜமுகத்தோ
டுதித்தனர்மூன்றயுத வெள்ளமே - அந்த
விபரீதரூபத்தைக்கண் - டுயிர்மேலாசையில்லாமல்
விட்டொழிந்தார்முனிவ ருள்ளமே.

(௰) அருமேனுதயத்திற்பரி - யரிகரடிமுதல்
அனேகவுருவெடுத்தங் குறைந்தாரே - செறிந்
திருணிறத்தொடுங்கடல் திரண்டாற்போலவேசூர்மூ
விருபதாயிரம்வெள்ள நிறைந்தாரே.

விருத்தம்.

அருக்கனும்பங் குதிக்குமுன மந்த மாறங்
சசுரரின் டிலக்கவெள்ள முதித்தெல் லோரும்
பெருக்கமிகு சூரனைச்சூழ்ந் திருக்கும் போது
பெற்றவளுந் தன்னுருவங் கொண்டு சேயர்க்
குரைத்தபடி காசிபனைப் பணிந்து நின்று
ருயர்தவத்தோன் புதல்வர்களை நோக்கி நீங்கள்
கருத்துவந்து சிவனையுன்னித் தவம்பு ரிந்தாற்
கனங்கொள்வீர் நமதுசொல்லை மனங்கொள் வீரே. (எ)

(௬) கீர்த்தனம். இராகம் - கானடா—ஆதிதாளம்.

பல்லவி.

மைந்தர்களே கேளும்
மதியோடென் னுளும்.

அனுபல்லவி.

ஐந்தவித்திடுமென்ற - னருளாலுலகின்மெத்த
வுந்தவஞ்செய்துபுகழ் - விளங்கும்படி நான்பெற்ற. (மைந்தர்)

சரணம்.

(௧) பரமசிவனைநோக்கித் தவமியற்றிட வேணும்
பரிவாயைம்புலன்களும் ஒருமையுற்றிட வேணும்
தரணிமாயையெனும்வா தனையகற்றிட வேணும்
சதமாய்விளங்குமேலாம் பதவிபெற்றிட வேணும் (மைந்தர்)

காசிபமுனிவர் சூரபத்மன் முதலியோர்க்கு மார்க்கண்டரது சரித்திரத்தைக் கூறல்.

விருத்தம்.

தக்கமைந்தர் முகநோக்கிக் காசிபமா முனிநீங்கள் தடத்த மாகப்
பொக்கமின்றிச் சிவனடியி னுளஞ்செலுத்தி யுவந்துதவம் புரிந்தால் மோக்ஷங்
கைக்கனிபோ லுறுமெனக்குச் சகன்மரபின் மார்க்கண்டன் கதையை நன்கு
யிக்குரஸ மெனவிரித்துச் சாற்றுவான் செவிக்கினிதா யேற்று வானே. (அ)

மார்க்கண்டேயரது முன்னோர்களின் வரலாறு.

குச்சகமுனிவரின் புதல்வரான கவுச்சிகர் அருந்தவம்புரிந்து மிருககண்டுயெனெனும் பேர்பெற்று தவவொழுக்கத்திலேயே நிற்க விரும்பல்.

(எ) திபதை. இராகம் - சௌராஷ்ட்ரம்—ஆதிதாளம்.

(க) கடிமலர்ப்பொழில்சூழும் - வளமிகுந்த
கடகநகரில் வாழும் - செழும்
சடைமவுலியிற்கங்கை தரித்தருளிறையவன்
தனக்கன்புநிறைந்த குச்சகனென்றோர்மறையவன்

(உ) இயற்றுந்தவத்திற்பிறந்தோன் - கவுச்சிக
னெனத்திருநாமஞ்சிறந்தோன் - தன்
வயிற்றின்பசிக்குணவும் உறக்கந்தனையுநீக்கி
மனக்கண்ணலைவின்றன்சொ ரூபத்தைக்கருதிநோக்கி

(ங) அருந்தவம்புரிதல் கண்டு - திருமண
வாளனங்குவகைகொண்டு - தவந்
திருந்துதாபதருக்கு ளுயர்ந்தவனீயேயென்று
சேயுன்பேர்மிருககண் டேயனெனநவின்று

(ச) சிவபரனருள் படைத்து - தனக்கிஷ்ட
சித்திப்பலனுங்கிடைத்து - செய்யுந்
தவநிலைமைபலித்துத் தழைக்கவரமளித்து
சாமளவண்ணன்செல்ல மாமுனிவன்களித்து

(ரு) தந்தைசமுக நாடி - யங்குநடந்த
சரிதையையுரையாடி - நின்ற
மைந்தன்றனைத்துதித்து மார்போடணைத்துப்புல்லி
மாறின்மறைகளுட னுசிவசனஞ்சொல்லி

(கூ) இனியென் மொழியையுணர்ந்து - இல்லறத்
தியல்புற மணம்புணர்ந்து - நமக்குற்ற
இனியவறுதொழிலை இயற்றிவருவாயென்று
இயம்பக்கவுச்சிகனு மயங்கிமனங்கவன்று

(எ) தவமகிமையைக் கெடுத்து - படுபா
தலநரகத்தில் விடுத்து - சுகம்போற்
கவைகொடுத்துத்தலைவெட் டிடும்பெண்கள் முகம்பாரேன்
கறைக்கண்டனருளன்றி மறுத்தொன்றையு நான்கோரேன்

(அ) என்றுமைந்தனுங் கூறி - பணிந்திட
வெழுந்துதந்தையுஞ்சீறி - அருள்
துன்றுந்தவத்திலுக்கில் லறமேநலமென்றானே
தொட்டென்மேலாணையிட்டேன் தட்டாதேநீயென்றானே

கவுச்சிகர் இல்லறத்திற்குரிய பெண்ணின் இலக்ஷணம் கூறல்.

விருத்தம்.

சந்தமறை யந்தணன்மு னிந்திவை மொழிந்திடத்
தனயனெதி ரடிவணங்கித்
தந்தைதாய் குருமொழி தனைத்தடுப் பவர்சுருதி
சாற்றுமனு நீதிஞான
சாத்திர புராணபல நூலினைப் பொய்யெனவ
சங்கத மிசைக்குமூடர்
தாழ்விலா நரகத்து மூழ்குவர்க ளாதலாற்
றமியனு ளென்றுபகர்வேன்
வெந்தழ லெனக்கடு கடுத்துமண வாளனை
வெகுண்டுபோ ராடல் புரிவோர்
வீடத னியற்கையை யிகழ்ச்சியா யயலிடம்
விளம்பிவசை யுறவிசைப்போர்
விருந்தினைக் கண்டுதலை வலியெனக் கணினீர்
விடுத்தழுது பரதவிப்போர்
விரிதலையர் செம்பட்டை மயிரினர்கள் கொட்டாவி
விட்டுவிர லினைநெறிப்போர்
சுந்தர மிகுந்தவ னெனப்பிறர்கள் கொழுநனைத்
துதிபுரிந் துரையாடுவோர்
துணைவிழி மருட்டியே கணிகைய ரெனத்தலை
கனைக்கொடு மிலைக்குமிக்கக்

துர்க்குண மதில்லாத நற்குணங் களையுடைய
தோகையரி லொன்றுநேர்ந்தால்
சுபமங்க லம்புனைந் துலகியலில் வாழ்வது
சுதந்திரமெனப் புகலவே
அந்தநிமி டந்தனி லுவந்துகுச் சகமுனிவ
ராய்ந்து சோழநாட்டி
லண்டமத ளாவிஉளர் தண்டலை சிறந்தரு
ளநாமய மெனும்வனத்தி
லசத்தியமி லாமனவு சத்தியமு னிக்கொருபெ
ணங்கிருப் பதுதெரிந்தவ்
வாச்சிரம மதுதேடி வாச்சுதென மிகநாடி
யதிவிரைவி லணுகினனரோ. (௬)

குச்சகர் அநாமயவனஞ்சென்று உசத்தியமுனிவரின் பெண்ணைக்
கேட்டலும் அங்கு நடந்த விருத்தாந்தமும்.

(அ) தீபதை. இராகம் - சுருட்டி—ஆதிதாளம்.

(க) திருமுனிவன் வரவு தெரிந்து - உசத்
தியமுனிவனும் பரவசமுட னுளம்பரிந்து
மருவுமணி யாசனத்திருத்திக் - கனி
வகையறுசுவைமுல்லை முகையமுதுடனருத்தி

(உ) இங்கெழுந்தருளின தென்ன - வென்று
இயம்பிடலு மருமைப்புதல்வியெனு மெவ்வன்ன
மங்கையரசி தனையெமது - தவ
மைந்தன்றனக்குரிய மணம்புரிந்திடவுமது

(௩) சிந்தையென்னெனமெள்ள நயந்து - சொல்லச்
சிரமசைத் துசத்தியன்பரிவுடன் மிகவியந்து
இந்துசேகரன்றனைப் போலே - வந்திங்
கெனையொருபொருளென வினவினீரன்பாலே

(௪) இசைத்தமொழியைச் செவியோர்ந்தேன் - என்மூ
வேழுகுலமுங் கடைத்தேறியே கூர்ந்தேன்
உசத்தியனெனும் பெயர்மாகஷி - தனக்
[illegible] மண்டோ காம்சி

(?) எனவுசத்தியனுப சரித்து - மண
மியற்றுவதற்குகந்த முகூர்த்தமதனைவரித்து
புனிதவம்முனியொடு வனத்தில் - இன்பம்
பொருந்தியே விருந்துண்டங் கிருந்திடு மொருதினத்தில்

(?) தாயுரைகொண்டுவகை கூடி - பணி
தரித்துத்தோழியருடன் விருத்தையுமனைநாடி
தூயமலர்த்தட நீராடி - வண்டு
சூழலுமலர்பறித்துச் சுரிகுழன்மிசைசூடி

(?) மனைக்குத்திரும்பிவரும் போது - நடு
வழியிற்கொடியடார்ந்து படர்கடுவனமீது
கனத்தமலைகளைத் தூளாடி - மத
கரியொன்றெதிர் துரத்த அரிவையும் பயந்தோடி

(?) ஆவியுடல் மேலாசை பறந்தாள் - அங்
காழ்ந்தபடுகிணற்றில் வீழ்ந்தவளுயிரிறந்தாள்
பாவையரமுதகன் றனரே - ஓடிப்
பரந்துமங்கலையடங் கரைந்திதை நவின்றனரே

விருத்தையின் உயிரை மீட்க குச்சகமாமுனி நோக்கித்
தவஞ்செய்ததும பின் நடந்த விருத்தாந்தமும்.

விருத்தம்.

விருத்தையன்செய் கையைக்கேட்டுத் தந்தை தாயும்
விதனமுற்றங் கோடிவந்து தூவில் வீழ்ந்து
மரித்தபெண்ணை யெடுத்தலறிப் புலம்பும் போதில்
மாமுனிகுச் சகனமர்த்தித் தைல மீதி
லிருத்திடச்செய் தெயமாஜன் றன்னை நோக்கி
யினித்தவஞ்செய் திவளுயிரைத் தருவே னென்ன
வருத்தமுற்றுத் தவஞ்செயுங்குச் சகனை யந்த
மதகரிதோன் மிசையெடுத்திட் டகன்ற தன்றே. (ய)

பின்னும் விருத்தம்.

மத்தகஜந் தோளின்மிசை யெடுத்துச் சென்றே
வனங்களொடு மலைகளெலாங் காலா லெற்றிக்
கைத்தலத்தா லடித்தடித்து நொறுக்கித் தூளாய்க்
காற்றிலெழச் சிதறியெழு முகிலைக் கோட்டாற்
குத்தியெறிந் துலவுமதி சயத்தை யந்தக்
குச்சகமா முனிவன்முனி வணங்கி நோக்கிப்
பத்திமிகு ஞானதிருஷ்டி யதனு லுள்ளம்
பரிந்திட்டா னதின்விவரந் தெரிந்திட் டானே. (யக)

யானை வடிவமடைந்த தருமதத்தனது வரலாறு.

(கூ) திபதை. இராகம் - கல்யாணி—அடதாளம்.

(க) கலிங்கிலரி புரமென்றோர் தலத்தில் - உயர்
சனர்நிபடைத்த வணிகர்குலத்தில் - தன்மம்
துலங்குந்தேவதத்தனென்றொருசெட்டி - நாளும்
தூயசத்திரமாலயமுங் கட்டி

(உ) தத்துவச்சிவநெறியிற் சிறந்தான் - அவன்
தனக்குத்தருமதத்தமகன்பிறந்தான் - புவி
மெய்த்திடும் பருவவயதானான் - அன்னை
வீய்ந்தனள்பிறகு தந்தையும்போனான்

(ங) மடிந்தவர்க்குரிய கடனைமுடித்துத் - துக்க
வாரியிலாழ்ந்துதன் மதிமடித்துத் - தேகம்
இடைந்தவன் மிகமயங்கிடும்பொழுது - பொல்லா
இரதவாதியொருவனுடல் முழுதும்

(ச) உத்தமமான விபூதிபூசித்து - காவி
புடைபுனைந்து செழுஞ்சடைவிரித்து - தோளிற்
பத்திசேர்கண்டிகையணி பதித்து - சி
பத்தனைப்போலஞ்சக்கரந் துதித்து

(ரு) பொய்த்திடுந்தவவேடமது புனைந்து - செட்டி
புதல்வனைக்குடிகெடுத்திட நினைந்து - மனையில்
தத்தரமுடனவன் மனைபுகுந்தான் - அந்தத்
தருமதத்தனுங்கண்டு களிமிகுந்தான்

(சு) நற்பதுமாசனந்தனி லிருத்தி - தாளில்
நறுமலர்தூவியின்னமுதருத்தி - இரு
பொற்பதந்தனைப் பணிந்தெழுந்து நின்றான் - வந்த
புதுமையையடியேனுக் கருளுமென்றான்

(எ) பொய்க்குரவனுமவன் முகநோக்கி - ஒரு
பொன்னைப்பற்பலகோடி பொன்னாக்கி - நேரில்
வைக்குந்தொழிலுமென் றனிடத்திலுண்டு - உன்கை
வசமுற்றபொருளினை விரைவிற்கொண்டு

(அ) என்னிடங்கொடுத்துவிட்டாலுடனே - செம்பொன்
இரவிபோற்றருவது மென்கடனே - ஆகு
மென்னவந்தப்புரட்டன் வழுத்துஞ் - சொல்லைநிச
மெனவணிகன்கேட் டகங்களிமக்க

(க) முன்செய்ததீவினைப் பயன்மீறி - வரு
மோசப்பேராசைப் பேய்தலைக்கேறி - முன்னம்
தன்வசத்திருந்த சொத்தையுமழித்து - பின்னும்
தர்மப்பொருள்க ளனைத்தையுமொழித்து

(ங) செய்யமகவுமுதைக் கையாலே - ஒன்றாய்த்
திரட்டிநாய்தனக் கீந்தகதைபோலே - அந்த
வெய்யபாதகன்கையிற் கொடுத்தானே - வாதி
மெய்த்தவன்மனைக்குட்போயடுத்தானே.

விருத்தம்.

தந்திர மாக மனையறை புகுந்து
தருமதத் தனைமதி மயக்கித்
தமனிய மனைத்துங் கவர்ந்தவன் முன்பாய்த்
தலமிசைக் காட்டெரு வடுக்கி
விந்தையோ டென்கைக் கருவினை யூட்டி
விதிமுறை புடத்தில்வைத் தெடுக்கில்
மிக்கபொற் குவைகள் சிக்கெனப் பலிக்கு
மெனப்பயில் பலமுறை காட்டி
மந்திர மொழிந்து குகையினிற் செம்பொன்
வளமுடன் வைத்தழன் மூட்டி
மண்டுவெம் புகையால் வணிகனு மயங்கி
மழையென விழிப்புன லருவி
சிந்திடச் செய்து திருடனக் கணத்திற்
செம்பொனின் குவையினை யெடுத்துத்
திடுக்கென மறைத்திட் டயத்தையக் குகையிற்
செலுத்தியே கனலிடென் றனனே. (யஉ)

பின்னும் விருத்தம்.

வேறு.

கனலையிட்டுத் தருமதத்தன் றனைத்தெளிவித் தென்றனை நீ கருதி யந்தக்
கரணமுடன் றுதிபுரிந்திக் குகையதனின் மூன்றுதினங் கனலை மூட்டி
அனலவித்துக் குகைதிறந்தா ளளவிறந்த பொற்குவையுண் டாகு நான்போ
யரிமாலூர் தியைத்தொழுதுன் றனக்குவர மளிப்பேனென் றகன்றா னப்பா
வினிதுடனம் மூன்றுதினங் கழிந்தபின்பு வணிகனதை யெடுத்துப் பார்க்க
இரும்புபெருங் கருமலைபோ லிருந்ததுகண் டேங்கியவ னிறந்தா னன்று
மனதறிந்து தருமசொத்தைக் கெடுத்ததினு லிம்மதமா வானு னென்று
..பக்கக்கங்க ரமனிபரிந்த தவத்திலொரு நாட்டவத்தை வழங்கி னுனே.

குச்சக முனிவர் தன் தவமகிமையால் தருமதத்தனை சாபத்தி னின்றும் விடுவித்து, விருத்தைக்கு மீண்டும் உயிரளித்து, அவளைத் தன் மகன் கவுச்சிகனுக்கு விவாகஞ் செய்தலும், பிறகு அவர் களுக்கு மிருகண்டு பிறத்தலும்.

(ய) தீபதை. இராகம் - முகாரி—ரூபகதாளம்.

(க) உவந்து முனியால் வணிகனுங்கரி யுருவம் போகியே - விடை
உடையவனருள் சிறந்துடன் தெய்வவடிவமாகியே
கவிந்து முனியைப்பணிந்தெழுந்துள்ளங் களித்துலாவினன் - தேவர்
கற்பகமலர் பொழிந்திடப்பர கதியைமேவினன்

(உ) தருமதத்தன் செல் பெருமையை யதிசயித்துத்தெரிக்தனன்-முனி
தருமராஜனைக்கருதியேபின்னுந்தவத்தைப் புரிந்தனன்
எருமைவாகனக்கடவுளம் முனிக்கெதிர் வந்தடுத்தனன் - மிக்க
இயல்புடனுள்ளமிரங்கி விருத்தைக்குயிருங்கொடுத்தனன்

(ங) உசத்தியனதை யறிந்தெழுந்து தன்னுள்ளங்களித்தனன் - பூரித்
துடல்புளகித மாகியுவகைக்கடலிற் குளித்தனன்
இசைச்சுமங்கலை சகிப்பெண்களுடனெழுந் தங்குதித்தனள்-பிழைத்
தெழுந்தபெண்ணைக்கண் டிரக்கமுற்றுட னின்பங்கதித்தனள்

(ச) துதித்துவந்துகுச் சகமுனிவனைச்சூழ்ந்து பணிந்தனள் - பெண்
துணைக்கையாலெடுத் தணைத்துப்பணிகள் துலங்கவணிந்தனள் [னைத்
மதித்தநாமய வனத்துளோரெலா மகிழ்ந்து கூடினர் - முனி
வனைப்பரசிவனெனச்சொலி வெகுவாய்க்கொண்டாடினர்

(ரு) விருத்தையைக்கவுச்சி கற்குக்கொடுக்க விருப்பமிகுந்துதன் - பதி
விருதைமங்கலையுடனு சத்தியனுரைகள்பகர்ந்தனன்
கருத்தொடுமென்ற லோலையவற்குக் கடிதில்விடுத்தனன் - அந்தக்
கணத்தநாமய வனத்திலவனும் களிகொண்டடுத்தனன்

(சா) கடிகுழல்விருத்தையைக் கவுச்சிகன் கைக்கொண்டுகந்தனன் - தந்தை
கனகவெற்புறக்கடகமா நகர்கலந்து திகழ்ந்தனன்
உடலு முயிரும் போலிருவரு முற்று முயங்கினர் - கல
முடன் மிருகண்டன் றனைப்பெற்றானந்தவுததிவயங்கினர்.

மிருகண்டுவின் உபநயனமும், விவாகமும், பிறகு அவர் புத்திரனை வேண்டி வாரணாசியில் மனைவியோடு தவஞ்செய்தலும்.

விருத்தம்.

சொற்கலையைத் தாண்டின்மைந்த னுணர்ந்த பின்பு
தூயமுனி யுபநயந மியற்றி யப்பான்
முற்கலன்பெண் மருத்வதியைத் திருக்கல் யாண
முடித்துடனவ் விருவருநற் றவத்திற் சென்றார்
வற்கலைபூண் டுடன்மருத்து வதியுந் தானும்
வாரணா சியையடைந்து மகவை வேண்டிப்
பொற்கலைமா மதிபுனைந்த சிவன்பா லன்பு
பொருந்திட்டார் தவநெறியி லிருந்திட் டாரே. (௰௪)

(௰௧) **கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—ரூபகதாளம்.**

பல்லவி.

அருந்தவம் புரிந்தார் - துன்பப்
பெரும்பவம் பிரிந்தார்.

அனுபல்லவி.

அருந்தவம் புரிந்தனர் மிருகண்டர்
ஆரணந்துதித்திடுநதி - வாரணாசிநற்றலமதில் (அருந்)

சரணங்கள்.

(க) கரமிசைகுசைமுடி புனைந்து
கண்டிகை பூதியுமணிந்து
வரியுரியதன்மிசை யிருந்து
மறைமுதன் மனுமுறை மொழிந்து (அருந்)

(உ) அகமுறும் அறுபகை போக்கி
ஐம்பொறி புலன்களை வீக்கி
திகழுள மறிவது சிறந்து
செகமெனு மயலது மறந்து (அருந்)

(ங) அத்து விதத்தி லமுந்தி
அன்புற் றொருமை பொருந்தி
சித்தமதி லுவகை மிகுந்து
சிவபர னருள்தனை நினைந்து (அருந்)

பரமசிவன் பிரத்யக்ஷமாகி என்னவரம் வேண்டுமென வினவல்.

விருத்தம்.

சிந்தைதனை யடக்கியிந்தப் படிக்கோ ராண்டு
திருமணிக்கர் ணிகையெனுமத் தலத்தி லோர்பா
லந்தமுடன் றவஞ்செயல்கண் டுமையோ டேற்றி
னமர்ந்துடனங் கெழுந்துவந்த சிவனே நேரிற்
சந்தமறை யாற்றுதித்துப் பரமா னந்தச்
சமுத்திரத்தி லாழ்ந்துபர வசமாய் நிற்கு
மந்தணனை நோக்கியென்ன வரங்கள் வேண்டு
மதைநன்றாய் நமதுமுன மிசை யென்றாரே. (யஎ)

மிருகண்டு ஸத்புத்ர சந்ததியைக்கோர, ஈசனதைதருள, மார்க்கண்டர் அவதரித்து வளர்தல்.

(யஉ) திபதை. இராகம் - கேதாரகௌளம்—ஆதிதாளம்.

(க) இசையென்றருள்புரிந்த பசுபதியின் பொன்மலர்
இணையடியை முடியிற் சூடியே - மிகு
உசிதமாகிய நவ ரஸகன நயத்துடன்
உவந்து முனிவனுரை யாடியே

(உ) அந்தரியாமியாய் நிறைந்து மென்கருத்தை நீ
அறியாதவகையுண்டோ தெரிவாயே - உன்றன்
சிந்தைமகிழ்ந்தினிய சந்ததி தழைத்திடத்
திருமைந்தனெனக்கருள் புரிவாயே

(ங) என்றுமுனிவன்சொல்ல மன்றில் நடம்புரியும்
இறைவன் மிகவுங்களி கூர்ந்துதன் - அருள்
துன்றுமிவன்பத்தியை யின்றெவர்களுங் காணச்
சோதித்திடவேண்டுமென் றோர்ந்துடன்

(ச) ஏற்குங்குணங்களின்றித் தீக்குணங்கள்பிணிகள்
இழிந்தகூன்குரு டசடாகியும் - சன்
மார்க்கசிவபத்தியின் றீர்க்கவறிவில்லாத
வன்கண்மையுடன் கசடாகியும்

(ரு) மாறுகொள்வடிவுடன் நூறுவயதுடைய
மைந்தன்வேணுமோ சிவ ஞானமும் - அவை
ஊறுஞ்சதுர்வேதமு மாறுபத்துடனேநான்
[illegible]

(௬) புந்தியினிலெனது சிந்தனையேதவமாய்ப்
பூசனைபுரிந்திடுஞ் சாதுவாய் - நாளும்
வந்தனைபுரிகின்ற வயதுபதினாறுற்ற
மைந்தன்வேணுமோ தெளிந் தோதுவாய்

(௭) எனப்பரமன்புகல்வ சனத்தைமுனிவன்செவி
ஏற்றிதற்கென்விடையென் றெண்ணியே - பின்பு
மனத்திடத்துடனேநல் வினைப்பயனெதிர்கொள்ள
மதித்திட்டாலோ சனை பண்ணியே

விருத்தம்.

மதத்துடன் சிவனை மறந்தவ ருசித
மார்க்க மில்லாத நிர்மூடர்
வயதுநா றுடையா ராயினும் புவியின்
மங்கியே சடுதியின சிப்பா
ரிதத்துட னேம நிட்டையிற் சிறந்தே
யிடைவிடா துள்ளமோ டுருகி
யெழுதரு மறைநூ லாகமம் படிக்கின்
னிசையொடும் பூசனை புரிவோர்
விதித்திடும் வயது குறையினு நன்மை
மிகுதியா லாயுள் பெற்றோங்கி
மேன்மையுற் றிடுவ ராதலா லுன்றன்
விரைமலர்ப் பதத்தின்மீ தன்பு
கதித்திடும் புதல்வ னளித்தெனைக் காக்கக்
கடவையென் றுரைத்தலும் பரமன்
கருத்தினி லுகந்தம் முனிக்கொரு மகவைக்
கருணைகூர்ந் தளித்தகன் றனனே. (யசு)

(யரு) திபதை. இராகம் - எதுகுலகாம்போதி—அடதாளம்.

(க) வரம்பெற்றரன்கருணை - யுரம்பெற்றுமருத்வதி
மானுள் - கர்ப்ப - மானுள் - வசி
கரம்பெற்று மதிக்கொரு - நிறம்பெற்றொளி சிறந்து
கதித்தனள் - உள்ளன் - புதித்தனள்.

(உ) மதிக்கனையவதனம் - பசத்துமூன்றுதிங்களில்
மசக்கையால் - அன்னங் - கசக்கையால் - நன்றாய்த்
திதிக்கும்பாலமுதூட்ட - மருட்டிக்குமட்டிமதி
மயங்குவாள் - மேனி - கயங்குவாள்.

(௩) கனத்துப்பணைத்தெழுந்த - தனத்துமணியிரண்டும்
கறுத்தனள் - அரு - வருத்தனள் - தாய்
மனைக்குளைந்துதிங்களி - லழைத்துப்பொன்வளைகாப்பு
மாட்டினார் - கலன் - பூட்டினார்.

(௪) சட்டமோடாறுதிங்கட் - சூரியதியற்றிமலர்
சாத்தினார் - உவந் - தேத்தினார் - மதி
எட்டிற்பூரிகமடி கட்டிமணையின்மிசை
ஏற்றினார் - பேணிப் - போற்றினார்.

(௫) ஐந்திருமதியுநி - றைந்துபூரணகெர்ப்பா
வதியுற்றாள் - நன்கு - வதியுற்றாள் - அர
விந்தமனையமுக - முந்தளிர்த்தாளம்போல்
வியர்வுற்றாள் - தளர்ந் - தயர்வுற்றாள்.

(௬) ஆரவிதகரின்மன்ன - குருவுப்புகருமுச்ச
பேறவும் - பல - மேறவும் - பின்னும்
மருவுமறுகோள்களு முரியசுபக்ரகத்தில்
வதிக்கவும் - நல - முதிக்கவும்.

(௭) புதனுக்கினிமையுற்ற - மிதுனலக்கினம்வந்து
பொருந்தவும் - கலை - திருந்தவும் - சிலை
மதனுக்கனையவொரு - சுதனைப்பெற்றனள்முக
மதியினாள் - மருத் - வதியினாள்.

(௮) தந்தைமிருகண்டரா - னந்தமெனுங்கடலில்
தாழ்ந்தனர் - திதைப் - போழ்ந்தனர் - உடன்
சிந்தையன்பொடுமறை - யந்தணரனைவர்க்குந்
தெரிவித்தார் - நேரில் - வருவித்தார்.

(௯) கலவைப்பொடிகதம்பப் - பொடிகள் சந்தனமொடு
கரைத்தனர் - வாரி - யிறைத்தனர் - செந்நெல்
நிலமணிநிரைசெம்பொன் - சலவைசோடசதானம்
நேர்ந்தனர் - அன்போ - டீந்தனர்.

(௰) உவக்குங்கலையனைத்துந் - திரட்டிச்சேனைமைந்தனுக்
கூட்டினார் - நன்னீ - ராட்டினார் - செங்கை
குவித்துநவதினத்திற் - குலதெய்வங்களைச்சொல்லிக்
கூப்பிட்டார் - வேண்டிக் - காப்பிட்டார்.

(கக) செனித்ததன்பதினொரு - தினத்திற்சாதகர்மமுஞ்
செய்தனர் - வியப் - பெய்தினர் - எழில்
இனப்பொற்பணிகளலங் - கரித்துமணித்தொட்டிலில்
ஏற்றினர் - கண்ணூ - றூற்றினர்.

(கஉ) மார்க்கண்ட னெனவய்யன் - தீர்க்கமுடனேநாமம்
வைத்தனன் - கண்டு - மெய்த்தனன் - சன்
மார்க்கமுடனேமூன்று - வயதிற்சௌளமணம்
வரித்தனர் - சிகை - தரித்தனர்.

(கங) ஐந்துவயதிலக்ஷ - ராரம்பஞ்செய்து ச்
ராட்டினர் - இசை - நாட்டினர் - பின்னுப்
மூந்தும்வயதேழில - பைந்தபூணூல்மணப்
மூடித்தனர் - வாழ் - படித்தனர்.

மார்க்கண்டருக்குப் பதினாறுமாண்டு நெருங்குதல கண்டு
மிருகண்டுமுனி விசனமுறல்.

விருத்தம்.

கருத்திலுவந் துபநயன முடித்த பின்பு
கலைகண்மறை யாவுமைந்தன் கற்று ராய்ந்து
நிருத்தனரு ளியவயதிற் பதினோந் தாண்டு
நிறைந்துபதி னாறாண்டு நெருங்கக் கண்டு
திருக்குமரன் வடிவையுஞ்செய் கையையு நோக்கிச்
சிந்தைமிகத் தளர்ந்துமிரு கண்டன் றானும்
வருத்தமுற்றுப் புகலினிவே றென்றுங் காணு
வகையுற்றான் மிகவுமதி திகைவுற்றானே. (௰எ)

(௰அ) கீர்த்தனம். இராகம் - ஆகிரி—திரிபுடை தாளம்.

பல்லவி.

என்னசெய்வேன் - இந்தவிதிக்
கெப்படி உய்வேன்.

அனுபல்லவி.

தன்னெஞ்சறியாவிதற்கோர்
சக்கிரமொன் றங்காணேனே. (என்ன)

சரணங்கள்.

(க) வாரணசிதனிற்சென்று வருந்தித்தவமுயன்று
ஆரணப்பொருள்தனைக் கண்டடிபணிந்து
பூரணவயதுள்ளஸத் புத்திரன்றனை நீர்வரப்
தாருமென்றுரையாடாமல் தவறிமோசம்போனேனே (என்ன)

(உ) குளிர்ப்பாயின்னமுதூட்டிக் குலமணிக்கலன்பூட்டி
வளர்த்துக்கலைதேர்ந்த யௌவனவயதில்
தளிர்ப்பொன்மேனியுங்குஞ்சிச் சடையுநடையுங்கண்டு
களித்தகண்ணைக்கிளறக் கடவுள்சோதனைசெய்தால் (என்ன)

(ங) அருணோதயத்திலேகி ஆர்ந்தநதியில் மூழ்கிச்
சுருதியோடனுட்டானத் தொழின்முடித்துக்
கருதிப்பூசைபுரிந்து கடவுட்கடிமையான
திருமைந்தனுக்கிறுதி தீவரமாகநேர்ந்தால் (என்ன)

மேற்கூறிய காரணத்தால் மருத்வதி புலம்பல்.

வெண்பா.

கம்பலையி லாழ்ந்துமிரு கண்டமுனி யந்தவிதந்
துன்பமுறல் கண்டு துடிதுடித்தே - வெம்பிக்
கருத்துதிரஞ் சோரவிரு கண்ணருவி சார
மருத்வதிமி ஞள்புலம்பு வாள். (மஅ)

(மரு) **கீர்த்தனம். இராகம் - நீலாம்புரி—ரூபகதாளம்.**

பல்லவி.

அருமைமைந்தா உனைப்பிரிந் தாலெந்தவிதம் சகிப்பேன் - இந்த
அனியாயத்தை யாருடன்சொல்லித் தேறிநிர்வகிப்பேன் - என் அருமை.

அனுபல்லவி.

பரமசிவனைக் கருதிச்சுருதி பகர்ந்தருந்தவம்புரிந்து நிறைந்த
பத்துமாதம் சுமந்துனைப்பெற்று நான் பாரித்துடலம் பூரித்திருந்தேனடா
(என் அருமை)

சரணங்கள்.

(க) திதிக்கும்பாலுடன முதுமருத்தித்
திருமுகத்தொளிதிருத்தி - நிறை
மதிக்கொருவண்ணமாகமடியில்
வைத்தணைத்துன்றனை நித்தம்வளர்த்தேனடா (என் அருமை)

புணரியைக்கடைந் தமுதங்கண்டவர்
போலுனைக்கண்டு மகிழ்ந்தேன் - செந்
தணல் விழிச்சமன் முனிவுகொண்டுனைத்
தடுத்திழுக்கும் நாளடுத்ததே ஐயையோ (என் அருமை)

மார்க்கண்டேயர் தாய்தந்தையர்களைத் தேற்றுதல்.

விருத்தம்.

தந்தைதா யிருவர்களுந் தயங்கும்போதிற்
றனையனவ ரடிபணிந்திட் டெழுந்துநின்றே
அந்தோவென் னையாவென் னனையே உங்கட்
காகுலமே தெனப்பகர்ந்த சுதனைக்கையாற்
சிந்தையன்போ டணைத்துமுச்சி முகந்து முன்னாட்
சிவனளித்த வரமிதென நவிலக்கேட்ட
மைந்தனிள நகைமுகங்கொண் டிதற்கோ விந்த
மலைவென்பான் வீணிலென்க வலையென்பானே. (௰௧)

வெண்பா.

துஞ்சிடுவான் மைந்தனென்று துன்பமுற்று ளங்கலங்கி
யஞ்சுவதே னென்மொழியை யாய்ந்தருள்வீர் - செஞ்சடையன்
மத்தருக்கோ டக்கணிந்த வன்பதத்தி லன்புகந்த
முத்தருக்க வத்தைவருமோ. (௨௰)

(௰௬) கீர்த்தனம். இராகம் - சகாநா—ஆதிதாளம்.

பல்லவி.

சிவனை நினைந்தவர் எவர்தாழ்ந்தார் - ஸதா
சிவனை மறந்தவர் எவர்வாழ்ந்தார்.

அநுபல்லவி.

மவுனசித்தர்கள்முதற் சனகமுனிவர்கள்தன்
வசத்திலனுதினமும் வசித்தருளும்பரம (சிவனை)

சரணங்கள்.

(௧) மனப்பயங்கரங்கொண்டமரர் வெருண்டு - விழ
மருட்டிவந்த விடத்தைத் திரட்டியுண்டு - வெம்பிக்
கனைத்தலறியதெய்வகன்னியர்கள்திருமங்
கலத்தைக்கந்தரமிசை நிலைக்கச்செய்தருள் பர (சிவனை)

(௨) சிரித்துத்திரிபுரத்தை எரித்தழித்தும் - தக்கன்
சிரத்தையறுத்திட்டழல் தனிலொழித்தும் - அகங்
கரித்துமுனிவர்விட்ட வரிப்புலியைக்கொன்றத
[illegible] பரம (சிவனை)

(௫) இருப்புத்தயபத்தைச்சிதை லரித்திடுமோ - நெருப்
பிடையிற் புழுவந்துயிர் தரித்திடுமோ - மன
வருத்தமின்றிக் கண்மலர் பறித்துப்பூசனைசெய்த
மாலுக்குநேமிதந்து பாலித்தருள் புரிந்த (சிவனை)

மார்க்கண்டேயர் காசிசென்று சிவனை ஆராதித்தல்.

விருத்தம்.

அந்திவண்ணன் றனையடுத்துப் பூசை செய்திங்
கழியாத வரம்பெற்று வருவேனீங்கள்
சிந்தைகலங் கிடவேண்டா மெனப்பகர்ந்த
சேயனைக்கை யாற்றழுவித் திருநீறிட்ட
தந்தைதா யடிபணிந்து விடைபெற் றேகிச்
சங்கலவு கங்கைதனிற் றானஞ் செய்து
நந்திவா கனவிசுவே சனைப்பூசிக்க
நலஞ்செய்தான் சந்திமூ லஞ்செய்தானே (௨௧)

இன்னும் விருத்தம்.

இறையவனை வலஞ்சூழ்ந்து சிவனே சானிங்
கியற்றிடும்பூ சனைக்கொன்றுங் குறைவுறாம
னிறைவேறும படிகருணை புரிவா யென்று
நின்மலன்றன் கோயில்தென்பா லொருபாகத்தின்
முறைவழியோ ரிலிங்கப்ப் ரதிட்டை செய்து
மொழிந்திடுஞ்சிவாகமத்தின் படிக்கு நன்றாய்த்
தறுகணமன் றனைசெய்க்கக் கருதியாசா
தனஞ்செய்தான் பக்திசா தனஞ் செய்தானே (௨௨)

(௰௭) ஆர்யா—இராகம் - [illegible]—ஆதிதாளம்.

ஶிவாய வாமதே³ஹார்தா⁴ய ஶஶிஶேக²ராய நம ஓம்.
ப⁴வாய கு³ணஸம்ப⁴வாய ஶிவதாண்ட³வாய நம ஓம்.
ஹராய ஶிவஶம்கராய விஷகம்த⁴ராய நம ஓம்.
வராய ஶ்ருதிஸாரம் த⁴ராய ஸோமஜடம் த⁴ராய நம ஓம்.
ஜிதாய கு³ணாரம் ஜிதாய ஶாந்திம் ஶ்ரிதாய நம ஓம்.
ஹிதாய ஹரிஸ ஹ்ருதாய ஸாரவம் ஶ்ரிதாய நம ஓம்.

பரமசிவன் பிரத்யக்ஷமாக மார்க்கண்டேயர் துதித்தல்.

விருத்தம்.

அங்கம்வா யகமொருமை யுடனே பூசித்
　　தைந்தெழுத்தை யுருவேற்றித் தியானஞ் செய்யுந்
துங்கமைந்தன் மெய்யுழுவற் கணுகஞகி
　　ஸோமஜடா தரனுவந்து கருணை கூர்ந்து
மங்கையுமை யவளொடுமால் விடையிலேறி
　　வருதல்கண்டு மார்க்கண்ட முனிவனேரிற்
கங்குகரைக் கடங்காத பரமா னந்தங்
　　கதிக்கின்ருன் முழுமறையாற் றுதிக்கின்ருனே (உ.ய)

(யஅ) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—நபக்தாளம்.

𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰
𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 𑌶𑌿𑌵𑌶𑌂𑌕𑌰 [illegible]. (க)
[illegible] 𑌶𑌿𑌵 (உ)
[illegible] 𑌶𑌿𑌵 (ங)
[illegible] 𑌶𑌿𑌵 (ச)
[illegible] 𑌶𑌿𑌵 (ரு)
[illegible] 𑌶𑌿𑌵 (சு)
[illegible] (எ)

மறலியைச் செயிக்க விரும்பிய மார்க்கண்டருக்கு ஈசன் அபய ளித்துத் திருவடிதீக்ஷை செய்து மறைய மார்க்கண்டேயர் அனேக லங்களை தரிசித்துப் பிறகு திருக்கடவூர் வந்து ஈசனைப் பூசை புரிதல்.

விருத்தம்.

சுருதியோ டிசையாற் ஸ்ரோத்திரம் பயின்ற
　　சுந்தரப் புதல்வன்மீ தன்பு
தோய்ந்துநின் றனக்கு வேண்டிய வரத்தைத்
　　துலக்கமா யெமக்குரை யென்னப்
பரிவொடு வணங்கி மறலியைச் செயித்துப்
　　பாரிடத் தழிவிலா வரமும்
படைத்தன தரிய பதமல ரிணையைப்
　　[illegible]

வருள்புரி வாயென் றுரைத்திடப் பா[illegible]
னஞ்சலஞ் சலெனக் களிப்போ
டபயமுங் கொடுத்து முடிமிசை தளிர்பொன்
னடியிணைக் கமலமுஞ் சூட்டித்
திருவுரு மறையச் சிவதலந் தோறுஞ்
சென்றுபூ சனைபுரிந் தப்பாற்
றிருக்கடவூர்சென் றமர்தலிங் கத்தைச்
சிறப்பொடு பூசைசெய் தனனே (உச)

(யகூ) **கீர்த்தனம். இராகம் - தன்யாசி—ரூபகதாளம்.**

பல்லவி.

[illegible] மார்க்கண்டேயன் சிவனை
விரும்பிப் பூசை செய்தனனே.

அநுபல்லவி.

சற்குணமுடைய - [illegible]னிந்து பொருந்து
[illegible] திருந்து
விற்கனகக் கலசங்கையால் சூடி
[illegible]கவுடமுள்ளன் கூடி (விக்ரம)

சரணங்கள்.

(க) திருக்[illegible] பாலு மேகா
தெசருத்தி[illegible] னமனக
[illegible]ருக்கொ[illegible] வேதச
[illegible]யற்றி முயற்சி யாக (விக்ரம)

(உ) தளிருறும் வில்வ குமங்க ளெடுத்து
சகத்தி[illegible] நாமங்கள் தொடுத்து
ஒளிபுறுந் தூபதீபங் காட்டி
[illegible]ரிமையோடமு தூட்டி (விக்ரம)

(ங.) குங்குமன் பருமலர் சொரிந்து
சந்நிதி மூவலம் புரிந்து
அங்கமுழுதும் படியத்தாழ்ந்து
ஆநந்தக்கட லாழ்ந்து (விக்ரம)

மார்க்கண்டருக்குப் பதினாறு வயதானவுடன் இயமதூதன்வர அவன் அவர்கிட்ட அணுககூடியாமல் திரும்பி இயமலோகம் சென்றதும் அங்குநடந்த விருத்தாந்தமும்.

விருத்தம்.

இறைவனையாங் கிடைவிடா தருச்சித் தேத்து
மியல்புறுமார்க் கண்டனுக்குப் பதினாறாண்டு
நிறைவுறுத லறிந்துடனே யமதூதன்கண்
ணெருப்பெழுமுத் தலைச்சூலங் கரத்திலேந்திக்
கறையுடலோ டெழுந்தோருங்கிப் புதல்வன்றன்னைக்
கண்டுடலம் பதைபதைத்துக் கனலைக்கிட்டும்
பொறியுலவு மெனமொடுங்கிப் பெருமூச்சிட்டுப்
புழுங்கினன் அறிவிழந்து புழுங்கினனே (௧)

(உயி) திபதை. இராகம் - காம்போதி—அடதாளம்.

(க) அறிவழிந்துடன்றூதன் மறையவன் றனைக்கிட்ட
அணுகவொண்ணாதென்றோட்ட மெடுத்தானே - சென்று
தறுகண்ணமன்றனைக்கண் டடிபரவியே நாவுந்
தளர்ந்து செய்திகள் சொல்லத் தொடுத்தானே

(உ) சண்டனென்றனையேத்தித் துண்டரீகமா யெங்குஞ்
சட்டஞ் செலுத்திவந்த புகழ் போச்சே - யம
தண்டனையென்பது பார்க் கண்டனளவிலின்று
செம்பிற் புளியிட்டதுபோ லாச்சே.

(௩) கறைக்கண்டனையருச்சித் திருக்குங்குமரன்றவக்
கனல்பட்டென்னுடலெங்கும் வெந்தேனே - தலை
முறைக்குமினிமேலவ னிருக்குந்திசையை நோக்க
முடியாதென்றொளித்தோடி வந்தேனே.

(௪) என்றுதூதுவன்சொல்லத் தென்றிசைக்கதிபன்கண்
எரிபோற்சி வந்துடலம் வேர்த்தானே - இரு
குன்றென்னும் புயந்தட்டி மன்றிலிருக்குஞ்சித்ரன்
குப்தனிருவரையும் பார்த்தானே.

(௫) மார்க்கண்டன்றனக்குற்ற வயதையுரைப்பீரென
வணங்கியக் கணக்கவர் விரித்தாரே - அதி
தீர்க்கமுடனதனைப் பார்த்துச்சமனைநோக்கிச்

(சு) நீற்றொளியிறைவன்முன் சாற்றுமென்னிண்டாண்டு
சேற்றுடனே சரிபாய்த் தீர்ந்ததே - நிறை
ஆற்றல்சேர்யமன்சீட்டை மாற்றலரிதென்றசொல்
அழிந்தவமானம் வந்து சேர்ந்ததே.

(எ) பூதிகண்டிகையணிந் தாதிசிவனைப்பூசை
பரிந்துமகிமை சிறந் தோனேனும் - நல்ல
மூதறிவுடனேர்ந்து புலனைவென்றருந்தவ
முபன்றுமும்மையுந் துறந் தோனேனும்.

(அ) எட்டுணையாகிலுமுன் னிட்டசட்டத்தன்னை
யாவராலுங்கடக்க அரிதாமே - தவச்
சிஷ்டனிவனுக்கந்த அஷ்டகுணமூர்த்தி தந்
திருக்குறளென்னவோ தெரியோமே.

மார்க்கண்டனைப் பிடித்துவரும்படி இயமன் காலனை ஏவல்.

விருத்தம்.

சித்திரனுங் குப்தனுமிவ் வாறுகூறத்
தென்றிசைக்கா வலனடங்கா முனிவுகொண்டு
மைத்தலைவா ளெவெனவுங் கரித்திட்டோங்கிப்
படிறுறுங்கா லனையழைத்துப் பரக்கநோக்கி
மைத்தடங்கண் டனைவழிபா டியற்றிநெஞ்சின்
மதிகுந்தமார்க்கண்டன் றனைப்போய்ச்சீறிக்
கைத்தலத்தா லிழுத்தெமது சபைமுன்பாகக்
காட்டென்பான் பம்பரம்போ லாட்டென் பானே (உக)

(உக) கீர்த்தனம். இராகம் - தோடி—ஆதிதாளம்.

பல்லவி.

பிடித்துக்கொண்டென்றன் சபை
முன்னேவிடடா - அவனை நீ.

அநுபல்லவி.

சமர்த்தம்பேசினானுன்கைத் - தருபாசத்தைவீசிச்
சிறுவனைப்—(பிடி)

சரணங்கள்.

(க) சிவனையர்ச்சித் திட்டுளத்தி-லுவகை-முற்றியேயன் பூறி
சிறியவர்செம் பொன்பெற்றுற்போற்-பருமிதந்தலைக்கொண் டேறி
கவலையற்ற வன்வசிக்கும்-கடநகர்சென் றெதிர்த் தேறி
கட்டியடித் திட்டுன்புயர்-தட்டியென்புகழ் கூறி
எதிரிர் -(பிடி)

(உ) அதனைத்தால்வாரா - வேதுக்கிர்சத்திங்க வங்கோ
சொற்கேளாக்குட் டிப்பாவிவ னுக்கிர்த னமு றண்டோ
வேதன்முத லோரும்என்சொன் றிய டந்த துணைண்டோ
விட்ரோயாகானிட்ட கட்டளைக்கி ங் டுண்டோ
சதியொடு—(பிடி)

(ங) கைக்கதையாலடித்துடலைக்கலங்கவிழத் தாட்டி
கண்டகங்கொண்டுதுளைத்துத் துண்டமீசய்செய்து வாட்டி
வக்கிரமாகியஉன்றன்-உக்கிரரூபத்தைச் காட்டி
மங்கியலறிடமுன்னைச்-சங்கிலிதனைப் பூட்டிச்
சினமொடு—(பிடி)

காலன் விடைபெற்றேகி மார்க்கண்டனைக்கண்டு அணுகமுடி யாமல் தன் உருவங்காட்டி நயந்து சொல்லல்.

விருத்தம்.

கருத்துழன்று தருமனிம்மா முனைக்கக்கொண்டு சாலனைமடைபணிந்து விடைபெற்றேகித்
திருக்கடவூரீசர்சந் நிதிபயத்தைச் சிந்தையிலுற் றந்தரங்க பத்தியோடு
மருச்சனைசெய் தினிதிருக்கும் குமரனைக்கண் டதிசயங்கொண் டணுகப்பானோ முடியாதென்றே
வருத்தமுற்றுத் தனதுருவங் காட்டிச்சென்று வணங்கின்று நயந்துரைகள் வழங்குவானே (உஎ)

(உஉ) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—திருபுடைதாளம்.

பல்லவி.

மார்க்கண்டேயரே சொல்லக்கேளும் - மன
வருத்தங்கொள்ளாமலெனை - யாளும்.

அனுபல்லவி.

ஆர்க்கும்உயர் தென்றிசை - காக்கும்காவலனெம

சரணங்கள்.

எற்றைப்போனுடக்குச் - சாற்றுமென் னி ன்டான்று
நேற்றுடனே தீர்ந்ததே - இன்றைக்கிறுதிக்
கேற்றகாலமும் சேர்ந்ததே - தலைவிதியை
யாற்றயாவராலு மாகாதே - ப
மன் தடுத்திடினும் போகாதே - எங்கள்
கூற்றுவனருகிலிப் போதே - சித்தந்
கொளுமெதன்னுடன் வ வேணும் தடையில்லாதே (மார்க்கண்)

கருத்தன்றனையருச்சித் - திருக்கும்செய்கை ... கள்
திருச்செவியினிலோர்ந்து - உமை ...க்கச்
சருத்தினி லருள்கூர்ந்து - அங்கு
வ ச்சொன்ன மொழியைத்தள்ளாமல் - அவ
மதித்தென்னுடை தலை யெள்ளாமல் - த்ந்தை
சரித்திரம் எவர்க்கும் விள்ளாமல் - தங்கள்
தாஸன் என் மீதிலா - பாசங்கொள்ளாமல் (மார்க்கண்)

தண்டாயகனுப் பை.க் - கண்டவுடனே நேரில்
அண்டிவர் தழைத்திடுவான் - தன்ஞானத்
கொண்டுடல் தழைத்திடுவான் - திருத்
தொண்டனென் றுயர்த்துசொற்றுவான் - மலர்
சொரிந்துபசரித்துப் போற்றுவான் - வானில்
அண்டர் வாழ்பதவியி லேற்றுவான் - மிக்க
அவத்தைப்படுத்துப்பிற - வித்துயரை மாற்றுவான் (மார்க்கண்)

மார்க்கண்டர் காலனை இகழ்ந்து ஓடிப்போவெனல்.

விருத்தம்.

கயமுடனிப் படிக்காலனவிலக் கேட்டு
நகைத்துடனே மார்க்கண்ட முனிவன்றானும்
பயனிலசொற் பாராட்டும் பதடி யுன்றன்
பலத்தையறி வேனண்டர் பதியுமாயோ
னயன்பதியுஞ் சிவனடியா ளித்த பேர்க்குண்
டகப்படியா தெழுந்தோடிப் போவாயென்ன
வியந்தவனும் பயந்துடனே தெற்கே நோக்கி
யேகினன் யமனிடம் போய்க் கூறினனே (உஅ)

காலன் நடந்ததை இயமனிடம் சொல்ல: இயமன் தானே நேரில் மார்க்கண்டரிடம் வருதல்.

பின்னும் விருத்தம்.

விடங்கிளர்கண் டனுக்குரிய மார்க்கண் டன்பால்
வினைக்காலன் போயவதிப் பட்டுவந்த
தடங்கலுமங் கவையெதிர் நின்றுரைக்கச் சீறி
யந்தகன்கேட் டரி விழியிற்சிந்த நோக்கி
மடங்கலென வுறுமியம படர்கள் சூழ
மகிடவா கனமிசையா ரோகணித்தே
கடுங்கொடுமை யுடன்றனது புரத்தை விட்டுக்
கடந்திட்டான் விருதுசொலி நடந்திட்டானே (உக)

(உந) கீர்த்தனம். இராகம் - ஆரபி—அடதாளச்சாப்பு

பல்லவி.

சண்டன்சினங்கொண்டுத் - தண்டமதாகமார்க்
கண்டன்முன் வந்தானே.

அனுபல்லவி.

துண்டரீகங்கொண்ட - வண்டனுடலைத்
துடிக்கச்செய்தாவி-குடிக்கிறேன் பாரென்று. (சண்டன்)

சரணங்கள்.

(க) அம்பொன்பணிமகு டம்புனைந்தாபர
ணங்களும் பூட்டிக்கொண்டு - மலர்த்
தும்பையுடன்பல வம்பவிழ்மாலைகள்
தோள்மிசை சூட்டிக்கொண்டு - வல்வி
ரும்புடைவாள் சுரியுஞ்சமுதாடும்
எடுத்துக்கை நீட்டிக்கொண்டு - ஆ
டம்பரமாகவே சம்பிரதாயம்பா
ராட்டிக்கொண்டுதலை யாட்டிக்கொண்டு - கோரச் (சண்டன்

(உ) முண்டியமபடர் தொண்டுபுரிந்தெதிர்
மெத்துக்குடை பிடிக்க - ஓசை

புண்டரீகன்முத லண்டர்கனெஞ்சம்
புழுங்கிக் கண்ணீர் வடிக்க - பக்கத்
தண்டியேசேனைக ணின்றெச்சரிகை
படிக்கச் சகங்கள் பொடிக்க - துடிப்பொடு (சண்டன்)

க) நேசித்தான்றனைப் பூசித்திட்டேயக்கும்கை
யிற்றனை பூட்டுகிறேன் - கால
பாசத்தை யென்கையால் வீசிப்பிணித்துக்
கழுத்தினில் மாட்டுகிறேன் - மிக
ஏசிப்பழித்திட்ட ரோசத்தைநெஞ்சில்வைத்
தென்திறங் காட்டுகிறேன் - முற்றும்
வாசித்தறிவின்றி யாசுற்றமூடனை
வாட்டுகிறேன்பிடித் தாட்டுகிறேன் - என்று. (சண்டன்)

இயமன்வருஞ் சப்தத்தைக்கேட்டு மார்க்கண்டன்
சிவனிடம் அபயமிடல்.

விருத்தம்.

அதிகமுனி யொடுமறலி வரும்பே ரோசை
யருந்தவத்தி லுயர்ந்திடுமார்க் கண்டன்கேட்டிங்
கிதுவுமொரு வதிசயந்தா னெனவேயெஞ்சி
லெண்ணியா லோசனைகள் பண்ணித்தேர்ந்து
புதுமலர்கொண் டருச்சனைசெய் திருகைகூப்பிப்
புரகரா வங்கரா சம்போ வென்றே
பதிபுனைந்த வமுதகடேசனை யாசித்து
மறுகுவான் துதிபுரிந்துள் ளுருகுவானே. (கய)

உச) கீர்த்தனம். இராகம் - நாதநாமக்கிரியை—திருபுடைதாளம்.

பல்லவி.

அபயமபயஞ்ஜெகதீசா - சம்போ
அபயமபயஞ்ஜெகதீசா

அனுபல்லவி.

விபவப்பிரகாசகை லாஸகிரி வேசா. (அபயம்)

சரணங்கள்.

(க) கரனமணிந்த சுகந்தரனே - திவ்விய
[illegible]மடந்தை மருவுஞ்சுந்தரனே. (அபயம்)

(உ) அகமும்புறமு மறைபவனே - உயர்
நிகமமுடிவினி லென்ஞான்றும் வாழ்பவனே (அபயம்)

(௩) சுரநதியணிந்த முக்கண்ணனே - மன்றிற்
பாதநடம்புரியும் வாதசற்குணனே (அபயம்)

(௪) தவத்தி னர்க்கருளும் தற்பரனே - தொண்டர்
பவத்தை யகற்றுந்தொழில் படைத்த சங்கரனே (அபயம்)

இயமன் மார்க்கண்டரைத் தன்னோக்கமுடிக்க இவ்விடம்வருதலும் அவ்விருவருக்கும் நடந்த சம்வாதமும் இயமன் தன் பாசத்தைவீச எடுத்தலும் மார்க்கண்டர் அமுதலிங்கத்தைத் தழுவி முறையிடலும்.

விருத்தம்.

மறையொடுமெய் யாறுணர்ந்தன் றதிக்குப்போதின்
மறலியம படர்களுட னருகில்வந்து
திறமிகுந்த சிவபூசை செய்வேளைபார்த்துத்
தீக்கடி புகுந்ததும்போற் சினந்துநோக்கி
யிறைவனுனைக் கன்றளித்த பதினாறாண்டு
பேற்கணமே தீர்ந்ததென் னூர்க்கெழுவாயென்ன
உறுதிகொண்மார்க் கண்டனதை மறுத்திடக்கேட்
டுறுஞ்சொல்வான் சமன்கடிந்துத் தானுஞ்சொல்வானே. (௧௧)

விருத்தம்.

மிண்டியெதிர் நின்றுமரு கண்டமுனி மைந்தனை
வெகுண்டு சமனுறும்நோக்கி
விப்பிரகு லத்ததனி லுற்பவித் துச்சகல
வேதமுறை யாகமங்கள்
விதியொடு முணர்ந்துமன தறிவிலா வெறியர்போல்
விதிவலி யகற்றி யிந்த
மேதினியி லழியா திருக்கலா மெனமதிக
வீணாசைகொள்ளவேண்டாம்
அண்டர்பணி யரனையர்ச் சிக்கின்றபலனுன
தரும்பவ மொழிப்பதல்லா
லாசுற்ற நமதுகர பாசமதைவீசினா
லண்டி யதனனுகுராது
ஆற்றுமண லினையெண்ணி ஒருபொன் னெலிறக்

ஆதலா லதைமறுத் தேதயிரி யங்கொடென்
னருகிலினி வருவையாஞல்
வண்டுலவு தண்டுழா யவனுலகை வேண்டினு
மலரவனு லகைவேண்டினு
மருவுலவு தருங்கிழலே வேண்டினுந் தடையின்றி
மனதுவந் தருள்புரிகுவோம்
மைந்தனே வாவென விரைந்திட நகைத்துபதி
மார்க்கண்ட னவனைநோக்கி
வாய்ந்தசிவ னடியார்க ளாய்ந்தழ லுலகினையு
மதியார்க ளுனையுமதியார்
சண்டனே தொண்டையுய்வ றண்டுனது நாவது
தடித்தெரிவு கொள்ளாமலே
தடையின்றி நீவந்த நடவையைத் தேடெனத்
தணலென முனிந்தெழுந்தே
தாக்கியம பாசமதில் லிக்குதற் கவனுறத்
தனையனுள மலையாமலே
தனதிரு கரத்தினு லமுதலிங் கேசனைத்
தழுவிமுறை யிட்டனனரோ. (௧௨)

(உரு) கீர்த்தனம். இராகம் - சேஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

மிர்த்யுஞ்ஜெயா - ஓ - மிர்த்யுஞ்ஜெயா.

அனுபல்லவி.

பத்தமுயலகன்ப - தைத்துநடுங்கவுட
லத்திலொருபதப்ப - தித்துநடம்புரிந்த (மிர்த்யும்)

சரணங்கள்.

(௧) பத்திசோ தனைக்குநான் தரமில்லையே - சிய
பரனே யெனக்குவேறு - தரமில்லையே - பரு
மத்தினிடைதயிர்போ - லெய்த்துடைந்து நொந்துசு
லித்தென்னுளம்பரத - வித்துருகுதென்செய்வேன் (மிர்த்யும்)

(௨) முந்தநீதந்தவரம் பொய்யாமலே - பூசை
முயற்சிக்கோரிடையூறு செய்யாமலே - சற்றுஞ்
இரக்கமுமில்லாத லெக்க மகனை

(௯) பாசத்தைவீசுவேனென் றுறுக்குறுனே - யம
படர்களைக்கொண்டென்றனை யொறுக்குறுனே - சிவ
கோசத்திருந்துவீரா வேசத்துடனெழுந்து
மோசச்சமனைவென்று நேசித்தெனைரெக்ஷிப்பாய். (மிர்த்யும்)

இயமன் பாசத்தைவீசி மார்க்கண்டரை இலிங்கத்தோடு சேர்த்திழுக்க சிவன் இலிங்கத்திருந்து பிரளயகால உருத்திராயெழுந்து இயமனை உதைக்க அவன் இறத்தல்.

விருத்தம்.

பத்திமைந்தன் மகமுறையிட் டலறநேரிற்
படிறெமனும் பாசமதை முடுகிவீசிப்
பித்துடங் காதிலிங்கத் துடனே சேர்த்துப்
பிணித்துமைந்தன் றனைச்சுருக்கிட் டிழுக்க ஈசன்
சித்தமகிழ்ந் திளவலையா தரிக்கலிங்கத்
திருந்துதிடு திடுதிடெனப்ரளையகால
ருத்திரனு கிச்சினங்கொண் டெழுந்துகாலா
லுதைக்கின்றான் வீழ்ந்தெமனும் பதைக்கின்றானே (௯௯)

(உ௬) கீர்த்தனம் இராகம் - கல்யாணி—ஆதிதாளம்.

பல்லவி.

மடிந்தானே அந்தகன் - மண்ணிற்
படிந்தானேமலைபோல்.

அனுபல்லவி.

திடங்கொள் சிவபத்தனென் - றடங்காமல் மதிகெட்டு
சினத்துடனே சென்றெதிர் - முனைத்திட்டகபேலிட்டு
நடுங்கக்காலபாசந்தொட் - டிடஞ்சல் செய்ததைத்தொட்டு
கடித்தெழுந்தருத்திர னிடக்காலாலுதைபட்டு (மடிந்தானே)

சரணங்கள்.

(௧) வனத்தனிந்திரன்முதல்-அனத்தனமரர்களும்
வாய்புலர்ந்தரண்டுட லொடுங்கவும் - வளங்
கனத்தபுவியண்டங்க-ளனைத்துமதிர்ச்சியொடு
கலங்கிக் கிடுகிடென நடுங்கவும் - முனைக்
கனற்பொறியாலகில கோடிகளும் வெடிக்க
கயங்கித்திக்கயங்களு மயங்கிக்கிலி பிடிக்க
புனற்கடலும் வறண்டிட்-டுடுக்குலமுந் துடிக்க

(க) ... துதனைப்பணிந்து - தாழ்ந்தருகிலிருந்த
...கிங்கரர்களுயிர் பறக்கவும் - புகழ்
... தலைந்த ஒனதிரிற்-காய்ந்தெமனேறிவந்த
... மும்பட் டிறக்கவும் - விசை
... டையும் நாவும்-காய்ந்து மதிமருண்டு
... வுமறந்து - கண்ணொளியுமிருண்டு
... டபோற் - சோர்ந்துடலஞ்சுருண்டு
... ரப்பதறிப் படியிற்புரண்டுருண்டு (மடிந்தானே)

(க) ... ர்ம-கத்துவத்தையுஞ்சிவ
... வியந்து கொண் டாடியே - தவச்
... நம் வித்தியாதரர்களுந்
... ழுந்து கீதங்கள் பாடியே - மிக
... ர்கைகு - வித்துத்தொழுதுமெள்ள
... மோடுருகி-யுயர்ந்த மறைகள்விள்ள
... பிரசா-தத்தினுலே முன்னுள்ள
... மாழ்ந்துமார்க் கண்டனை ழுந்துதுள்ள (மடிந்தானே)

... த்த மார்க்கண்டர் என்றும் பதினாறுவயதாயிருக்க
வும் ... ப் படிப்போர் கேட்போர் ஸந்ததி, செல்வம், ஆயு
ள் ... தோங்கவும் வரமருளி ஈசன் திருவுருமறைதல்.

விருத்தம்.

... வ்வா றிறந்தன னப்பால்
அடியரிற் சிறந்தமார்க் கண்டன்
... மான வேதவாக் கியத்தா
லரன்புகழ் யாவையுந் தொடுத்துச்
... சைப்பா வினஞ்சொலித் துதிக்கச்
சதாசிவ னுளங்களிகூர்ந்து
... ன்றி நாளு மெண்ணிரண் டாண்டு
தரணிவா னுலகமுள்ளளவும்
... வாழ்தி யெனவருள் புரிந்து
மலரடி முடிமிசை சூட்டி
... யோ னெது சரித்திர மதனை
யெழுத்துவோ ரறிவோடுங் கேட்போர்
சந்ததி யுயர்வான் செல்வமோ டாயுள்
தழைக்கவென் றனுக்கிரகம் புரிந்து
தருநிழலமரர் மருமலர் சொரியச்
கங்கா வைகமறைக் கனனே. (...)

பிறகு மார்க்கண்டர் அனேக தலங்களைத் தெரிசித்துக் கடக நகர் சென்று தாய் தந்தையரைப் பணிய அவர்கள் மகிழ்தல்.

பின்னும் விருத்தம்.

பனகபூ டணரிலிங்க மதனுட்சார்ந்தார்
பாசுபத மார்க்கண்ட முனிவன்றானும்
இனியசிவ தலங்களெலாம் பணிசெய்தேத்தி
யீன்றருள்தாய் தந்தையரைக் காண வேண்டி
மனதுவந்து கடகநக ரதனைமேவி
வளமிகுமா சிரமமதிற் புகுந்தபோது
தனையனைக்கண் டிருவர்களு மகிழ்ந்தா னந்தம்
தாங்கினா ருளக்கவலை நீங்கினாரே. (௩௫)

(௨௭) கீர்த்தனம். இராகம் - சுருட்டி—திரபுடைதாளம்.

பல்லவி.

திருக்குமரன்றனைக்கண்டு சந்தோஷ-கையாற்
சேர்த்தணைத்துடனுச்சி முகர்ந்தாரே.

அநுபல்லவி.

உருத்திரனருள்செய்த-வரத்தினால்மிகுந்த
உரமும்பெற்றழிவிலா வரமும்பெற்றெதிர்வந்த. (திரு)

சரணங்கள்.

(௧) அரும்பொருளானவுன்னைப்-பிரிந்தெங்கள் மனந்தாழ்ந்து
ஐம்புலனுங்கலங்கித்-துன்பவாரியி - லாழ்ந்து
திருந்துபதினாறாண்டு-நிறைந்திடலறிந்துள்ளந்
தியங்கிப்புவியில் வீழ்ந்து - நாங்கள்
வருந்திமடிந்திடாமுன் - விரைந்தருகிலடுத்து
மனத்துயரங்களெல்லா மகலும்படிவிடுத்து
பொருந்தும்பரமானந்தப் - புணரிதனில்மடுத்து
போற்றியாதரித்தாயென் - றேத்திமுத்தங்கொடுத்து (திரு)

(௨) அடுத்தெமனைக்கண்டுள்ளந் - துடித்துப்பயப்பட்டதும்
அரன்றனைநினைந்தன்போ - டிரங்கிமுறையிட்டதும்
தடுத்துத்தனையாட்கொண்டங் - கிடக்காலினாலெமனைத்
தாக்கியுதைத்து விட்டதும் - பின்னும்
கடுக்கண்டரினிமையோ-டனுக்கிரகங்கள் புரிந்து
காத்தருளிசைந்ததைச் சாற்றிடவுந் - தெரிந்து

[illegible]

[illegible] (௬)

[illegible]

[illegible] (௭)

[illegible] அனைவர் [illegible] ஆக்ஞாபித்தல்.

[illegible] கட்டளை. [illegible] — [illegible].

(௧) [illegible]
[illegible] - [illegible]
[illegible]
[illegible].

(௨) [illegible]
[illegible] - சிவன்
[illegible]

(ங) எம்னிறந்தத ஞன்மண்ணி லெண்பத்திநான்
இலக்கஞ்சீவராசி மடியாமல் - அந்த
அமிதபாரம தாகியசுமைதனைப்
புவிமடந்தை சுமக்க முடியாமல்.

(ச) வந்துமுறையிட லுந்தெரிந்துடன்றிரு
மாலயன்சிவனடி போற்றினுர் - நேரில்
அந்தகனையெழுப் - பிப்புவிபாரத்தை
அகற்றவேணுமெனச் சாற்றினுர்.

(ரு) சிந்தைகூர்ந்தர - னெமனையழைக்கவுயிர்
தெளிந்தவனருகில் வந் துதித்தானே - உயர்
சந்தமாமறை - யாலரனடிமலர்
தாழ்ந்திசையொடுஞ் சொல்லித் துதித்தானே.

(சா) அத்தனவனையு - றுத்துக்கண்டிகைபூதி
அணிந்தஞ்செழுத்தைச் சொலி யுருவோதும் - பிர
சித்தரெனதுரு - வத்தரென்றவர்வசித்
திருக்குந்திசை யினி லொருபோதும்.

(எ) அக்கிரமத்துட - னேயந்தவழியனு
காமனன்னெறியொடு மினிநீயே - உன்
தெற்குநகர்சென்று - னக்குரியதொழிலைத்
தீர்க்கமுடன் செலுத்தி வருவாயே.

இயமன் தன்னகரம் சேர்ந்து மார்க்கண்டன் சரிதையைப் படிப்போர் கேட்போரிருக்கும் திசையைக்கூட எட்டிப்பார்க்காது முன்போல் அரசு புரிதல்.

விருத்தம்.

மழுவுடையா னிவை கூறப் பிழைத்தெழுந்த
மகிட வா கனமுமெம படருஞ்சூழ
விழைவுடனின் றரனடியைப் பணிந்து போற்றி
வியப்புடன்றன் னகரடைந்தங் கெழின்மார்க்கண்டன்
றழைவுறுகத் சரிதைதனைப் படிப்போர் கேட்போர்
தனிப்பரம னடியரென்றத் திசைநோக்காமற்
பழையபடி யதிகாரஞ் செலுத்திச் செங்கோற்
பண்புற்று னுவந்துசம னின்புற்றுனே. (கஅ)